# தென் இந்திய வரலாறு

(இரண்டாம் பகுதி)

டாக்டர் கே. கே. பிள்ளை

பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை-14 திருச்சி-2 சேலம்-1
கோயமுத்தூர்-1 மதுரை-1

முதற் பதிப்பு : ஜூலை 1960
இரண்டாம் பதிப்பு : ஜனவரி 1970

விலை : ரூ. 4-00

ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை 14.

# முன்னுரை

இந்நூல் தென்னிந்திய வரலாற்றின் முக்கிய பகுதிகளை எடுத்து விளக்க முயல்கின்றது. குறிப்பாக, ஆங்கில நூல்களைக் கற்க வசதியற்றவர்களுக்குப் பயன்படுமாறு இந்நூல் எழுதப்பெற்றுள்ளது. நாட்டின் வரலாறுனது, மக்களது வாழ்க்கை நிலை, சமூக நிலை, நாகரிக நிலை முதலியவற்றை நன்கு விளக்க வேண்டுமென்பதை இன்று யாவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். இக்கருத்தைத் தழுவியே இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. ஆகையால், மன்னர் வரலாறுகள், போர் நிகழ்ச்சிகள், அரசியல் ஒப்பந்தங்கள் முதலியன விரிவாகக் கூறப்பெற்றில. சமூக வரலாற்றை அறிவதற்கு இன்றியமையாத அரசியல் குறிப்புகள் மட்டுமே இதன்கண் இடம் பெற்றுள்ளன. சமூக வரலாற்றிலேதானும் எல்லாக் காலத்தையும் பற்றிய தகுந்த ஆதாரங்கள் கிடைத்தில. தென்னிந்திய மக்கள் வரலாறு பற்றி இதுகாறும் நூல்கள் பல வெளிவந்திலாமையால், இந்நூலை உருவாக்கும் முயற்சியில் பற்பல இன்னல்கள் தோன்றியுள்ளன. எனினும், நாளடைவில் இன்னும் பல நூல்கள் இத்துறையில் தோன்றுவதற்கு இது ஊக்கம் அளிக்குமென்னும் நம்பிக்கையுடன் இதனைத் தமிழுலகில் வெளியிடுகின்றோம்.

சென்னை

ஆக்கியோன்.

பம்பாய் அரசாங்கம் "இராஜ பவனம்"

பம்பாய்-6

மார்ச்சு 28, 1957

# அணிந்துரை

நான் சென்னையில் இருந்த காலத்தில் என் நண்பர் திரு. ஜி. வி. கிருபாநிதி அவர்கள் தென் இந்திய மொழிகளின் புத்தக டிரஸ்டு பற்றி என்னுடன் அடிக்கடி கலந்து உரையாடியதுண்டு. அக்கழகத்திற்காகத் "தென்னிந்திய வரலாறு" எழுதுவதற்குச் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் கே. கே. பிள்ளை இசைந்துள்ளார்களெனக் கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைந்தேன். அந்நூல் இப்பொழுது எழுதி முடிக்கப் பெற்றுள்ளதென அறிந்து இன்புறுகின்றேன். தென்னாட்டின் பழைய வரலாற்றை அறிவதற்கு அது பேருதவி அளிக்குமென்பதில் சற்றும் ஐயமில்லை.

வரலாற்று நூற் குறிக்கோள் பண்டைய நிகழ்ச்சிகளை நேர்மையாக எடுத்து விளக்குவதேயாம். ஆயினும் வரலாற்று நூல்களை இயற்றினோர் பலகாலும் நடுநிலையைக் காப்பாற்றத் தவறியிருக்கின்றனர். பலர் உண்மையைப் புறக்கணித்துத் தம் தனி நோக்கத்திற்கு உகந்தவாறு தவறான பொருளமைத்து நாட்டு வரலாற்றை வரைந்துள்ளனர். குறிப்பாக, நம் நாட்டில் தோன்றியுள்ள எண்ணற்ற புரட்சிகளை எடுத்து விளக்குவதில் வரலாற்று நூலாசிரியர்கள் பலர் இக் குறைபாட்டுக்கு ஆளாயினர். தமது சமயம், இனம், குலம் முதலியவற்றை மிகைப்படுத்திக் கூறக் கருதியதால் உண்மை நெறி தவறியுள்ளனர். ஆகவே, நம் நாட்டில் நடைபெற்றுள்ள பல இயக்கங்களையும் நிகழ்ச்சிகளையும் மக்கள் திட்ப நுட்பமாக உணர்ந்துகொள்ள அவர்கள் வசதியளித்திலர். அன்றியும், நமது பண்டைப் பழக்க வழக்கங்கள், பண்பாடு முதலிய

வற்றின் சிறப்பறியாது, நம்மவர் சிலர் பிறநாட்டு இயல்களைப் பின்பற்றுவதற்கும் அது ஒரு காரணமாயிற்றெனலாம்.

நம் நாடு விடுதலை பெற்றவுடன் ஒரு புத்துணர்ச்சி தலை தூக்கியது. அதன் விளைவாக நமது பழைய வரலாற்றையும், நமது மூதாதையரின் பண்பாட்டையும் அறிய மக்களுக்கு ஆவல் எழுந்தது. அத்துடன் இந்தியாவைப் பல்வேறு பகுதிகள் என எண்ணாது முழுவதையும் ஒரே நாடாகக் கருது வதற்கு அரிய வாய்ப்பும் தோன்றியது.

உண்மையில் என்னைப் போன்று வட இந்தியாவைச் சார்ந்தவர்களுக்குத் தென்னாட்டைப் பற்றிப் போதிய அறிவு கிடையாது. மேலும், இதுகாறும் தோன்றியுள்ள இந்திய வரலாற்று நூற்கள் பெரும்பாலும் வட இந்தியாவைப் பற்றி மட்டுமே கூறியுள்ளன. தென்னாட்டில் தொன்று தொட்டே நிலவி வந்த பண்பாட்டையும், பண்டை மக்களது வீரச் செயல்களையும், கலைத் திறனையும் அவர் அறவே மறந்தனர் போலும்.

ஏறத்தாழ ஐந்தாண்டுகள் சென்னை நகரத்தில் தங்கி யிருக்கவும், சென்னை மாநிலத்தில் பற்பல இடங்களைச் சுற்றிப் பார்க்கவும் எனக்குக் கிடைத்த அரிய வசதிகளால், ஆங்குள்ள நம் சகோதரர்களது மாண்பையும், அவரது மூதாதையர்கள் பல துறைகளிலும் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் சற்று அறிந்தேன். பண்டைப் பேரரசுகள் பற்றியும் அக்காலத்தில் சிறப்புற்றோங்கிய கட்டடக்கலை, சிற்பக் கலை, மெய்ப்பொருள் ஆராய்ச்சி, இயல், இசை, நாடகம், நாட்டியம், விஞ்ஞானம், மருத்துவம், கணிதம், பொறியியல் முதலான பல்வேறு துறைகளில் அவர் ஈடுபட்டு உழைத்து உலகிற்கு ஈந்துள்ள அறிவுக்களஞ்சியங்களைப் பற்றியும் யானும் ஆராய்ந்து அறிய விரும்புகின்றேன். இந்திய நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள மக்களது பண்டை வரலாற்றை ஆராய்ந்து அறிவது நமது இன்றியமையாத கடமையாகும்.

பேராசிரியர் கே. கே. பிள்ளை அவர்களின் நூல் பேரறிஞர் களாலும், மற்றைப் பெருமக்களாலும் ஒருங்கே வரவேற்கப்

படுமென்பதில் சற்றேனும் ஐயமில்லை. தென் இந்தியாவின் நில அமைப்பு, வரலாறு, பண்டைய மக்கள் பண்பாடு, தொன்று தொட்டு வந்துள்ள செவிவழிச் செய்திகள், மக்களது நம்பிக்கைகள், அறநிலைத் தொண்டுகள் முதலான அனைத்தையும் இந்நூல் வாயிலாக அறியலாம். அத்துடன், சென்ற பல நூற்றாண்டுகளில் வட இந்தியாவிற்கும் தென் இந்தியாவிற்குமிடையே நிகழ்ந்த தொடர்புகளும் எடுத்து விளக்கப் பெற்றுள்ளன. இது, குறிப்பாக, பரத கண்டத்தின் ஒற்றுமையைப் பங்கமின்றிப் பாதுகாப்பதற்கும், நமக்குக் கிடைத்துள்ள சுதந்திரத்தைப் பேணுவதற்கும் பேருதவி அளிக்குமென்று நம்புகின்றேன்.

**(ஒப்பம்) ஸ்ரீ பிரகாசா**

# அணிந்துரை

**டாக்டர் ஏ. எல். முதலியார்**
துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்

தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்டு, தன்னுடைய முன் அனுபவங்களாலும், பொதுமக்களைக் கவர்வனவாயும் அதனோடு அவர்களுக்கு நற்பயன் அளிப்பனவாயும் உள்ள நூல்களை வெளியிட்டதால் பெற்ற அறிவின் திறத்தாலும், இரண்டாம் வரிசை நூல்களை வெளியிடத் தலைப்பட்டுள்ளது. அவற்றைத் திராவிட மொழிகள் அனைத்திலும் ஆக்கி அளிக்கவும் அது கருதுகின்றது. இந்த நூல்களெல்லாம் மிக்க கவனத்தோடும், படிப்பவர்களின் பலதிறப்பட்ட சுவைகளுக்கு ஏற்பவும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. வாழ்க்கையின் பல வகைக் கூறுபாடுகளையும் பற்றிய பலபல பொருள்கள் அடங்கிய நூல்களை வெளியிட இந்தப் புத்தக டிரஸ்டு இயற்கையாகவே ஈடுபடத் தொடங்கியுள்ளது. இந்தியப் பெருந்தலைவர்களுள் சிலருடைய வாழ்க்கை வரலாறுகளையும், அவர்கள் சாதித்தவைகளையும் விரித்துரைப்பதற்கென ஒரு பகுதியும் இதில் தனியாக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. நாட்டின் நலன்களில் அக்கறைகொண்டு, மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடவும், நாட்டின் மதிப்பையும் செல்வாக்கையும் வலுப்படுத்தவும் அரும்பணி ஆற்றிய இப்பெருந்தலைவர்களுக்குத் தாங்கள் எவ்வளவு கடமைப் பட்டவர்கள் என்பதை வருங்கால மக்கள் அறிந்துகொள்வது நல்லது.

தத்துவம், சமயம், விஞ்ஞானம், பேரிலக்கியங்கள், பொருளாதாரம் என்பனவும் இவ்வரிசையில் இடம் பெற்றுள்ளன. சிறுகதைகளுக்கும், பண்டைய கலைகளைப் பொது மக்களிடையே பரப்புவதற்கும் இதில் இடம் வகுக்கப் பட்டுள்ளது என்பதைத் தெரிந்துகொள்வது நலமாகும். நடன நாடகக் கலைகள், சிற்ப சாஸ்திரங்கள், தொல்பொருள்

ஆராய்ச்சியில் கண்டறிந்த உண்மைகள், என்றென்றும் வியத்தகு பொருள்களாய் விளங்கும் தென்னிந்தியப் பெருங் கோயில்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகியவையும் இதில் சேர்க்கப் பெற்றுள்ளன. இப்போது வெளியிடப்பெறும் இந்த நூல் வரிசை, படிப்பவர்க்குச் சுவையூட்டும் பல்வேறு வகைப் பட்ட பொருள்களை வழங்கும் என்பது என் துணிபு. பொது முறைக் கல்விக்குரிய பொருள்களைக்கொண்ட இத்தகைய வெளியீடுகள், மேன்மேலும் பெருகும் பெருந்தொகையினராக வாசகர்களைக் கவர்ந்துகொள்ளும் என்பதில் ஐயமில்லை.

இந்த, நூல் வெளியீட்டுத் திட்டத்தில் தென்னிந்திய மொழி நூல்களுள் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மொழி பெயர்க் கும் அம்சம், பாராட்டுப் பெறுவதற்குத் தகுதியுடையதாகும். இவ்வரிசை முற்றுப் பெற்றதும், எழுதப்படிக்க மட்டும் தெரிந்த ஏராளமான மக்களைத் தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள உண்மையான ஆர்வம் கொள்ளும்படி செய்து, அவர்களைப் பழக்கமாகப் படித்துவரும் தொகையினருடன் இணைத்து இவற்றால் அவர்கள் தாங்களாகவே மிக்க திறம் உடையவர்களாவதற்கு இவைகள் உறுதுணை ஆகும் என்பது என் துணிபு. தென்னிந்திய மொழிகளின் புத்தக டிரஸ்டு எந்த உயரிய நோக்கங்களோடு தொடங்கப் பெற்றதோ அந்நோக்கங்கள் அஃது ஆற்றிவரும் அரும்பணியால் மேன் மேலும் நிறைவேறிவரும் என்று நான் நம்புகிறேன்.

**ஏ. எல். முதலியார்,**
துணைவேந்தர்.

# BIBLIOGRAPHY


1. Aiyangar, Dr. S. K.—Ancient India
2. ,, —Beginnings of South Indian History
3. Aiyangar, M. Srinivasa—Tamıl Studies
4. Aiyangar, P. T. Srinivasa—History of the Tamils
5. Aiyar, K. G. Sesha—Cera Kings of the Sangam Age
6. Ancient India—Described by Megasthenes & Arrian
7. Historical Inscriptions of South India. (Madras University)
8. Imperial Gazetteer of India. Vols. 1 & 2.
9. Altekar, A. S.—The Rashtrakutas and their times
10. Barnett, L. D.—Antiquities of India
11. Bhandarkar, R. G. —Early History of the Dekkan
12. Bhandarkar D. R. —Lectures on the Ancient History of India from 650 to 325 B. C.
13. Brown. Percy—Indian Architecture ; Vol. 1
14. Bp. Caldwell-Comparative Grammar of the Dravidian Languages
15. Chenchiah and Bhujanga Rao —A History of Telugu Literature
16. Coomaraswamy, A. K. —History of Indian and Indonesian Art
17. Dutt, K. N. —Aryanization of India
18. Dubreuil, G. Jouveau-Ancient History of the Deccan
19. ,, —The Pallavas
20. Elliot, Sir Charles —Hinduism and Buddhism

21. Farquhar, J.N.—An outline of the religious Literature of India
22. Fleet, J. F. —Dynasties of the Kanarese District. (Bombay Gazetteer, Vol. 1)
23. Gopalachari, K. —Early History of the Andhra country
24. Govinda Pillai, P. —History of the Malayalam Literature
25. Kanakasabhai, V. —Tamils 1800 years ago
26. Mugale, R. G. —The Heritage of Karnataka
27. Narasimhachariar—History of Kannada
28. Pudukkottai State Inscriptions
29. Raju, P. T. —Telugu Literature
30. Rangacharya, V. —Pre Mussalman India. Vol. 1.
31. Sanga Ilakkiyam. (Tamil)
32. Sastri, K. A. N. —A History of South India
33. ,, —The Colas
34. Slater, G. —Dravidian Elements in Indian Culture
35. South Indian Inscriptions

# பொருளடக்கம்

## தென் இந்திய வரலாறு
## (இரண்டாம் பகுதி)

பக்கம்


1. **இயல் - பத்து**
   *தென்னாடும் முஸ்லீம் தொடர்பும்* .... *1—30*

2. **இயல் - பதினொன்று**
   *விஜயநகரப் பேரரசு காலம்* ... *31—101*

3. **இயல் - பன்னிரண்டு**
   *ஐரோப்பியரின் வருகையும்*
   *அரசியற் போராட்டங்களும்* .... *102—149*

4. **இயல் - பதின்மூன்று**
   *நவீன காலம்* ... *150—224*

# தென் இந்திய வரலாறு

## இயல்—பத்து

## தென்னாடும் முஸ்லீம் தொடர்பும்

நெடுங்காலத்திற்கு முன்னரே அராபியர்கள் தென் இந்தியாவோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவிய பின்னும், அத்தொடர்பு நீடித்து வந்தது. அராபிய வர்த்தகர்கள் பலர் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் தென்னிந்தியாவில் குடியேறியதாக அறிகிறோம். ஆயின், தென்னாட்டின் மீது முஸ்லீம்களுடைய இராணுவப் படையெடுப்பு வட இந்தியாவிலிருந்துதான் ஏற்பட்டது. அது முதன் முதலாக 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆரம்பமாயிற்று. அப்பொழுது நிகழ்ந்த கில்ஜி படையெடுப்புப் பின் நிகழ்ந்த படையெடுப்புக்களுக்கு அடிகோலியது.

தென்னிந்தியாமீது நடைபெற்ற முஸ்லீம் தாக்குதல்களின் வரலாற்றை அறிவதற்குத் தென்னாட்டின் அக்கால அரசியல் நிலையை உணர வேண்டும். சாளுக்கியர், சோழர், பாண்டியர் ஆகியோரது நிலை சீர்குலைந்தமை, முஸ்லீம்களின் வெற்றிக்குப் பேருதவி அளித்தது. சாளுக்கியருடைய வலிமை ஆறுவது விக்கிரமாதித்திய மன்னரின் பின்வந்தோர் காலத்தில் நாளுக்கு நாள் குன்றி வந்தது. தமது தமையனோடு நடத்திய சச்சரவில் நாட்டிலுள்ள சிற்றரசர்களை விக்கிரமாதித்தியர் கிளர்ச்சி செய்யத் தூண்டியது, இறுதியில் அரசாங்கத்திற்குப் பெரும்

தீங்கை விளைவித்தது. அவர்கள் ஒவ்வொருவராகப் பேரரசின் தலைமையை விட்டு விலகிக்கொண்டனர். முடிவில் சாளுக்கிய மன்னர் மூன்றும் தைலப்பனின் காலத்தில், காலச்சூரி இனத்தைச் சார்ந்த பிச்சலர் என்ற ஒரு சிற்றரசர் சாளுக்கிய அரசை 1163-இல் கைப்பற்றிக்கொண்டார். காலச்சூரிகளின் ஆட்சி இருபது ஆண்டுகளே நிலைபெற்றிருந்த போதிலும் அது தென்னிந்திய வரலாற்றில் சிறந்த இடம் பெற்றுளது. ஏனெனில் பிச்சலரின் அமைச்சர் பஸவர் என்பவர் லிங்காயத மதக்கொள்கையைத் தோற்றுவித்தார். அது தென்னுட்டின் சில பகுதிகளில் வேரூன்றித் தழைத்தது.

சாளுக்கிய மரபில் தோன்றிய நான்காம் சோமேசுவரர் (1184-1200) சிறிது காலம் தமது அரசியலுக்குப் புத்துயிர் கொடுத்தார். ஆயினும் அது நீடித்த பயனை அளிக்கவில்லை. மேன்மேலும் ஓங்கி வளர்ந்துகொண்டிருந்த யாதவர்களின் முன்னேற்றம் ஒரு பக்கமும், ஒய்சளர்களின் ஊக்கம் மற்றொரு பக்கமும் சாளுக்கியரின் நிலையை கி.பி. 1200-ஆம் ஆண்டுக்குள் அடியோடு தகர்த்துவிட்டன.

**யாதவர்கள் :** யாதவர்கள் கிருஷ்ணபகவானின் வழித் தோன்றியவர்களெனச் செவி வழிச் செய்திகள் கூறுகின்றன. நாஸிக் முதல் தேவகிரிவரை அகன்று கிடந்த செவுண நாட்டை அவர்கள் ஏறத்தாழ கி.பி. 1000-ஆம் ஆண்டில் கைப்பற்றி அங்குத் தமது அரசியலை அமைத்துக்கொண்டனர். இவ்வரசை உருவாக்கத் தேவகிரியைத் தலைநகராகக் கொண்டவர் பில்லமா (1187-91) என்பவர். அவர் ஒய்சளர்களோடு நெடுநாள் போரிட்டார். கிருஷ்ணுநதி வரையுள்ள நாடு ஒய்சளர் கீழ் அமைந்தபோதிலும் அவ்வாற்றின் வடபக்கம் யாதவர்க்குச் செல்வாக்குத் தழைத்தோங்கியது. நதிக்குத் தெற்கே ஒய்சளரை அவர் துரத்திவிட்டார். யாதவ குல மன்னர்களில் தலை சிறந்தவர் சிங்கணர் (1210-47) என்பவர். பெரும் போர் வீரராயிருந்த இவர் குஜராத் நாட்டின் மீது பல முறை படை எடுத்தார். ஒய்சளர் யாதவ நாட்டைத் தாக்கினபோது அவர்களைத் தடுத்துத் துரத்தினதுமல்லாமல் தெற்கில் காவேரி வரையில் படையெடுத்து வந்தார். வடக்கில் காகதீயர்,

கோலாப்பூர் அரசர், மாளவ மன்னர் முதலியோரிடம் போரில் ஈடுபட்டார். பிற்காலச் சாளுக்கிய மன்னர்களது பேரரசின் பெரும் பகுதியும் சிங்கணரின் அதிகாரத்தை அங்கீகரித்தது.

இவருக்குப் பின் அரசு புரிந்த கிருஷ்ணர் (1247-60) கடவுட்பற்று மிக்கவர். அவரது பேரரசு தளர்ச்சியடைந்தது. அவர் நாட்டின் தென் பகுதி அனைத்தும் காகதீயர் கையில் சிக்கியது கிருஷ்ணருக்குப் பின் அரசாண்ட அவர் தம்பி மஹாதேவர் (1260-71) காகதீயரையும் வடகொங்கண மன்னரையும் போரில் வென்றார். யாதவகுலக் கடைசி மன்னன் இராமச்சந்திரர் (1271-1309) காகதீயர்களோடும் ஒய்சளர்க ளோடும் இடைவிடாது போர் புரிய நேரிட்டது. முடிவில் முஸ்லீம்கள் அவரை முறியடித்தனர்.

**காகதீயர்கள் :** காகதீயர்கள் ஒரு சிற்றரச குலத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் யாதவர்களின் பழம் பகைவர்கள். மேலைச் சாளுக்கியரது ஊக்கம் குறைந்தவுடன் இவர்கள் தலை தூக்கினர். 12-ஆவது நூற்றாண்டில் தெலிங்கான நாட்டில் முதன் முதலாக ஓர் அரசை அமைத்தனர். இவர்களது ஆதி வரலாற்றின் முழுவிவரம் கிடைத்திலது. முதலாம் பிரதாப ருத்திர தேவர் என்றவர் 12-ஆம் நூற்றாண்டில் அரசு புரிந்த மன்னர்களில் ஒருவர். அவரது மருமகன் கணபதியே காகதீய மன்னர்களில் தலைசிறந்தவர். வெகு காலம் நீடித்திருந்த அவரது ஆட்சியில் (1199-1262) அவர் யாதவர், சோழர், நெல்லூரை ஆண்ட தெலுங்குச் சோடர், கடப்பை, கர்னூலைச் சார்ந்த காயஸ்தர் ஆகியோரைப் போரில் முறியடித்தார். காடவத் தலைவனாகிய கோப்பெருஞ்சிங்கனை அடக்கினார். ஆயினும் சடைய வர்மன் சுந்தர பாண்டியனோடு இவர் வெகு காலம் பயனற்ற போரில் ஈடுபட நேரிட்டது. சிறந்த போர் வீரராயிருந்த கணபதி, ஆட்சித் துறையிலும் திறம்பட விளங்கினார். நாட்டின் வாணிகத்தையும் மக்களது பொருள் வளர்ச்சியையும் நன்கு பேணினார். வெளிநாட்டு வணிகர் களுக்குத் தனிப்பட்ட உரிமைகளும் சலுகைகளும் அளிக்கப் பட்டன. தமக்குப் பின் தம் மகளே அரசுபுரியும்படி திட்டப் படுத்தி அவளுக்கு ருத்திரதேவ மஹாராஜா என்ற ஆண்

பெயரும் சூட்டினர். ஆயின், ருத்திராம்பாளின் அரசாட்சிக் காலத்தில் (1262-96) சிற்றரசர்களின் கிளர்ச்சிகள் தீவிரமாகத் தோன்றின. அவற்றை அடக்க அவளால் முடியவில்லை. ஆனால் அரசியல் நல்லமுறையில் நடைபெற்றது. வெளி நாட்டிலிருந்து வந்த மார்க்கோ போலோ அவளது ஆட்சித் திறனைப் புகழ்ந்து கூறியுள்ளார். கடைசியில் அவரது பேரன் இரண்டாம் பிரதாபருத்திரர் (1295-1326) திறமை வாய்ந்த மன்னராய் விளங்கினர். தம் நாட்டில் 77 நாயகர்களை நியமித்து ஆட்சி புரிந்து வந்தார். ஆனால் முஸ்லீம் படையெடுப்பாளருக்கு அவர் பணிந்து நடக்க நேர்ந்தது. கங்கர்களுடைய வரலாறும் அறிதற்குரியது.

**கங்கர்கள் :** இட்சுவாகு குலத்தின் மரபினரெனப் பறை சாற்றிய தலைக்காட்டுக் கங்கர்கள் மைசூர் நாட்டில் இரண்டாம் நூற்றாண்டு முதல் ஆட்சி புரிந்தனரெனக் கண்டோம். வெகு காலம் இராஷ்டிரகூடர்களோடும் பின்னர், சோழர், சாளுக்கியர் ஆகியவர்களோடும் போர் நடத்தினர். கி.பி. 1004-ஆம் ஆண்டு சோழர் தலைக்காட்டைக் கைப்பற்றினர். அத்துடன் கங்க மன்னர் தமது பதவியை இழந்தனர். ஆனால் மேலைக் கங்க குலத்தோர் சிற்றரசர்களாக 16-ஆவது நூற்றாண்டு வரையிலும் ஆங்காங்கு ஆண்டுவந்தனர். இறுதியில் விஜய நகரப் பேரரசு ஓங்கி வளர்ந்தபோது, அப்பதவியையும் இழந்தனர். கீழைக் கங்கர் குலத்தைச் சார்ந்தவர் கி.பி. எட்டாவது நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து கலிங்கத்தில் ஆண்டுவந்ததாகக் கருதப்படுகின்றனர். இராஜராஜன் காலத்தில் கீழைக் கங்கர்கள் சோழர்களாணைக்குள் இணைக்கப் பட்டனர். ஐந்தாம் வஜ்ரஹஸ்தன் என்ற மன்னனது காலத்தில் தான் (1038-68) சோழர் ஆதிக்கத்திலிருந்து கீழைக் கங்கர் விடுதலை பெற்றனர். கீழைக் கங்க மன்னரில் மிகச் சிறப்புற்றிருந்த அனந்தவர்மர் (1078-1148) சிறந்த போர் வீரர். அவர் தமது நீடித்த ஆட்சியில் கங்கைக்கும் கோதாவரிக்கும் இடையிலாண்ட பல மன்னர்களையும் முறியடித்தார். ஆயின், அவருக்குப் பின் கீழைக் கங்க குலத்தின் ஊக்கம் குன்றியது. 1205-இல் ஒரிஸாவில் நிகழ்ந்த முஸ்லீம்களின் முதல் படை

யெடுப்பை இவர்கள் தடுத்து நிறுத்தினபோதிலும், 15-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் முஸ்லீம்கள் இக்குலத்தை அறவே அழித்தனர்.

**ஒய்சளர் :** மைசூரிலும் அதன் அண்மையிலுள்ள நாட்டிலும் கங்கர் இழந்த பதவியை ஒய்சளர் கைப்பற்றிக் கொண்டனர். ஆதியில் ஒய்சளத் தளபதிகள் மேலைச் சாளுக்கிய மன்னர் ஆணைக்குள் வாழ்ந்த சிற்றரசர்களேயாவர். ஆனால், சோழ சாளுக்கியர்களுக்கிடையே சச்சரவு நிகழ்ந்த போது ஒய்சளரது ஊக்கம் வளர்ந்தது. 12-ஆவது நூற்றாண்டின் தொடக்கத்தில் பித்திதேவ விஷ்ணு வர்த்தனர் என்ற ஒய்சளத் தலைவர் தனி ஆட்சி அமைத்துக்கொண்டார்.

பெரும் போர் வீரராயிருந்த இவர் தலைக்காடு, கங்கவாடி, சேலம், கோயம்புத்தூர், கேரளத்தின் பெரும் பகுதி ஆகிய வற்றைக் கைப்பற்றினதாக அவர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஆயின், இறுதியில் விக்கிரமாதித்திய சாளுக்கியர் இவரை அடக்கினர். முறியடிக்கப்பட்ட விஷ்ணு வர்த்தனர் சாளுக்கிய ஆதிக்கத்தை ஆதரித்தார். விக்கிரமாதித்தியர் காலமான பின், விஷ்ணு வர்த்தனர் சாளுக்கியர் மீது சில வெற்றிகள் பெற்று நுளம்பபாடி, வனவாசி முதலிய வற்றைக் கைக்கொண்டார். முதலில் சமணராயிருந்த இவரைப் பின்னர் புகழ் பெற்ற இராமானுஜர் வைணவ மதத்தில் சேர்த்தார்.

விஷ்ணு வர்த்தனரின் புதல்வன் முதலாம் நரசிம்மன் (1152-73) ஆண்ட பின் பதவிக்கு வந்த இரண்டாம் பள்ளாளர் (1173-1220) ஒய்சளர் நிலையைப் பெரிதும் உயர்த்தினர். யாதவர்களை முறியடித்துக் குந்தள நாட்டைக் கைப்பற்றினது மன்றி, தக்காணத்தில் சாளுக்கியர்களையும் காலச் சூரியர்களையும், தெற்குக் கோடியில் பாண்டியர்களையும் போரில் முறியடித்தார். யாதவர் பள்ளாளரின் புதல்வரான இரண்டாம் நரசிம்ம (1220-38)னிடமிருந்து நாடுகளைக் கைப் பற்றின போதிலும், நரசிம்மன் சோழபாண்டியச் சச்சரவுகளில் தலையிட்டுத் தமது செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டார். வலுவற்றிருந்த சோழர்களுக்கு அவர் பேருதவி அளித்தார்.

மறுமலர்ச்சி அடைந்து முன்னேறி வந்த பாண்டியர்களைத் தாக்கி, சுந்தர பாண்டியரால் துரத்தப்பட்டிருந்த மூன்றும் இராஜ ராஜ சோழருக்கு அவர் நாட்டை நரசிம்மன் மீட்டுக் கொடுத்தார். ஆயின், கடைசியில் மூன்று அரசர்களும் நட்புறவு செய்துகொண்டனர். இரண்டாம் நரசிம்மனும், அவருக்குப் பின் ஆட்சி புரிந்த சோமேசுவரரும் (1233-67) துங்கபத்திரை யாற்றிற்குத் தெற்குள்ள நாட்டைக் கைப்பற்றுவதிலேயே ஈடுபட்டனர். அவ்வாற்றிற்கு வட பக்கமிருந்த அவரது நாட்டை அமைச்சர்கள் பாதுகாத்து வந்தனர். 13-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஒய்சளரின் வலிமை உச்ச நிலையை அடைந்ததெனலாம். சோமேசுவரர் ஸ்ரீரங்கத்தின் அருகிலுள்ள கண்ணனூரைத் தமது இருப்பிட மாக்கிக்கொண்டார்.

அவருடைய கடைசிக் காலத்தில் பல இன்னல்கள் தோன்றின. பாண்டியர் அவரை முறியடித்தனர். ஆகவே தமது மூத்தமகன் மூன்றும் நரசிம்மனை வடபகுதியிலும் இளைய புதல்வன் இராமநாதனைத் தெற்குப் பகுதியிலும் அமர்த்தினுர். ஆனல், 1279-இல் குலசேகர பாண்டியன் இராமநாதனை முறியடித்தார். அத்துடன் தெற்கிலுள்ள ஒய்சள ஆட்சி முடிவுற்றதென்னலாம். வடக்குப் பகுதியில் நரசிம்மனை யாதவர்களும், காகதீயர்களும் தாக்கினர். இதற்கிடையே இராமநாதனும் தமது தமையனுக்கு எதிராக உள்நாட்டுக் குழப்பம் உண்டாக்கி, கோலார், தும்கூர் என்ற மாவட்டங் களைக் கைப்பற்றி அங்கு அரசியல் நடத்தினுர். மூன்றும் நரசிம்மன் 1292-இல் இறந்தபோது அவர் மகன் மூன்றும் பள்ளாளர் வட பகுதிக்கு அரசனுனர். மூன்று ஆண்டு களுக்குப்பின் இராமநாதன் காலமானதும் தெற்குப்பகுதியும் பள்ளாளர் கையில் வந்தது. போர் வீரராயிருந்த பள்ளாளர் துளுவ நாட்டை 1303-இல் கைப்பற்றினுர். தமிழகத்தில் ஒய்சள ஆதிக்கத்தை வலுப்படுத்தப் பள்ளாளர் முயன்றுர். ஆயின், முஸ்லீம்களின் படையெடுப்பினுல் அம்முயற்சியை அவர் அறவே கைவிடும்படி நேர்ந்தது.

**பாண்டியர்கள் :** தெற்குக் கோடியில் பாண்டியரது மறுமலர்ச்சி 13-ஆவது நூற்றுண்டில் தோன்றியது. அதற்கு முன் சோழப் பேரரசு ஓங்கி வளர்ந்த காலத்தில், பாண்டியரது நிலை பொலிவற்றுக் கிடந்தது. 12-ஆவது நூற்றுண்டின் இறுதியில் சோழரது ஊக்கம் குன்றியபோது, பாண்டியர்களுக்கு நல்லதோர் வாய்ப்புக் கிடைத்தது. மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1216—38) மூன்றும் குலோத்துங்கனை முறியடித்து, சோழர்களுடைய ஆதிக்கத்தை அகற்றினர். ஆனல், ஒய்சளர்கள் மூன்றும் குலோத்துங்கனுக்கு உதவி புரியவே பாண்டியர் முன்னேற்றத்திற்குத் தடங்கல் ஏற்பட்டது. குலோத்துங்கனுக்குப் பின் அரியணை ஏறிய இரண்டாம் இராசராசன் திறமையற்றவராயிருந்தது, பாண்டியருக்குப் பின்னும் ஊக்கம் அளித்தது. இத்தருணத்தில் காடவர் தலைவன் கோப்பெருஞ் சிங்கன், சுந்தரபாண்டியனுக்கு உதவி செய்து சோழர்களையும் ஒய்சளர்களையும் எதிர்த்தார். சோழர்களைத் தெள்ளாற்றில் வென்று இராசராசரைக் கோப்பெருஞ் சிங்கன் சிறைசெய்தார். ஒய்சள குலத்து இரண்டாம் நரசிம்மன் தமது தளபதிகளை அனுப்பி, கோப்பெருஞ்சிங்கனது நாட்டை அழித்துப் பெரும் தீங்கை விளைவித்தார். மேலும், இராசராசருடைய அரசையும் நரசிம்மன் மீட்டு அவருக்கே கொடுத்தார். நரசிம்மன் சுந்தர பாண்டியனை மஹேந்திர மங்கலத்தில் முறியடித்தார். ஆயின் அவரது புதல்வன் பாண்டியர், சோழர் ஆகியவரோடு நட்புறவு செய்துகொண்ட நிகழ்ச்சி முன் கண்டோம். இரண்டாம் இராசராசருக்குப்பின் அரசாண்ட சோழ மன்னர் மூன்றும் இராசேந்திரர் என்பவர் திறமை வாய்ந்தவர். பாண்டியர்மீது பல வெற்றிகள் பெற்றூர்.

ஆயினும், சடையவர்மன் சுந்தர பாண்டியரது ஆட்சி (1251—68) பாண்டியரது மறுமலர்ச்சிக்கு அடிகோலியது. சடையவர்மன் அஞ்சாப் போர்வீரர். நெல்லூர் வரையிலும் படையெடுத்துச் சென்று, இடை நாடுகளை வென்று அவற்றைத் தம் அரசோடு இணைத்தார். இறுதியில் இராஜேந்திர சோழரையும் தம் ஆணைக்குள்ளாக்கினர். ஒய்சளர்களை

அறவே தோற்கடித்துக் கண்ணனூர் கொப்பத்துக் கோட்டையைப் பிடித்தார்; கோப்பெருஞ் சிங்கனைப் போரில் வென்று தம் ஆதிக்கத்தை வலுப்படுத்தினர். இறுதியாக வேணாடு, கொங்கு, மகதைமங்கலம் ஆகிய நாடுகளையும் கைக்கொண்டார். சிதம்பரத் திருக்கோவிலுக்குப் பல நன்கொடைகளை அளித்தும், திருப்பணிகளைச் செய்வித்தும், விமானத்தைப் பொன் வேய்ந்தும் கோயிலைச் சிறப்பித்தார்.

சுந்தரவர்மன் 1268-இல் காலஞ்சென்றபின், மாறவர்மன் குலசேகரன் அரியணை ஏறினர். அரசகுலத்து இளவரசர்கள் அவருடன் ஒத்துழைத்தனர். 1279-இல் மூன்றும் இராசேந்திர சோழனையும் அவரது துணைவர் இராமநாத ஒய்சளரையும் குலசேகரன் தோற்கடித்தார். இலங்கைமீது படையெடுத்து, அந்நாட்டைப் பிடித்தார். ஆயின், 1311-இல் அவர் இறந்தபின் அவரது புதல்வர் வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் என்னும் இருவரிடையே உள்நாட்டுப் போர் மூண்டது. இது முஸ்லீம்கள் தமிழ் நாட்டைத் தாக்கி வெற்றி பெற வசதி யளித்தது.

ஆகவே வடக்கிருந்து முஸ்லீம்கள் படையெடுத்து வந்த காலத்தில் தென் இந்தியாவில் நான்கு முக்கிய அரசுகள் ஆட்சி புரிந்தன. இவற்றுள் வடக்குக் கோடியில் யாதவ அரசர் இராமச்சந்திர தேவர் (1271-1309) ஆண்டு வந்தார். அதற்குத் தென் கிழக்கில் இரண்டாம் பிரதாபருத்திரர் ஆட்சி புரிந்த (1292-1342) காகதீய அரசு இருந்தது. தெற்குக் கோடியில் கிடந்தது பாண்டி நாடு. அப்போது சுந்தர பாண்டியன், வீரபாண்டியன் என்னும் இருவரிடையில் உள் நாட்டுப் போர் மூண்டு வந்தது. மேற்குக் கடலோரத்தில் இருந்தது கேரள நாடு. அதற்குள் வேணாடும் வேறு பல சிற்றரசுகளும் அடங்கியிருந்தன. இந்நான்கு பகுதிகளுக் கிடையே பல குறுநில மன்னர்களும் தலைவர்களும் ஆண்டு வந்தனர். உதாரணமாக நெல்லூர் நாட்டில் தெலுங்குச் சோடர்களும், ஒரிஸாவில் கலிங்கக் கங்க அரசர்களும், மங்கலாபுரத்தில் ஆலுபத் தலைவரும் ஆட்சி புரிந்தனர். பக்கத்திலிருந்த அரசுகள் ஒன்றுக்கொன்று சச்சரவுகளிலும்


டில்லி
டில்லி சுல்தான்கள் ஆட்சி
குஜராத்
யாதவர்கள்
தேவகிரி
ஒரிஸா
வாரங்கல்
கலிங்கம்
காகதீயர்கள்
தெலுங்கு சோடர்
ஒய்சளர்கள்
துவார சமுத்திரம்
கேரளம்
பாண்டியர்
மதுரை
வேணாடு
இலங்கை
அரபிக் கடல்
வங்காள விரிகுடா

இந்தியா—1290

போர்களிலும் ஈடுபட்டிருந்தன. இந்நிலையில் இவைகள் ஒருங்கு சேர்ந்து தம் பொது எதிரியைத் தடுத்துப் போரிடுவது முடியாத செயல் ஆயிற்று.

## அலாவுதீனின் படையெடுப்புக்கள்

ஜெலாலுதீன் கில்ஜி டில்லியில் ஆட்சி புரிந்த காலத்தில் அவரது மருமகன் அலாவுதீன் தம் வலிமையை வளர்த்துக் கொள்ளுமாறு நிகழ்த்தின படையெடுப்புத்தான், முஸ்லீம் களின் தென்னிந்தியப் படையெழுச்சிகளில் முந்தியது. அலாவு.தீன், டில்லி அரசாங்கத்தைக் கைப்பற்றப் பேராவல் கொண்டிருந்தார். அதற்கு வேண்டிய பொருள் பெறக் கருதியே தென்னாட்டின்மீது படையெடுக்கத் துணிந்தார். முதலில், 1294-இல் யாதவ மன்னர் இராமச்சந்திர தேவரது தலைநகர் ஆகிய தேவகிரியைத் தாக்கினார். அத்தருணம் இராமச்சந்திரரது புதல்வனாகிய சங்கமன் தலைநகரை விட்டு வெளியேறியிருந்ததால் இராமச்சந்திரன் அலாவுதீனுக்கு அடிபணிந்தார். சிறிது காலத்தில் மகன் நாட்டிற்குத் திரும்பிய உடன் போர் தொடங்கியது. தேவகிரிக் கோட்டையை முஸ்லீம்கள் முற்றுகையிட்டனர். இறுதியாக எலிச்பூர் மாவட்டத்தையும் மிக்க பொருளையும் எதிரிக்கு அளித்து இராமச்சந்திரர் சமாதானம் செய்துகொண்டார்.

அலாவுதீன் திரும்பிச் சென்று டில்லி அரசாங்கத்தைக் கபடமாகக் கைப்பற்றியபின், மாலிக்காபூர் என்ற தளபதியின் தலைமையில் ஒரு படையைத் தக்காணத்திற்கு 1308-இல் அனுப்பினார். யாதவ மன்னர் கப்பங் கட்டத் தவறிவிட்டதும் ஒரு காரணம். அன்றியும், அலாவுதீனின் எதிரியான குஜராத்து மன்னனுக்கும் அவர் புதல்விக்கும் இராமச்சந்திர தேவர் தஞ்சம் அளித்திருந்தார். ஆகவே 1308-இல் மாலிக்காபூர் யாதவ மன்னரைத் தாக்கி முறியடித்து, அவரையும் அவர் புதல்வரையும் டில்லிக்கு அழைத்துச் சென்றார். கைதியாகச் சென்ற மன்னரை அலாவுதீன் நன்மதிப்புடன் வரவேற்று, சுல்தானின் ஆதிக்கத்தில் அவர் தமது நாட்டை ஆளுவதற்கு அனுமதி அளித்தார்.

1309-இல் வாரங்கலுக்கெதிராகக் காபூர் திரும்பவும் அனுப்பப்பட்டார். வழியில் தேவகிரிக்கு வந்து அங்குள்ள மன்னனிடமிருந்து தேவையான உதவிகளைப் பெற்றபின் வாரங்கலை முற்றுகை இட்டார். காகதீய அரசன் இரண்டாம் பிரதாப ருத்திரன் தீவிரமாகப் போர் புரிந்த போதிலும் இறுதியில் அடிபணிய நேரிட்டது. பொருட்குவிய லொன்றையும் அளித்து உடன்படிக்கை செய்துகொண்டார். அடுத்த ஆண்டில் காபூர் ஒய்சள மன்னர் மூன்றும் பள்ளாளரை முறியடித்து அவரது தலைநகரான துவாரசமுத்திரத்தைக் கைப்பற்றினர். பின் பாண்டி நாட்டிற்குள் நுழைந்து மதுரா புரிவரை சென்றார். உள்நாட்டுச் சச்சரவில் ஆழ்ந்திருந்த பாண்டி நாடு, தீவிரமாக எதிர்க்கவில்லையாயினும், காபூர் அத்தருணம் குறிப்பிடத்தக்க வெற்றி பெறவில்லை. வீர பாண்டியனையோ, சுந்தர பாண்டியனையோ நேரில் சந்தித்துப் போர் செய்ய அவருக்கு இயலவில்லை. அவ்வேளை காபூர் தெற்கே இராமேஸ்வரத்திற்குச் சென்று அங்கு ஒரு பள்ளி கட்டியதாகக் கூறப்படுகிறது. இதற்கிடையே சுந்தர பாண்டியன் மாமன் விக்கிரம பாண்டியன் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு வந்து காபூரைத் தோற்கடித்துவிட்டார். அதனால் காபூர் டில்லிக்குத் திரும்பினர்.

1312-இல் இராமச்சந்திரர் காலமான உடன் அவர் மகன் சங்கரதேவர் போருக்கு ஆயத்தமானர். காபூர் நான்காவது தடவை தெற்கு வந்து யாதவ நாட்டைக் கைப்பற்றினர். சங்கரர் தலைநகரை விட்டகன்றார். காபூர் புது அரசியலொன்று திறம்பட அமைத்து யாதவ நாட்டை டில்லி அரசியலோடு இணைத்தார். மேலும் திருக்கோயில்கள் பலவற்றை இடித்து ஆங்குப் பள்ளிகளைக் கட்டுவித்தார். ஆனல், யாதவ நாடு முழுவதையும் அடக்குவதற்கு முன்னே காபூர் டில்லிக்குத் திரும்ப அழைக்கப்பட்டார்.

1316-இல் அலாவுதீன் இறந்த உடன் டில்லியில் குழப்பம் தலையெடுத்தது. இராமச்சந்திரரின் மருமகன் ஹரபால தேவர் இத்தருணத்தில் யாதவ அரசை மீட்டார். டில்லி அரசைக் கைப்பற்றிய **முபாரக்** கில்ஜி 1318-இல் யாதவ

நாட்டின்மீது படையெடுத்தார். தேவகிரியில் நடைபெற்ற தீவிரப் போரில் ஹரிபாலரை முறியடித்தார்; பின்னர் அவரைத் தீக்கு இரையாக்கினர். வாரங்கல் அரசர் கப்பம் கட்டத் தவறியதால் அவரைத் தண்டனை செய்யும் பொறுப்பைத் **தளவாய்** குஸ்ருகானிடம் அளித்துவிட்டு **முபாரக்** டில்லிக்குத் திரும்பினர். குஸ்ருகான், வாரங்கல் மீது பாய்ந்து கப்பம் அனைத்தையும் பெற்றுக்கொண்டு சுல்தான் ஆதிக்கத்தை மீண்டும் அமைத்தார்.

பாண்டி நாட்டில் அரசுரிமைப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வந்தது. சுந்தர பாண்டியன், முஸ்லீம்களுடைய உதவியை நாடினதாகக் கூறப்படுகிறது. இது உண்மையாயிருந்தாலும், முஸ்லீம்கள் போதிய உதவி அளித்ததாகத் தெரியவில்லை. இதற்கிடையே, கேரள நாட்டு மன்னரும் தீவிரப் போர் வீரரும் ஆகிய இரவிவர்மன் குலசேகரர் என்பவர், பாண்டி நாட்டில் நிலவிய குழப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு, காஞ்சிபுரம் வரையிலும் படையெடுத்துச் சென்றார். அவர் வீரபாண்டியனுக்கு உதவியளிக்கவே, சுந்தர பாண்டியன் இரண்டாம் பிரதாபருத்திரன் நட்பைக் கோரினர். 1317-இல், பிரதாபருத்திரன் முப்பிடி நாயக்கரின் கீழ் ஒரு படையை அனுப்பினர். முப்பிடி நாயக்கர் இரவிவர்மனையும் வீரபாண்டியனையும் தோற்கடித்து, சுந்தர பாண்டியனுக்கு அரச பதவியையும் அளித்தார்.

பிரதாபருத்திர தேவரின் ஊக்கம் ஓங்கி வளர்ந்து வந்தது. முஸ்லீம் ஆட்சியைத் தம் நாட்டிலிருந்து அகற்றலாமென்ற நம்பிக்கை அவருக்குப் பிறந்தது. இதற்குள், டில்லியில் தமது அரச மரபை நிலைநிறுத்திய கியாசுதீன் துக்ளக் 1321-இல் வாரங்கலுக்கெதிராகத் தமது மகன் உலூப்கான் வசம் ஒரு படையை அனுப்பினர். அவர் இருதடவை வாரங்கல்மீது படையெடுத்தார்; வாரங்கலைத் தாக்கி அங்குள்ள மாபெரும் அரணை முற்றுகையிட்டார். அளவுக்கு மிஞ்சின தன்னம்பிக்கையால் பிரதாபருத்திரர் அவசியமான ஒழுங்கு முறைகள் செய்யத் தவறினர். ஐந்து மாதகாலம் நிகழ்த்தின போர் தமக்குப் பயனளிக்காததால் சமாதான உடன்படிக்கை செய்து

கொண்டார். பிரதாபருத்திரரை உலூப்கான் டில்லிக்கு அனுப்பினர். ஆயின், வழியில் அவர் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது. உலூப்கான் வாரங்கலைச் சூறையாடினர். காகதீயரின் மற்ற ஊர்களையும் கைப்பற்றினர். பாண்டி நாட்டுக்கு ஒரு படையை அனுப்பி, அரசர் பராக்கிரம பாண்டியனைப் பணியச்செய்தார்.

1323-இல் **மாபார்**[1] மாவட்டத்திற்கு முஸ்லீம் ஆட்சியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார். உலூப்கான், முகமத் பின் துக்ளக் என்ற பெயரோடு 1325-இல் டில்லியில் அரச பதவி ஏற்ற போது யாதவர், காகதீயர, பாண்டியர் ஆகியோரின் நாடுகள் முஸ்லீம் ஆட்சிக்குள் அமைந்திருந்தன. ஒய்சள நாடு, கம்பிலி, கேரளம் இவை மட்டுமே சுதந்தர நாடுகளாய்த் திகழ்ந்தன. துங்கபத்திரை யாற்றுக்கும் கிருஷ்ணு நதிக்கும் இடையிலுள்ள நாட்டில் தமது செல்வாக்கைப் பெருக்கிக்கொண்ட கம்பிலி தேவனென்ற கம்பிலி நாட்டரசன் சாகர் நாட்டுத் தலைவர் ஆகிய பஹாவுதீன் பர்க்ஷாஸ்ப் என்பவரோடு சதியாலோசனை செய்து, டில்லிப் பேரரசை எதிர்த்தார். முகம்மத் துக்ளக் தாமே வந்து கம்பிலி நாட்டைத் தாக்கினர். வலிமை சான்ற கும்மதாக் கோட்டையை நெடுநாள் முற்றுகையிட்ட பின்னரே அவரால் அதைப் பிடிக்க முடிந்தது. கம்பிலித் தேவர் இறுதிவரை அஞ்சாப் போர் செய்து போர்க்களத்திலேயே மாண்டார். பல நாள் போராடி சோர்வடைந்திருந்த பள்ளாளர் கம்பிலித் தேவரோடு ஒத்துழைக்க மறுத்து, 1327-இல் முஸ்லீம் பேரரசை அங்கீகரித்தார். தக்காணமும் தென் இந்தியாவும் முஸ்லீம் ஆட்சிக்குள் திகழ்ந்தனவென்று முஸ்லீம் வரலாற்று நூலாசிரியர்கள் கூறுகின்றனர். தென்னிந்தியாவில் நிறுவப் பெற்ற முஸ்லீம் அரசு ஐந்து மாநிலங்களாக வகுக்கப் பட்டிருந்தன. அவை, தேவகிரி, திலிங், கம்பிலி, துவார சமுத்திரம், மர்பார் என்பனவாம். ஒவ்வொரு மாவட்டத்தை

1. இம்மாகாணத் தலைவர் 1327-இல் நியமிக்கப்பட்டதாகச் சிலர் கருதுகின்றனர். அதற்குக் கூறப்படும் சான்றுகள் நம்பக் கூடியவையல்ல. அக்கால முஸ்லீம் எழுத்தாளர்கள் நெல்லூருக்குத் தெற்கிலுள்ள நாட்டை 'மாபார்' என்று குறிப்பிட்டனர்.

யும் ஆட்சி புரிய ஒரு தலைவரும், வேறு அலுவலாளர்களும் நியமிக்கப்பட்டனர். ஆயினும் தேவகிரியைத் தவிர மற்றையப் பகுதிகளில் முஸ்லீம் ஆட்சி தழைத்தோங்கவில்லை. மக்கள் புது ஆட்சிக்கு இணங்கி வந்திலர்; வசதி வாய்த்த போதெல்லாம் கிளர்ச்சி செய்தனர்.

முகமதுபின் துக்ளக் அரசு புரிந்த காலத்தில் தென்னிந்தியாவில் இந்துக்களின் புரட்சி தலை தூக்கியது. பக்தி இயக்கமும் வீரசைவ சமயமும் மக்களிடையே மதப்பற்றை யெழுப்பின. அத்துடன் ஆங்காங்கு முஸ்லீம் மாகாணத் தலைவர்களுடைய கொடிய செயல்கள் மக்களிடையே மனக் கசப்பை வளர்த்தன. பலவகைக் கிளர்ச்சிகள் தலையெடுத்தன.

இத்தருவாயில் சங்கமரின் புதல்வர்களாகிய ஹரிஹரர், புக்கர் இருவரையும் தென்னிந்தியப் புரட்சியை அழிக்கும் பொருட்டு முகமதுபின் துக்ளக் அனுப்பினார். இவ்விரு சகோதரர்களும் முன்னே வாரங்கலிலும் பின்னே கம்பிலியிலும் அரசாங்க அலுவலாளர்களாக இருந்தவர்கள். 1327-இல், முஸ்லீம்கள் கம்பிலியைக் கைப்பற்றின போது இவர்கள் டில்லிக்கு அனுப்பப்பட்டனர். ஆங்கு இவர் இருவரும் இஸ்லாம் மதத்தைத் தழுவினர். இவர்கள் தென்னிந்தியக் கிளர்ச்சிகளை அடக்கிச் சுல்தானின் ஆணையை நிறைவேற்ற முயன்றனர். ஆயின், நாட்டின் சூழ்நிலை அவர்களின் மனத்தை மாற்றியது. அன்றியும், பேரறிஞர் வித்யாரணியரின் அருளையும் ஆற்றலையும் பெற இவர்களுக்கு வசதி வாய்த்தது. இந்து நெறியைக் காப்பதற்கு ஒரு புது அரசியல் தேவை என்ற கருத்தை இவர்கள் மனத்தில் ஊன்றியவர் வித்தியாரணியர் என்பதற்கு ஐயமில்லை. ஆகவே இவ்விரு சகோதரர்களும் 1336-இல் துங்கபத்திரை யாற்றின் தெற்குக் கரையில்[2] விஜயநகர மென்ற பேரூரை நிறுவினர். இதனால், துங்கபத்திரையின் வடபக்கம் தோன்றிய பாமினி அரசும்

**2 ஹரிஹரரும் புக்கரும் முன்னாள் ஒய்சள அலுவலாளர்களென்பது சிலர் கூற்று. ஆனால், அது செவி வழிச் செய்திக்கேனும் கல்வெட்டுச் சான்றுகளுக்கேனும் பொருந்தவில்லை. அவர்கள் தெலுங்கர்களென்பது தான் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மை.**

விஜயநகர அரசும் நீடித்த போரில் ஈடுபட்டது வியப்பு அன்று.

ஹரிஹரர் 1343-இல் காலமானர். அதற்குப்பின் புக்கர் அரசைத் திட்டப்படுத்தத் தொடங்கினர். துங்கபத்திரைக்குத் தெற்கே விஜயநகர அரசுக்குப் பேராதரவு கிடைத்தது. இப் பேரரசு புக்கரின் காலத்தில் கிழக்குக் கடலிலிருந்து மேற்குக் கடல் வரையிலும், தெற்கில் காஞ்சி வரையிலும் விரிவடைந் தது. புக்கரின் புதல்வர் இரண்டாம் குமரகம்பணர், தொண்டை மண்டலத் தலைவரை அடக்கினர். மேலும், மதுரையில் நிலைபெற்றிருந்த முஸ்லீம் அரசையும் அழித்தார். மதுரை முஸ்லீம் ஆட்சியாளரோடு மூன்றும் பள்ளாளர் பன்னெடு நாள் நடத்திவந்த போர் இவ்வேளை கம்பணருக்கு மதுரையில் வெற்றி பெற வாய்ப்பு அளித்தது. கம்பணர் ஸ்ரீரங்கத்திலும் மதுரையிலுமுள்ள திருக்கோயில்களைச் சீர்படுத்தி, பழங் கால வழிபாட்டு முறைகளையும் பழக்கவழக்கங்களையும் அமைத் தார். பாமினி அரசரோடு அக்காலத்திலேயே விஜய நகரம் போர் தொடங்கியது. துங்கபத்திரை யாற்றுக்கும் கிருஷ்ணு நதிக்கும் இடையே செழிப்புற்று விளங்கிய இராயச்சூர், இவ்விரண்டு அரசுகளும் போட்டியிடக் காரணமாயிற்று.

**பாமினி அரசு:** பாமினி அரசு 1347-இல் தோன்றியது. முகமத் துக்ளக்கின் பேரரசிலிருந்து முதலில் விடுதலை பெற்ற பெரும் பகுதி தக்காணமே யாகும். இங்கு அலுவ லாளர்களாய் அமர்ந்திருந்த பிறநாட்டு முஸ்லீம் பிரமுகர்க ளுக்கும் சுல்தானுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. மக்கள் மேல் சுல்தானுக்கும் அவநம்பிக்கை உண்டாயிற்று. எனவே டில்லிப் பேரரசின் வடபகுதிகளில் கிளர்ச்சிகள் தலையெடுத்த போது, அப்பிரமுகர்கள் சுதந்திரப் போரைத் தொடங்கினர். சுல்தான் தமது ஆட்சியை மீண்டும் நிலைநாட்ட எடுத்த முயற்சி பயனற்றுப் போயிற்று. பேரரசின் படைகளை முறி யடித்த தக்காணப் பெருமக்களின் முன்னணியில் நின்றவர் ஹஸன்கங்கு என்றவர். 1347-இல் ஹஸன் கங்கு அல்லாவு தீன் பாமன்ஷா என்ற பெயருடன் தௌலதாபாத்தில் பாமினி அரசை நிறுவினர்.

ஹஸனின் வாழ்க்கை வரலாறு ஒரு கட்டுக்கதை போல் தோன்றுகிறது. எளிய தாய்தந்தையருக்குப் பிறந்த ஹஸன் வறுமையில் வருந்தி, பின் டில்லியில் வாழ்ந்த கங்கு என்ற ஒரு பார்ப்பனரிடம் உழவுத் தொழிலாளியாக அமர்ந்து கொண்டார் சிறிது காலத்திற்குப் பின், படையில் சேர்ந்து நாளடைவில் உயர்ந்த பதவியை அடைந்தார். அப்பொழுது அவரைத் தக்காண அரசியல் தலைவருடன் ஒத்துழைக்கும் அலுவலாளராக முகமத் துக்ளக் நியமித்தார். தீவினைக்கு அஞ்சாத ஹஸன், தக்காணத்திலுள்ள பிறநாட்டுப் பிரமுகர்களுடன் சேர்ந்து, இறுதியில் அவர்களது தலைவராகத் திகழ்ந்தார். டில்லி சுல்தானின் தலைமையைத் தவிர்த்தபின், ஹஸன் புதிய அரசை அமைத்து அதற்குத் தலைவரானார். தமது அரசைக் குல்பர்கா, தௌலதாபாத், பீதார், பிரார் என்ற நான்கு பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு அரசியல் தலைவரை அமர்த்தினார். தலைநகராகிய குல்பர்காவில் அரிய சிற்பக்கலை நுட்பம் தோன்றும் மாளிகைகள் பல கட்டுவித்தார்.

1358-ஆம் ஆண்டு வரை அவர் செங்கோலோச்சிய பின் அவரது புதல்வர் முகம்மது ஷா அரசரானார். முகம்மது ஷா (1358-77) முதன் முதல் படையைச் சீர்திருத்தம் செய்து வலுப்படுத்திய பின் ஒரு பக்கம் வாரங்கலோடும் மற்றொரு பக்கம் விஜய நகரோடும் போர் புரிந்தார். வாரங்கல் தலைவரைப் புறமுதுகு கண்டு அவரிடமிருந்து கோல்கொண்டாவைக் கைப்பற்றிக் கொண்டார். இராயச்சூரைக் கைப்பற்றும் பொருட்டு விஜய நகருக்கு எதிராகச் சென்றார். 1367-இல் அதோணிக் கண்மையில் போர் நிகழ்ந்தது. அதில் இந்துக்கள் படுதோல்வி அடைந்தனர். முகம்மது ஷா அதைத் தொடர்ந்து விஜய நகர மக்களைத் தாக்கி, பெரும் தீங்கு விளைவித்தார். இந்துக்கள் பலர் உயிரிழந்தனர். இதன் விளைவாகப் போரில் ஈடுபடாத மக்களைத் தொல்லைப்படுத்தக் கூடாதென இரு அரசுகளும் ஒப்பந்தம் செய்துகொண்டன. எனினும் பல முறை அந்த ஒப்பந்தம் புறக்கணிக்கப்பட்டது.

முகம்மது ஷா தம் அரசினை நன்கு சீர்திருத்தி அமைத்தார். எண்மர் அமைச்சரடங்கிய குழு ஒன்றையும் நிறுவி,

ஒவ்வொரு அமைச்சருக்கும் உரிய பொறுப்புக்களையும் வரையறுத்தார். அன்றியும், சுல்தான் தாமே நாடு முழுவதையும் சுற்றி வந்து, அரசியல், தாம் வகுத்த வண்ணம் செயலாற்றும் திறனை உற்று நோக்கினர். தௌலத்தாபாதில் தோன்றிய கிளர்ச்சியை அடக்கினர். முகம்மது ஷா குல்பர்காவில் முஸ்லீம் பெரும்பள்ளி ஒன்றைக் கட்டினர். இப்பள்ளி திறந்த முற்ற வெளியில்லாமலே அமைந்திருப்பது அதன் தனிச் சிறப்பைக் காண்பிக்கின்றது.

1377-இல் முகம்மது ஷா காலஞ்சென்றதும் அரசுரிமை பற்றிக் குடும்பக் கிளர்ச்சிகள் தலை தூக்கின. பெருங் குழப்பம் விளைந்தது. மன்னர்கள் ஆட்சியைக் கையேற்றச் சிறிது காலத்தில் பின்னும் சூழ்ச்சிக்கு இரையாயினர். இறுதியாக, பிரூேஸ் ஷா என்பவர் (1397-1422) பட்டத்திற்கு வந்தார். பாமினி மன்னர்களில் இவரே சிறந்தவரெனச் சிலர் கருதுகின்றனர். இவர் அரசியல் அலுவல்களுக்குத் தகுந்த ஆட்களை அமர்த்தி நாட்டில் அமைதியையும் செழிப்பையும் வளரச் செய்தார். சீரிய வாணிக நலத்தைப் பேணினர். அதன் விளைவாக அயல் நாட்டு வாணிகம் சிறப்புற்று வளர்ந்தது. இவர் அஞ்சாப் போர் வீரர். விஜய நகர் மீது படையெடுத்து இரு வெற்றிகள் பெற்றூர். விஜய நகர் மன்னன் தேவராயர், தமது மகளை பிரூேஸ் ஷாவுக்கு மணஞ் செய்து கொடுக்க வேண்டியதாயிற்று.

விஜய நகரத்தில் புக்கருக்குப் பின் அரசு புரிந்த இரண்டாம் ஹரிஹரர் (1377-1404), இராயச்சூரைத் தாக்கினர். ஆகவே, பாமினி அரசோடு மறுபடியும் போர் வீரர் செய்த சூழ்ச்சியால், ஹரிஹரரின் மைந்தர் கொலையுண்டார். பிரோஸ் எண்ணிறந்த விஜய நகரப் படை வீரரைச் சிறைப்படுத்தினர். பெருந்தொகை விடுதலைப் பணம் கொடுத்த பின்னர், அவ்வீரரை விடுவித்தார். விஜய நகர் பாமினிக்குக் கப்பம் கட்டவும் உடன்பட்டது.

இரண்டாம் ஹரிஹரருக்குப் பின்வந்த, முதலாம் தேவராயர் (1406-42) முட்கலூரைச் சார்ந்த ஒரு பொற்கொல்

லனது புதல்வியை மணக்க முயன்றார். அச் சிறுமி அதற்கு இணங்காமையால் சச்சரவு தோன்றியது. அதில் முட்கலுக்கு அண்மையில் இருந்த சிற்றூர் பலவற்றைத் தேவராயர் அழித்தார். அச் செய்தி கேட்டுக் கடுஞ்சினம் கொண்ட பிரோஸ் விஜயநகரை உடனே தாக்கினார்; அந்நகர மக்களுக்குக் கொடிய தீங்கு விளைவித்தார். அன்றியும், வெட்கக் கேடான ஒப்பந்தம் ஒன்றுக்குத் தேவராயர் இணங்க வேண்டுவதாயிற்று. அந்த ஒப்பந்தத்தின்படி விலையுயர்ந்த பொருட்களைப் பரிசளித்தார். அன்றியும், தம் அருமைப் புதல்வியையும் பிரோஸுக்கு மணம் செய்விக்க நேர்ந்தது.

1417-இல் பிரோஸ் தெலிங்கானா மீது படையெடுத்து வெற்றி பெற்றார். அதைத் தொடர்ந்து, அவர், விஜய நகரத்தைச் சார்ந்த பகைவர் அரணைத் தாக்கினபோது படுதோல்வி அடைந்தார். இவ் வெற்றியின் பயனாக விஜய நகரானது பாமினி அரசின் தெற்குப் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலுமுள்ள சிற்றரசுகளைப் பெற்றுக்கொண்டது.

இதற்குள் பிரோஸ் தளர்ச்சி அடைந்துவிட்டார். அளவு கடந்த குடிவெறியாலும், வரம்பற்ற சிற்றின்ப நுகர்ச்சியாலும் உடல் நலத்தைக் கெடுத்துக்கொண்டார். அவருக்குப் பற்பல நாடுகளைச் சேர்ந்த 800 மங்கையர் அடங்கிய அந்தப்புரம் இருந்தது. இறுதியில் தம் சகோதரர் அஹமத் ஷாவிற்கு அரச பதவியைக் கையளித்தார்.

அகம்மத் ஷா (1422-35) தம் தமையனார் பிரோஸின் காலத்தில் பாமினி அரசிற்கு நேர்ந்திருந்த குறைகளை நீக்கும் பொருட்டு, விஜய நகர மன்னன் விஜய ராஜாவுடன் தீவிரப் போர் தொடுத்தார். அதனால் விஜய நகர அரசிற்கு விளைந்த கேடு சிறிதன்று. கப்பமாக எதிரிக்கு விஜய ராஜா பெருந் தொகை கொடுத்துப் போரை நிறுத்திக்கொண்டார். 1424-இல் அகமத் ஷா வாரங்கலைத் தாக்கி, அங்குள்ள அரசரைக் கொன்று அந்நாட்டையும் கைப்பற்றினார். கிளர்ச்சி செய்த அரசர்களை அடக்கினார். அடுத்தபடியாக அகமத் ஷா மாளவ மன்னர் ஹுஷாங் ஷாவைப் போரில் வென்றார். குஜராத் மீது அகமத் ஷா பல தடவை படையெடுத்தார். அவை பயன் அளிக்க

வில்லை. பீதாரின் தட்பவெப்ப நிலையையும் அதன் எழிலையும் கண்டு மகிழ்ந்து அங்கு அகமதபாத் பீதார் என்னும் பெயரால் ஒரு நகரை எழுப்பி, 1429 முதல் அந்நகரைத் தமக்கு உறைவிடமாக்கிக்கொண்டார்.

அவருக்குப் பின் அவர் மகன் இரண்டாம் அலாவுதீன் (1436-58) அரசரானர். அவர் ஆட்சிக் காலத்தில், பாமினி நாட்டு அரசவையில் தக்காண முஸ்லீம்களுக்கும், பிற நாட்டி லிருந்து வந்திருந்த அலுவலாளர் ஆகிய முஸ்லீம்களுக்கும் இடையே சச்சரவு மூண்டது. பிற நாட்டார் கட்சியில் சுல்தானின் கீழ் அலுவலாளராய் அமர்ந்த துருக்கியர், அராபியர், முகலாயர், பாரஸீகர் முதலானேர் அடங்கியிருந் தனர். தக்காணக் கட்சியை அந் நாட்டு முஸ்லீம்களும், ஆப்பிரிக்கா நீக்ரோக்களும், பிறரும் ஆதரித்தனர். 1437-இல் அலாவுதீன் கொங்கணத்தின் சில பகுதிகளைப் பிடித்தடக்கிய போதிலும், 1446-இல் தக்காண முஸ்லீம்களின் சூழ்ச்சிகளால் அவரது படையெடுப்பு எதிர்பார்த்த பயனை அளிக்கவில்லை. 1443-இல் விஜய நகர மன்னர் இரண்டாம் தேவராயர் இராய்ச்சூர் மீது படையெடுத்தார். ஆனல், போரில் தன் அருமைப் புதல்வர் இறந்தமையால், சமாதான உடன்படிக்கை செய்து, கப்பம் கட்ட இசைந்தார். தக்காணத்தார் அங்கிருந்த பிற நாட்டுப் பெருஞ்செல்வரைப்பற்றி மன்னரிடம் புறங் கூறினர். அலாவுதீன் நன்கு ஆராயாமல் உடனே அதை நம்பி, அவர்களில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொலை செய்து விட்டார். அதன் பின்னரே உண்மையை அறிந்தார். இஸ்லாம் மதப்பற்று மிக்க அலாவுதீன், பல இந்துக் கோயில்களை அழித்து, அவற்றின் பொருட்களை முஸ்லீம் பள்ளிகள் கட்டப் பயன்படுத்தினர். மேலும் இலவச மருத்துவமனை ஒன்று நிறுவினர். தாம் குடி வெறி கொண்டவராயிருந்தும், தமது நாட்டு மக்களிடையே குடியை நிறுத்த முயன்றார்.

## பாமினி அரசின் தளர்ச்சி

அலாவுதீனின் மைந்தர் ஹுமாயூன் (1458-61) நாடறிந்த கொடுங்கோன் மன்னர் ஆயினர். அவருடைய திறமை வாய்ந்த இராணி மக்டுமா ஜஹனியாலும், புகழ் பெற்ற

அமைச்சர் மகமூத்கவான் முதலியோர்களாலும் அவரது கொடுமையைத் தடுக்க முடியவில்லை. 1461-இல் அவர் குடி வெறியில் மயங்கி இருக்கும்போது அவரது பணியாளர் அவரைக் கொன்றனர். அவரது அரசிளங்குமரர் சார்பாக மக்டுமால் ஜஹன் அரசியார் இரண்டாண்டு அரசை நடத்தினர். இவ் இளவரசர் திடீரென்று இறந்துவிடவே, இவரது தம்பி, மூன்றும் முகம்மது ஷா (1463-82) பதவி ஏற்ருர். பாமினி குலத்தைச் சார்ந்த பிற்கால மன்னர்களில் இவர் மிகச் சிறந்தவர். விஜய நகர மன்னரிடமிருந்து பெல்காமையும், கோவாவையும் மீண்டும் கைப்பற்றினர். கிளர்ச்சி செய்த கொண்டவீட்டுத் தலைவரை அடக்கினர். அமைச்சர் முகம்மத் கவான் திறமையால் அரசியல் மிகுந்த சிறப்புப் பெற்றிருந்தது. அவர் தெலிங்கானவை இரு மாகாணங்களாகப் பிரித்துத் தகுந்த முறையில் கண்காணித்து வந்தார். அவர் சிறந்த சீர்திருத்தங்களை அமைத்து நாட்டிற்கு நன்மை செய்த போதிலும் மாலிக் ஹஸன் தலைமையிலிருந்த எதிர்க் கட்சியினர் மன்னரிடம் அவரைக் குறித்துப் புறங்கூறி வந்தனர். அவர் புறங்கூற்றில் மதியிழந்த மன்னர் அவரைக் கொலை செய்தார். இவ்வாறு, அந்தப் பாமினி அரசியலில் தோன்றிய ஒரே சிறந்த அரசியல் வல்லுநர் மறைந்தார். மன்னர் தம் தவற்றைப் பின்னரே உணர்ந்தார். அவரும் தமது 29-ஆவது ஆண்டில் இறந்தார். அவருக்குப் போரில் ஆற்றலும், கல்வியில் வாஞ்சையும் இருந்தபோதிலும் குடிவெறி தான் அவர் வாழ்க்கையைப் பாழாக்கியது.

அவரது பன்னிரண்டு வயதான மாமூத் என்ற புதல்வன் பதவியேற்ருர். ஆனல் அவர் இழிகுலத்தோரான சில சிறுவருடனே தோழமை பூண்டிருந்ததால் அரசாங்கத்தின் மதிப்புக் குன்றியது. மாநிலத் தலைவர் எதிர்க்கத் துணிந்தனர். ஒவ்வொருவரும் தனிப்பட்ட அரசு அமைத்துக்கொண்டனர் அகமது நைஸாமுல் முல்க் என்றவர் அகமத் நகர் நைஸாம் ஷாஹி அரசையும், யுசுப் ஆதில்கான் பீஜப்பூர் ஆதில் ஷாஹி அரசையும், பத்தாவுல்லா இமாதுல் முல்க் பீரார் இமத் ஷாஹி அரசையும் அமைத்துக்கொண்டனர். 1512-இல் அவர்களைப்

பின்பற்றிக் கோல்கொண்டா குத்புல் முல்க் என்பவர் கோல் கொண்டா அரசையும் நிறுவினர். மாமூதிற்குப் பின்னும் நான்கு பொம்மையரசர் ஆண்டனர். கடைசிச் சுல்தானின் அமைச்சரான பாரீத் என்பார் பீரார் நாட்டுப் பாரீத் ஷாஹி அரசை அமைத்தார்.

ஆகவே பழைய பாமினி வல்லரசு ஐந்து சிற்றரசுகளாகப் பிரிந்தது. பாமினி வல்லரசின் வரலாறு பெருமைக்குரிய தன்று. பாமினி மன்னர்களில் சிலர், பயிர்த்தொழில், நீர்ப்பாசன வசதி, வாணிகம் இவற்றைச் சீர்படுத்த முயன்ற துண்மை. ஆயினும் பல அரசர்கள் குடிவெறி, சிற்றின்ப வேட்கை, கொடுங்கோன்மை முதலான தீமைகளுக்கு அடிமைகளாயிருந்தனர். சிலர் மதவெறி கொண்டு கொடுஞ் செயல் புரிந்தனர். விஜய நகரோடு தீவிரப் போரில் ஈடுபட்டு இந்து மக்களுக்குப் பெரும் துன்பத்தை விளைவித்தனர். அன்னர் அடிக்கடி செய்த போருக்கு மதவெறி மட்டுமே அன்றி அரசுரிமைப் போட்டியும், அரசர்களின் பேராசையும் வேறு காரணங்களாகும்.

முன்கூறிய ஐந்து மரபு மன்னர்களும் 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் முகலாயர் இந் நாடுகளைக் கைப்பற்றும் வரை தனி முறையில் ஆட்சி புரிந்து வந்தனர். இவற்றுள் வட கோடியிலிருந்த பீரார் நாடானது நான்கு தலைமுறை தன்னாட்சி கண்ட பின் 1574-இல் அகமத் நகரோடு சேர்க்கப் பட்டது.

**அகமத் நகர்:** ஜூன்னர் மாகாணத் தலைவராயிருந்த அஹமது 1490-இல் தனி அரசை நிறுவிக்கொண்டார். அகமத் நகர் நைஸாம் ஷாஹிகளுள் சிறந்த மன்னரான பர்ஹான் ஷா (1508—53) பல போர்களில் ஈடுபட்டார். 1550-இல் அவர் பிஜப்பூருக்கு எதிராக விஜய நகர மன்னரோடு நட்புறவு செய்தார். அவருக்குப் பின் வந்த ஹுஸ்ஸைன் நைஸாம் ஷா விஜயநகருக்கு எதிராகத் தோன்றிய கூட்டுறவில் கலந்து கொண்டார். இறுதியாக, அகமத் நகர் வரலாற்றில் புகழ் பெற்றவர் அஞ்சா நெஞ்சம் படைத்த சாந்த் பீபி என்ற அரசி ஆவர். 1596-இல் அக்பரின் புதல்வர் மூருத், தம் நகரைத்

தாக்கியபொழுது அதைத் திறம்படக் காப்பாற்றினர். இரண்டாம் முறை முகலாயர் படையெடுத்தபோது இவ்வீர மகள் கொலையுண்டார். அவர் நஞ்சு அருந்தித் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படுகிறது. ஆயினும் அக்பருக்கு அகமத் நகரில் பாதிக்கு மேல் கிடைக்கவில்லை. மறுபாதி 1637-ஆம் ஆண்டு ஷாஜஹான் காலத்தில்தான் பிடிபட்டது.

**பிஜப்பூர் :** இந்த ஐந்து அரசுகளிலும் மிக்க வலிமை வாய்ந்தது பிஜப்பூர் என்று கூறலாம். அது யூசுப் ஆலிகானல் 1489-இல் தோற்றுவிக்கப்பெற்றது. அவர் ஷீயாக் கொள்கையைப்[3] பின்பற்றியவர். அதையே தம் நாட்டு மதமாக்கினர். விஜய நகரோடு பல போர் நிகழ்த்திப் பெருமை அடைந்தார். ஆனல் ஆல்புக்கர்க் அவரிடமிருந்து கோவாவைக் கைப்பற்றிக்கொண்டார்.

அடுத்த சுல்தான் இஸ்மாயில் என்றவர் முதலில் இராயச்சூரைப் பிடித்தார். எனினும் கிருஷ்ணதேவராயர் காலஞ் சென்றவுடன் 1529-இல் இஸ்மாயில் திரும்பவும் இராயச்சூரைப் பிடித்தார். அவர் பின்வந்த இப்ராஹிம் 1535-இல் விஜய நகருக்குச் சென்று சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். ஆனல், பீதர், அகமத் நகர், கோல்கொண்டா முதலிய நாடுகளோடு இவர் போரில் ஈடுபட நேரிட்டது. அவர் மகன் ஆலி ஆடில் ஷா (1557—59), ஷீயாக் கொள்கையை வெளிப்படையாகப் பின்பற்றினர். மேலும் மதவெறி பிடித்த இவர் சுன்னிக் கொள்கையுடையவரிடம் தீவிர வெறுப்புக் கொண்டிருந்தார். 1558-இல் விஜய நகர இராமராயரோடு சேர்ந்துகொண்டு அகமத் நகர் மீது படையெடுத்தார் ; ஆனல், அங்கு இராமராயர் செய்த அட்டூழியங்கள் கொடூரமாயிருந்தன. அதனல் ஆடில் ஷா தாமும் அவரை வெறுத்து அகமத் நகரோடு உடன்படிக்கை செய்துகொண்டார். அந்த உடன்படிக்கையை

3. இஸ்லாம் மதத்தில் சுன்னி, ஷீயா என இரு பிரிவுகள் வழங்குகின்றன. ஷீயாப்பிரிவு பாரஸீக நாட்டில் மிகச் செல்வாக்குப் பெற்றது. சில பழக்க வழக்கங்களிலும் பண்டைய இஸ்லாம் வரலாறு பற்றிய நம்பிக்கைகளிலும்தான் இரு பிரிவுகளுக்கும் வேற்றுமை.

உறுதிப்படுத்துமாறு மணவினையுறவுகளும் செய்து கொண்டார்.

இறுதியாக 1565-இல் பீரார் சுல்தானைத் தவிர மற்றை நால்வரும் ஒருங்கு சேர்ந்து தலைக்கோட்டைப் போரில் இராமராயரை முறியடித்தனர். ஆலி ஆடில் ஷா கோதாவரியி லிருந்த போர்ச்சுகீசியரை அடக்க முயன்றார். ஆனால், அந்த முயற்சி வீணாயிற்று. கடைசியில் 1686-இல் ஔரங்க சீப் நாட்டைக் கைப்பற்றியது வரை பிஜப்பூர் சுல்தான்கள் அதை ஆண்டு வந்தனர்.

**கோல்கொண்டா :** கோல்கொண்டாவிற்குப் பொருள் வசதியும் அரண் வலிமையும் இருந்தன. இவ்வரசைத் தோற்றுவித்த கூலி குட்புஷா என்பவர், அதன் தலைநகரில் வலிமை சான்ற கோட்டையொன்றை எடுப்பித்தார். அன்றி யும் விஜயநகர், பிஜப்பூர், பீதர் இவற்றோடு திறம்படப் போர் புரிந்து தமது அரசின் எல்லையை வடக்கில் கோதாவரி வரை நிலை நாட்டினார். நான்காவது அரசராகிய இப்ராஹிம் குத்துப் ஷா (1550—80), வாரங்கலைக் கைப்பற்றினார். அத்துடன் சீரிய முறையில் அரசியலைத் திருத்தி அமைத்தார். அன்றியும் விஜய நகருக்கு எதிராக முஸ்லீம் அரசுகளின் கூட்டுறவைத் தோற்றுவித்து தலைக்கோட்டைப் போரில் அதைத் தோற்கடித்ததில் இப்ராஹிம் பெரும் பங்கெடுத்தார். அவர் புதல்வர் முகம்மத் கூலி (1580-1612), கோல்கொண்டாக் கோட்டையை மேலும் வலுப்படுத்தினார். மற்றுமொரு தலை நகரை உண்டாக்கி அதற்குப் பக்நகர் என்ற பெயரும் அளித் தார். பொதுவாக கோல்கொண்டா சுல்தான்கள் தங்கள் ஆட்சிக்குட்பட்டவர்களை அன்புடன் பேணினார்கள். ஆனால், முகலாய அரசர் தென்னாட்டைக் கைப்பற்ற முயன்றபோது அதைத் தடுப்பதற்கு அப்துல்லா குட்பஷா (1626—72) யாதொரு முயற்சியும் எடுக்கவில்லை. அதற்கு மாறாய் இளவரசன் ஷாஜஹான் தம் தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, பின் தக்காணத்தில் தஞ்சமடைந்த காலத்தில், அப்துல்லா குட்ப ஷாவே அவரை இன்முகம் காட்டி வரவேற்றார். அன்றியும், 1635-இல் முகலாயரது தலைமையையும்

அப்துல்லா ஒப்புக்கொண்டார். ஆனால், பலம் மிகுந்த தமது அமைச்சர் மீர்ஜும்லாவைப்பற்றி அவருக்கே பொறாமை எழுந்தது. அந்நாள் தக்காண மாநிலத் தலைவராயிருந்த ஔரங்கசீப்பின் உதவியை அவர் நாடினார். அதைப் பயன் படுத்திக்கொண்டு ஔரங்கசீப் கோல்கொண்டாவைத் தாக்கி ஹைதராபாத்தைக் கொள்ளையடித்தார். கப்பம் கொடுக்க அப்துல்லா இசைந்த பின் சமாதான உடன்படிக்கை நடைபெற்றது. அப்துல்லாவிற்குப் பின் அரசு புரிந்த அவருடைய மருமகன் காலத்தில், ஔரங்கசீப் 1687-இல் கோல்கொண்டாவை நீடித்த முற்றுகையின் பயனாகக் கைப் பற்றி, சுல்தானையும் சிறைசெய்தார். நாடும் முகலாயப் பேரரசோடு சேர்க்கப்பட்டது.

**பீதர் :** பண்டைக் காலத்து விதர்ப்ப நாடு பீதர் என்ற பெயரோடு புது அரசாக அமைந்தது மற்றப் பகுதிகள் பிரிந்துவிட்ட பிறகு எஞ்சியிருந்த பீதர், பாரீத் ஷாஹிகுல ஆட்சிக்குள் அமைந்தது. அண்மையிலிருந்த சுல்தான்களின் அதிகாரப் பேராசையினால் பீதருக்கு மிகப் பெரிய இன்னல் கள் தோன்றின. பீதர் சுல்தான்கள் பிஜப்பூருக்கு எதிராக மற்றச் சுல்தான்களுடன் சேர்ந்தும், சில வேளை விஜயநகரோடு இணைந்தும், தம் நிலையைப் பாதுகாத்து வந்தனர். ஆயினும், 1619-இல் பீதருக்குத் தவிர்க்க முடியாத இடர் நேர்ந்தது. பிஜப்பூர் சுல்தானாகிய இரண்டாம் இப்ராஹிம் ஆல்டிஷா, பீதர்மீது படையெடுத்து வெற்றிபெற்றுப் பீதரைப் பிஜப்பூரோடு இணைத்துக்கொண்டார். ஆயினும், 1656-இல் ஔரங்கசீப், பீதரைக் கைப்பற்றி முகலாயப் பேரரசோடு சேர்த்தார். பீதரில் பாமினி மன்னர் சமாதிகளும், பாரீத் ஷாஹிகள் சமாதிகளும் காணலாம். அன்றியும் சிற்ப வேலை களடங்கிய பல மாடமாளிகைகளும், பள்ளிகளும், முகம்மது கவான் எழுப்பியிருந்த கல்லூரிக் கட்டிடங்களும் காட்சி அளிக்கின்றன.

**கட்டிடக் கலை :** பாமினி சுல்தான்களும் பின் தோன்றிய ஐந்து அரசுகளின் மன்னர்களும், சில புதுக் கட்டிட அமைப்பு முறைகளைக் கையாண்டனர். பொதுவாக, 15-ஆம் நூற்றாண்

டின் முடிவு வரையில் பிற நாட்டுக் கட்டிடக் கலை முறை மட்டும் பின்பற்றப் பெற்றது. அக்காலக் கட்டிடங்கள் இருவகையன. ஒன்று டில்லி முறையை ஒட்டியது. அதாவது டில்லியில் 14-ஆம் 15-ஆம் நூற்றாண்டுகளில் கையாண்டு வந்த முறை ; மற்றொன்று பாரசீக முறையைப் பின்பற்றியது. பாரசீகச் சிற்பிகளைத் தக்காணத்திற் சிற்ப வேலைகளுக்காக வரவழைத் தனரெனத் தோன்றுகிறது. 15-ஆவது நூற்றாண்டின் இறுதி யில்தான் தனிப்பட்ட தென்னிந்திய முஸ்லீம் சிற்ப முறை தோன்றியது.

தக்காணத்தில் போருக்குரிய கட்டிடங்களும் அரண்களும் எழுப்புவதில் மிகுதியான கவனம் செலுத்தி வந்தனர். தாக்குதலுக்கும், பாதுகாப்புக்கும் விநோதமான கருவிகளும் சிக்கலான இடைவழிகளும் நிறைந்த மாபெருங் கோட்டைகள் கட்டினர். இவற்றுள் தலைசிறந்தவை, தௌலத்தாபாத், பீதர் எனும் கோட்டைகளாகும். மற்றக் கோட்டைகளில் பீராருக்கு வடக்கிருந்த எலிச்பூர், கவில்கார், நார்நலாக் கோட்டைகளும்; மேற்கில் நால்துருக், பன்ஹலா, குல்பர்கா கோட்டைகளும் ; கீழ்த்திசையில் வாரங்கல், கோல்கொண்டா, இந்து அரசர் களிடமிருந்து கைப்பற்றப்பட்டுச் சிராக்கப்பெற்ற முட்கல், இராய்ச்சூர் கோட்டைகளும் குறிப்பிடத் தக்கவை. கட்டிட முறையில் மேல் வளைவும், மற்றும் சில அழகிய உறுப்புகளும், பழைய யாதவச் சிற்ப முறையை ஒத்திருந்தன. மற்றவை டில்லியில் தோன்றிய முறையைப் பின்பற்றியவை. ஆனால் போருக்குரிய பொறியில் ஐரோப்பிய முறைகளைப் பின்பற்றி வந்தவையென்பதற்கு ஐயமில்லை. அவை, பாமினி அரசில் அலுவலிலிருந்த துருக்கியர் வழியாகத் தென்னிந்தியாவிற்குள் நுழைந்திருக்கலாம்.

முகம்மது கவான் கட்டியதெனக் கூறப்படும் பேரன்றக் கோட்டை தௌலதாபாத் அரணைவிட அளவில் சிறியதா யிருந்த போதிலும், பாதுகாப்பிற்குரிய சிறந்த கருவிகளை உட் கொண்டிருந்தது. பீதர்க் கோட்டையும் மிகப் பெரிது ; மூன்று மைல் சுற்றளவுள்ள அவ்வரணுக்கு 50 அடி உயரமுள்ள சுவர் களும் அவற்றைச் சுற்றிப் பாறையில் அமைக்கப்பட்டிருந்த

மூன்று வரிசைக் குழிகளும் பாதுகாப்பிற்கு மிகச் சிறந்தவை களாயிருந்தன. காவலரண்களும், ஞாயில்களும் அடங்கிய அதன் தளவாடங்கள் சிறந்த முறையில் அமைக்கப்பெற் றிருந்தன. ஆனால், மிக வியப்பைத் தரும் மாபெரும் அரண் 600 அடி உயரமுள்ள குன்றின்மீது கட்டிய தௌலதாபாத் கோட்டையே ஆகும். உள்ளே ஒன்றன் பின் ஒன்ருக மூன்று மதில்களும், அவற்றையெல்லாம் சுற்றி மூன்று கல் சுற்றள வுள்ள மாபெரும் புற மதிலும், அம்மதில் முழுவதையும் சுற்றிக் கிடக்கும் அகழியும் இருந்தன. உள் மதில்கள் ஒவ் வொன்றிலும் சிறிய துளைகள், தப்பித்துக்கொள்ளப் பயன் படும் வழிகள், ஞாயில்கள், காவலரண்கள் உறுதியான வாயில் வழி போன்றவை செவ்வனே அமைந்திருந்தன. உள்ளே தண்ணீர் கிடைப்பதற்கு வேண்டிய வசதிகளும் இரகசியப் பாதைகளும் இருந்தன. சுருங்கச் சொன்னல், பாதுகாப்பு உறுப்புக்கள் நிறைந்த பயனுள்ள முறையில் அமைந்திருந்தன. இந்தக் கோட்டை அமைப்பில் யாதவர் முறைகளும் துக்ளக் மன்னர் முறைகளும் தென்படுகின்றன. அவற்றுடன் பாமினி அரசர் இயல்களையும் வெளிநாட்டு முறைகளையும் இடை யிடையே காணலாம்.

கட்டிட அமைப்பில் பண்டைக் கலைத்துறையைச் சாராத புதுமுறை புகுந்துள்ளது. அது, நாட்டில் தோன்றியுள்ள பல மாளிகைகள், அரண்மனைகள், வாயில்கள், பள்ளிகள், கல்லறைகள், சமாதிகள் முதலியவற்றில் தெளிவாகத் தென் படுகின்றன. பீதர், குல்பர்கா என்னும் இரு தலைநகர்களி லும் உயர்நிலை மாடமாளிகைகளைக் காணலாம். குல்பர்காவி லுள்ள ஜாமி மசூதியில் (1317) எளிமையும் அழகும் ஒருங்கே அமைந்துள்ளன. அதில் பாரசீகத் தொடர்பின் விளைவும் துக்ளக் முறையும் நன்கு துலங்குகின்றன. வளைமாடமும் இடுங்கின வாசல்களும் பாரசீக இயல்பை ஒட்டியவை என்பது திண்ணம். பீஹாரில் முன் குறிப்பிட்டது போல, மற்றைய மாளிகைகள் தவிர, புகழ்பெற்ற மத்ராஸா-கல்லூரிக் கட்டிடம் அரும்பெரும் சிற்ப வேலைப்பாடுடையது. மூன்று அடுக்குள்ள இம்மாளிகையும் அதன் இரண்டு மூலைகளில் தோன்றும்

உயர்ந்த முகப்புக்களும், இன்று தகர்ந்து கிடக்கும் நிலையிலும் கூடப் பார்வைக்கு எழில் நிறைந்து தோன்றுகின்றன. கல்வி கற்பித்தற்கு இந்த மத்ராஸா மாளிகையைத் தகுந்த திட்டமிட்டு அமைத்திருப்பது வியப்பிற்குரியது. அதற்குள், திறந்த முற்றத்திற்கு இருபுறமும் இருவரிசைகளிலும் ஏறக்குறைய நூறு அடிவரையிலும் ஒரு பள்ளி, ஒரு நூல் நிலையம், வகுப்பு அறைகள், பேராசிரியர் உறைவிடம், மாணவர்களின் தனித் தனி அறைகள் யாவும் ஒருங்கே அமைந்துள்ளன. மாளிகையின் முன் பார்வையில் பளபளப்பான ஒளிவிடுகின்ற ஓட்டு வேலையும், மூலைகளில் அமைந்திருக்கும் மாடத்தூபிகளும் பாரசீக முறையை ஒத்துள்ளனவென்பதற்கு ஐயமில்லை. தக்காணச் சிற்ப முறையில் பாரசீக முறை இந்த மத்ராஸாவில் தான் மிகுதியாகத் திகழ்ந்ததெனலாம். ஆனால் 15-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அலாவுதீன் அகமத்ஷாவினால் தௌலதாபாத்துக்கு அண்மையில் எழுப்பிய சான்மினார் எனும் நிலையம் அதே பாரசீக முறையைப் பின்பற்றிக் கட்டியதே யாகும்.

கட்டிடக்கலை சிறப்பாக ஆடில் ஷாக்கள் ஆட்சி புரிந்த காலத்தில் பீஜப்பூரில் தழைத்தோங்கியிருந்தது. பற்பல அரண்மனைகளும், வாயில்களும், பள்ளிகளும் அந்நகரில் தோன்றின. 1565-இல் தொடங்கி முடிக்கப்படாத ஜமி மசூதியும், 18,000 அடி சதுர அளவின் மீது உயர்ந்து விளங்கும் குவி மாடத்தையுடைய ஆடில்ஷாவின் கோல்கும்பஸ் என்ற சமாதியும், 16-ஆவது நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய இப்ராஹிம் ரௌஸாவும், உயர்ந்ததும் சுற்றிலும் முகப்பு வைத்த சாளரமும் உடைய மிஹ்தார் மஹல் எனும் மாளிகையும் இவற்றுள் சிறந்தவை. பிஜப்பூர் கட்டிடக்கலை தென்னாட்டு முறையை ஒட்டியது. பொதுவாகத் தென்னிந்தியத் திறமை பிஜப்பூர் மாளிகை அமைப்பில் நன்கு துலங்குகிறது. வெளிநாட்டுச் சிற்ப முறையைவிட இந்திய இயலே மேன்மையாக இம்மாளிகைகளில் சிறந்து. காணப்படுகின்றதென்று பேரறிஞர் ஸர்ஜான் மார்ஷல் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

கோல்கம்பஸ் கல்லறை மிகச் சிறந்ததாயினும், பாமினிகளின் பல்வேறு கல்லறைகள் இக்காலத்தில் தோன்றின. குல்பர்க்காவில் அரசர்களுடைய கல்லறைகளில் இருதரங்களைக் காணலாம். ஒன்று, ஒரே சதுரக் கல்லறை, மேல் கூரையாக அமைக்கப்பட்ட கவிகை மாடமும், ஞாயில்களும், மூலைகளில் சிறு தூபிகளும் சேர்ந்தவை ; மற்றொன்று, இவை போலவே இரு கல்லறைகள் இணைக்கப்பட்டவை. தாவூத்தின் சாவுக்கல்லறை உள்பட 14-ஆவது நூற்றாண்டில் எழுந்த சிற்ப வேலை நுட்பங்கள் டில்லி துக்ளக் மன்னர்களுக்குக் கட்டப்பெற்ற சாவுக் கல்லறைகளையே ஒத்திருக்கின்றன. பதினைன்காவது நூற்றாண்டின் கடைசியில் தோன்றிய கியாசுதீனின் கல்லறையில்தான் இந்துச் சிற்பிகளின் கைத்திறத்தை முதலில் காண்கிறோம். அதிலிருந்து இந்து இயல் சிறப்பாக இறைவழிபாட்டு அறைச் சிற்ப வேலைகளில் தென்பட்டு வந்தது. 15-ஆவது நூற்றாண்டில் பிரோஸ் ஷாவின் கல்லறையில் இந்து முறை நுட்பங்கள் மிகுதியாகத் தோன்றின. ஆனால் அத்துடன்கூட அறைக்குள் செய்யப்பட்ட சிற்ப வேலைப்பாடுகளும் அலங்காரங்களும் பாரசீக முறையைத் தழுவியதாகவும் இருந்தன. குல்பர்க்கா மாதிரியைப் பின்பற்றிப் பெரிய அளவில் கட்டப்பட்ட 12 பாமினி அரசர்களது கல்லறைகளைப் பீகாரில் காணலாம். இவற்றுள் மிகச் சிறந்தது அகம்மது ஷாவாலி (1422-35) யின் கல்லறையே ஆகும். அதன் உட்சுவர்களிலெல்லாம் பாரசீக முறையிலுள்ள வண்ணப்பட ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளையும் காணலாம். பொதுவாக வெளிநாட்டிலிருந்து டில்லியில் வந்து திருந்திய முஸ்லீம் முறையும், இந்து முறையும் ஒன்று சேர்ந்து கலந்து சிறப்புடன் இலங்கின. ஆகவே ஒரு புதிய இந்தோ முஸ்லீம் முறை தோன்றியதெனலாம். உள்நாட்டு உறுதி வேலைப்பாடும் வெளிநாட்டு நுட்ப வேலைப்பாடும் ஒருங்கே கலந்து, உடர்தரமான கட்டிடங்களாய் அமைந்தன என்பது மிகையாகாது.

தக்காண சுல்தான்கள் சிலர் கல்விக்கு மிக்க ஆதரவு அளித்தனர். முஸ்லீம்களின் கல்வியை மிக்க ஆற்றலுடன் பேணிவந்தனர். ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு முல்லா நியமிக்கப்பெற்ருர். முல்லா அந்தந்தச் சிற்றூரின் சமயக்குரவராய் மட்டுமன்றி, ஆசிரியராகவும் இருந்து வந்தார். பட்டணங்களில், சமயத்தையும் மற்ற அறிவியல்களையும் போதிக்கும் உயர்தரக் கல்வியைக் காஸிகள் கற்பித்து வந்தனர். முக்கிய நகரங்களில் கல்லூரிகளை நிறுவியிருந்தனர். அவற்றிற்கு மன்னர்கள் ஏராளமான பண உதவி செய்து வந்தனர். அராபி, பாரசீகம் இவ்விரு மொழிகளிலும் கல்வி ஒருவாறு வளர்ந்ததெனலாம். முகமது கவான் நிறுவிய புகழ்பெற்ற மத்ராஸா உயர்நிலைக் கல்வியை வளர்க்கப் பெருந்துணை புரிந்தது. 14-ஆவது நூற்றாண்டு முதல் முஸ்லீம் அரசவைகளில் பாரஸிகம், அராபியா, ஈராக் முதலிய நாடுகளிலிருந்து வந்த முஸ்லீம்களின் செல்வாக்கு உயர்ந்தது. அவர்களில் சிலர் தக்காண முஸ்லீம் மன்னர்களின் அழைப்புக்கு இணங்கி வந்தவர்கள். நாடோடி வீரவாழ்வின் பொருட்டு வந்தவர்கள் சிலர். இவருள் கவிஞர், துறவிகள், கலைஞர், வணிகர், படை வீரர் முதலியோர்களும் இருந்தனர். தக்காண மன்னர் பெருஞ் செல்வர். இவர்கள் வாழ்க்கை முறையிலும் மனப்பான்மையிலும் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களுடைய கருத்துக்கள் பெரும் மாற்றத்தை உண்டு பண்ணின. சிற்ப இயல், கல்வி முறை, சமுதாய வழக்கங்கள் முதலியவற்றில், இம் மாற்றம் மிகுதி ஆயிற்று. வரலாற்று நூல்களில் விருப்பமும் ஆற்றலும் தென்னட்டில் முஸ்லீம் ஆட்சியால் விளைந்த பயன் எனலாம். வரலாற்றுத் துறையில் ஈடுபட்டிருந்தோரில் மிகச் சிறந்த அறிஞர் பெரிஷ்டா என்பவர்.

தென்னிந்திய முஸ்லீம் அரசாட்சியில் இந்துக்களின் நிலை குன்றியது. நகரங்களிலிருந்த இந்துக்களின் கல்வி நிலையங்கள் பொலிவற்றுப் போயின. பட்டணங்களிலும் அவற்றின் அண்மையிலுமிருந்த கோயில்கள் முன்போலச் செழிப்புற்றுத் தழைத்திருக்கவில்லை. ஆகவே, இந்துக்களின் உயர்நிலைக் கல்வி குன்றியது. எனினும், தொன்று தொட்டே நடைபெற்ற

வழக்கத்தையொட்டிச் சிற்றூர்களிலுள்ள புலவர்களும் ஆசிரியர்களும் பொது மக்களுக்குக் கல்வி புகட்டி வந்தனர். அரசியல் மாற்றங்கள் அவர்களையேனும் அவர்தம் தொண்டினையேனும் கெடுத்துவிடவில்லை.

அரசியல் வேறுபாடு சமூகப் பகையை எப்பொழுதும் வளர்த்ததெனக் கருதுவது தவறு. உண்மையில் முஸ்லீம் களுக்கும் இந்துக்களுக்கும் இக்காலத்தில் பலவகைத் தொடர்புகள் ஏற்பட்டன. முஸ்லீம் செல்வர்களின் பழக்க வழக்கங்கள் சிலவற்றை இந்துக்கள் பின்பற்றலாயினர். அதே வேளையில் இந்துக்களின் கருத்துக்களும் கொள்கை களும் சில சுல்தான்களையும் முஸ்லீம் செல்வர்களையும் கவர்ந்தன. பாமினி சுல்தான் பிரோஸ் என்பவர் (1397-1422) அரசியல் துறையில் பல இந்துக்களை உயர்நிலை அலுவலாளர் களாக நியமித்தார். பிற்காலத்தில், அதாவது 16-17-ஆவது நூற்றாண்டுகளில் கோல்கொண்டாவில் ஆட்சி புரிந்த குத்துப் ஷாஹி மன்னர்கள் பரந்த மனப்பான்மையுடையவராய்த் திகழ்ந்தார்கள். தமது நாட்டு இந்து மக்களையும் முஸ்லீம் களைப் போலவே ஆதரித்துப் பேணினார்கள். இந்துக்களின் கோயில்களுக்கும் நன்கொடை அளித்து உதவினர். எடுத்துக் காட்டாக, அபுல் ஹஸன், பத்ராசலம் கோயிலுக்கும், பிரமார மல்லேசுவரசுவாமி கோயிலுக்கும் ஏராளமான நிலங்களை வழங்கினார். கலப்பு மணம் பரவலாயிற்று. சில சுல்தான் களும் அவ்வழக்கத்தைப் பின்பற்றினர். நகரங்களிலும் பட்டணங்களிலும் தோன்றிய புதிய கலப்புப் பண்பாட்டில் இந்துக்களின் இசை, நாடகம், கலை, சிற்பம் முதலிய துறைகளைச் சார்ந்த பண்டைய முறைகளும் கருத்துக்களும் சிறப்பிடம் பெற்றன.

முதலாம் அகம்மது (1422-35) காலத்தில் இரு பண்பாடு களும் இணைந்து பொதுப்பண்பாடு ஒன்று உருவாவதற்கு வழி தோன்றியது. 'ஊர்ஸ்' என்ற விழாவில், அதாவது மன்னன் காலஞ்சென்ற ஆண்டு நினைவு விழாவில் இந்தக் கலப்பு வழக்கம் நிலவியது. அந்த விழாவில் நடைபெற்ற சடங்குகள் இந்துக்களின் சடங்குகளாகவே இருந்தன. சங்கு ஊதுவது,

பூவினுல் அர்ச்சனை செய்வது, தேங்காய் உடைப்பது போன்ற இந்து வழக்கங்கள் இதில் கலந்தன. இந்த விழாவை நடத்தும் தலைவர் 'ஜங்கம்' என்னும் இலிங்காயத் தலைவர் என்பது கவனிக்கத்தக்கது.[4] அவர் விழாவை நடத்தும் காலத்தில் பழைய முஸ்லீம்களின் வழக்கத்திற்கேற்ற ஆடைகளை அணிந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சில முஸ்லீம் துறவிகளிடம் இந்துக்கள் பலர் நம்பிக்கை கொண்டனர். சிலர் தம் உறவினர் உடல் நலம் பெறுமாறு முஸ்லீம் பள்ளியில் தொழுதுவரும் முஸ்லீம்களிடம் ஆசிர்வாதம் பெற்றுக் கொள்ளும் வழக்கம் இன்றும் பல இடங்களில் நிலவக் காணலாம்.

(4) Madras Journal of Literature and Science, January 1840, p. 146.




தென் இந்தியா—விஜயநகரப் பேரரசுக் காலம்

## இயல் - பதினென்று

# விஜய நகரப் பேரரசுக் காலம்

15, 16-ஆவது நூற்ருண்டுகளில் தென் இந்திய வரலாற்றில் உயர்நிலை பெற்றிருந்தது விஜய நகரப் பேரரசாகும். அது 1336-இல் தோன்றிப் படிப்படியாக வளர்ந்து வந்தது. சங்கம மரபில் தோன்றிய ஐந்து அண்ணன் தம்பி மார்களிலும் மிகத் திறமைவாய்ந்த முதல் புக்கர் (1344—77) பல நாடுகளை வென்று ஒரு பேரரசை அமைப்பதில் ஈடுபட்டார். இந்தக் கருத்தை நிறைவேற்றுவதில் இவருக்குப் பேருதவி அளித்தவர் இவரது அருமை மைந்தர் குமார கம்பணரே யாவர் அஞ்சாப் போர் வீரரான குமார கம்பணர், காஞ்சீபுரத்தையும், அதன் அருகாமையிலிருக்கும் நிலப் பகுதியையும் கைப்பற்றினர். மேலும், மதுரையில் முகம் மதியரின் ஆட்சியை அழித்து அங்கும் விஜய நகர அரசை அமைத்தார். புக்கர், ஒரிஸா மீது படையெடுத்து அந்நாட்டைக் கைக்கொண்டார். ஆனல், பாமினி அரசர்களோடு அவர் செய்த போர் அவருக்கு உறுதியான பயனை அளிக்கவில்லை. எனினும் ஆங்காங்குத் தலை தூக்கிய சில கிளர்ச்சிகளை நசுக்கி நாட்டில் அமைதியைப் பரவச் செய்தார். தகுந்த அரசியல் முறையை உருவாக்குவதிலும் புக்கர் ஈடுபட்டார்.

இரண்டாம் ஹரிஹரர் (1377—1404) அரசை வலுப் படுத்துவதில் தொடர்ந்து முனைந்தார். பண்டையப் பாண்டிய குல மன்னரை மீண்டும் மதுரையில் அமரச் செய்தார். கொண்டவீட்டு ரெட்டிகளை அடக்கினர். ஆகவே, துங்க பத்திரைக்குத் தெற்கில் கேரளத்தைத் தவிர மற்றெல்லா நாடுகளும் விஜய நகரப் பேரரசின் ஆதிக்கத்தை அங்கீகரித்தன.

மேற்கில் கோவா, சௌல், தேபல் ஆகிய துறைமுகங்களையும் முகம்மதியர்களிடமிருந்து விஜய நகர அரசு கைப்பற்றியது. ஆனால் 1398-இல் பிரோஸ் என்ற பாமினி மன்னர் விஜய நகரப் படையை முறியடித்து, எண்ணற்ற இந்துக்களைக் கொலை செய்ததாகக் கண்டோம். ஆயினும் 14-ஆவது நூற்றாண்டின் முடிவுக்குள் துங்கபத்திரை ஆற்றிற்குத் தெற்குள்ள நாடு முழுவதிலும் விஜய நகரப் பேரரசு இணையற்றதாகத் திகழ்ந்தது. இந்துக்களின் மதப் பற்றும், முகம்மதியர்கள் நெடுங்காலம் செய்துவந்த கொடுமைகளால் இந்துக்களுக்கு ஏற்பட்ட மனவெறுப்புமே விஜய நகரப் பேரரசின் விரைந்த வெற்றிக்குக் காரணமாயின.

பாமினி அரசுக்கும் விஜய நகருக்கும் தொடர்ந்து போர் நடந்தது. இப்போர் இரு நாடுகளுக்கும் சொல்லொணாத் தீங்கை விளைவித்தது. எண்ணற்ற மக்கள் மாண்டனர். அளவற்ற பொருளும் அழிந்தது. விஜய நகரை முதன் முதலில் ஆட்சி புரிந்த சங்கம குலம் இரண்டாவது தேவராயரின் காலத்திலேயே (1422—46) உயர்ந்த நிலையை அடைந்ததெனலாம். அவர் கொண்டவீட்டைக் கைப்பற்றினார். கேரளத்தில் கொல்லத்து அரசைத் தலைபணியச் செய்தார். ஆனால் பாமினிப் படைகள் அவர் நாட்டை அடிக்கடி தாக்கிப் பெரும் தீங்கை விளைவித்தன. ஆகவே, முகம்மதியர்களின் போர் வெற்றிக்கு அடிப்படைக் காரணங்களை அவர் ஆராயலானார். போர்ப் பயிற்சி இன்றியமையாததெ்தென உணர்ந்து தமது படைகளுக்குச் சீரிய முறையில் பயிற்சி அளித்தார். அன்றியும் முகம்மதியப் படைஞர் பலரையும் தமது சேனையில் சேர்த்தார். அவர்களுக்குத் தம் மத வழிபாட்டுக்கு முழு உரிமையும் அளித்தார்.

தேவராஜருக்குப் பின் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்த மன்னர்கள் திறனற்றவர்களாயிருந்தனர். ஆகவே விஜய நகர அரசும் வலிமையற்ற நிலையையடைந்தது. இரண்டாம் அலாவுதீனும் ஒரிஸா மன்னன் கபிலேசுவர கஜபதியும் ஒன்று சேர்ந்து விஜய நகரைத் தாக்கினார்கள். ஆனால் அது பயனற்றதாயிற்று. கபிலேசுவரர், தெற்கில் சில

தெலுங்கு மாநிலங்களைப் பிடித்தார். அவர், பின்னர் போரிட விரும்பின போதிலும் மேல் செல்ல ஒட்டாமல் விஜய நகரப் படைகள் தடுத்துவிட்டன. இறுதியாக 1486-இல் சந்திரகிரிச் சிற்றரசின் தலைவரான சாளுவ நரசிங்கர் பழைய சங்கம குலத்தையே அகற்றித் தாம் அரசபதவியை ஏற்றுக் கொண்டார். அவருடைய படைத்தலைவர், நரஸ, நாயகர், சாளுவ நரசிங்கர் சார்பாக விஜய நகரத்தைக் கைப்பற்றினார். சாளுவ குலத்தின் இந்தக் கைப்பற்று உண்மையில் விஜய நகரப் பேரரசைக் காப்பாற்றியதெனலாம். நரஸ நாயகர் உடனே கிளர்ச்சிகளை அகற்றி அமைதியை நிலவச் செய்தார் : விஜய நகரப் பேரரசு இழந்த நாடுகளை மறுபடியும் அவர் மீட்டார். குறிப்பாக முட்கல் என்ற இடத்தையும், இராயச் சூரையும் பிடித்தார். மேலும் நரஸ நாயகர், பாண்டி நாட்டில் விஜயநகரத் தலைமை ஆட்சியை உறுதிப்படுத்தினார். அதோடு, தெற்கில் கொண்டவீடு வரையிலும் தமது மேலாட்சியை அமைத்திருந்த புருஷோத்தம கஜபதியை முறியடித்ததாகக் கருதப்படுகிறது. ஆனால், சாளுவ நரசிங்கர் தமது இறுதிக் காலத்தில் இராயச்சூர், உதயகிரி, கொண்டவீடு ஆகிய உயிர்நாடி போன்ற இடங்களை இழக்கும்படி நேரிட்டது. இவற்றை மீட்பதற்கு அவர் இறக்கும் தருவாயில் தமது திறமை பெற்ற தளபதியை வேண்டிக்கொண்டதாகக் கூறப் படுகிறது.

சாளுவ நரசிங்கர் காலஞ்சென்ற பின் அவரது மூத்த மகன் அரசரானார். நரஸ நாயகரின் எதிரி ஒருவர் அவரைக் கொலை செய்யவே நரசிங்கரின் இளைய மகனாகிய இம்மடி நரசிங்கர் பதவி ஏற்றார். ஆனால், நரஸ நாயகர் அடிப்படை அதிகாரத்தைத் தம் கையிலேயே வைத்துக்கொண்டார். 1491-இல் இம்மடி நரசிங்கருக்கும் நரஸ நாயகருக்கும் ஒரு சச்சரவு தோன்றவே, நரஸ நாயகர் தாமே அரசைக் கைப்பற்றிக்கொண்டு மன்னரைப் பெனு கொண்டாவில் சிறைப்படுத்தினார். நரஸ நாயகர் துளுவ மரபைச் சார்ந்தவ ராதலால் இது, துளுவக் கைப்பற்றல் என்று கூறப் படுகிறது.

இராயச்சூரை நரஸ நாயகர் பிடித்தார். மறுபடியும் அதைப் பிஜப்பூர் 1502-இல் கைப்பற்றுவது வரை அது விஜய நகர் ஆட்சிக்குள் இருந்தது. தெற்கில் கன்னியாகுமரிமுனை வரையிலும் படையெடுத்துச் சென்று நரச நாயகர் நாடெங்கும் அமைதி நிலவச் செய்தார். மேற்குக் கரையின் வடபக்கத்தில் கோகர்ணம் வரையுள்ள நாட்டைக் கைப்பற்றினர். ஆகவே, அவரது மேன்மை சான்ற புதல்வன் கிருஷ்ண தேவராயரின் காலத்தில் விஜய நகர அரசு மாபெரும் நிலையை அடைவதற்கு இவரது முயற்சிகள்தான் அடிகோலின வென்பது மிகையாகாது. நரஸ நாயகர் 1503-இல் இறந்ததும் அவர் மூத்த புதல்வர் வீரநரசிங்கர் அரசப்பிரதிநிதியானர். சில ஆண்டுகளுக்குள் மன்னர் சாளுவ இம்மடி நரசிங்கர் கொலை செய்யப்பட்டார். எனவே வீர நரசிங்கர் அரச பதவியைக் கைப்பற்றிக்கொண்டார். ஆனால், நாட்டில் தோன்றிய கிளர்ச்சிகளை அடக்குவதில் நெடுங்காலம் அவர் ஈடுபட வேண்டியதாயிற்று. 1509-இல் அவர் உயிர் துறந்தபோது அவரது ஒன்றுவிட்ட தம்பியான கிருஷ்ணதேவராயர் பட்டத்துக்கு வந்தார்.

இருபத்து ஐந்து வயது முடியாத நல்ல காளைப் பருவத்தில் பதவியேற்ற கிருஷ்ணதேவராயருக்கு, இடைவிடாத பயிற்சியாலும் போர்களில் ஈடுபட்டதனுலும் உடல் வலிமையைப் பேணி வரும் வாய்ப்புக் கிடைத்தது. போர்க்களத்தில் இவரது அஞ்சாமையும் திறமையும் வியக்கத் தக்கவை. படைஞர்பால் அவருக்கு இருந்த பற்று படைக் கூட்டத்தின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அரசாங்கத்தின் பொருள் நிலையை உறுதிப்படுத்திக்கொண்டு எதிரிகளை முறையே அடக்கத் தொடங்கினர். அப்போது கிளர்ச்சி செய்த உம்மத்தூர் கங்கராயர் மீது பாய்ந்து அவரை முறியடித்து அவர் கோட்டையையும், கிருஷ்ணதேவராயர் கைப்பற்றினர். ஒரிஸா மன்னரைப் போரில் வென்றூர். நீடித்த முற்றுகைகள் இட்டு உதய கிரியையும் கொண்டவீட்டையும் கைக்கொண்டார். பின்னர் கலிங்கநாட்டைத் தாக்கிக் கொடும் போர் புரிந்தார். இறுதியாக அந்நாட்டு மன்னர் பிரதாபருத்திரர், போர்

நிறுத்தத்திற்குக் கெஞ்சினர். அது மட்டுமல்ல; தம் மகளையும் கிருஷ்ண தேவராயருக்கு மணம் செய்து கொடுத்தார்.

அவர் ஆட்சியின் ஆரம்பத்திலேயே முஸ்லீம்கள் பதிவு போல் விஜப நகரைத் தாக்கியபோது அவர்களை முறியடித்துத் துரத்தினர். பின் இராயச்சூரைக் கைப்பற்றியதுமல்லாமல் பீதரையும் முற்றுகையிட்டுப் பிடித்தார். பிற்பாடு கிருஷ்ண தேவராயர் கிழக்குப் பகுதியில் போர் நடத்திக்கொண்டிருந்த போது, பிஜப்பூர் இஸ்மாயில் ஆடில்கான் இராயச்சூரைக் கைக் கொண்டார். ஆகையால் 1520-இல் கிருஷ்ணதேவராயர் மீண்டும் பிஜப்பூர் மீது படையெடுத்து வெற்றி பெற்றார். இப் போரில் போர்த்துகீசியப் படைஞர் அவருக்கு அளித்த உதவி இந்த வெற்றிக்கு மிக ஆதரவாயிருந்தது. 1523-இல் பிஜப்பூரை மற்றுமொரு முறை தாக்கிக் குல்பர்க்கா போன்ற கோட்டைகளைக் கைக்கொண்டு பிஜப்பூரின் தலைநகரங்களையும் பிடித்தார்.

புகழ்பெற்ற போர் வீரர் மட்டுமல்ல ; கிருஷ்ண தேவராயர் சிறந்த அரசியல் வல்லுனர் ; மேலும் இலக்கியங்களையும் வளர்ப்பதில் பேரின்பங் கண்டவர். மிகச் சிறப்புற்ற 'திக்கஜர்கள்' உள்பட புலமை சான்ற பல அறிஞர்களுக்கும் அவர் பேராதரவு அளித்தார். மாட்சிமை தங்கிய தெலுங்குக் கவிஞரான அல்லசானி பெத்தண்ணு அவரது அவைப் புலவராகத் திகழ்ந்தார். கிருஷ்ண தேவராயர் ஆர்வம் மிகுந்த வைணவராயிருந்தாலும் சைவக் கொள்கையிலும் பற்றுடைய வராயிருந்தார். வைணவர்கள், சைவர்கள், மாத்வர்கள், சமணர்கள் ஆகியோர் அனைவரையும் ஆதரித்தார். எனினும் வட வேங்கடமுடைய பெருமானே கிருஷ்ண தேவராயரின் உள்ளங் கவர்ந்த ஈசன் என உறுதியாகக் கூறலாம். திருப்பதி ஆலயத்திற்குப் பல தடவை சென்று இறைவனை வழிபட்டார். பல திருப்பணிகளையும் இயற்றினர். தலைநகரில் வித்தல சுவாமி ஆலயத்தை அழகுபடுத்தினதோடு கிருஷ்ணன் கோயில் ஒன்றையும் கட்டுவித்தார். ஒரே கல்லில் செதுக்கப் பட்ட நரசிங்க மூர்த்தியின் மிகப் பெரிய சிலை ஒன்றையும் உருவாக்கினர்.

அரசியல் பொறுப்பைத் திறம்படக் கையேற்று நடத்திய தால் நாட்டில் அமைதியும் செழிப்பும் நிலவின. மக்கள் முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டார். ஆகவே, இவர் தென்னுட்டு அரசர் குல வரலாற்றில் புகழ் மிக்கதோர் இடத்தைப் பெற்றுள்ளார்.

**அச்சுதராயர் (1530-42) :** கிருஷ்ண தேவராயருக்குப் பின் அரசராயமைந்த அச்சுத ராயருக்கு இன்னல்கள் பல நேர்ந்தன. முதலில் அச்சுதர், கஜபதியின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்திஞர். குத்ப்ஷா, கொண்டவீட்டைத் தாக்கியபோது அவரை விஜய நகரப்படை தோற்கடித்தது. ஆஞல், இதற்குள் சாளுவத் தளபதி, வீர நரசிங்கன், உம்மத்தூர் தலைவரோடும் கூட்டுறவு செய்துகொண்டு பெரியதோர் கிளர்ச்சியைத் தொடங்கிஞர். அவர்களோடு அச்சுதராயரின் படை தீவிரப் போர் செய்து கிளர்ச்சியை ஒடுக்கியது. மேலும், திருவாங்கூர் அரசரால் அடிக்கடி தாக்கப்பட்டிருந்த பாண்டிய மன்னரை அச்சுதராயர் மீண்டும் பதவியில் அமைத்தார்.

பிஜப்பூர் சுல்தான் கைப்பற்றியிருந்த இராயச்சூரை 1534-இல் அச்சுதராயர் மீட்டார். ஆஞல், இதற்குள் உள்நாட்டுக் கலவரம் தலை தூக்கியது. கிருஷ்ண தேவராயரின் மருமகன் இராமராயர் அச்சுதராயரைப் பிடித்துச் சிறையி லிட்டார். அச்சுதராயரின் மருமகஞன சதாசிவனை முடிசூட்டி அவர் பேரால் இராமராயர் ஆட்சி புரியத் தொடங்கிஞர். இதற் கிடையே தெற்கே ஒரு கிளர்ச்சி தோன்றியதும் அதை அடக் குவதற்கு இராமராயர் சென்றிருந்தபோது அச்சுதர் விடுதலை பெற்றுக்கொண்டார். இத் தருணத்தில் இப்ராஹிம் ஆடில் ஷா விஜய நகரத்தை முற்றுகையிட்டார். ஆகவே இராம ராயரும் அச்சுதராயரும் ஆடில்கானின் நட்பைப் பெறப் போட்டி யிட்டனர். ஆடில்கான் இந்த வசதியைத் தமது செல்வாக்கைப் பெருக்கப் பயன்படுத்திக்கொண்டு இறுதியில் இவர் வழக்கைத் தீர்த்தார். அச்சுதர் விஜயநகர அரசை ஆட்சி புரியவும், இராமராயர் தனது சொந்த ஆஸ்தியைத் தடையின்றிக் கையாளவும், ஆடில்கான் ஒப்பந்தம் செய்து வைத்தார். அச் சுதர் காலம் வரையில் இந்த ஒப்பந்தம் ஆதரிக்கப்பட்டு

வந்தது. பொதுவாக அச்சுதரின் ஆட்சியில் குழப்பம் மிகுதியாயிருந்தது ; அடிக்கடி கிளர்ச்சிகள் தோன்றின ; நாட்டில் பாதுகாப்புக் குன்றியது.

அச்சுதர் இறந்த உடன், மரபு வழியுரிமை பற்றிய தீவிர சச்சரவு தோன்றியது. முடிவில், கிருஷ்ண தேவராயரின் மருமகன் இராமராயர், சதாசிவரைத் திரும்பவும் பட்டத்தில் அமைத்துத் தாமே பேராட்சியாளராக எட்டு ஆண்டுகள் திறம்படப் பணியாற்றினர். ஆட்சித் துறையில் இராம ராயருடன் அவரது உடன்பிறந்தோர் முழுமனத்துடன் ஒத்துழைத்தனர். ஏறத்தாழ 1550-இல் இராமராயர் சதாசிவரைச் சிறையிலடைத்தார். ஆயினும் அன்புடன் அவரைப் போற்றி வந்தாரென்பதற்குப் போதிய சான்றுகளுண்டு.

தெற்குக் கோடியில் திருவாங்கூர் மன்னர் பாண்டி நாட்டைப் பின்னும் அடிக்கடி தாக்கி வந்தார். அதோடு போர்த்துகீசியர் தெற்குக் கடலோரத்திலுள்ள பரவரைக் கிறிஸ்தவமதத்திற்கு மாற்றுவதில் ஈடுபட்டனர். இவ்விரு தொல்லைகளையும் அறவே ஒழிக்கும்பொருட்டு இராமராயர் வித்தலரையும் சின்ன திம்முவையும் அனுப்பினர். போர்த்துகீசியரோடு தொடர்ந்து போர் புரிந்ததின் விளைவாக இறுதியில் அவர்கள் அடிபணிந்து ஆண்டாண்டுதோறும் விஜயநகர மன்னருக்குக் கப்பம் கட்டுவதற்கு ஒப்புக்கொண்டனர். திருவாங்கூர் அரசராகிய திருவடியோடு போர் செய்து முதலில் வெற்றி பெற்ற போதிலும், இரண்டாம் முறை வித்தலர் அவரைத் தாக்கியது பயனற்றுப் போகவே, வித்தலர் வீடு திரும்ப நேரிட்டது.

இதற்கிடையே தக்காண முகம்மதிய அரசர்களின் உள்நாட்டு நிகழ்ச்சிகளில் இராமராயர் தலையிட்டுத் தமது செல்வாக்கைப் பெருக்க முயன்றார். முகம்மதிய மன்னர்களில் ஒவ்வொருவரோடும் வசதி போல் சேர்ந்துகொண்டு அவர்களுக்குள் சச்சரவை மூட்டினர். 1558-இல் அகம்மத் நகருக்கும் கோல்கொண்டாவிற்கும் எதிராக பிஜப்பூரோடு அவர் ஒத்துழைத்தார். இராமராயரே அகம்மத் நகர்மீது படையெடுத்து, அந்நாட்டு

மக்களுக்குக் கொடிய தீங்கை விளைவித்தார். இச்செயல்களின் பயனாக முஸ்லீம்களின் உணர்ச்சி தலைதூக்கியது. விஜய நகரோடு கடுஞ்சினமும் மூண்டது. 1562-இல் மீண்டுமொரு முறை பிஜப்பூர் சார்பாக இராமராயர், அகமத் நகரைத் தாக்கி முன் போல் மக்களுக்குப் பெரும் துயரை விளைவித்தார். உடனே பீராரைத் தவிர தென்னாட்டு முகம்மதிய அரசு களெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுறவை அமைத்தன. விஜய நகரை அழிப்பதே முஸ்லீம்களின் குறிக்கோளாயிற்று. 1565-இல் கூட்டுறவுப் படைகள் விஜய நகரப் படையைத் தலைக்கோட்டைக்கு அருகிலுள்ள ராக்ஷஸிதங்டி என்னு மிடத்தில் எதிர்த்துப் போரிட்டன.

முதலில் முஸ்லீம்கள் தோல்வியடைவரெனத் தோன்றி யது. ஆனால், அவர்களுடைய பீரங்கிப் படை இறுதியில் மிகத் தீவிரமாக முயன்றது. மேலும், தன்னலங் கருதிய விஜய நகரைச் சேர்ந்த இரு முஸ்லீம் தளவாடர்கள் நயவஞ் சகமாக எதிரிக்கு உதவி செய்தனர். முடிவில் இராமராயர் முஸ்லீம்கள் கையில் சிக்கிவிட்டார். அவரை உடனே முஸ் லீம்கள் கொன்றதின் விளைவாக விஜய நகரப் படையில் அச்சமும் குழப்பமும் ஏற்பட்டன. அத்துடன் முஸ்லீம்களுக்கு வெற்றி உறுதி பெற்றது. உடனே எதிரிகள் விஜய நகரத் தலைநகர் மீது பாய்ந்து அட்டூழியங்கள் நடத்தினர். கொள்ளை யும் கொலையும் தாண்டவமாடின. மாளிகைகள் பல அழிந்தன. இன்னும் பல எட்டிலடங்காத கொடுமைகளுக்கு விஜய நகர மக்கள் ஆளாயினர்.

இப்போரால் விஜய நகர அரசு அறவே அழிந்துவிடவில்லை யாயினும் அதன் பிற்கால நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. விஜய நகரின் ஊக்கமும் செல்வாக்கும் தகர்ந் தன. பேரரசின் ஊர்கள் பலவற்றைப் பிஜப்பூரும் கோல் கொண்டாவும் கைப்பற்றின. மேலும் விஜய நகரின் இப்படு தோல்வியால் தெற்கில் ஆண்டு வந்த நாயக்கர்கள் தமது தனி ஆட்சிகளை அமைத்துக்கொண்டனர். மைசூர் அரசு புத் துயிர் பெற்றதும், இந்தியாவில் போர்த்துகீசியரின் நிலை தகர்ந்ததும் இப்போரின் மற்றும் சில விளைவுகளாகும்.

**அரவீடு மரபினர் :** ஆறு ஆண்டுகள் இராம ராயரின் தம்பி, திருமலை என்பார், சதாசிவர் சார்பாகப் பேராட்சியாளரா யிருந்தார். அக்காலத்தில் நாட்டில் குழப்பமும் கலவரமும் மிகுந்திருந்தன. 1570-இல் திருமலை அரச பட்டத்தை வெளிப்படையாகக் கையேற்றார். சதாசிவருக்கு என்ன நேர்ந்ததெனத் தெரிவதற்கில்லை. பிஜப்பூர் மன்னர், ஆலி ஆடில்ஷா விஜய நகரப் பேரரசைத் தாக்கி அதோனியைக் கைக்கொண்டார். திருமலை தமது மூன்று புதல்வர்களையும் பேரரசின் ஒவ்வொரு பகுதிகளில் அமர்த்தினர். ஆகவே ஸ்ரீரங்கர் தெலுங்கு நாட்டிலும், இராமன் கன்னட நாட்டிலும், வேங்கடபதி தமிழ் நாட்டிலும் அரசரின் பிரதிநிதிகளாக ஆட்சி தொடங்கினர்.

1571-இல் திருமலை அரச பதவியை விட்டு விலகின உடன் அவர் மூத்த மகன் ஸ்ரீரங்கர் அரியணை யேறினர். போர் வீரராயிருந்தும் ஸ்ரீரங்கருக்கு முஸ்லீம்களின் தாக்குதல்களை நிறுத்த முடியவில்லை. அவருக்குப் பின் 1585-இல் அவரது தம்பி இரண்டாவது வேங்கடர் (1586-1614) பதவி கை யேற்றார். இவர் காலத்தில் பேரரசு முன் இழந்த வலிமையை மீட்பதற்கு முயன்றது. கோல்கொண்டாவோடு போரிட்டு வெற்றி பெற்றதன் பயனைத் தமது அரசைக் கிருஷ்ண ஆற்றங்கரை வரை விரிவாக்கினர். உதயகிரியைக் கைக் கொண்டார் ; வேலூர் லிங்கம நாயக்கரைப் போன்ற பல கிளர்ச்சியாளர்களையும் அடக்கினர். குடியானவர்களின் நிலைமையை முன்னேற்றினர். மக்களின் பொருளாதார நிலையும் சீர்திருத்தமடைந்தது. வர்த்தக வளர்ச்சியை முன்னிட்டு, நாட்டில் பல இடங்களிலும் ஐரோப்பிய வர்த்தகக் குழுக்களை அமைப்பதற்கு வேண்டிய வசதிகளை அரசாங்கம் அளித்தது. அரவீடு மரபில் தோன்றிய மன்னர்களில் தலை சிறந்தவர் வேங்கடர் என்பதில் ஐயமில்லை. இடையூறுகள் மிகுந்த அக்காலத்தில் இவர் அரசியலைத் திறம்பட நடத்தினர்.

**உள்நாட்டுக் கலவரங்கள் :** முதலில் தலைநகருக்கருகிலேயே ஜகா என்ற போர் வீரரின் தலைமையில் ஒரு கிளர்ச்சி தலை தூக்கியது. வேங்கடருக்குப்பின் அரசரான ஸ்ரீரங்கரையும்

அவர் குடும்பத்தாரையும் ஜகாவின் கூட்டத்தார் படுகொலை செய்தனர். ஏதோ நற்காலமாக ஸ்ரீரங்கரின் மகன் இராமதேவர் தப்பிப் பிழைத்தார். ஜகா தெற்கில் வந்து பலர் நட்பைப் பெற்று விஜயநகர அரசுக்கு எதிராக ஒரு கூட்டுறவை உருவாக்கினர். ஆனல், இவ்விபத்து முற்றுவதற்கு முன் விஜயநகரப் படைகள் திருச்சிராப்பள்ளிக்கு அருகாமையில் தோப்பூர் என்னுமிடத்தில் போர் செய்து ஜகாவை தோற் கடித்தன. அன்றியும், போரில் ஜகாவே உயிரிழந்தார்.

இராமதேவரும் (1617-30), அவருக்குப் பின் மூன்ருவது வேங்கடரும் (1630-42) பெயரளவில் ஆட்சி புரிந்தனரென்றே கருத வேண்டும். பேரரசின் ஊக்கமும் செல்வாக்கும் குன்றியதில் விந்தையொன்றுமில்லை. மூன்றும் வேங்கடரின் காலத்தில் உள்நாட்டுச் சச்சரவு மிகுதிப்படவே, பிஜப்பூர் இதைப் பயன்படுத்திக்கொண்டு விஜய நகரப் பேரரசின் மீது படையெடுத்தது. அதே வேளையில் கிழக்கிலிருந்து கோல் கொண்டாவும் தாக்கியது. 1642-இல் வேங்கடர் இறந்த பின் அவர் மருமகன்(மூன்ரும்) ஸ்ரீரங்கர் அரசரானர். கோல் கொண்டாவும் பிஜப்பூரும் தொடர்ந்து விஜயநகர் ஊர்கள் பலவற்றைத் தாக்கிக் கைக்கொண்டன. கோல்கொண்டா தளபதி மீயர் ஜும்லா என்றவர் நெல்லூரையும் கடப்பையை யும் கைப்பற்றினர். பின் பிஜப்பூர் படைத்தலைவர் முஸ்தாபாகான் ஸ்ரீரங்கரை வேலூருக்கருகில் முறியடித்தார். ஸ்ரீரங்கர் திகைத்துப்போய் முதலில் தஞ்சாவூருக்கும் பின்னர் மைசூருக்கும் மறைந்தோட நேரிட்டது. செஞ்சியும் அதற்குப் பின் தஞ்சாவூரும் பிஜப்பூர் கையில் சிக்கின. 1652-க்குள் கர்நாடக நாடு முழுவதையும் முகம்மதியர்கள் கைப்பற்றினர். ஆயினும் பேருக்கு, 1675-ஆம் ஆண்டு தாம் காலஞ்செல்லும் வரையில், மைசூரிலிருந்தே ஸ்ரீரங்கர் ஆட்சி புரிந்ததாகக் கூறப்படுகிறது. ஸ்ரீரங்கரின் மறைவோடு விஜயநகரப் பேரரசும் மறைந்தது எனலாம்.

**மதுரை நாயக்கர்கள் :** மாபார் சுல்தானையும் பாண்டிய மன்னனையும் போரில் வென்ற பின் விஜயநகர அரசு மதுரை யில் ஆட்சி புரிய ஒரு நாயக்கரை அமர்த்தியது. ஆனல்

விஜயநகரத் தலைநகருக்கும் மதுரைக்கும் மிகத் தொலைவா யிருந்ததால் மதுரை நாயக்கர்கள் அடிக்கடி கிளர்ச்சி செய் தனர். கிருஷ்ண தேவராயரின் ஆட்சியின் கடைசிக் காலத் தில் மதுரையிலாண்ட நாகம நாயக்கர் கிளர்ச்சி செய்ததாக வும், அதனால் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டு அவர் மகன் விசுவநாத நாயக்கர் அவ்விடத்தில் அமர்த்தப்பட்ட தாகவும் ஒரு செவிவழிச் செய்தி உண்டு. இதன் உண்மையை அறிவதற்கு வழியில்லை.

எதுவானாலும் கிருஷ்ண தேவராயர் விசுவநாத நாயக் கருக்குக் கூடுதல் உரிமைகளளித்து அவருக்கு, "தென் அரசின் முதல்வர்", "பாண்டி நாட்டின் தலைவர்" என்ற பட்டங்களும் அளித்ததாக அறிகிறோம். திறமை சான்ற அவரது படைத் தலைவர் அரியநாத முதலியாரின் முயற்சியால் விசுவநாதர் தமது நாட்டில் அமைதி நிலவச் செய்தார். ஆனால் விசுவநாதர் விஜயநகர ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டா ரென்ற கூற்றுக்குப் போதிய சான்றுகள் இல்லை. சாளுவ நரசிங்கரின் கிளர்ச்சியின் விளைவாகத் தெற்குள்ள அரசுகளை அச்சுதர் திருத்தியமைத்த போது, விசுவநாதருக்குத் திருச்சி ராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாநிலங்களின் மேலாட்சியும் அளிக்கப்பட்டது. விசுவநாதர் காலத்தில்தான் "பாளையக்காரர் முறைமை" தொடங்கியது. அவர் ஆட்சிக் குள்ளிருந்த நாடு முழுவதும் பல பாளையங்களாக அமைக்கப் பட்டன. ஒவ்வொரு பாளையத்தின் முதல்வனாக மரபுரிமை யுள்ள ஒரு தலைவன் நியமிக்கப்பட்டான். அவன் ஆண்டு தோறும் கப்பம் கட்டுவதோடு நாயக்கர் தலையிட்ட போர்களில் அவருக்குத் தகுந்த உதவியும் அளிக்கவேண்டியதாயிருந்தது. நீதியும் அமைதியும் நிலவும் பொருட்டுப் பாளையக்காரர்களுக்கு அவரவர் பாளையத்திற்குள் அமைதிகாவல் சார்ந்த அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. பாளையக்காரர் முறைமைக்கு இயற்கை யாகவே சில குறைகள் இருந்த போதிலும் அக்காலச் சூழ் நிலைக்கு அது தகுந்த ஏற்பாடாகவே விளங்கியது.

அச்சுதராயரும் வித்தலரும் திருவாங்கூரைத் தாக்கிய போதெல்லாம் அவர்களுடன் விசுவநாதர் ஒத்துழைத்தார்.

முதல் கிருஷ்ணப்ப நாயக்கர் (1564—72), தம் தகப்பனர் விசுவநாதரைப் போலவே திறமை சான்ற ஓர் போர்வீரர். திருவாங்கூர் மீது விஜயநகரத் தலைவர்கள் படையெடுத்த போது தாக்குதலுக்கு வேண்டிய உதவியை கிருஷ்ணப்பர் அளித்தார். அவர் பேரரசரிடம் உண்மைப் பற்றுடையவரா யிருந்தார்; தலைக்கோட்டைப் போரிலும் இராமராயரின் உதவிக்காகக் கிருஷ்ணப்பர் ஒரு படையை அனுப்பியிருந்தார்.

17-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் மதுரை நாயக்க ரின் ஆட்சிக்குள்ளிருந்த இராமநாதபுரத்தில் சேதுபதியின் வலிமை பெருகியது. 1605-இல் மறவர்கள் சேதுபதியின் படையில் பெருவாரியாகச் சேர்ந்து அவருக்கு உதவி புரிந்த னர். ஆனல், அக்காலத்தில் மறவர்கள் நாயக்கரோடு பற்று மாருதவர்களாகவே இருந்தனர். சில ஆண்டுகளுக்குப் பிறகு தான் அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

17-ஆவது நூற்றுண்டில் மதுரை நகரத்திற்குச் சில ஐரோப்பியப் பாதிரிகளின் தொடர்பு ஏற்பட்டது. குறிப்பாக, ராபர்ட்டு நோபிலி என்ற இத்தாலிய நாட்டு ரோமன் கத்தோ லிக்கப் பாதிரியார் தென் இந்தியாவிற்கு வந்து மதுரையில் தங்கினர். இவர், நாட்டு மக்களோடு அளவளாவிப் பழகி அவர்களைப் போலவே வாழ்க்கை நடத்தி அவர்கள் மனத்தைக் கவர்ந்தார். பலரையும் தம் மதத்திலும் சேர்த்துக்கொண் டார்.

மதுரை நாயக்கர்களில் தலைசிறந்த திருமலைநாயக்கர் (1623—59) விஜயநகர ஆதிக்கத்தை அகற்றித் தனி ஆட்சியை அமைத்தார். அஞ்சா வீரரான திருமலை நாயக்கர், மைசூர், திருவாங்கூர் ஆகிய நாடுகளோடு போரிட்டு வெற்றி பெற்றர். பின்னர் இராமநாதபுரம் சேதுபதியையும் முறி யடித்தார். 1656 முதல் 1659 வரை மைசூரோடு நிகழ்த்திய போரில்[1] இவர் வெற்றிக்குச் சேதுபதியின் ஒத்துழைப்பு பேருதவியை அளித்தது. திருமலை நாயக்கரின் மிகப் பெரிய

(1) இந்தப் போருக்கு 'மூக்குப் போர்' என்ற விந்தையான பெய ருண்டு. திருமலை நாயக்கரின் படைஞர், மைசூர் எதிரிகள் பலரின் மூக்கை வெட்டியதுதான் இதற்கு காரணமெனக் கூறப்படுகிறது.

போர், பேரரசர் மூன்றும் ஸ்ரீரங்கரோடு நடத்தியதாகும். இப் போர் தென் இந்தியா முழுவதிலும் பரவியது; ஏனெனில் திருமலை நாயக்கர் பிஜப்பூர், கோல்கொண்டா இவ்விரண்டு நாடுகளின் உதவியைத் தமது கிளர்ச்சியில் பயன்படுத்திக் கொண்டார். கடைசியாக 1656-இல் பேரரசர் மூன்றும் ஹரங்கரையும் அவர் வென்றார்.

கட்டடக் கலையில் பெரும் ஆற்றலுடையவர் திருமலை நாயக்கர். அவர் கட்டுவித்த மாபெரும் மாளிகைகளும் கோயில்களும் அவருக்கு அழியாப் புகழை அளித்திருக்கின் றன. அவர் உருவாக்கிய மதுரைக் கோயிலும், திருமலை நாயக்கன் அரண்மனையும், கன்னியாகுமரிக்கு அண்மை யிலுள்ள சுசீந்திரக் கோயிலில் இவர் இயற்றிய திருப்பணி களும் மிகச் சிறந்தவை. அறிஞர்களையும் புலவர்களையும் பரிந்து போற்றினர். அவருள் மிகப் புகழ்பெற்றவர் சமஸ் கிருத ஆசிரியர் நீலகண்ட தீட்சிதராவர்.

திருமலை நாயக்கருக்குப் பின் அரசு புரிந்த, அவர் பெயரர் சொக்கநாத நாயக்கரின் (1659—82) காலத்தில் சேலத்தை யும் கோயம்புத்தூரையும் மைசூர் கவர்ந்துகொண்டது. இராமநாதபுரத்தில் ஆண்டு வந்த கிழவன் சேதுபதியும் தம் மைத்துனர் இரகுநாதரின் கீழ்ப் புதுக்கோட்டையை ஓர் சுதந்திர நாடாக அமைத்தார்.

பின்னுள் ஆட்சி புரிந்த நாயக்கர்களில் மிகப் புகழ்பெற்ற வர் மங்கம்மாள் (1689—1706) என்பதற்கு ஐயமில்லை. அவர் தமது பெயரர் இரண்டாம் சொக்கநாதரின் சார்பாக அரசு புரிந்தார். 1697-இல் அவர் நாஞ்சி நாட்டின்மீது படை யெடுத்து வெற்றி பெற்றார். 1700-இல் தஞ்சாவூரோடு நடத்திய போரும் மங்கம்மாளுக்கு வெற்றியை அளித்தது. ஆனல், கிழவன் சேதுபதி என்ற இரகுநாத தேவர் 1702-இல் மங்கம்மாளின் படையை முறியடித்துத் தன்னாட்சி அமைத் துக் கொண்டார். சமயக் கோட்பாட்டில் பரந்த மனப்போக் குடைய மங்கம்மாள் கிறிஸ்தவ மக்களுக்கும் ஆதரவு அளித் தார். ஒழுங்கான முறையில் நடத்தப்பட்டு வந்த அவளுடைய அரசியல் மதுரை நாயக்கர்களின் ஊக்கத்தையே வலுப்படுத்

தியதெனலாம். அகன்ற வழிப்பாதைகளையும், நீர்ப்பாசன வாய்க்கால்களையும், வழிபோக்கர்களின், வசதிக்காகச் சத்திரங்களையும் உருவாக்கினர். மங்கம்மாளின் பரந்த மனப் பாங்கும் சிறந்த வள்ளன்மையும் நாடெங்கும் புகழ்பெற்றன. 1706-இல் மங்கம்மாள் காலமான பின் மதுரை நாயக்கர்களின் வலிமை படிப்படியாகக் குன்றியது.

இரண்டாம் சொக்கநாதர் (1706—32) அரசியலில் ஆர்வமில்லாதிருக்கவே, அமைச்சர்கள் மனம் போல் அரசாங்கம் நடைபெற்று வந்தது. அவருக்குப் பின்னர் பதவியை கைக்கொண்ட மீனாக்ஷியம்மாளை ஆர்க்காட்டிலிருந்து படையெடுத்து வந்த சந்தா சாகிப், சிறைபிலடைத்தார்; இறுதியாகத் தன் மானத்தைக் காக்கும் பொருட்டு மீனாக்ஷியம்மாள் தற்கொலை செய்துகொண்டதாகவும் கூறப்படுகிறது.

**தஞ்சாவூர் நாயக்கர்கள் :** பேரரசின் தெற்குள்ள மாநிலங்களைச் சீர்திருத்தி அமைக்க அச்சுதராயர் முனைந்ததின் விளைவாகத்தான் மதுரையிலிருந்து பிரித்து, தனிப்பட்ட தஞ்சாவூர் ஆட்சி ஒன்றைத் தொடங்க நேரிட்டது. மதுரை நாயக்கரின் வலிமை அளவு கடந்தால் நேரக்கூடிய விபத்தை உணர்ந்து அச்சுதர் இச்சீர்திருத்தத்தை வகுத்தார் போலும். 1532-இல் அச்சுதராயர் தமது மைத்துனராகிய சேவப்பரை தஞ்சாவூரில் முதல் நாயகராக அமர்த்தினர். சேவப்பர் (1532—80) தமது ஆட்சிக் காலத்தில் பொது நலத்தைப் பேணினர். தஞ்சாவூர்க் கோட்டைக்கு வெளியில் காணப்படும் பெரிய குளமும், தஞ்சாவூரில் அமைந்திருக்கும் உறுதியான சிவகங்கைக் கோட்டையும் இவர் இயற்றிய பணிகளில் மிகப் புகழ் பெற்றவை. பல ஆலயங்களையும் சீர்திருத்தி அமைத்து அழகுபடுத்தினர். திருவண்ணாமலை, விருத்தாசலம் ஆகிய ஊர்களிலுள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்தும், வேறு திருப்பணிகளை இயற்றியும் சிறப்பித்தார். சமயக் கோட்பாட்டில் மிகப் பரந்த நோக்கமுடையவர் சேவப்ப நாயக்கர். சில முகம்மதிய ஞானிகளுக்கு அவர் நன்கொடையாக நிலம் அளித்திருப்பதை 1549-இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது. அக்காலத்தில் நாகப்பட்டினத்

தில் குடியேறிய போர்த்துகீசிய வணிகருக்கு வேண்டிய வசதிகளை அளித்து அவர் ஆதரித்தார்.

அடுத்ததாக அவர் மகன் அச்சுதப்பர் (1580—1614) தஞ்சாவூர் நாயகரானார் இவர் 1560-ஆம் ஆண்டு முதலே அரசியல் துறையில் பயிற்சி பெற்றிருந்தார். இவருடைய அமைச்சர் கோவிந்த தீட்சிதர் பேரறிஞர் மட்டிலுமல்லர், திறமை வாய்ந்த அரசியல் நிபுணராகவும் திகழ்ந்தார். அச்சுதப்பர் அரங்கநாத பெருமாளின் பற்று மாருத அடியாராயிருந்த போதிலும், சைவரையும் மத்வரையும் போற்றுவதில் ஆர்வமுடையவராயிருந்தார். அவர் வள்ளன்மையும் மிகப் புகழ் பெற்றது. போர்த்துகீசியரோடு அவர் நட்புக்கொண்டிருந்தார். ஆனால் ஹாலந்து நாட்டார்களுடன் அவருக்குச் சற்றுப் பகைமை ஏற்பட்டது. தன் தந்தையாரைப் போல இவரும் விஜயநகரப் பேரரசர்களோடு உறுதியான பற்றுடையவராயிருந்தார். இந்த நட்பும், பேரரசர்களுக்குப் போர்களில் இவர் அளித்த உதவியும்தான் பின்னாளில் தஞ்சாவூர் நாயக்கர்களுக்கும் மதுரை நாயக்கர்களுக்கும் இடையே தோன்றிய பகைமைக்கு மூலகாரணமாயின. ஆனால், ஒரு தடவை பேரரசுக்கு எதிரிடையாகக்கூட அச்சுதப்பர் போரில் ஈடுபட வேண்டியதாயிற்று. 1611-இல் ஸான்தோமை விஜயநகரப் படை முற்றுகையிட்டபோது அச்சுதப்பர் போர்த்துகீசியருக்கு உதவி அளித்தார்.

அச்சுதப்பருக்குப் பின் அவர் புதல்வர் இரகுநாத நாயகர் (1614-34) ஆட்சி புரிந்தார். இவரும் தம் தகப்பனார் காலத்திலேயே அரசியல் துறையில் ஈடுபட்டிருந்தார்; ஆகையால், திறமை வாய்ந்த மன்னராகவே துலங்கினார். தஞ்சாவூர் நாயக்கர்களில் தலை சிறந்தவர் இரகுநாத நாயகரென்பது திண்ணம். ஜகா முறியடிக்கப்பட்ட தோப்பூர் போரில் இரகுநாதர், பேரரசுடன் திறம்பட ஒத்துழைத்திருந்தார். கலையிலும், கல்வியிலும் ஆர்வம் மிகுந்த இரகுநாதர் இலக்கியத்தைப் பரிந்து பேணினார். அவரே தெலுங்கில் பல நூல்களை இயற்றினார்; சிறந்த பாடகராகவும் அவர் திகழ்ந்தார்.

இரகுநாதரின் புதல்வர் விஜயராகவர் (1634-73) அறிவும் பண்பும், கடவுட்பற்றும் ஒருங்கே அமையப்பெற்ற மன்னர். ஆனால் இருவருக்குப் பேரரசரோடு பற்று இருந்ததாகத் தெரியவில்லை. பிஜப்பூருக்கும் கோல்கொண்டாவுக்கும் தாழ்ந்து அடி பணிந்தார். இறுதியாக, 1673-இல் மதுரை நாயக்கர் இவரைப் போரில் கொன்றார். பின்னர், சிறிது காலம் அரசுரிமைக்குப் போட்டியும் அதை ஒட்டிக் கலவரமும் நாட்டில் நடைபெற்றன. உண்மை உரிமையுள்ள ஒரு நாயக்கரைத் தஞ்சாவூரில் மன்னராக அமைக்கும் பொருட்டு பிஜப்பூர் சுல்தான் வெங்காஜி என்ற தமது படைத்தலைவரை அனுப்பினார். ஆனால், வெங்காஜி நாட்டில் சச்சரவுகளை நீக்கிய பின் தாமே அரசைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தார்.

**செஞ்சி நாயக்கர்கள்:**—விஜய நகரப் பேரரசின் காலத்தில் செஞ்சி ஒரு உயர்ந்த நிலையை அடைந்தது. எப்பொழுது செஞ்சியில் நாயக்கர்கள் அமைக்கப்பட்டனரென்று திட்டமாய்க் கூற இயலாது. ஆனால், கிருஷ்ண தேவராயரின் ஆதிக்கத்தின் கீழ் ஆட்சி புரிந்த செஞ்சி நாயக்கர் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கரெனத் தெரிகிறது. இவர் செஞ்சியின் பாதுகாப்பிற்கு அங்குள்ள கோட்டையை உறுதிப்படுத்தினார். ராக்ஷஸி தங்டிப் போருக்குப் பின் விஜய நகரப் பேரரசரிடமிருந்து விடுதலை பெற்று செஞ்சி நாயக்கர்கள் சுய ஆட்சியை அமைத்துக்கொண்டனர்.

பேரரசர் இரண்டாம் வேங்கடப்பர், செஞ்சி இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கரைப் போரில் முறியடித்துச் சிறையிலடைத்தார். ஆனால், வெகு நாட்கள் செல்லுமுன் அவர் விடுதலை பெற்றுக்கொண்டார். இக்கிருஷ்ணப்ப நாயக்கர் சிதம்பரத்து ஆலயத்தில் கோவிந்தராஜர் கோயிலைப் புதுப்பித்தார். இவ்வரிய பணி நடத்துவதற்குத் தில்லைவாழந்தணர்கள் இணங்கவில்லை. ஆகவே, அவர்கள் பலவற்றைக் கூறித் தடுக்க முயன்றனர். ஆனால், கிருஷ்ணப்பர் தாம் எண்ணிய கருமத்தை உறுதியுடன் செய்து முடித்தார். கிருஷ்ணப்பரின் மேலாண்மையில் வேலூர் நாயக்கருட்பட பல மானியக்காரர் பணியாற்றி வந்தனர். 17-ஆவது நூற்றாண்டின் நடுப்

பகுதியில் நடைபெற்ற விஜயநகரப் பேரரசின் உள்நாட்டுப் போரில் கிருஷ்ணப்பர் ஈடுபட்டார்; தோப்பூரில் தோல்வி அடைந்தவர்களில் இவரும் ஒருவர். 1648-இல் பிஜப்பூர் சுல்தான் செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றுவது வரை செஞ்சி நாயக்கர்கள் தனி ஆட்சி நடத்தி வந்தனர்.

**வேலூர் நாயக்கர்கள்:**—செஞ்சி நாயக்கரின் மேல் பார்வையின் கிழ், வேலூரில் ஒரு குறுநில நாயக்கர் ஆட்சி புரிந்து வந்தார். அவருள், 16-ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியில் சின்னப்பொம்மர் என்றவர் வேலூரில் திறம்பட அரசியல் நடத்தினர். இவருக்கு விஜயநகர அரசவையில் மிக்க செல்வாக்கு இருந்ததாக அறிகிறோம். சிறப்புற்ற அறிஞர் அப்பய்ய திட்சிதருக்கு இவர் பெரும் ஆதரவு அளித்தார். சின்னப்பொம்மரின் புதல்வர் லிங்கம நாயக்கர் என்பவர் பெயர் பெற்றவர். இவர் மிக்க ஆர்வமுடைய வீரசைவர். போர்த் திறமை சான்ற லிங்கம நாயக்கர், செஞ்சி நாயகரிடமிருந்தும் விஜயநகரப் பேரரசரிடமிருந்தும் 1603-இல் விடுதலை பெற்றுத் தனி ஆட்சி அமைத்துக்கொண்டார். ஆனல், அவரது சுயாட்சி வெகுநாள் நீடிக்கவில்லை. செஞ்சி நாயக்கருடையவும் பேரரசருடையவும் படைகள் ஒன்று சேர்ந்து வேலூர்க்கோட்டையை முற்றுகையிட்டு 1606-இல் கைப்பற்றின. இதன் விளைவால் லிங்கமர் தம் பதவியை இழக்கும்படி நேரிட்டது. அத்துடன் வேலூர் நாயக்கர்களுடைய வரலாறும் முடிவுற்றது. அது முதல் வேலூரை விஜய நகரின் மற்றொரு தலைநகராகப் பேரரசர்கள் அமைத்துக்கொண்டனர்.

**இக்கேரி நாயக்கர்கள்:**—இக்கேரி நாயக்கர்கள் மைசூர் நாட்டில் தற்போதைய ஷிமோகா மாவட்டமும் தெற்குக் கன்னடமும் சேர்ந்த இடங்களில் ஆண்டுவந்தவர்கள். இவர்களது உற்பத்தியைப் பற்றித் திட்டமான அறிவு ஒன்றும் கிடைப்பதற்கில்லை. லிங்காயதக் கொள்கையைப் பின்பற்றியிருந்த சதாசிவராயர் என்றவர் இக்கேரியில் 1560-இல் நாயக்கராக அமைக்கப்பட்டார். ராக்ஷஸி தங்டிப் போர் நடக்கும் வரையில் விஜயநகருக்கு அவர் கப்பம் கட்டி வந்தார். அதற்கப்பால் சுயாட்சி அமைத்துக்கொண்டு அரசு புரிந்தார்.

இக்கேரியில் சுயாட்சியை உருவாக்கியவர் வெங்கடப்ப நாயக்கர் (1582-1629) என்பவர். இவர் இக்கேரி நாயக்கர்களில் தலை சிறந்தவர். போர்த்துகீசியர் இவர் நட்பை நாடினர். அவருக்குப்பின் அரசாண்ட வீரபத்திரர் (1620-43) இக்கேரியிலிருந்து தலைநகரை பெட்னூருக்கு மாற்றினார். இக்கேரியில் கோட்டைகள் பல இருந்தபோதிலும், நாடு இயற்கை வளம் பொருந்தியதல்ல. மேலும், பெட்னூர் வாணிகத்திற்குத் தகுந்தது. சில காலம் பிஜப்பூர் இந்நாட்டைக் கைப்பற்றித் தன் ஆணைக்குள் ஆக்கியது. இந்த நாயக்கர் குலத்தைச் சார்ந்த பிற்கால அரசர்களில் புகழ் பெற்றவர் சிவப்பா (1645-60) என்றவர். இவர் விஜய நகர மன்னர் மூன்றும் ஸ்ரீரங்கரோடு நேசமாயிருந்ததால் பிஜப்பூரோடும் கோல்கொண்டாவோடும் போரில் ஈடுபட்டார். இவர் மைசூரோடும் போரிட நேர்ந்தது. ஊக்கம் குன்றிய போதிலும் பெட்னூர் நாயக்கர்கள் 1763-வரை ஆட்சி புரிந்தனர். 1763-இல் ஹைதராலி இவர்கள் நாட்டைக் கைப்பற்றினதோடு இவர்கள் மரபும் முற்றிற்று.

**மைசூர் :—** 1524-இல் யாதவர் குலத்தில் தோன்றினதாகக் கூறிக்கொண்ட சாமராஜர் என்பவர், மகிஷாசூர்[2] என்னுமிடத்தில் கோட்டை கட்டி ஓர் சிற்றரசை அமர்த்திக் கொண்டார். அவருக்குப் பின் தோன்றியவர் ஹரங்கப் பட்டணத்தில் ஆட்சி செய்த நாயக்கரோடு போரில் ஈடுபட்டார். சாமராஜாவின் குலத்தைச் சார்ந்தவரான ராஜாவுடையார் (1578-1617) என்பவர்தான் 1610-இல் ஸ்ரீ ரங்க பட்டணத்தைக் கைக்கொண்டவர். 1612-இல் விஜயநகரப் பேரரசர், இரண்டாவது வேங்கடர், ராஜா உடையாரின் பதவியை ஒப்புக்கொண்டார் ; விஜய நகரப் பேரரசில் உள் நாட்டுப் போர் மூண்டபோது இவர் அதில் சேராது அகன்று நின்றார். அவ்வேளை ராஜா உடையார் தமது அரசியலை வலுப்படுத்திக்கொண்டார். அவருக்குப் பின் வந்த அவர் பேரன் சாமராஜ் உடையார் பங்களூர் மாவட்டத்தைச் சார்ந்த

(2) மகிஷம்=எருமை.

சென்னபட்டணத்தைக் கைப்பற்றினர். மதுரை நாயக்கரை வலுவில் தாக்கிப் போரிட்டார். ஆனல், அது பயனற்ற தாயிற்று.

அதற்கு அடுத்ததாகப் பதவிக்கு வந்த முதலாம் காந்திரவ நரஸர் (1638-59) மதுரை திருமலை நாயக்கருக்கு எதிராக முன் குறிப்பிட்ட "மூக்குப் போரில்" ஈடுபட்டார். ஆனல் அதில் அவர் வெற்றி பெறவில்லை. இதற்குச் சற்றுப் பின் பிஜப்பூர் படைத்தலைவர் பழிக்குப் பழி வாங்கும் பொருட்டு இவர் நாட்டைத் தாக்கியபோது காந்திரவ நரஸரே தனது மூக்கை இழந்தார். இந்தப் போரின் விளைவாகக் காவேரி யாற்றின் வடபக்கம் இருந்த நாட்டைப் பிஜப்பூரின் ஆதிக்கத்தின் கீழ் மைசூர் மன்னன் ஆளும்படி நேர்ந்தது. தொத்த தேவர் என்ற அடுத்த அரசர் (1659-72) மதுரை நாயக்கரை ஈரோட்டில் முறியடித்து, தெற்கில் தம் அரசை விரிவாக்கினர். அவருக்குப் பின் அரசாண்ட சிக்கதேவராயர் (1672-1704) மிகத் திறமை வாய்ந்தவர்; அவர் காலத்தில் அரசின் எல்லைகள் விரிவாக்கப்பட்டன. தெற்கில் பழனி, ஆனைமலை ஆகிய இடங்கள் வரையிலும், கிழக்கில் சேலம் வரையிலும், வடக்கில் தும்கூர் வரையிலும் அவர் தம் அரசை விரிவாக்கினர்.

1687-இல் தஞ்சாவூர் பாண்ஸ்லேயிடமிருந்து மூன்று லக்ஷம் ரூபாய் விலை கொடுத்து அவர் பங்களூரைப் பெற்றுக் கொண்டார். அரசியல் வல்லுநராகிய இம்மன்னர் அரசாங்கத்தின் பொருள் நிலையை வலுப்படுத்தினர். அதற்காகச் சில புது வரிகளையும் மக்கள் மீது சுமத்த வேண்டியதாயிற்று. மைசூர் அரசை உருவாக்கியவர் சிக்கதேவராயர் என்பது மிகையாகாது. அஞ்சல் முறை அமைத்தார். காவேரி ஆற்றிற்குக் குறுக்கே ஓர் அணை கட்டினர். பெரும் மழையால் அது தகர்ந்து போன போதிலும் இவ்வணைதான், பின்னர் கட்டப்பட்ட கண்ணம்பாடி அணைக்கு வழிகாட்டியாக விளங்கியது. மேன்மை சான்ற அறிஞரும் எழுத்தாளருமாயிருந்த இவர் கன்னடக் கல்வியைச் சிறப்பாகப் போற்றினர். இவரது அவையில் துலங்கிய புலவர்கள் பலர் அரிய இலக்கிய நூல்

களையும் வரலாற்று நூல்களையும் இயற்றினர். இக்காலத்து மக்களிடையே வைணவம் ஓங்கித் தழைத்தது. அரசரும் வைணவராக இருந்த போதும், அவருக்கு வீர சைவப்பற்று மிகுதியாக இருந்தது. அவருக்குப் பின் அரசாண்டவர்கள் வலுவற்றவர்களாயிருந்ததால் 1761-இல் ஹைதராலி எளிதில் இவ்வரசைக் கைப்பற்ற முடிந்தது.

**அரசியல் :** விஜய நகரப் பேரரசு அமைந்ததும் அதன் அரசியல் முறை உருவானதும் தென் இந்திய வரலாற்றில் மிக முக்கிய நிகழ்ச்சிகளாகும். ஏனெனில், அப்பேரரசின் செல்வாக்கு தென் நாட்டிலெங்கும் சில காலம் பரவியிருந்தது. தனி அரசு அமைத்த நாயக்கர்களும் அதே அரசியல் முறையைப் பின்பற்றினர். பேரரசின் பெரும் பகுதியிலும் விஜய நகர மன்னரின் கண்பார்வையில் ஆட்சி நடைபெற்றது. புற எல்லையை அடுத்துள்ள நாடுகளில் பேரரசர் சார்பாக நாயக்கர்கள் அரசியல் நடத்தினர். பல்வேறு பகுதிகளிலும் ஆண்டுவந்த நாயக்கர்கள் பேரரசின் பழக்க வழக்கங்களையும் மரபுப் பண்பையும் ஒருவாறு பின்பற்றி வந்தனர்.

பேரரசில் மரபுரிமையான மன்னனாட்சிதான் நடைபெற்று வந்தது. ஒரு பக்கம் முகம்மதியர்களோடும் மற்றொரு பக்கம் கட்டுப்பாட்டுக்கு அடங்காத பண்ணையாட்களோடும் இடைவிடாது போர் புரிய வேண்டியிருந்ததால் அரசியலே போருக்குரிய முறையில் அமைய வேண்டியதாயிற்று. ஆகவே, நில மானியத்தை அடிப்படையாக்கி அரசியல் அமைந்தது. ஏறத்தாழ இருநூறு நாயக்கர்கள் மானியர்களாக ஆண்டாண்டு தோறும் பேரரசுக்குக் கப்பம் கட்டியதோடு அவர்கள் பேரரசருக்குக் குறிப்பிட்ட படை உதவியும் அளிக்க வேண்டியிருந்தது.

இது தவிர, மன்னரும் தம் கீழ் நிலையான படையொன்றைப் பேணி வந்தார். அன்றியும், வெளி நாட்டிலிருந்து வந்த நியூனிஸ் என்பவர் கூறியிருப்பது போல, எவ்வேளையிலும் எண்ணற்ற படைஞர்களை மன்னர் திரட்ட முடிந்தது. காலாட்படை, குதிரைப் படை, யானைகள் இவையாவும் மன்

னர் படையின் பகுதிகளாயிருந்தன. பீரங்கியணியில் பெரும் பாலும் முகம்மதியர்களோ ஐரோப்பியர்களோ உறுப்பினரா யிருந்தனர். படையின் மொத்த எண்ணிக்கை மிகுதியாக இருந்த போதிலும் விஜயநகரப்படை அக்காலத்திலிருந்த முகம்மதியரின் படைகளைவிடப் போர் வல்லமையில் குறைந்ததாயிருந்ததெனவே கருத வேண்டும். ராணுவக் கலைக் கூடங்கள் பல இருந்த போதிலும் படைஞர்கள் தகுந்த பயிற்சி பெற்றிருக்கவில்லை. மேலும், அந்தந்த வேளைகளில் போருக்குத் திரட்டப்பட்ட படைக் கூட்டத்திற்குத் தகுந்த பயிற்சி பெற இயலவில்லை. குதிரைப்படையோ வலிவற்ற தாகவே இருந்தது ; ஏனெனில் நல்ல இனக் குதிரைகள் நாட்டில் கிடைப்பதரிதாயிருந்தன. அராபியா, பாரஸீகம் ஆகிய நாடு களிலிருந்து இக்காலத்தில் குறைவாகவே குதிரைகள் வரு விக்கப்பட்டன. யானைகளைப் போரில் பயன்படுத்துவது சில வேளைகளில் கெடுதலையே விளைவித்தது. குறிப்பாகக் கைதேர்ந்த வில்லாளர்களையும் பயிற்சி பெற்ற குதிரைப் படையையும் எதிரிட்டுப் போரிடுவதில் யானைகள் தம் கூட்டத் தாருக்கே பெருந்தீங்கை விளைவித்தன. இது தவிர படையினர் தங்கிய பாசறை மிகப் பருத்ததாயிருந்தது ; சுறுசுறுப்பான வாழ்க்கை முறைக்குத் தகுந்ததாகவே இல்லை. போரில் கோட்டைகள் பெரும் பயனை அளித்தன. அக்காலப் போர் முறையில் அரண்கள் இன்றியமையாதனவாயிருந்தன. விஜயநகரப் படைகள் எதிரிகளின் கோட்டைகளை முற்றுகை இடுவதில் பெருந்தேர்ச்சி பெற்றிருந்தன. கப்பல் படையைப் பற்றி முழுவிவரம் கிடைப்பதற்கில்லை ; ஆனால், நிரந்தரமாக ஒரு கப்பற்படை நிலவப் பெற்றிருந்ததென்பதற்கு ஐயமில்லை.

அரசாட்சியில் மன்னருக்கு உதவி செய்ய ஒரு அமைச்சர் குழு நிலவியது. பொதுவாக அரசர் இக்குழுவைக் கலந்து அரசியலை நடத்திய போதிலும் எக்காரியத்திலும் இறுதி முடிவு அவர் தனிப் பொறுப்பிலே நடைபெற்றது. தலைநகரை விட்டு மன்னர் அகன்றிருந்தபோது முதல் அமைச்சரே மன் னரது ஆள்பேராக அரசியலை நடத்தினர். இளவரசர்களும்

அவரவர்கள் இயல்புக்குத் தகுந்தவாறு ஆட்சித்துறையில் அமைக்கப் பெற்றனர்.

அரசியலை நிர்வாகத்தை நடத்துவதில் பல்வேறு அரங்கங்களாக வகுக்கப்பட்டிருந்த ஒரு செயலகமும் பணியாற்றியது. நிலவரி, அரசாங்கத்தின் தனி உரிமைக்குட்பட்ட நிலத்தின் வருமானம், நிலமானியக்காரர்கள், மாவட்டத் தலைவர்கள் முதலியோர் கட்டும் கப்பம், சுங்கம், வாணிகத்தீர்வை, தொழில் வரி, தண்டப்பணம் ஆகியவை அரசாங்கத்தின் முக்கிய வருமானங்களாயிருந்தன. நிலவரியின் சுமை மிகப் பெரியதாக இருந்ததென்பதற்கு ஐயமில்லை ; ஆனால், மக்கள் வருமானத்தில் பத்திலொன்பது பங்கையும் நிலவரியாகக் கொடுத்தனரென நியூனிஸ் குறிப்பிட்டிருப்பது மிகைபடக் கூறியிருப்பதாகவே கருதவேண்டும். உண்மையில் பண்டைய வழக்கப்படி மொத்த விளைவில் ஆறிலொரு பங்கு முதல் அரைப்பங்கு வரையிலும் வசூலித்திருக்கலாம். பயிரிடும் நிலத்தை ஒழுங்காக அளந்து, அதன் தன்மையை ஒட்டி வரியைத் திட்டப்படுத்தினர். கோயில்கள், அற உதவியளிக்கும் மன்றங்கள் ஆகியவற்றின் நிலங்கள் பெரும்பாலும் இறையிலியாக அளிக்கப்பட்டிருந்தன. பொதுவாக வரிப்பளு குடியானவர்களுக்குக் கடுமையாகவே இருந்தது. இத்துடன் நிலமான்யக்காரர்களின் கொடுமைகளும் மக்களுக்குத் துயரை உண்டாக்கின. இத்தொல்லைகளைப் பொறுக்க முடியாமல் சில வேளை மக்கள் வெளிநாடுகளில் குடியேறும்படியும் நேரிட்டது.

நீதி வழங்கும் நிலையங்களைப்பற்றிய முழுவிவரம் கிடைக்கவில்லை. நாட்டில் முதன்மையான தீர்ப்பாளர் மன்னரே ; அவர்தான் உயர்தர வழக்குகளுக்குத் தீர்ப்பு அளிக்க உரிமையுடையவர். தலைநகரில் உயர்தர மன்றமொன்றில் மற்றைய வழக்குகள் முடிவு செய்யப்பட்டன. ஒவ்வொரு மாநிலத்திலும் அங்குள்ள அரசியல் தலைவரே உயர்தர முறைவர். சிறு வழக்குகள் சாதிப் பஞ்சாயத்துக்களிலும் ஊராண்மைக் குழுக்களிலும் முடிவு செய்யப்பட்டன. தண்டனைகள் கடுமையாயிருந்தனவென்றே கருத வேண்டும். முடமாக்குவதும் கழுவிலேற்றுவதும்கூட வழக்கத்திலிருந்தன.

தலைநகரில் காவலாளர்கள் திறம்பட அமைதி நிலவச் செய்தனரென வெளியூரிலிருந்து வந்த கண்ட எழுத்தாளர் கள் கூறியுள்ளனர். மற்று, பட்டணங்களில் காவல்காரர்கள் இரவில் சுற்றித் திரிந்து பராமரித்தனர். கிராமங்களில் நாட்டாண்மைக் குழுக்களின் அங்கத்தினர்களும் பாளையக் காரர்களும் காவலாளர்களாகச் சேவை செய்து அமைதி நிலவச் செய்தனர்.

தமிழகத்தில் தொன்று தொட்டே தன்னாட்சி நடத்திய ஊர் குழுக்கள், தொடர்ந்து செயலாற்றி வந்தன. தெலுங்கு, கன்னட நாடுகளிலும் வெகுகாலம் பணியாற்றி வந்த நாட்டாண்மைக் கழகங்கள் இப்பொழுதும் வழக்கத்திலிருந்தன. ஆனால், நாள்பட அரசாங்க அலுவலாளர்களின் எண்ணிக்கை யும் அதிகாரமும் ஏற்றமடையவே, கிராமங்கள்மீது அவர்க ளது மேல்பார்வையும் கூடியது. இதன் விளைவாகக் கிராமங் களின் குடியரசு முறை சற்று வலுவற்றது.

ஆட்சி வசதிக்காகப் பேரரசு மாநிலங்களாக வகுக்கப்பட் டிருந்தது. இவை சில பகுதிகளில் **ராஜ்யங்களெனவும்** வேறு சிலவற்றில் **மண்டலங்களெனவும்** அழைக்கப்பட்டு வந்தன. ஆட்சி வசதியைக் கருதி மாநிலங்களின் எல்லைகளை அவ்வப் போது அரசாங்கம் மாற்றியது. பாண்டி நாட்டில் நடை பெற்றது போல, சில இடங்களில் முன் ஆட்சி செய்திருந்த மரபிலுள்ளோரே அப்பகுதிகளில் அரசாட்சித் தலைவர்களாக அமர்த்தப்பட்டனர். வேறு பல மாவட்டங்களிலும் போரில் வல்ல நாயக்கர்களை நியமித்தனர். மாவட்டத் தலைவர்களின் செயல்களை, பேரரசை அவ்வப்போது அறியப்படுத்தும் பொருட்டு, நம்பிக்கைக்குரிய ஒற்றர்களை அரசாங்கம் நியமித் தது. அதே காலத்தில் பேரரசுத் தலைநகரில் ஒவ்வொரு நாயக் கரின் ஆட்பேராகச் சில அலுவலாளர்களும் தங்கினர்.

அரசவை பெரும் பகட்டும் ஆடம்பரமும் நிறைந்ததா யிருந்தது. அரசவையில் அமைச்சர், மானியர், புரோகிதர், கணிதர், கவிஞர், பாடகர் முதலியோர் வீற்றிருந்தனர்.

விஜய நகரத்தில் நடைபெற்ற விழாக்களைப்பற்றி அங்கு வந்த வெளிநாட்டு அறிஞர்கள் விரிவாக எழுதியுள்ளார்கள்.

ஆண்டுதோறும் குறிப்பிட்ட வேளைகளில் நடைபெற்ற ஆண்டுப் பிறப்பு, தீபாவளி, மஹாநவமி, ஹோளி விழா ஆகிய நான்கு பெரும் விழாக்களை நிக்கோலா கோண்டி விவரித்திருக்கிருர். அப்துர் ரஸாக் என்றவர் இவ்விழாக்களில் தாம் கண்ட விளையாட்டுக்கள், களியாட்டங்கள், வான வெடிகள் முதலியவற்றைப் பற்றிக் கூறியுள்ளார். இவ்விழாக்கள் யாவற்றிலும் சிறந்தது ஒன்பது நாள் நடைபெற்ற மஹாநவமி விழாவேயாகும். மாநிலத் தலைவர்கள் அரசருக்கு வரிப்பணம் கொண்டு கொடுத்ததும், வெகுமதிகள் பெற்றதும் இவ்வொன்பது நாட்களில்தான் நடைபெற்றன.

தலைநகரின் சிறப்பை வெளிநாட்டார் பலர் விரித்துரைத்துள்ளார்கள். ஏறத்தாழ அறுபது மைல் சுற்றளவுள்ள விஜய நகரம் வலிமை சான்ற அரண்களால் பாதுகாக்கப்பட்டிருந்ததென்று நிக்கோலா கோண்டி கூறுகிருர். இவ்வுலகில் இது போன்ற ஒரு நகரத்தைப் பற்றிக் கேட்டதுமில்லை, கண்டதுமில்லையென அப்துர் ரசாக் எழுதுகிருர். ஏழு அரண்கள் ஒன்றுக்குள் ஒன்ருக அந்நகரத்தைச் சுற்றி அமைந்திருந்தன. கடைகள், கம்போளங்கள், வீடுகள், தோட்டங்கள், ஏரிகள், குளங்கள் முதலியவை இடைகலந்து திகழ்ந்த நீண்ட சாலைகள் இருந்தன. போர்த்துகீசிய நாட்டு டாமினிங் கோ பேயஸ் என்றவர் விஜயநகரத் தலைநகரின் வசதிகளையும் சிறப்புக்களையும் பற்றி மிகப் புகழ்ந்து எழுதியுள்ளார்.

**பொருளாதார நிலை :** வெளிநாட்டிலிருந்து வந்து கண்டோர் எழுதி வைத்திருக்கும் விரிவுரைகளால் அந்நாளிலிருந்த தென் இந்தியாவின் சமூக நிலையையும் பொருளாதார நிலையையும் பற்றி அறிகிருேம். பேரரசுத் தலைநகரையும் அங்குள்ள வாழ்க்கையையும் பற்றி வெளிநாட்டார் விவரித்திருந்த போதிலும், அது பொதுவாகத் தென்ளுடு முழுவதிலும் நடப்பிலிருந்த வாழ்க்கையை நன்கு விளக்குகின்றது எனலாம்.

மக்களில் பெரும்பாலோரும் பயிர்த்தொழிலில்தான் ஈடுபட்டிருந்தனர். நிலம் பொதுவாக செழிப்பாகவே இருந்ததால் பயிர் நல்ல பயனளித்தது. சமவெளிகளில் பெரும்

பாலும், நெல், தினை, பருப்பு முதலியவற்றை மிகுதியாகப் பயிரிட்டனர். சில இடங்களில் நெசவுத் தொழிலுக்குப் பயன் படும் நீலம் முதலிய சாய வகைகளை உற்பத்தி செய்தனர். உள் நாட்டில் மிகுதியாகப் பருத்தி விளைவித்தனர். தென் இந்தியா முழுவதிலும் நெசவுத் தொழில் வலுவுற்றிருந்தது. ஆனால், நெசவாளர்கள் அவரவர் வீட்டில்தான் தொழிலை நடத்தி வந்தார்கள். அக்காலத்தில் ஆலைகள் ஒன்றும் அமைக்கப்படவில்லை. தென் இந்தியாவிற்கு வந்த டச்சு வணி கர்கள் சிலர் இரு துணிவகைகள் இங்குக் கிடைத்ததாகக் கூறியுள்ளார்கள். ஒன்று காலிக்கோ, மஸ்லின் முதலியவை சாயமிட்டோ இடாமலோ சாதாவாக நெய்யப்பட்டவை. மற்றொன்று காலிக்கோவிலோ மஸ்லினிலோ சித்திரங்கள் அச்சிடப்பட்டவை. பல வகை அச்சிட்ட துணிகள் கீழ் நாடு களில், குறிப்பாக ஜாவாவில், மிகத் தேவையாயிருந்தன. ஆகையால், இவை தென் இந்தியாவின் கிழக்குக் கரையிலுள்ள ஊர்களில், குறிப்பாகப் பழவேற்காடு என்னுமிடத்தில் மிகுதி யாகத் தயாரிக்கப்பட்டன. சாதாத் துணிகள் பாரஸீக நாடு, அராபியா, மேற்கு நாடுகள் முதலியவற்றிற்குத் தேவையா யிருந்ததால் இவை தென் இந்தியாவின் மேற்குக் கரையோர ஊர்களில் பெருவாரியாகத் தயாரிக்கப்பட்டன. வாரங்கல் என்னுமிடம் சமுக்காளங்களும் கம்பளங்களும் செய்வதில் தனிப்பயிற்சி பெற்றது. உலோகப் பொருள் கொண்டுள்ள கைத்தொழில்கள், குறிப்பாக நகைத்தொழில்கள், தென் இந்தியாவின் பல பகுதிகளிலும் முன்னேற்றமடைந்திருந்தன.

அக்காலத்தில் தென் இந்தியாவில் ஏறத்தாழ 300 துறைமுகங்கள் இருந்தனவெனக் கணக்கிடப்படுகிறது. 16-ஆம், 17-ஆம் நூற்றாண்டுகளில் மேற்குக் கடலோரத் தில் சௌள், கோவா, கோழிக்கோடு, கொச்சி, கொல்லம் ஆகியவை புகழ் பெற்ற துறைமுகங்களாய் விளங்கின. போர்த்துகீசியர், அராபியர், இந்தியர் இவர்களே தென் இந்தியாவின் பிற நாட்டு வர்த்தகத்தை நடத்தியவர்கள். மிளகு, இஞ்சி, இலவங்கப்பட்டை, ஏலக்காய், புளி, விலை யுயர்ந்த மாணிக்கக் கற்கள், பலவகை வைரக் கற்கள், கத்தூரி,

கற்ருழை, பிஞ்ஞானி முதலியவை இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாயின. கோதுமை, அரிசி, தினை, எள் முதலிய கூலவகைகளும் பாமினி நாட்டில் செய்யப்பட்ட நேரிய வெண்துகிலும், காலிக்கோவும் சௌள் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியாயினவென்று பார்போஸா கி. பி. 1515-இல் கூறியுள்ளார். மணங்கமழ் பொருள்கள், மருந்துச் சரக்குகள், துணி, சந்தனம், யானைப்பல் ஆகியவையும் மேல் நாடுகளுக்குச் சௌள் வழியாகச் சென்றன. மேற்குக்கரைத் துறைமுகங்கள் வழியாகப் பல பொருள்களும் இறக்குமதியாயின. தங்கம், வெள்ளி, செம்பு, பாதரசம், சாதிலிங்கம், பன்னீர், குங்குமம், மென்பட்டு வகைகள், கத்திகள் முதலியவை கோழிக்கோட்டுத் துறைமுகம் வழியாக வந்தன. கோழிக்கோட்டுக்குச் சற்று வடக்கிலிருக்கும் கண்ணனூரில் பாரஸீக நாட்டிலிருந்து குதிரைகள் இறக்குமதியாயின. கொச்சின் சைனுவிலிருந்து பட்டும், வங்காளத்திலிருந்து சர்க்கரையும், தென் இந்தியாவிற்கு வந்ததாக, சீசர் பிரடரிக் (1567) என்பவர் தெரிவிக்கிருர். கோழிக்கோடு, தர்மபட்டினம் ஆகிய மேற்குக்கரை ஊர்களில் கப்பல்கள் அக்காலத்தில் செய்யப்பட்டிருந்தன என்பது நம் கவனத்திற்குரியதாகும். கீழ்க்கரையில் மசூலிப்பட்டினம், பழவேற்காடு, மயிலாப்பூர், ஸாந்தோம், நாகப்பட்டினம், காயல் ஆகியவை சிறந்த துறைமுகங்களாயிருந்தன. கோல்கொண்டாவிலிருந்து துணிகளைத் தவிர இரும்பும் எ..குவும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாயின. பர்மாவுக்குப் பருத்தி நூல் தென் இந்தியாவிலிருந்து ஏராளமாகச் சென்றது. நீலம் முதலான எடை குறைவான பொருள்கள் பல மேற்குக்கரைத் துறைமுகங்கள் வழியாகப் பாரஸீக நாட்டிற்கு அனுப்பப்பட்டன. வடக்கில் வங்காளம் முதல் தெற்கில் இலங்கை வரை கடற்கரையோரமாகவும் வாணிகம் செழிப்புற்று வளர்ந்தது. சீசர் பிரடரிக் என்பவர் மயிலாப்பூரைச் சேர்ந்த ஸாந்தோமிற்கும் பெகுவிற்கும் இடைவிடாத வாணிகம் நடைபெற்றதெனக் கூறுகிருர். ஆனால், பொதுவாகக் கிழக்குக்கரை துறைமுகங்களில் இறக்குமதியான சரக்குகளின் எண்ணிக்கை

குறைவென்றே தெரிகிறது. சூடம், பீங்கான், இரும்பைத் தவிர மற்ற உலோகங்கள், பட்டு, வேறு சில சொகுசுப் பொருள்கள் ஆகியவைதான் இவற்றுள் முக்கியமானவை. வெளிநாட்டு வாணிகம், பவன், வெள்ளி, நாணயங்கள் மூல மாக நடைபெற்றது. ஆனால், ஒரே தன்மைத்தான நாணயங் களோ நிறையளவுகளோ நடப்பிலில்லாமல், கையாளுபவர் களுக்குத் திகைப்பைக் கொடுக்கும் பல்வேறு இனங்கள் வழக்கத்திலிருந்தன. விஜயநகரப் பேரரசுக்குள்ளே நாணய வகைகள் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்ட முறையிலிருந்தன. நிலத் தலைவர்கள் பதவி ஏற்ற உடன் புது நாணயங்களை வெளி யிட்டனர். ஆகவே ஒருநாள் நடப்பிலிருந்த நாணயம் மறுநாள் செல்லுபடியாகுமோ என்ற திகில் இருந்ததென சீசர் பிரடரிக் குறை கூறுகிறார். ஆனால் சில காலங்களில் விஜயநகரப் பேரரசு முழுவதிலும் ஒரே தன்மைத்தான நடப்பு நாணயம் அமைக்கப்பட்டிருந்ததென அறிகிறோம். அரசாங்கத் தங்க சாலை ஒன்றிருந்ததாகவும், வராஹன், கிபேகி, பணம் என்ற மூன்று இன நாணயங்கள் நடப்பிலிருந்தனவாகவும் அப்துர் ரஸாக் கூறுகிறார். 16-ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளிநாடுகளிலிருந்து வந்த வேறு சிலர் இந்தப் பொது நாணய முறை ஒழுங்காக நடைபெற்றதென அறிவிக்கின்றனர். ஆனால், அது நெடுநாள் நடப்பிலிருக்கவில்லை. விரைவில் மறுபடியும் வெவ்வேறு வகை நாணயங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் தோன்றின. ஆயினும் உள்நாட்டு வர்த்தகமும் மும்முரமாக நடந்தது. வெகு நாளாகப் பணியாற்றி வந்த வர்த்தகக் குழுக்கள் வாணிபத்தில் தொடர்ந்து ஈடுபட்டன.

**சமூக வாழ்க்கை :** சாதி வேற்றுமை வலுவாயிற்று. அன் றன்றுட சமூக வாழ்க்கை சாதியை அடிப்படையாகக்கொண்டே நடைபெற்றது. ஒரே சாதிக்குள் பல்வேறு பிரிவினைகள் தோன்றிவந்தன. கலைத்தொழிலாளர்களுக்குள் 74 வகுப்பு கள் இருந்தனவாக முதல் தேவராயரது கல்வெட்டொன்று கூறுகிறது. ஒவ்வொரு சாதி மக்கள் ஊரின் தனித்தனிப் பகுதி களில் குடி இருந்தனர். பார்ப்பனர் வாழ்ந்த அக்கிரஹாரங் கள், கைக்கோளர் தெரு, கம்மாளர் தெரு முதலியவை

இருந்தன. புலையரும் பறையரும் ஊருக்குப் புற எல்லையில் திறந்த வெளிகளிலும் வயல்களிலும் தங்கி வந்தனர். பார்ப்பனர் நிலை எப்பொழுதும் போல் உயர்ந்ததாகவே இருந்தது. மத வழிபாடுகளும், சடங்குகளும், விழாக்களும் நாளுக்கு நாள் கூடின ; சிறப்பிலும் உயர்ந்தன. மதத்தைப் பேணுவது விஜய நகர அரசின் அடிப்படைக் கொள்கையாயிருந்ததால் புரோகிதர்களுக்குத் தனிச்சிறப்பு அளிக்கப்பட்டிருந்தது. அப்துர் ரஸாக், பேயஸ், நீயூனிஸ் என்பவர் விஜய நகர மன்னர்கள் பார்ப்பனர்களுக்கு அளித்திருந்த நன்மதிப்பைப் பற்றி விரிவாக எழுதியுள்ளனர். "அரண்மனையில் எப்பொழுதும் அரசரது புரோகிதர்களாக இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் பார்ப்பனர்கள் இருப்பார்கள். ஆனல், இவர்களது நடத்தை பெருமைக்குரியதல்ல. ஏராளமான பணம் உடையவராயிருந்தாலும், காவலாளர்களின் உதைகளையும் பொருட்படுத்தாமல் அச்சமின்றி அரண்மனையை நாடிச் செல்லுபவர்,' என்று புரோகிதர்களைப் பற்றி நியூனிஸ் கூறுகிருர். இப்புரோகிதர்களில் பெரும்பாலோரும் செல்வமும் செருக்கும் உடையவர்களாயிருந்தனர். ஆனல், புத்திக் கூர்மையும் நுண்ணிய அறிவும், வரவு செலவுகணக்கு எழுதுவதில் திறமும் வாய்ந்திருந்த இப் பார்ப்பனர்கள் அரசியல் துறையிலும் பல உயர்ந்த பதவிகளைப் பெற்றுச் செயலாற்றி வந்தனர். தெலுங்கு நாட்டில் அரசியல் அலுவலாளர்களாயிருந்த பார்ப்பனர்களை நியோகிகளென அழைத்துவந்தனர். நகரில் பார்ப்பனர் புரோகிதர்களாயிருந்ததோடுகூட, விவசாயம், வர்த்தகம் முதலிய பல தொழில்களையும் பின்பற்றினர். கிராமங்களில் குடியிருந்த பார்ப்பனர்கள் பெரும்பாலோர் வேதம், சாஸ்திரம் முதலியவற்றைக் கற்பதில் ஈடுபட்டனர்.

17-ஆவது நூற்றுண்டில் பார்ப்பனருக்கு எதிர்ப்பு தலை தூக்கியது. விஜய நகர மன்னர் இராமராயர் பார்ப்பன வெறுப்புடையவராயிருந்தாரென 17-ஆவது நூற்றுண்டில் தோன்றிய **மஹீச்வர நரபதி விஜய** என்ற நூல் கூறுகின்றது. அதே நூற்றுண்டில் வாழ்ந்திருந்த வேமனுவென்ற கவிஞர் பார்ப்பனர் தற்புகழ்ச்சியில் விருப்பமுடையவர் ; அவரைவிட

எளிய புண்ணிய யாத்திரிகர் எவ்வளவோ மேல் என்று கூட முடிவு கட்டிவிட்டார். ஆனால் பார்ப்பன இனத்துக்குத் தீவிர எதிரிடை ஒன்றும் இக்காலத்தில் உருவானதாகக் கருதுவதற்கில்லை. அரசாளும் வகுப்பைச் சார்ந்த க்ஷத்திரியர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்த போதிலும் செழிப்புற்றிருந்தனர். தென் இந்தியாவில் வைசியர் தனிப்பட்ட ஒரு இனத்தவர்களாகத் திகழ்ந்தனரோ என ஐயப்படுவதற்குண்டு. தெலுங்கு நாட்டிலும் கன்னட நாட்டிலுமுள்ள கோமுட்டிகளும் தமிழகத்துப் பேரிகளும், வைசியர்களென அவரவர்களே கூறிக்கொண்டனர். வர்த்தகமே இவர்களனைவருடைய தொழில். ஆனால் வர்த்தகத்தில் இவர் மட்டுமல்ல முகம்மதியர்களும் வீரசைவர்களும்கூட ஈடுபட்டிருந்தனரென்பது கவனத்திற்குரியது.

சாதி உணர்ச்சி 16-ஆவது நூற்றாண்டு முதல் வலுப்பெற்றதெனலாம். வகுப்பு உரிமைகளையும் விருதுகளையும் பெறுவதற்குத் தீவிரப் போட்டிகள் தோன்றின. இது பிராஹ்மண செப்பிடு வித்தைக்காரர் என்று அழைக்கப்பட்ட **விப்ர விந்தோதிரி**களின் வரலாற்றிலிருந்து அறியலாம். அவர்கள் எந்தச் சாதியைச் சார்ந்தவர்களெனத் திட்டமாகத் தெரிவதற்கில்லை. ஆனால் பார்ப்பனரென்று கூறி உயர்ந்த சாதி உரிமைகளைப் பெற அவர் அரும்பாடு பட்டனர். கலைத்தொழிலாளிகளிடையே தனி உரிமைக்கு நடைபெற்ற வழக்குகளும் வலங்கை இடங்கை சாதியினர்களுக்கிடையே நெடுங்காலம் மூண்டுகொண்டிருந்த சச்சரவுகளும் தென் இந்தியா முழுவதிலும் பரவியிருந்தன. இச்சாதி வழக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கமும் பல முறை தலையிட வேண்டியதாயிற்று. வலங்கை இடங்கைச் சண்டைகள் தொடர்ந்து நடைபெற்றதாகக் கல்வெட்டுகளிலிருந்து வெளியாகின்றன. ஐந்தாவது சாதியினர் எனக் கருதப்பட்டுவந்த சண்டாளர்கள் தீண்டாதாரென நிலையில் இழிவான வாழ்க்கையை நடத்தி வந்தனர். அவரில் பெரும்பாலோரும் குடியானவர்களின் சார்பாகப் பயிர்த்தொழிலில் ஈடுபட்டனர். தக்காணத்தில் சண்டாளர்கள் பலர் இக்காலத்தில் களவு, கொள்ளை முதலிய

ஈனத் தொழில்களில் இறங்கிவிட்டனர். தமிழ் நாட்டிலும் கள்ளர், மறவர் ஆகிய வகுப்பைச் சார்ந்தவர்கள் சிலர் கொள்ளைக்காரர்களாக மாறினர். இவர்களால் பொது மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் கொஞ்சமல்ல. களவு, கொள்ளை, சண்டை, கொலை யாவும் ஆங்காங்கு நடைபெற்றன.

விஜய நகரப் பேரரசுக் காலத்தில் பல்வேறு சாதியைச் சார்ந்த தெலுங்கர்கள் தமிழ் நாட்டில் வந்து ஆங்காங்கு குடியேறினர். தெலுங்குப் பார்ப்பனர்கள், ரெட்டிகள், துன்னல் காரர்கள், சக்கிலியர்கள், வண்ணார், அம்பட்டர் முதலியோர் பலர் வந்து தமிழகத்தில் குடியேறினர். இது தென் நாட்டுச் சமூக வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியெனலாம். பொதுவாகத் தம் நாட்டில் பயிரிட்ட புஞ்சைப் பயிரைத் தமிழ்நாட்டில் பல இடத்திலும் பயிரிடத் தொடங்கினர். வந்தவர்களின் மொழி, பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் ஆகியவை தமிழகத்திலிருந்தவையோடு ஒன்று சேர்ந்தன. தமிழர்களும் ஆங்காங்கு நாளடைவில் தெலுங்கு மக்களின் சில பழக்கங்களைக் கைப்பற்றினர்.

தென் இந்தியப் பார்ப்பனர்களுக்கிடையே பழக்கத்திலிருந்த குழந்தைப் பருவ மணம், மற்ற இனத்தார்களிடத்திலும் பரவியது. அதோடு சீதனம் வழங்குதல், பணங் கொடுத்துப் பெண்ணை மணஞ்செய்தல் போன்ற தீயவழக்கங்களும் நடப்பில் வந்தன. ஆனால் அக்காலத்தில்கூட இவற்றிற்கு ஆங்காங்கு எதிர்ப்புகளும் தோன்றின. உடன்கட்டை ஏறுவது, குறிப்பாகத் தெலுங்கு நாட்டிலும் கன்னட நாட்டிலுமுள்ள சீமான்கள் குடிகளில் நடைபெற்று வந்தது. வீரசைவர்களைப் போலச் சில வகுப்பினர் மாண்ட கணவனோடு ஒன்றாக மனைவியைப் புதைக்கும் வழக்கத்தைக் கடைப்பிடித்தனர். உடன்கட்டை ஏறாதார் தலைமயிரை அகற்ற வேண்டிய நிபந்தனையும் ஏற்பட்டது. அறுதலியின் வாழ்வு துயர் நிறைந்ததாயிருந்து. குடும்ப வாழ்க்கை நடத்திய பெண்களின் நிலை ஏறத்தாழ இன்றிருப்பது போலவே காணப்பட்டது. வாழ்நாளில் பெரும் பகுதியும் சமையலறையிலேயே அவர் கழித்தனர். இது பேயிஸ் தரும் வரலாற்றிலிருந்து நன்கு புலனாகும்.

பெண்கள் மனிதருடைய இன்ப வாழ்விற்குரிய பாவைகள் என்று ஆடவர் கருதி இருந்ததாகவே தெரிகிறது. கணவன் நடத்திய சில கொடுமைகளை அந்நாள் இலக்கியங்களும் ஆங்காங்கு சித்திரிக்கின்றன. பல மனைவிகளை யுடைமை செல்வர்களுக்கிடையே மிகுதியாக வழக்கத்திலிருந்தது.

தேவரடியார்களையும் வேசிகளையும் பற்றி வெளி நாட்டிலிருந்து வந்தவர்கள் பலர் விவரமாக எழுதியுள்ளார்கள். ஆலயப் பணித்துறையைச் சார்ந்த தேவரடியார்கள் பெரும்பாலும் வேசியர்களாகவே திகழ்ந்தனர். வேசித் தொழில் நாடு முழுவதிலும், குறிப்பாக நகர்களிலும் ஓங்கி வளர்ந்திருந்ததாகத் தெரிகிறது. முகம்மதிய அரசர்களைப் போல விஜய நகர மன்னர்களும் பெரிய அந்தப்புரங்களைப் பேணி வந்தனர்.

உயர்குல குடும்பப் பெண்கள் பல்ர் கற்றறிந்த அறிஞர்களாயிருந்தனர். பெண்கள் பெரும்பாலோருக்கும் எழுத வாசிக்கத் தெரிந்திருந்தது. குமார கம்பணரின் மனைவி கங்கா தேவி **வீரகம்பராய சரிதம்** என்ற அரிய நூலை இயற்றினர்.

**இரகுநாதாப்யுதயம்** என்ற காப்பியத்தை இயற்றிய இராமபத்ராம்பாளும் புலமை சான்ற பெண்மணியென்பதற்கு ஐயமில்லை. பல்வேறு இனமான கவிதைகள் இயற்றுவதிலும், இலக்கியப் பொருள்களை எடுத்து விளக்குவதிலும் திறமை வாய்ந்த பெண்மணிகள் பலர், இரகுநாத ராயரின் அரசவையில் திகழ்ந்தனரென இராமபத்ராம்பாள் கூறியுள்ளார்கள்.

அந்நாள் உணவு முறையைப்பற்றிய சில விவரம் கிடைத்திருக்கின்றன. விஜயநகர மன்னர்கள் மீனும் இறைச்சியும் உண்டனர். பார்ப்பனர், சமணர், வீரசைவர், வெள்ளாளர் முதலியோரைத் தவிர மற்றுள்ளோர் பெரும்பாலோரும் புலால் அருந்தினர். பல்வகை விலங்குகளின் இறைச்சியையும் மக்கள் உண்டு களித்ததாகத் தெரிகிறது. கர்நாடக நாட்டிலும் தமிழ் நாட்டிலும் பார்ப்பனரைத் தவிர மற்ற இனத்தோரில் பலரும் புலால் உணவை வெகு காலத்திற்கு முன்னிருந்தே கைவிட்டிருந்ததற்குச் சான்றுகள் உண்டு. சமணமதக் கோட்பாடுகளும், பின் தோன்றிய பக்தி இயக்கமும் இம்மாற்றத்

திற்கு மூலகாரணமாயிருந்தன. பார்ப்பனரையும் மரக்கறி உண்டு வந்த மற்றவர்களையும் தவிர, மக்கள் பெரும்பாலும் கள் அருந்தினர். அக்காலத்திலும் அரிசிதான் தென் நாட்டில் முக்கிய உணவுப் பொருளாயிருந்தது. ஆனால், ஏழை மக்களும் குடியானவர்கள் பெரும்பாலோரும் சோளம், தினை முதலியவற்றையும் உண்டனர்.

நகை நட்டுகள், நறுமணப் பொருள்கள் ஆகியவற்றில் மக்களுக்கு, அதிலும் குறிப்பாகச் செல்வர்களுக்கு, மிகுந்த ஆவல் இருந்தது. ஆணும் பெண்ணும் கைக்கு வளைகள், காதுக்கு குண்டலங்கள், கழுத்துக்கு மாலைகள் முதலியவற்றையும் இன்னும் பற்பல நகைகளையும் அணிந்து வந்தனர். தங்கக் கம்பியின் உச்சியில் இரத்தினமோ, மணியோ பதிக்கப் பட்ட மூக்கு வளைகள், பல ,கல்லுகளை அமைத்துச் செய்யப் பட்ட காது வளையங்கள், தங்க மாலைகள், முத்துக்கள் பதித்த கைவளைகள் முதலியவற்றை அணிந்த நுண்ணிய விவரத்தை பார்ப்போஸா அளித்துள்ளார். மேலும் நீராடிய பின் மக்கள் சந்தனம், குங்குமம், பன்னீர், கற்பூரம் முதலிய நறுமணப் பொருள்களைப் பூசினரென்றும் பார்ப்போஸா கூறுகிறார்.

பொதுமக்களின் உடை முன்போலவே இருந்தது. குறிப்பிடக்கூடிய மாற்றமொன்றும் வந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் அரச அவையில் வீற்றிருந்தோர்களும் செல்வச் சீமான்களும் பட்டாடைகளையும், குல்லாக்கள் அல்லது தலைப் பாகைகளையும் அணிந்தனர். செருப்பைப் பொது மக்கள் பெரும்பாலோரும் பயன்படுத்தவில்லையாயினும் உயர்நிலையி லிருந்தோர்கள் பலவகை மிதியடிகளை அணிந்தனர். கோழிக் கோட்டில் தாம் கண்ட மக்களின் வாழ்க்கையைப்பற்றி பார்ப்போஸா விவரித்திருப்பது ஏறத்தாழ தென் இந்திய மக்கள் அனைவருக்கும் பொருந்துமெனப்படுகிறது. ஆணும் பெண் ணும் தலைமயிரை நீளமாக வளர்த்து அழகாகக் கட்டிவைத் திருந்தனர். ஆனால் கேரளத்தில் அக்காலத்திலேயே ஆணும் பெண்ணும் தலையின் முற்பகுதியில் தம் தலைமயிரைக் கொண்டை கட்டி வைத்தனரெனத் தெரிகின்றது. தென் இந்தி யாவின் மற்றப் பகுதிகளிலெல்லாம் மக்கள் பின் பக்கமாகவே

தலைமயிரைக் கொண்டையாகக் கட்டியிருந்தனர். பொழுது போக்கிற்காகப் பல விளையாட்டுகளிலும் விழாக்களிலும் மக்கள் பங்குகொண்டனர். வேட்டை, சூதாடல், நாடகம், தெருக்கூத்து, கோழிப் போர், ஆட்டுப் போர், குதிரைப் பந்தயம் முதலிய பல பொழுது போக்குகள் வழக்கத்திலிருந் தன. கோயில்களை ஒட்டிய விழாக்கள் குறிப்பிட்ட காலங் களில் நடைபெற்றன. இவற்றில் தாழ்த்தப்பட்ட மக்களைத் தவிர மற்றவர் பெரும்பாலோரும் ஆர்வங்கொண்டனர். விழாக்களை ஒட்டியும் பற்பல விளையாட்டுகளும் விநோதங் களும் நடைபெற்றன. நாள்தோறும் நடந்த வாழ்க்கையில் உயர்ந்த சாதிகளைச் சார்ந்தவர்களிடையே பல நோன்புகளும் மதச் சார்பான குறிப்பிட்ட நாள்களில் நல்லுணவும், விருந்து களும் நடைபெற்றன.

மக்களில் பெரும்பாலோரும் கிராமங்களிலேயே வாழ்ந்து பயிர்த்தொழிலை நடத்திவந்தனர். ஒவ்வொரு கிராமத்திலும் புரோகிதன், குடியானவன், வண்ணான், தச்சன், ஆசாரி முதலியோர் வாழ்ந்தனர். ஆனால் எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும் எல்லோருக்கும் தமது உடைமையில் நிலம் சற்றுவது இருக்கவேண்டுமென்ற பேரவா இருந்தது. உழவர், தொழிலாளர் முதலியோரின் நிலை எளியதாகவே இருந்து வந்தது. பொதுவாக நகரத்தில் செழிப்பும் செல்வமும் கொழித்தன. கிராமத்தில் எளிமையும் வறுமையும் தாண்டவ மாடின.

**மதம் :** விஜயநகர மன்னர்கள் வைணவ மதத்தைப் பின்பற்றியவர்கள். கிருஷ்ணதேவராயர், அச்சுதர், இராம ராயர், திருமலை, முதலாம் ஸ்ரீரங்கர், முதலாம் வேங்கடர் ஆகியோர் வைணவத்தை மிக்க ஆர்வத்துடன் பேணி வந்தனர். அச்சுதரும் இராமராயரும் சிதம்பரம் கோயிலில் கோவிந்தராஜ சுவாமியின் உருவச் சிலையைத் திரும்ப அமர்த்தியதாகக் கூறப்படுகின்றனர். தமது ஆசிரியராயிருந்த தாதாசாரியோடு ஒத்துழைத்து, முதலாம் வேங்கடர் வைணவத்தைத் தழைப்பித்தார். 1556-இல், இராமராயரது வேண்டுகோளுக்கு இணங்கி, சதாசிவர் ஸ்ரீபெரும்புதூரிலுள்ள ராமானுஜர்

கோயிலையும் அதைச் சார்ந்த நிலையங்களையும் போற்றுவதற்காக 31 கிராமங்களை நன்கொடையாக அளித்தார். ஆனால் விஜயநகர மன்னர்கள் மற்ற மதங்களுக்கோ இந்து மதத்தின் வேறு கொள்கைகளுக்கோ எதிர்ப்பு எதுவும் காண்பித்ததாகத் தெரியவில்லை. கிருஷ்ணதேவ ராயரையும், அச்சுதராயரையும் போலச் சிலர் சிவனையும் வழிபட்டனர். காஞ்சிபுரத்திலும் காளஹஸ்தியிலுமுள்ள சிவன் கோயில்களுக்கு அவர்கள் நன்கொடை அளித்தனர். மற்ற மதத்தைச் சார்ந்தவர்களுக்கு அவரவர் ஆசாரங்களைப் பின்பற்ற மன்னர்கள் முழுஉரிமை அளித்தனர். வெளிநாட்டிலிருந்து வந்தோர்களும் மன்னர்களின் இந்தச் சகிப்புத் தன்மையை மிகவும் பாராட்டி எழுதியுள்ளார்கள். சில விஜயநகர மன்னர்கள் முகம்மதியர்களை அவர்களது படைகளில் சேர்த்துக்கொண்டனர். அப் படையினர்களுக்குத் தம்து மத ஆசாரங்களையும் வழக்கங்களையும் பின்பற்ற முழு உரிமை அளிக்கப்பட்டது.

பேரரசின்கீழ் ஆட்சி புரிந்த சிற்றரசர்கள் பெரும்பாலோரும் வைணவராயிருந்தனர். அவர்களும் பேரரசர்களைப் போலப் பரந்த மனப்பான்மையுடையவராயிருந்தனர். ஆயினும், ஆங்காங்கு மக்களிடையே, அதிலும் குறிப்பாக மதப் போதகர்களுக்கிடையே, வைணவ, சைவப் போட்டி மும்முரமாக நடந்தது. வைணவருக்குள்ளே 13-ஆம் நூற்றாண்டு முதல் வடகலை தென்கலை என்ற பிளவு தோன்றியது.[3] தவிரவும் சிற்றின்பச் சார்புள்ள வல்லபக் கொள்கையொன்றும் இக் காலத்தில் தலைதூக்கியது.

3. இராமானுஜரைப் பின்பற்றிய வைணவர்களில் வடகலை, தென்கலை என்ற இருபிரிவினை ஏற்பட்டது. முக்கிய வேற்றுமை இறைவனிடம் சரணமடைவதற்கு உரிய வழிபற்றியதாகும். வடகலைக் கருத்து, அடியார்கள் முனைந்து ஈசன் அருளைப்பெற வேண்டுமென்பது. தென்கலையார், ஈசனை அடைக்கலமென்று அடைந்த அடியார்களை நல்வழிகாட்டி முத்திபெறச் செய்வது, இறைவன் கடமையென்று கருதுகின்றனர். தென்கலை வகுப்பினர் பெரும்பாலும் தமிழைத் தழுவினர்; வடகலையார் வடமொழியைப் பின்பற்றினர்.

ஆனால், தென் இந்திய மக்களில் பெரும்பாலோரும் சைவத்தையே தழுவினர்கள். விஜயநகரப் பேரரசில் அக்காலத்தில் மூன்று வகையினர் முக்கியமாயிருந்தனரெனத் தெரிகிறது. அவர்கள் (1) சங்கரரைப் பின்பற்றிய அத்வைதர்கள், (2) ஆகமத்தில் பற்றுடைய பாசுபதர்கள் (3) வீர சைவர்கள் அல்லது லிங்க ஆராதனைக்காரர்கள். வீரசைவம் தெலுங்கு நாட்டிலும் கன்னட நாட்டிலும் தமிழகத்தின் வட பகுதியிலும் மக்களிடையே பெருஞ் செல்வாக்கைப் பெற்றது. 16-ஆம் 17-ஆம் நூற்றாண்டுகளில் இந்தியா முழுவதிலும் சங்கராச்சாரியாருடைய அத்வைதக் கொள்கைக்குப் பெரும் ஆதரவு கிடைத்தது. தமிழ் நாட்டில் சைவ சித்தாந்தத்திற்குத் தனிச்சிறப்பு இருந்து வந்தது. வைணவர்கள், சைவர்கள், சமணர்கள், லிங்காயத்தார்கள் ஆகியோர்களுடைய மடங்கள் வாயிலாக உயர்தர மத போதனை, மெய்ப்பொருள் ஆராய்ச்சி முதலியவை ஓங்கி வளர்ந்தன. இந்துக்களில் உயர்ந்த இனத்தோர்கள் கோயில்களையும் மத ஆசாரங்களையும் மிக்க ஆர்வத்துடன் போற்றிவந்தனர். சமணம் நாளடைவில் தளர்ச்சியடைந்தது. ஆனால், தமிழகத்தில் தென்ஆர்க்காட்டில் மட்டிலும் அது முன்னிருந்த உயர்நிலையைப் பாதுகாத்து வருகின்றதெனலாம். ஆந்திர நாட்டில் புத்தமதம் மட்டுமல்ல, சமணமும் சில காலம் நடப்பிலிருந்தது. அங்கு ஏறத்தாழ கி. பி. 8-வது நூற்றாண்டு முதல் சமணர்களின் நிலை சீர்குலைந்தது. ஆயினும் வெகு நாட்களாக, விஜயநகரப் பேரரசு உயர்வு பெற்றிருந்த காலத்திலுங்கூட, சமணர்கள் ஆந்திர நாட்டிலும் இருந்து வந்ததாக அறிகிறோம். தெற்கில் சமணர் மிகச் செழிப்புற்று ஓங்கியது கன்னட நாட்டிலேயாம்.

இதற்கிடையே கிறிஸ்துவ மதமும் தென் இந்தியாவில் பரவத் தொடங்கியது. வெகு காலத்திற்கு முன்னரே கேரளத்தில் ஸிரியன் கிறிஸ்துவர்கள் குடியேறியிருந்தனர். தாமஸ் முனிவர் கிறிஸ்து பிறந்த நூற்றாண்டிலேயே கேரளத்திற்கும் அங்கிருந்து தென் இந்தியாவில் வேறு பல இடங்களுக்கும் வந்து, இறுதியாக தற்போதைய சென்னை மாநகருக்கு

அருகாமையில் உயிரிழக்க நேரிட்டதெனக் கூறுவர். இதுபற்றி வெகு காலம் பெரும் ஆராய்ச்சிகள் நடைபெற்றும், திட்டமான முடிவு கிடைக்கப் பெறவில்லை. ஆனால், கேரளத்தில் கி. பி. நான்காவது நூற்றாண்டிற்குள் ஸிரியன் கிறிஸ்துவர்கள் வாழ்ந்தனரென்பதற்குப் பல சான்றுகள் உள. கி. பி. 9-ஆவது நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் கிறிஸ்துவர்களும் யூதர்களும் மேற்கிலிருந்து கேரள நாட்டில் வர்த்தகத்தின் பொருட்டு வந்திருந்தனரென்று முன் கண்டோம். சில இந்துக்கள் கிறிஸ்துவ மதத்தில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதலாம். போர்த்துகீசியர் வந்த பின்னர் கேரளத்தில் மட்டுமல்ல, தென் இந்தியாவின் பல பகுதியிலும் சிலர் கிறிஸ்துவ மதத்திற்கு மாற்றப்பட்டனர். ஏறத்தாழ 16-ஆவது நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரான்சிஸ் ஸேவியரின் ஆர்வம் மிகுந்த முயற்சிகளால் தெற்கு முனைக் கடலோர நாட்டில் வாழ்ந்திருந்த பரவர் அனேகர் கிறிஸ்துவராயினர். ஆனால், டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் தென் இந்தியாவிற்கு வந்த பின், 17-ஆவது நூற்றாண்டில் கிறிஸ்துவர்களுக்கிடையே போட்டி தோன்றி, அவர்களுடைய முயற்சிகளுக்கு ஒரு சிறு தடங்கல் தோன்றியது.

தென் நாட்டில் இவ்விதம் பல மதங்கள் நிலவி வந்த போதிலும் இந்துப் பொது மக்களில் பெரும்பாலோரும் தொன்று தொட்டே வணங்கி வந்த கிராம தெய்வங்களையும் தேவதைகளையும் தொடர்ந்து வழிபட்டு வந்தனர். பிசாசுகளிடமிருந்து வரக்கூடிய விபத்தை அகற்றுவதற்கு இது இன்றியமையாததென்ற நம்பிக்கை வேரூன்றியிருந்தது. மிருக பலியும் இவ்வழிபாட்டில் மும்முரமாக நடைபெற்றது. அன்றியும் தெய்வ வழிபாட்டோடு சேர்ந்து கொக்கியில் ஊசலாடுவது,[4] நெருப்பு மேல் நடப்பது, நாவை அரிவாளால் வெட்டுவது போன்ற கொடிய செயல்களும் வழக்கத்திலிருந்தன. நிக்காலோ காண்டி, பார்போஸா, பீட்ரா டெல்லா வாலே, புக்கானன் ஆகிய வெளிநாட்டு அறிஞர் யாவரும், கொக்கியில் ஊசலாடுவது பற்றி விரிவாக எழுதியுள்ளனர்.

(4) Hook-swinging—செடில் குத்தல்.

கன்னட நாட்டில் காலபைரவரை வழிபடும்போது குடியானவர் தங்கள் மனைவியரது விரல்களின் நுனிப்பக்கத்தைத் துண்டித்து விடும் கொடிய செயலும் வழக்கத்திலிருந்தது. மரம், பாம்பு இவற்றை வழிபடுவது தென்னாட்டில் பல பகுதிகளிலும், குறிப்பாகக் கேரளத்தில், வெகுகாலம் பழக்கத்திலிருந்து வந்தது.

## இலக்கியம்

**சமஸ்கிருதம் :**—விஜய நகர மன்னர்களும் தெற்கில் ஆண்ட நாயக்கர்களும் அறிவைப் போற்றி வளர்ப்பதில் மிக்க ஆர்வம் கொண்டவராயிருந்தனர். எல்லா அரசவைகளிலும் சமஸ்கிருதம் நன்கு பேணப்பட்டது. இக்காலத்தில் சமஸ்கிருதத்திற்குத் தென் இந்தியா பெரும் ஆதரவு அளித்து வந்தது கவனத்துக்குரியதாகும். பேரரசர்கள் சிலர் சமஸ்கிருதத்தில் நூல்களை இயற்றினர். இரண்டாம் தேவராயரும் சாளுவ நரசிங்கரும் சமஸ்கிருதத்தில் சிறந்த கவிஞர்களாயிருந்தார்கள். புகழ் பெற்ற கிருஷ்ணதேவராயர் அரிய காப்பியங்களை இயற்றினர். அவற்றுள் **ஜாம்பாவதீ கல்யாணம், உஷா பரிணயம்** ஆகிய இரண்டுமே தற்போது கிடைப்பவை. சிற்றரசர்களில் கொண்டவீட்டு ரெட்டி குமாரகிரியும், அவருக்குப் பின் ஆட்சி புரிந்த கோமடி வேமாவும் கவின்கலைகளைப் பற்றிய நூல்களை இயற்றினார்கள். தஞ்சாவூர் இரகுநாத நாயக்கரும் இயற்கைத் திறம் வாய்ந்த ஒரு கவிஞர். அவருடைய **நளசரிதம், வால்மீகி சரிதம், கஜேந்திர மோக்ஷம்** ஆகிய காப்பியங்கள் அவரது புலமையையும் கற்பனைத் திறனையும் நன்கு துலக்குகின்றன.

அக்காலத்து அமைச்சர்கள் பலரும் சிறந்த புலவர்களாயிருந்தனர். முதலாம் புக்கரின் அமைச்சர் மாதவரும் இரண்டாம் ஹரிஹரரின் அமைச்சர் சாயனரும் அரும்பெரும் பாவலர்கள். தெற்கில் திருமலை நாயக்கரின் அமைச்சர்களில் ஒருவரான கவிஞர் நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய **நளசரித நாடகமும் சிவலீலார்ணமும்** மிகச் சிறப்புற்றவை.

மன்னர்களும் அமைச்சர்களும் இலக்கியத் துறையில் ஆர்வங்கொண்டதால் அரசவை அறிவுக் களஞ்சியமாகத் துலங்கியது. புலவர்கள் பேரளவான ஆதரவு பெற்றனர்; ஆகவே அவர்களின் இலக்கியத் தொண்டும் பெருகியது. முன்போலவே விஜயநகரப் பேரரசுக் காலத்திலும் சமஸ்கிருத இலக்கியங்கள் மதத்தையோ தத்துவ ஞானத்தையோ ஒட்டித்தான் எழுதப்பட்டு வந்தன. பக்தி மயமான பாடல்களும், புராணக் கதைகளை ஒட்டிய நூல்களும் தத்துவக் கொள்கைகள் பற்றிய விவரணங்களும் மிகுதியாகத் தோன்றின. புக்கரின் அமைச்சர் மாதவர், சங்கரரின் அத்வைத தத்துவத்தை விளக்குவதில் திறமை வாய்ந்தவர். சட்டம், இலக்கணம் ஆகிய துறைகளிலும் வல்லுநராயிருந்தார். அவர் தம்பி ஸாயணர், ரிக்வேதத்தைப்பற்றி இயற்றிய **வேதப்பிரகாசம்** என்ற புலமை சான்ற விரிவுரை, மிகப் புகழ் பெற்றது.

வைணவ மதத்தின் வடகலைப் பகுதியின் கருத்தை விரித்துரைத்த வேதாந்த தேசிகரை விஜயநகர மன்னர் விரும்பி அழைத்தார். ஆனால், அவர் ஸ்ரீரங்கத்திலேயே தங்கி சமஸ்கிருதத்திலும் தமிழிலும் பல அரிய நூல்களை இயற்றுவதில் ஈடுபட்டிருந்தார். கிருஷ்ணபெருமானின் வாழ்க்கை வரலாற்றை ஒரு காப்பியமாயமைத்த **யாதவாப்யுதமும் விசிஷ்டாத்வைதக்** கொள்கையைத் தழுவின **ஸங்கல்ப சூர்யோதயம்** என்ற தொடர் உருவான நாடகமும், அத்வைதத்தின் குறைகளை விளக்கும் **சததூஷணியும்** இப்பேரறிஞரின் சமஸ்கிருத நூல்களாகும். அகமத்நகர் நைஸாம் ஷாஹி அரசரின் தளபதி சமய நெறியைப்பற்றிய எல்லாக் கூற்றையும் ஆராய்ச்சி செய்துள்ள **நரசிம்ஹ பிறஸாதா** என்ற நூலை எழுதியுள்ளார். கிருஷ்ணதேவராயரும், அவன் பின்னோர்களும் ஆதரித்த வியாசராயர் என்பவர், அத்வைதத்தை விளக்கும் **நியாயாமிறுதத்தையும்** வேறு சில நூல்களையும் இயற்றினர். வேலூர் சின்ன பொம்ம நாயக்கரால் போற்றப்பட்ட அப்பய்யா தீக்ஷிதர் பலதிறப் பயிற்சி பெற்றவர். அவர் அத்வைதக் கொள்கையை விளக்கும் தனி நூல்கள் சிறப்புற்றவை. இவற்றுள் **பரிமளா**

எனும் நூல் ஒப்பற்றதாய் விளங்குகிறது. ஆனல், குறுகிய மதப் பற்றுடையவரல்லர் அவர்; ஆகவே சிவன், விஷ்ணு ஆகிய இரு மூர்த்திகளின் பெருமைகளையும் அவர் பாடல்களில் சிறப்பித்துள்ளார். முதலாம் வேங்கடரின் ஆசிரியர் தாதாசாரியார் ஓர் ஆர்வமுள்ள வைணவர். இவர் **சாத்வீக பிரஹ்ம வித்யா விலாஸம்** என்ற தத்துவஞான (மெய்ப்பொருள்) நூலையும், பந்தர்ப்பூர் வைணவ ஆலயத்தின் மாட்சிமைபற்றிய **பாண்டுரங்க மாகாத்மியத்தையும்** இயற்றியுள்ளார். சேவப்ப நாயக்கரின் ஆசிரியர், ஞானசிவாச்சாரியர், **சிவஞான போதத்திற்கு** விரிவுரையொன்றை சமஸ்கிருதத்தில் எழுதினர்.

இக்காலத்தில் எண்ணற்ற புராணக்கதைகளும் நாடகங்களும் தோன்றின. கிருஷ்ணதேவராயர், இரகுநாத ராயர், நீலகண்ட தீக்ஷிதர் ஆகியோர் இயற்றியுள்ள நூல்களைத் தவிர சீனிவாச தீக்ஷிதர் என்ற அக்காலப் பேரறிஞரின் இணையற்ற நூல்கள் வியப்பைத் தருகின்றன. குறைந்தது பதினெட்டு நாடகங்களையும், மற்ற அறுபது இலக்கிய நூல்களையும் இவர் எழுதியதாகக் கூறப்படுகிறது. ஆனல் இவற்றுள் சிலதான் தற்போது காணக்கிடைக்கின்றன. கொண்டவீட்டு வாமன பட்ட பாணர் இரு நாடகங்களையும் பல செய்யுட்களையும் இயற்றியுள்ளார். ஸ்ரீனிவாச தீக்ஷிதரின் புதல்வர் இராஜ சூடாமணி தீக்ஷிதர் உருவாக்கிய **ருக்மணீ கல்யாணம்** என்ற காப்பியமும், **ஆனந்த ராகவா** என்ற நாடகமும் உயர்தரமானவை.

மொழி இலக்கணம், யாப்பிலக்கணம் ஆகியவைபற்றி இக்காலம் தோன்றிய நூல்களும் சிறப்புக்குரியவை. 15-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில், கொண்டவீட்டு ரெட்டி மன்னன் கோமட்டிவேமா யாப்பிலக்கணத் தனி நூலொன்றை எழுதினர். அப்பய்ய தீக்ஷிதர் இயற்றியுள்ள அரிய நூல்களில் சில **சொற்கோப்புக் கலை** (Rhetoric, Literary Criticism), ஆகியவற்றை பற்றி எழுதப்பட்டவை. கேரளநாடு முன் போலவே இக்காலத்திலும் சமஸ்கிருத இலக்கியத்திற்குச் சிறப்பான தொண்டாற்றி வந்தது. 17-ஆவது நூற்றுண்டின்

முற்பகுதியைச் சார்ந்த நாராயண பட்டதிரி என்ற நம்பூதிரி எழுதிய **பிறக்றியா ஸர்வஸ்வம்** சமஸ்கிருத இலக்கணத்தின் ஒரு கைப்புத்தகமாகும். இது அக்காலத்தில் தோன்றிய இலக்கண நூல்களில் தலை சிறந்ததெனச் சிலர் கருதுவர்.

இசை, நாடகம் ஆகிய கவின்கலைகள், சோதிடம், மருத்துவம் ஆகிய விஞ்ஞான அறிவுத் துறைகள் பற்றித் தனி நூல்களும் தோன்றின. ஸாயணர் எழுதிய பல நூல்களில் ஒன்று மருத்துவத்தைப்பற்றியது. கொண்டவீட்டு கோமட்டி வேமர் இசை இலக்கணம், யாப்பிலக்கணம் என்ற பகுதிகளைச் சார்ந்த ஆராய்ச்சிகளை வெளியிட்டாரென முன் கண்டோம். அவருக்கு முன் ஆட்சி செய்த குமரகிரி, நாட்டியத்தைப் பற்றிய தனி நூலொன்றையும் இயற்றினர்.

16-ஆம் நூற்றூண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த கொண்ட வீட்டு லொள்ள லக்ஷமீதரர் என்ற பலதிறப் பயிற்சி வாய்ந்த புலவர், வான நூல், சோதிடம், தத்துவஞானம், சட்டம் உள்பட ஏனைய அறிவுத் துறைகளைச் சார்ந்த நூல்களை வெளியிட்டார். அவர் இயற்றியுள்ள **தெய்வஞ்ஞ விலாஸம்** பல துறைகளிலும் ஒரு அறிவுக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. அதே காலத்தைச் சார்ந்த கவிஞர் லக்ஷ்மி நாராயணு இசை பற்றிய **சங்கீத சூர்யோதயத்தை** வெளியிட்டார். சோதிடம், சிற்பம் ஆகிய இவற்றின் அறிவை வளர்ப்பதில் கேரளநாடு சிறப்பாக முயன்றது. இவ்விரு துறைகளிலும் சமஸ்கிருத நூல்கள் பல தோன்றின. 16-ஆம் நூற்றூண்டில் நாராயண நம்பூதிரி என்பார், கட்டிடக்கலை பற்றி **தந்திர ஸமுச்சயம்** என்ற அரிய நூலை உருவாக்கினர். கோழிக்கோடு மானவேதன் சக்தன் தம்புரானின் அவையில் பதினெட்டு சமஸ்கிருத கவிமணிகள் துலங்கியதாக அறிகிறோம்.

அக்காலத்தில் வரலாற்றுத் தொடர்புள்ள சில நூல்களும் வெளி வந்தன. ஆனல் அவை உண்மையை ஆராய்ந்து முடிவுக்கு வந்தவையெனக் கருதுவதற்கில்லை. ஒரு சில ஆதாரங்களை அடிப்படையாக வைத்து எழுத்தாளர்கள் தம் கற்பனைக்குத் தகுந்தவாறு அமைக்கப்பட்டவை. பொதுவாக

மன்னர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பற்றியே அவை விவரித்தன.

இவ்வகையிலுள்ள நூல்களில் இக்காலத்தில் முதலில் தோன்றியது குமார கம்பணனின் அரசி கங்காதேவி இயற்றிய **மதுரா விஜயம்** ஆகும். முன்னாள் முகம்மதியர்கள் தமிழ் நாட்டைத் தாக்கி நடத்திய அட்டூழியங்களைச் செய்யுள் வடிவாக உரைத்திருக்கிறார்கள். அது உணர்ச்சி ததும்பும் விரிவுரை யென்பதற்கு ஐயமில்லை. 15-ஆவது நூற்றாண்டின் தொடக்கத்தில் வாமன பட்டன், தனது ஆதரவாளரான கோமட்டி வேமாவின் வாழ்க்கை வரலாற்றை அழகிய உரைநடையில் எழுதியுள்ளார். அச்சுதராயரின் அவைப் புலவர் வட ஆர்க்காட்டில் இயற்கைத் திறமையுள்ள ஒரு குலத்தில் பிறந்த மூன்றும் இராஜநாத திண்டிமா என்றவர். **பாகவத சம்புவை** இயற்றியதோடு மன்னரின் வரலாற்றைச் சித்திரிக்கும் **அச்சுதராயப் யுதயத்தையும்** இவர் உருவாக்கினார். அச்சுதராயரின் அவையைச் சார்ந்த திருமலாம்பாள் அச்சுதர்க்கும் வரதாம்பிகாவுக்கும் நடைபெற்ற திருமணத்தை விவரிக்கும் **வரதாம்பிக பரிணயம்** என்ற காப்பியத்தை இயற்றினார்.

ஆகவே விஜயநகர காலத்தில் தென்னாட்டில் சமஸ்கிருத இலக்கியம் ஓங்கி வளர்ந்தது. மதம், தத்துவஞானம் இவை பற்றிய நூல்கள், பக்திமயமான பாடல்கள், புராணக்கதைகளை ஒட்டிய கவிதைகள், நாடகங்கள், அழகுக்கலை பற்றிய தனி நூல்கள், வரலாற்றுமுறையிலுள்ள விரிவுரைகள் இவை யாவும் தோன்றி சமஸ்கிருத இலக்கியத்தை வளமூட்டியதென்பது மிகையாது.

**கன்னடம்:** கன்னட இலக்கிய வளர்ச்சிக்கு முன்னாளில் பேருதவி அளித்தவர் சமணர்களே. விஜய நகர காலத்திலுங் கூட அவர்கள் ஒருவாறு கன்னட மொழியைப் பேணி வந்தனர். ஆனால் உயர்நிலையை அடைந்திருந்த வீரசைவர்கள் தங்கள் கொள்கைகளைக் கன்னட மொழிவாயிலாகவே பரப்பினார்கள். பேரரசர்கள் ஆதரித்து வந்திருந்த வைணவப் புலவர்களும் பல இலக்கிய நூல்களை இயற்றினர்.

இரண்டாம் ஹரிஹரர், முதலாம் தேவராயர் ஆகிய இவ்விரண்டு மன்னர்களுடைய அமைச்சர்களும் ஆதரித்த மதுரா எனும் கவிஞர் 14-ஆம் நூற்றூண்டில் தோன்றிய சமணப் புலவர்களில் மிகச் சிறந்தவர். 15-ஆம் தீர்த்தங்கரைப்பற்றி **தாமனுத புராணமும்** சிரவணபெல் கோளாவிலுள்ள கோமதேசுவரரைப் பற்றிய ஒரு சிறு கவிதையையும் இவர் இயற்றினர். 14-ஆம் நூற்றூண்டின் இறுதியில் அயதாவரம் என்றவர் "மூன்று ரத்தினங்கள்" அல்லது சமண மதத்தின் அடிப்படைக் கருத்துக்களை விளக்கும் **ரத்நகரண்டகா** எனும் சம்பு காப்பியத்தை உருவாக்கினர்.

15-ஆம் நூற்றூண்டில் சமணர் இயற்றிய நூல்கள் எண்ணிக்கையிலும் தன்மையிலும் வளர்ச்சி பெற்றன. விருத்த விலாஸர், சமஸ்கிருத நூலைப் பின்பற்றி தர்ம பரிக்ஷையைக் கன்னடத்தில் இயற்றினர். சமணக் கொள்கைகளை விளக்கும் பொருட்டு **சாஸ்திரசாரம்** என்ற கன்னட நூலையும் எழுதினர். ஜீவந்தர ராஜாவின் வாழ்க்கையைச் சித்திரித்துப் பல புலவர்கள், தொடர் உருவகக் கதையாகவும், அறிவு கற்பிக்கும் கவிதைகளாகவும் அமைத்தனர்.

விஜய நகரப் பேரரசின் வட பகுதியில் சமணம் ஊக்கமாகவே இருந்து வந்தது. 15-ஆம் நூற்றூண்டிலும் அங்கு வாழ்ந்த சமணர்கள் சில நூல்களை இயற்றினர்கள். 1553-இல், அபினவவாதி வித்யானந்தர் கன்னடக் கவிதைகளைத் திரட்டி **காவிய ஸார** என்ற தொகை நூலை உருவாக்கினர். சமணக் கொள்கையைப் பின்பற்றி அமைக்கப்பெற்ற பாரதத்தைச் சாளுவர் ஏறத்தாழ 1550-இல் வெளியிட்டார். 16-ஆவது நூற்றூண்டில் கவிஞர் ரத்னுகர வர்ணி, **பரதேசுவர சரிதம்** என்ற தமது நூலில் பரதச்சக்கரவர்த்தி சமணமுனிவராக மாறின கதையை அழகாக அமைத்துள்ளார். இப்புலவர் இயற்றிய மற்றொரு நூலாகிய **அபராஜித சதகம்** சமணக் கொள்கைகளையும் நீதிகளையும் விரித்துரைக்கின்றது. நேமண்ணு எழுதிய **ஞானபாஸ்கர சரிதே** வெறும் ஆசாரங்களையும் சடங்குகளையும்விட ஆழ்ந்த சிந்தனையும் படிப்புமே மேலானவை என்று வற்புறுத்துகின்றது.

விஜய நகரப் பேரரசுக் காலத்தில் மிக்க ஆர்வத்தோடு இயற்றப்பட்டவை வீர சைவர்களின் நூல்களே. இக்காலத்தில் முதன் முதலாகத் தோன்றிய கன்னடக் கவிஞர் பீம கவி, **பஸவ புராணத்தை** மொழி பெயர்த்தார். இந்நூலில் வீர சைவத்தைத் தோற்றுவித்த பஸவர், சிவபெருமானின் ஊர்தி, நந்தியின் பிறவியெடுத்திருந்ததாகக் கூறுகிறார். இரண்டாம் தேவராயர் காலத்தில் பல வீரசைவப் புலவர்கள் தோன்றினர். அவர்களுள் லக்ஷ்மண தண்டநாதர் வீரசைவக் கொள்கையின் அடிப்படை நெறியை நுணுகி ஆராய்ந்து விளக்கும் **சிவதத்துவ சிந்தாமணி**யை இயற்றினர். பஸவரின் துணை உழைப்பாளியும் வீரசைவக் கொள்கையின் பெரும் தலைவருமான பிரபு தேவரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் **பிரபுலிங்க லீலா** என்ற காப்பியத்தைக் கவிஞர் சாமரஸர் இயற்றினர். இக் காப்பியத்தைப் புலவரனைவரும் போற்றினர். தேவராயர் இக்கவிஞர் பெருமானுக்கு நன் மதிப்பளித்தது மன்றி, தாமே வீரசைவத்தைப் பின்பற்றினர். குரு பாஸவர் என்ற அறிஞர், ஆசிரியருக்கும் மாணவனுக்கும் உரையாடல் என்ற முறையில் வீரசைவ நெறியைத் துலக்கும் ஏழு கவிதைகளைச் சமைத்தார். இரண்டாம் தேவராயர் காலத்தில் 101 வீரசைவத் திருத் தொண்டர்கள் தமது கோட்பாட்டை நாடெங்கும் பரப்புவதில் ஈடுபட்டனர். இவருள் சிலர் வீரசைவக் கருத்துக்களை **வசனங்களாகவும்,** சிலர் **செய்யுட்களாகவும்** உருவாக்கினர்கள். தேவராயரின் அரசவையில் வைணவருக்கும் வீர சைவர்களுக்கும் தீவிரப் போட்டி நடைபெற்றது. வீரசைவப் புலவர் அதிரிஸ்யா, சிவனடியார்கள் வரலாற்றைத் தேவராயருக்கு எடுத்து விளக்கும் பொருட்டு **பிரௌடராய சரிதம்** என்ற நூலை இயற்றினர். வைணவருடைய பாரதக் கதை தேவராயர் மனத்தை மாற்றிவிடக் கூடாதென்ற நோக்கம்தான் இந்நூலை எழுதத் தூண்டியது. 15-ஆவது நூற்றாண்டின் இறுதியில் எழுநூறு வசனங்களடங்கிய **ஷட்ஸ்தல ஞானமிறுதம்** என்ற உரைநடை நூலைச் சமைத்தார்.

நிஜகுண சிவயோகி கன்னட மொழியில் பெரும் தேர்ச்சி பெற்ற எழுத்தாளர். இவர் பல வகைச் செய்யுட்களையும்

பண்புமிக்க உரைநடை நூல்களையும் ஆக்கினுர். பேரின்பம் பெற வழிகாட்டும் **சிவயோக பிறதீபிகா** என்ற நூலின் விரிவுரையும், வீர சைவக் கதைகளையும் கருத்துக்களையும் தொகுத்தமைத்த **விவேக சிந்தாமணி**யும் நிஜகுண சிவயோகியார் இயற்றிய நூல்களில் மிகப் புகழ்பெற்றவையாவன. சமஸ்கிருத மொழியில் தோன்றியிருந்த கருத்துக்களைக் கன்னடத்தில் ஆக்கியமைத்ததுதான் இவர் செய்த அரும்பெரும் சேவை. சிறப்பாக இவருடைய **விவேகசிந்தாமணி**யானது, வீரசைவ நூல்களில் தோன்றியுள்ள சமஸ்கிருதச் சொற்களைத் தொகுத்து அவற்றின் பொருள்களையும் விளக்கி ஒரு இலக்கியக் களஞ்சியமாகத் துலங்குகின்றது.

16-ஆம் நூற்றுண்டில் தோன்றிய மற்றப் புலவர்களில் வீரபத்ர ராஜா ஒருவர். வீரசைவக் கோட்பாட்டின் உட்கருத்தையும் ஒழுக்க முறைகளையும் விளக்குகின்ற ஐந்து சதகங்களை இவர் உருவாக்கினுர். கிருஷ்ணதேவராயர் காலத்தில் வாழ்ந்த மல்லனுர்யா புலமை சான்ற பெரியார். சமஸ்கிருதம், தமிழ், கன்னடம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சியடைந்தவர். அவர் இயற்றிய **வீரசைவ அமிர்தம்** சிவபெருமானின் இருபத்தைந்து திருவிளையாடல்களையும் சிவனடியார்களின் அருஞ்செயல்களையும் விரித்துரைக்கின்றது. ஐந்து எழுத்துக்களடங்கிய சைவ மந்திரத்தின் மாண்பை அவரது **சத்தியேந்திர சோளகதை** விளக்கிக் கூறுகின்றது. திருஞானசம்பந்தரின் பாடல்களையொத்து உள்ளத்தை அள்ளும் செய்யுட்களாக அமைந்திருப்பதால், **மல்லனுர்யாபாவ சிந்தரத்ஞ** என்றும் இந்நூலுக்கு ஒரு பெயருண்டு. ஸர்வஞ்ஞமூர்த்தி என்ற ஆர்வம் மிகுந்த புரட்சி எழுத்தாளர் 16-ஆவது நூற்றுண்டில் தோன்றியவர். இவர் இயற்றியுள்ள **ஸர்வஞனபதகளு**வில், சாதி, உருவ வணக்கம், புண்ணிய பயணம், ஆசாரச் சடங்குகள் முதலிய பழக்கவழக்கங்களைத் தீவிரமாகக் கண்டித்தார்.

விஜய நகர காலத்தில் சமணத்தையும் வீர சைவத்தையும் போல வைணவமும் இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கமளித்தது.

உண்மையில், வீர சைவர்களின் தாக்குதல்தான் வைணவர்களுக்குப் பெரும் ஆர்வம் தோன்றுதற்குத் தூண்டுகோலாயிருந்தது. இவ்வார்வத்தின் பயன் இலக்கியத்துறையில் காணப்பட்டது. பல சமஸ்கிருத நூல்கள் கன்னடத்தில் மொழிபெயர்க்கப் பெற்றன. இரண்டாம் தேவராயர் காலத்தில் நாரணப்பா என்றவர் மாபாரதத்தின் பத்துப் பர்வங்களை முதலில் மொழி பெயர்த்திருந்தார். 1510-இல் கிருஷ்ண தேவரின் ஆதரவு பெற்றிருந்த புலவர் திம்மண்ணு மற்றைய பர்வங்களையும் மொழி பெயர்த்தார். இதே காலத்தில் குமார வால்மீகி என்ற சிறப்புப் பெயரைத் தாமே அணிந்துகொண்ட நரஹரி, இராமாயணத்தைக் கன்னட மொழியில் அமைத்தார். கிருஷ்ண தேவரது காலத்தில் வாழ்ந்த சாடுவிட்டலநாதர் **பாகவதத்தை** மொழி பெயர்த்தார். 16-ஆவது நூற்றூண்டில் தோன்றிய கன்னட மொழி பெயர்ப்புக்களும் நூல்களும் இக்காலத்திற்குரிய கன்னட இலக்கிய முறைக்கு வழிகாட்டினவெனக் கருதலாம்.

பக்தி மயமான பாடல்களில் கன்னட மக்களுக்கு மிகுந்த ஆற்றலிருந்தது. 16-ஆம் நூற்றூண்டின் முற்பகுதி முதல் இப்பாடல்கள் பெருவழக்கில் வந்தன; அச்சுதராயர் காலத்தில் விஜய நகரத்திற்கு எழுந்தருளிய புரந்தரதாஸர், உள்ளத்தை உருக்கும் பாடல்களைப் பாடியோரில் முதன்மை பெற்றவர். இதே காலத்தில் கனகதாஸ் என்ற அடியாரும் விஷ்ணுவைப் போற்றி அன்பு ததும்பும் பாட்டுக்களை இயற்றினர். கிருஷ்ணனைப்பற்றிய கதைகளடங்கிய **மோகன தரங்கணி** என்ற கவிதையையும் தொகுத்தார். எளிய நடையில் எழுதப்பட்ட இவரது **நள சரித**மும் ஒழுக்க முறைகளை விரித்துரைக்கும் **ஹரிபக்திஸாரா**வும் சிறப்பு வாய்ந்தவை. கேழ்வரகின் குணங்களைப்பற்றி **ராமதான்ய சரிதை** என்ற இவர் எழுதிய கவிதை கவனத்தைக் கவரக்கூடியது. சிறுகதைகளும் இக்காலத்தில் வழக்கில் வரத்தொடங்கின. ஆயினும் பொதுவாக 16-ஆம் நூற்றூண்டில் மிகச் சிறந்த கவிஞர்கள் கன்னடத்தில் தோன்றவில்லையென்றே கூற வேண்டும்.

பதினேழாம் நூற்றூண்டின் தொடக்கத்தில் **கர்ஞடக சப்தானு சாஸனம்** என்ற இலக்கண நூலைப் பட்டாகலங்க தேவர் என்பவர் தொகுத்தார். மதத்தைப் பற்றிய நூல்கள் தொடர்ந்து இயற்றப்பட்டு வந்தன. ஏறத்தாழ 1614-இல் பஞ்சபாணர் எழுதிய **புஜபலிசரித்ரா** சிரவண பெல் கோளாவில் கோமதப் பிரதிமை அமைக்கப்பட்டதைப் பற்றி விவரிக்கின்றது. கார்கலாவில் அது போல கோமதப் பிரதிமை 1646-இல் திரும்பவும் அமைத்தபோது கவிஞர் சந்திரமா என்றவர் இரு பிரதிமைகளையும் பற்றிக் **கார்கலகோமதேசுவர சரித்திரா** என்னும் சிறந்த கவிதையை உருவாக்கிஞர்.

மொத்தத்தில் விஜயநகரப் பேரரசுக் காலத்தில் கன்னட இலக்கியம் வளர்ச்சியடைந்ததெனலாம். ஆனல், தோன்றிய நூல்களின் பண்பு மிகச் சிறந்ததெனக் கருத முடியாது. மொழி பெயர்ப்புக்கள், மற்ற மொழி நூல்களைப் பின்பற்றி இயற்றப்பட்டவைகள், மதக் கொள்கைகளை விரித்துரைக்கும் நூல்கள் ஆகியவைகளே மிகுதியாக வெளிவந்தன. இலக்கணம், யாப்பிலக்கணம், நாட்டு வரலாறு, சமூக வரலாறு ஆகியவை பற்றிய நூல்கள் மிகக் குறைவாகவே தோன்றின. **கர்நாடக சப்தானு சாஸனம்** என்னும் இலக்கணத்தில்கூட சூத்திரங்களும் அவற்றின் பொருள்களும் சமஸ்கிருதத்திலே இயற்றப்பட்டிருந்தன.

**தெலுங்கு :** மன்னர்களின் ஆதரவும் மக்களின் நாட்டுப் பற்றும் தெலுங்கு இலக்கிய வளர்ச்சிக்கு உரம் அளித்தன. உண்மையில் விஜயநகரப் பேரரசுக் காலத்தில் தெலுங்கு மொழியின் மறுமலர்ச்சி தோன்றியதெனலாம். ஆனல் இம் மறுமலர்ச்சியின் முழுப்பயன் 16 ஆவது நூற்றூண்டில்தான் காணப்பட்டது. அதற்கு முற்காலங்களில் தெலுங்கு நூல்கள் பெரும்பாலும் சமஸ்கிருத இலக்கியத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவையோ, மாற்றி அமைக்கப்பட்டவையோ ஆகத்தான் இருந்தன. ஆனல், அந்த முற்கால இலக்கியப் போக்கும் பயனளிக்காமல் போகவில்லை. ஏனெனில் கருத்துக்கள் பிறமொழியிலிருந்து பெயர்க்கப்பட்ட போதிலும் அவை

தெலுங்கிலேயே வெளியிடப்பட்டதனுல் தெலுங்கு மொழியின் விரிவுக்கு அது வளமளித்தது. இவ்விதம் தெலுங்கின் வளர்ச்சிக்கு அடிகோலியவர்களுள் சிறந்தவர்கள் 14-ஆவது நூற்ருண்டில் கொண்டவீட்டு ரெட்டி மன்னர்களால் போற்றப் பட்டு ஆதரிக்கப்பெற்ற ஏர்ரப்பிரகதரும் ஸ்ரீநாதரும் ஆவர். முன்னர் நன்னயபட்டரும் திக்கணரும் தொடங்கியிருந்த **மாபாரத** மொழிபெயர்ப்பை முடித்துவைத்த பெரும்புகழ் ஏர்ரப்பிரகதரைச் சார்ந்தது. படிப்போர் மனத்தில் பதிகின்ற ஊக்கமான இலக்கிய நடையை அவர் பின்பற்றிஞர். அவரது மொழிபெயர்ப்பு முதலில் நன்னய்யாவின் நடைக்கு ஒப்பிடக் கூடியதாயிருந்தது. ஆனல் முடிவில் திக்கணரின் நடையை எய்தியதெனக் கூறப்படுகிறது. அவர் இயற்றியுள்ள மற்ற நூல்களில் **லக்ஷ்மி நரசிங்க புராணமும், ராமாயணமும்** முக்கிய மானவை. அவரது **ராமாயணம்** தற்போது கிடைப்பதற்கில்லை. மாபாரத நூலின் இறுதிப் பகுதியில், போருக்குப் பின் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறும் **ஹரிவம்சத்தை** அவர் மொழி பெயர்த்தார்.

தெலுங்கிலும் சமஸ்கிருதத்திலும் புலமை சான்ற ஸ்ரீநாதர் (1365-1440), ஆர்வமும் பண்பும் ஒருங்கே அமைந்த கவிதைகள் பலவற்றைத் தெலுங்கில் இயற்றினர். அவர் தெலுங்கில் எழுதிய **நைஷதம்** ஒரு மொழி பெயர்ப்பேயாயினும் பல பகுதிகளில் முதலில் ஹர்ஷர் சமஸ்கிருதத்தில் உருவாக்கி யிருந்த காப்பியத்தைவிட மேம்பாடுற்றதாய்க் காணப் படுகிறது. ஆகவே ஸ்ரீநாதரின் **நைஷதம்** தெலுங்கு இலக்கியத் திலுள்ள ஐம்பெருங்காப்பியங்களில் இடம் பெற்றுவிட்டது. தெலுங்குக் கவிஞர்களுக்குள் தலை சிறந்தவர் இவரேயென்பது சிலர் கூற்று. இவர் இயற்றிய தெரு நாடகம் தெருக்கூத்து பல்வேறு சாதிகளைச் சார்ந்த மக்களது பழக்க வழக்கங்களை விரித்துரைக்கின்றபடியால் இது சமூக வரலாற்றிற்கு மிக்க பயனளிக்கும் ஒரு நூலாகும். ஏழு காண்டங்களடங்கிய அவரது **ஹரவிலாசம்,** சிவபெருமானின் பெருமையையும் அவரது அரிய செயல்களையும் விளக்கிக் கூறுகின்றது. ஸ்ரீநாதர் தம் நூல்கள் வாயிலாக ஒரு தனிப்பட்ட மொழி

நடையை உருவாக்கிக்கொண்டாரென்பது கவனத்திற்குரியது; பின்வந்த புலவர்கள் பலர் இவரது நடையைப் பின் பற்றினூர்கள்.

இக்கால இலக்கிய வளர்ச்சிக்கு உதவி புரிந்த மற்ருெரு கவிஞர் போதனர் (1400-75) என்றவர். ஆனல், இவர் கவிதைகள் புலமை சான்ற நுண்ணறிவினல் தோன்றியவை களல்ல ; மனவெழுச்சியாலும் உணர்ச்சிப் பெருக்காலும் பிறந்தவையேயாகும். இலக்கணப் பண்பை ஆங்காங்கு புறக்கணித்திருந்த . போதிலும், இவரது கவிதைகள் உள்ளத்தைக் கவரும் தன்மையுடையவை என்பதற்கு ஐயமில்லை. இவர் மொழி பெயர்த்த **பாகவதம்** எளிய நடையும் சிறந்த உணர்ச்சியும் அமைந்த அரிய நூல். ஆகவே, தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்ட இராமாயணத்தையும் மாபாரதத்தையும்விட இது பொது மக்கள் விருப்பத்திற்கு ஏற்றதாயிருப்பது விந்தையல்ல. ஒதுங்கி வாழும் மனப் பான்மை வாய்ந்த போதனர், எக்காலத்திலும் அரசவையை நாடவில்லை, ஆதலால் கடைசி வரை ஏழையாகவே உயிர் வாழ்ந்தார். சிவபெருமானின் பெருமையைப் பாடியுள்ள **வீரபத்திர விஜயம்** ஒருவேளை இவரே இயற்றியிருக்கலா மென்பது சிலர் கூற்று.

பழைய கவிஞர்கள் முறையை 15-ஆம் நூற்றுண்டில் பின் பற்றினேரில் பிண விரபத்ரர் (1450-80) என்பவர் சாளுவ நரசிங்கரால் ஆதரிக்கப்பெற்றவர். இவர் நூல்களில் **ஜைமினி பாரதமும்,** அதிலும் மிக்க புகழ் பெற்ற **சிருங்கார சாகுந்தளமும்** குறிப்பிடத் தக்கவை. 15-ஆம் நூற்றுண்டின் முடிவோடு பிறமொழி நூல்களை மொழி பெயர்ப்பது குறைந்தது. வேற்று மொழிகளிலுள்ள கருத்துக்களைத் தெலுங்கில் அமைக்கும் வழக்கமும் குறைந்ததெனலாம். சொந்தக் கற்பனையில் தோன்றிய நூல்களையே மக்கள் விரும்பினர் ; அடுத்தபடியாக, கருத்தில்லாவிடிலும் இலக்கியப் பண்பிலாவது தனிப்பட்டு உருவாக்கின நூல்களை மக்கள் நாடினர். ஆகவே இவ்வித நோக்கங்களைச் சார்ந்து 16-ஆவது நூற்றுண்டில் **பிரபந்தம்** என்ற புதுமாதிரியான கவிதை தோன்றியது. பிரபந்தங்கள்

பல்வேறு இனங்களாகப் பிரிந்தனவாயினும் மிகுதியாக வழக்கத்திலிருந்த இனம் ஒரு தலைவன், தலைவி கதையைச் சில விரிவுரைகளுடன் அமைக்கும் கவிதைத் தொடர்தான். **உத்பாத்ய பிரபந்தம்** எனப்பட்ட வகையில் கருத்து முழுவதையும் ஆக்கியோனின் சொந்தமாகத் தோற்றுவிப்பதாகும். **உத்பாத்ய பிரபந்தங்கள்** இயற்றியவருள் விஜய நகர காலத்தில் மல்லண்ணு, ருத்ரய்யா, சூரண்ணு இம்மூவரும் புகழ் பெற்றவர்கள். மல்லண்ணு, **ராஜசேகர சரித்திரமு** என்ற நூலை எளிய நடையில் பண்பு சான்ற முறையில் அமைத்தார். ஆயினும் அவரது இலக்கிய நடையில் சில குறைகள் காணப்பட்டன. நெல்லூர் மாநிலத்தைச் சார்ந்த பொற்கொல்லர் ருத்ரய்யா என்பார் ஒரு திறமையான கவிஞர். **நிரங்கு சோபாக்யானம்** என்ற அவர் இயற்றிய பிரபந்தம் மிகச் சிறந்தது. அவர் தமது நூலில் காதலைக் கையாண்டிருப்பது பழமைக்குச் சற்று முரண்பட்டதாயிருப்பினும், அவரது இலக்கிய முறையின் மேம்பாட்டை யாவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். உத்பாத்ய கவிஞர்களில் மிகச் சிறப்புப் பெற்றவர், பிங்களி சூரண்ணு என்றவர். நந்தியா ஆட்சித் தலைவராயிருந்த கிருஷ்ண ராஜனுல் ஆதரிக்கப்பட்ட பிங்களி சூரண்ணுவின் தலைசிறந்த நூல்கள், **பிரபாவதி பிரத்யும்னமும், கலாபூர்ணோதயமுமாகும்.** புதுக் கருத்துக்களைத் தோற்றுவிக்கும் கற்பனைத் திறம் வாய்ந்த சூரண்ணு கதையுறுப்புக்களுக்கு ஆற்றலும் உணர்ச்சியும் அளித்திருக்கிருர். **பிராபவதி பிரத்யும்னம்,** கிருஷ்ண பெருமானின் புதல்வன் பிரத்யுமனன், பேரரசர் வஜ்ரநாபரை அடக்கி அவர் மகளை மணம் செய்ததாகிய புராணக் கதையை நாடகமாகச் சித்திரிக்கிறது. **கலாபூர்ணோதயமு** என்ற காப்பியம், பிரம்ம தேவர் தமது மனைவி ஸரஸ்வதி தேவியாரது கிளியிடம் சொல்லும் கதையைக் கையாளுகின்றது. அக் கதையின் எல்லா உறுப்புக்களும் உண்மையில் ஸரஸ்வதிக்கே பொருத்தமாயிருப்பது மிகவும் வியத்தற்குரியது. திறம்பட இயற்றப்பட்டிருப்பதால் கதை, முடிவு வரையில் மிக்க கவர்ச்சியுடையதாகத் திகழ்கின்றது. அக்காலத்துச் சிறந்த கவிஞர்களில் சூரண்ணு ஒருவரென்பதற்கு ஐயமில்லை.

வேறொரு வகைப் பிரபந்தம் **மிஸ்ரபந்தா** எனப்பட்டது. இவ்வகையில், கதையானது இதிகாசத்திலோ அல்லது புராணத்திலோ இருந்து பெற்று, ஆக்கியோனின் சொந்த மாக உருவாக்கின சில உறுப்புக்களோடு கலந்து இயற்றப் பட்டது. 16-ஆவது நூற்றாண்டில் மிஸ்ரபந்தாவிற்குச் சிறந்த செல்வாக்கு ஏற்பட்டது. கிருஷ்ணதேவராயரின் அரசவைப் புலவருள் ஒருவராகிய நந்தி திம்மண்ணா **பாரிஜாதாபஹரணம்** என்ற மிஸ்ரபந்த பிரபந்தத்தைச் சமைத்தார். அது கிருஷ்ண பெருமான் தேவருலகிலிருந்து பாரிஜாத மலரைக் கொண்டு வந்த கதையைச் சித்திரிக்கிறது. கதையின் உட்பிரிவுகளைத் திறம்பட இப்பிரபந்தம் விவரிக்கின்றது. மேலும், காப்பியம் முழுவதுமே இனிய நடையில் அமைக்கப்பட்டுளது. ஆயினும் அக்கால மிஸ்ரபந்தக் கவிஞர்களில் இணையற்றவர் அல்லசானி பெத்தண்ணாவென்பதற்கு ஐயமில்லை. இவர் கிருஷ்ண தேவராயரது அரச அவையில் தலைசிறந்தவர்; **ஆந்திர கவிதாபிதாமகன்** என்ற பட்டத்தை மன்னர் அவருக்கு அளித்தார். **மார்க்கண்டேய புராணக்** கதையைத் தழுவி இயற்றியுள்ள இவரது **மனுசரிதா** என்ற காப்பியம் மிக நேர்த்தியாக அமைந்துளது. சமஸ்கிருதச் சொற்களையும் தெலுங்குச் சொற்களையும் திறம்பட இணைத்துக் கையாளும் இவரது பண்பு மற்றைய புலவர்களுக்கு வழிகாட்டியாகத் துலங்கியதெனலாம்.

தெலுங்கில் சிறந்த கவிஞரும் பிரபந்தங்களை ஆர்வத்துடன் ஆதரித்தவருமாகிய கிருஷ்ணதேவராயர் இலக்கிய வளர்ச்சிக்கு உரனளிக்கும் சூழ்நிலையை அமைத்தார். இவரே **ஆமுக்த மால்யதா**வென்ற பிரபந்தத்தை இயற்றினார். மதுரை மன்னரையும், தான் வளர்த்த மகள் ஆண்டாளையும் வைணவ மதத்திற்கு மாற்றிய விஷ்ணுசித்தரென்ற பெரியாழ்வாரின் வரலாற்றை **ஆமுக்த மால்யதா** சித்திரிக்கின்றது. கிருஷ்ண தேவராயரின் இலக்கிய நடை சற்று சிக்கலாயிருந்த போதிலும் இயற்கையை விரித்துரைப்பதில் அவர் தேர்ச்சி பெற்றிருந் தார். சந்திரன், புலர்காலை ஆகியவற்றின் அழகை உணர்ச்சி யுடன் சித்திரித்திருக்கிறார்.

எண்ணிறந்த கவிஞர்களும் புலவர்களும் கிருஷ்ண தேவ ராயரின் அவையை அணி செய்தனர். இவருள் மிகச்சிறந்தவர் **'அஷ்டதிக்கஜர்கள்'** என்ற பெயர் பெற்றவர்களாகும். இவ்வெண்பேராயத்தில் பெத்தண்ணு, சூரண்ணு, மல்லண்ணு, திம்மண்ணு என்ற முன் குறிப்பிட்ட நால்வரைத் தவிர ராமபத்ரர், தூர்ஜடி, ராமராஜ பூஷணர், தெனுலீ ராம கிருஷ்ணர் ஆகியோர் உட்பட்டிருந்ததாகச் சிலர் கருதுகின்ற னர். கிருஷ்ண தேவரின் விருப்பப்படி ராமபத்ரர் பல புராணக் கதைகளைச் சுருக்கி **சகல கதாஸார ஸங்கிருஹா** என்ற நூலில் அமைத்தார். மேலும் இராமாயணத்தைத் தழுவி ராமபத்ரர் இயற்றிய **ராமாப்யுதயம்** உயர்ந்த பண்பு வாய்ந்த காப்பியம் ஆகும். ஆர்வம் மிகுந்த சிவனடியாராகிய தூர்ஜடி என்பார் **காளஹஸ்தி மாகாத்மயத்தையும்,** உள்ளத்தை உருக்கும் பாடல் கள் அடங்கிய **காளஹஸ்தீசுவர சதகத்தையும்** இயற்றினர். பாடல்களில் இலக்கணப் பிழைகள் சில காணலாம். ஆனுல் கருத்துக்கள் அருமையானவை. சிவனடியார்களின் உள்ளத்தை அவை கவருகின்றன. கிருஷ்ண தேவராயரின் அரசவையில் கவிஞராயமர்ந்த ராம ராஜ பூஷணர் முதலாம் திருமலாவின் காலம்வரை தொடர்ந்து அப்பதவியிலிருந்தார். ஒரு சிறு கதையை அடிப்படையாக்கி அழகாக இயற்றப்பட்ட அவரது **வசு சரிதமு** பெருஞ்சிறப்பைப் பெற்றது. தெலுங்கி லுள்ள ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்ருக அது கருதப் படுகிறது. இக்காப்பியத்தில் எதுகையும் மோனேயும் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. இவரது மற்ற நூல்களில் **ஹரிச்சந்திர நளோபாக்யானம்** தனிச் சிறப்புடையது. ஹரிச்சந்திரன், நளன் ஆகிய இருவருடைய கதைகளேயும் ஒரே அடியில் அது உரைத்துச் செல்கின்றது. அதிலடங்கிய ஒவ்வொரு செய்யுளும் இரு கதைகளுக்கும் பொருந்தும் கருத்தை அளிக்கின்றது. இவ்விதம் இரண்டு பொருள்கள் தரும் 'த்வயார்த்த காப்பியங்கள்' எனப்பட்டவை இக்காலத்தில் வழக்கத்தில் வந்தன. முன்கூறிய சூரண்ணுவும் இராமாயணம், மாபாரதம் ஆகிய இரு கதைகளேயும் ஒரே கூற்றில் தமது

**ராகவ பாண்டவ்யமு** என்ற காப்பியத்தில் இணைத்துள்ளார். இவ்விதக் காப்பியங்கள் போற்றுதற்குரிய திறமையோடு அமைக்கப்பட்டிருந்த போதிலும் இவற்றிற்கு இயற்கை அழகும் இனிமையும் வாய்க்கவில்லை.

நகைச்சுவைக்குப் பெரும்புகழ் பெற்ற தெனுலிராமர் ஒரு சிறந்த கவிஞராகவும் திகழ்ந்தார். இவர் இயற்றிய பல நூல்களில் **பாண்டுரங்க மாகாத்ம்யம்** என்ற காப்பியம் மிக்க சொல்வன்மை வாய்க்கப்பெற்றது. கடைசி வரையில் இன்பம் தரும் முறையில் கதையைத் தொடர்ந்து கூறிச் செல்லும் திறமை இவரது தனிச் சிறப்புக்களில் ஒன்று. இலக்கியப் பண்புகள், காலத்திற்குக் காலம் மாறுதல்க ளடைந்தபோதிலும் இவரைப் போன்ற புலவர்களின் செல்வாக்கு அழியா நிலைபெற்றுத் திகழுமெனலாம். **அஷ்ட திக்கஜ**ர்களாகிய எட்டுப் பேர்களில் எல்லோரும், அதிலும் சிறப்பாக, சூரண்ணு, ராஜ பூஷணர், தெனுலி ராமகிருஷ்ணன் ஆகியோர்கள் பொதுவாகக் கருதப்படுவது போல் கிருஷ்ண தேவரது காலத்தவர்களென்று கூறுவதற்கில்லை. உண்மையில் இம்மூவர்களும் சிறிது பிற்காலத்தைச் சார்ந்த புலவர்களே.

அரசவையிலுட்பட்ட புலவர்களைத் தவிர கிருஷ்ணதேவ ராயர் காலத்தில் வேறு பல இலக்கிய நிபுணர் திகழ்ந்தனர். இவருள் **நரசிங்க கவி** அரிய கருத்துக்களைக் கையாண்ட கவிஞர். இவரைப் பெத்தண்ணு வேண்டுமென்றே அரசவைக்குள் இடம் கொடாமல் தடுத்துவிட்டார். **கவிகர்ண ரஸாயனம்** என்ற இவரது கவிதை பழங்கதையில் கேள்விப் பட்ட ஒரு அரசரது வாழ்க்கைச் சரிதத்தை விவரிப்பதாகக் கூறிக்கொள்ளுகிறது. ஆனுல், உண்மையில் அது உலக மடமை, கவிஞர்களின் குறுகிய மனப்பான்மை, மன்னர்களின் பேதைமை இவற்றைத் துலக்கும் பொருட்டே இயற்றப்பட்ட நூலாகும். ஆயின், அவரது இலக்கிய நடை சலிப்பைத் தரக் கூடிய ஒரே முறையில் அமைந்துளது.

16-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் இலக்கிய வளர்ச்சி குன்றவில்லை. அக்கால நூல்களில் தலை சிறந்தது பிடுபர்தி சோமநாதர் இயற்றிய **பஸவ புராணமாகும்.** வைண

வத்தை இகழ்ந்து வீரசைவத்தைப் புகழ்வதே இந்நூலின் நோக்கம். அவருடைய இலக்கிய மொழி நடை மேம்பாடுடைய தாயினும், அவரது அளவற்ற மதவெறி நூலின் மதிப்பைக் கெடுத்துவிடுகிறதெனலாம் குதிரைகளையும், அவற்றிற்குப் பயிற்சி அளிப்பதையும் பற்றி மனுமஞ்சிபட்டர் என்பவர் எழுதிய **ஹயலக்ஷண சாஸ்திரம்** விஞ்ஞான முறையில் அமைந்துளது.

17-ஆம் நூற்றூண்டில் விஜயநகரப் பேரரசு சீர் குலைந்த பின் நெல்லூர், தஞ்சாவூர், மதுரை போன்ற பகுதிகளில் ஆட்சி புரிந்த தலைவர்கள் தெலுங்கைப் போற்றினர். இக்கால நூல்களில் நெல்லூர் புஷ்பகிரி திம்மண்ணு என்றவர் மொழி பெயர்த்த **நீதி சதகமும்,** அவர் இயற்றிய **சமீ ரகுமார் விஜயமும்** குறிப்பிடத் தக்கவை. **சமீ ரகுமார விஜயம்** அனுமானின் வீரச் செயல்களையும் மெய்ப் பற்றையும் விளக்கிக் கூறுகின்றது. திம்மண்ணுவைச் சுற்றி பெயர் பெற்ற பாபராஜா, நரசிங்கா என்ற இருசகோதரர்கள் உள்பட பலர் இலக்கியக் கலையில் ஈடுபட்டுக்கொண்டிருந் தனர். பாபராஜா இயற்றியுள்ள **உத்தர ராமாயணமும், யக்ஷகான விஷ்ணுமாய விலாசமும்** உயர்தர நூல்களாகும்.

தஞ்சாவூரில் இரகுநாத நாயக்கரே **வால்மீகி சரித்திரத்தை** உரைநடையில் எழுதினர். தெலுங்கில் முதல் முதலில் தோன்றிய உரைநடை நூல் இதுவேயெனக் கூறலாம். அவர் இயற்றிய **ராமாயணம்** அவருடைய கவித்திறனைத் தெளிவாக்கு கின்றது. இவரது புதல்வர் பல கவிஞர்களைப் போற்றிய தோடு மதிப்பிற்குரிய சேமகுறி வேங்கட கவியையும் ஆதரித்தார். வேங்கட கவியின் மேன்மை சான்ற **விஜய விலாசம்** தெலுங்குப் பெரிய காப்பியங்களிலொன்றாகும். இவருடைய **ஸாரங்தரா சரித்திரம்** அவ்வளவு பெருமைக்குரிய தில்லையாயினும், கீழ்ப்பட்ட வகையிலுள்ளதல்லவென்பது திண்ணம். ஆர்க்காட்டைச் சார்ந்த **சவரம் சின்ன நாராயண ராஜு** இக்காலத்துப் புலவரில் ஒருவர். அவர் இயற்றிய **குவலயாஸ்வசரித்ரா** என்ற நேர்த்தியான கவிதை இலக்கியமும் நகைச்சுவையும் பொருந்தியது.

**தமிழ் :** தமிழ் நாட்டை முகம்மதியர் தாக்கினதும் பின்னர் விஜய நகரப் பேரரசு எழுந்ததும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தடங்கலை உண்டு பண்ணியது. 14-ஆம் 15-ஆம் நூற்றாண்டு களில் இதன் விளைவு தெளிவாகக் காணப்பட்டது ஆனால், நாளடைவில் சில விஜயநகரப் பேரரசர்களும், நாயக்க மன்னர்களும் பாண்டியர்களும் தமிழுக்குப் பேராதரவு அளித் தனர்.

முன் போலவே இக்காலத்திலும் இலக்கிய நூல்கள் பலவும் மதத்தை ஒட்டியே தோன்றின. சைவ சிந்தாந்தத்தின் ஊக்கம் ஒரு பக்கம், வைணவ மறுமலர்ச்சியால் தோன்றிய ஆர்வம் மற்றொரு பக்கம் ; இரண்டும் சேர்ந்து எண்ணிறந்த சமய ஆராய்ச்சிகளும் தத்துவ நூல்களும் வெளிவரக் காரணமாயிருந்தன. முன் சிவஞானசித்தியார் நடத்திய அரும் பெரும் தொண்டைத் தொடர்ந்து, 14-ஆவது நூற்றாண்டில் உமாபதி சிவாச்சாரியார் அரைகுறையாக எழுதியிருந்த **சைவ சித்தாந்த** சாஸ்திரத்தின் எஞ்சியிருந்த எட்டுப் பகுதிகளையும் உருவாக்கினர். 14-ஆம் நூற்றாண்டின் கடைசியில் 2,824 செய்யுட்களடங்கிய **சிவப்பிரகாசப் பெருந் திரட்டை** சிவரூபானந்த தேசிகர் இயற்றினர். இவரது மாணவராயிருந்த தத்துவராயர் 1400 செய்யுட்களைத் தொகுத்துக் **குறுந்திரட்டை** உருவாக்கினர். இத்தொகை நூல்கள் சைவ சித்தாந்தத்தின் இளமைப் பருவத்திலுள்ள கருத்துக்களை நன்கு துலக்குகின்றன.

16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த செவ்வைச் சூடுவார் **பாகவத புராணத்தைத்** தமிழில் இயற்றினர். அச்சுதராயர், சதாசிவராயர் இவ்விருவர் காலத்தவராயிருந்த மறைஞான சம்பந்தர், சைவ நெறியையும் ஆசாரங்களையும் பல நூல்கள் வாயிலாக வெளிப்படுத்தினர். இந்நூல்களில் சிறந்தவை, **சைவ சமய ஆராய்ச்சி, முக்தி நிலை, சிவ தருமோத்திரம்** ஆகிய மூன்றுதாமெனக் கருதப்படுகிறது. கோயில், அதன் அமைப்பு, சைவ சித்தாந்தக் கோட்பாடு முதலியவை பற்றி 1200 செய்யுட்களடங்கிய ஒரு தொகை நூல்தான் **சிவ தருமோத்திரம்.** ஏறக்குறைய 1564-இல் **சிவஞான சித்தியார்**

**உரை** என்ற சித்தியாரைப் பற்றிய ஒரு விரிவுரையை சிவாக்ர யோகி எழுதினர். இவர் சைவ வழிபாடுகளையும் கொள்கை களையும் பற்றி இயற்றியுள்ள மற்ற நூல்கள் **சைவ சன்னியாச பத்ததி, சைவ பரிபாஷை, சிவநெறிப் பிரகாசம்** என்பன. இதே காலத்தில் பல நூல்களின் ஆசிரியராகப் புகழ்பெற்ற கமலை ஞானப்பிரகாசர் **ஆயிரம் பாடல்கள்** என்ற சிவனைப் போற்றிப் புகழும் பாடல்களையும் சிவனை வழிபடும் முறைகளைப் பற்றிப் பல தொகை நூல்களையும் இயற்றினர்.

17-ஆவது நூற்றாண்டில் தென்னாட்டு நாயக்கர்களின் ஆதரவில் தமிழ் இலக்கியம் வளர்ச்சி பெற்றது. வேலூர் லிங்கம நாயக்கரின் நண்பராயிருந்த சிவப்பிரகாச சுவாமி 218 செய்யுட்களடங்கிய **அத்வைத வெண்பாவாலும், சதகத்ரயம்** என்ற செய்யுள் மாலையாலும் சைவக் கொள்கைகளை விரித் துரைத்ததோடு வீரசைவத்தின் அருமை பெருமைகளை விளக்கிப் பல நூல்களையும் இயற்றினர். மதுரை நாயக்கரின் அலுவலாளராயிருந்த மாதைத் திருவேங்கட நாதர் அத்வைதத் துறையில் **மெய்ஞ்ஞான விளக்கம்** என்ற அரிய நூலை வெளியிட்டார். 2019 செய்யுட்கள் கொண்ட 48 காண்டங்களாக அமைக்கப்பட்ட பெருங்காப்பியம் இது. உண்மையில் இது வேதாந்தக் கொள்கையை விளக்கும் பொருட்டு இயற்றப்பட்ட ஒரு நாடக நூலேயாகும்.

தத்துவ சாஸ்திரத்தை, அதிலும் குறிப்பாகச் சைவ சித்தாந்தத்தைப் பற்றி அமைத்த நூல்களைத் தவிர பக்தி மயமான பாடல்கள் எண்ணிறந்தவை தோன்றின. இவற்றில் சில பொதுவாக இறைவனைப் பற்றியவை; வேறு சில தனிக் கோயில்களையும் அங்குக் காட்சியளித்த மூர்த்திகளையும் பற்றியவை. பதினலாம் நூற்றாண்டைய தத்துவராயர் **அஞ்ஞவதைப் பரணி, பாடு துறை** போன்ற பக்தி ததும்பும் பாடல்களை இயற்றினர். நெஞ்சை அள்ளும் பாடல்கள் பல பாடிய அரிய அடியார், அருணகிரி நாதர் என்ற புகழ்பெற்றவர். அனேகமாக 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இவர் முருகன் பற்றில் மனத்தை இருத்தியதோடு சைவ சித்தாந்த தத்துவத்தை

விளக்கி யுரைப்பதிலும் ஈடுபட்டார். தமிழகத்தில் திகழ்ந்த முருகன் கோயில்களனைத்திற்கும் சென்று இவர் வழிபட்டார். ஆனால், பழனியாண்டவர் திருக்கோயிலுடன் அவருக்கிருந்த பற்று எல்லை கடந்ததாயிருந்தது. பல்வேறு பண்களில் இசைத்துள்ள 1360 பாடல்களடங்கிய அவரது **திருப்புகழ்,** உள்ளத்தைக் கனிந்துருகச் செய்யும் ஒரு இன்பக் களஞ்சியம். இந்துமத புராணங்களில் ஆழ்ந்து மூழ்கியிருந்த இவ்வடியார் தமது அறிவையும் ஆற்றலையும் நன்முறையில் பயன் படுத்தினர்.

15-ஆவது நூற்றாண்டில் தோன்றிய மற்றொரு அரிய நூல், வில்லிப்புத்தூரார் இயற்றிய பாரதம். இது சிறந்த மொழி நடையும் அரிய சொல்வன்மையும் அமையப் பெற்றது. எளிய நடையில் இயற்றப்பெற்ற வில்லிப்புத்தூரார் பாரதம் பாமர மக்களின் மனத்தைக்கூடக் கவரக்கூடிய நிலையிலுள்ளது. தனிக்கோயில்களின் சிறப்புக்களைப் பாடுவதும் வழக்கத்தி லிருந்தது. ஏறத்தாழ 15-ஆம் நூற்றாண்டின் கடைசியில் சிதம்பரத்தில் வாழ்ந்த **திருமலைநாதர்,** சமஸ்கிருத ஸ்தல புராணத்தை ஒட்டிச் சிதம்பரத்துத் திருக்கோயிலின் மாண்பை ஒரு நூலாக அமைத்துப் பாடினர். மதுரையம்பதிப் பெருமானின் சிறப்பை அவரது **மதுரைச் சொக்கநாதர்** என்ற கவிதையில் வாழ்த்தினர். கிருஷ்ண தேவர் காலத்து வாழ்ந்த ஞானப்பிரகாசர் அம்மன்னனுக்குப் புகழ்மாலை சூடியது மன்றி, காஞ்சி மாநகரின் சிறப்பைப் போற்றும் **கச்சிக் கலம் பகத்தையும்** இயற்றினர். அதே காலத்தில் வீர கவிராசர் **ஹரிச்சந்திர புராணத்தைத்** தமிழில் அமைத்தார் விஷ்ணுவின் பத்துத் திருப்பிறவிகளையும், கிருஷ்ணனின் லீலைகளையும் விரித்துரைக்கும் **பாகவதத்தைத்** தமிழில் மொழி பெயர்த்தார். இதே காலத்தில் பெருமாள் கவிராயர் என்ற சிறந்த கவிஞர் ஆழ்வார் திருநகரியில் வீற்றிருக்கும் மூர்த்தியின் மாட்சிமையைக் **குறுகை மான்மியம், மாறன் கிளவி மணமாலை** என்ற இரு நூல்களில் போற்றினர். மேலும், **திருப்பதிக் கோவை, மாறனலங்காரம்** போன்ற பக்தி பூர்வமான வேறு சில நூல்களையும் இயற்றினரெனக் கூறப்படுகின்றது. **மாறனலங்**

**காரம்** சொல்லழகை ஆராய்வதோடு, மாறன் என்ற பெயருடைய நம்மாழ்வாரின் சிறப்பையும் விரித்துரைக்கின்றது. இக்காலத்தைச் சார்ந்த கவிராஜ பண்டிதர், இறைவன் வல்லமையை விளக்கும் பல பாடல்களை இயற்றியதோடு **சௌந்தரியலஹரி** என்ற சமஸ்கிருத நூலை அருமையாகத் தமிழில் அமைத்தார்.

கோயில்களின் பெருமையைப் பாடிய நூல்கள் நாளடைவில் ஸ்தல புராணங்களை இயற்றத் தூண்டின. 16-ஆவது நூற்றாண்டு பெரியதோர் ஸ்தல புராண காலமாகச் சமைந்தது. 17-ஆவது நூற்றாண்டில் பக்தி மயமான பல நூல்களெழுதிய குமரகுருபரர் சில கோயில்களின் மாண்பை அவரது நூல்களில் விரித்துரைத்தார். இவர் இயற்றிய கவிதைகளில் முதன் முதலானது முருகனைப் பற்றிய **கந்தர் கலிவெண்பா**வாகும். பிறவியில் ஊமையாயிருந்த இவர், முருகப்பெருமானின் அருளாலேயே பேசும் திறமையைப் பெற்றதாக நம்பப்படுகிறது. இவர் இயற்றிய நூல்களில் மிகச் சிறந்தவை மதுரை ஈசனைப் போற்றும் **மதுரைக் கலம்பகம்,** மதுரை மீனாக்ஷியம்மனைப் புகழும் **இரட்டை மணி மாலை,** திருவாரூர் தியாகராஜரது சிறப்பை விளக்கும் நாற்பது பாடல்கள் சேர்ந்த **திருவாரூர் நான்மணி மாலை,** வைத்தீசுவரன் கோயில் முருகனைப் போற்றும் **பிள்ளைத்தமிழ்,** கல்விக்கரசியான கலைமகளை வணங்கும் பத்துச் செய்யுட்கள் சேர்ந்த **சகல கலா வல்லி மாலை** போன்றவையாகும்.

இப்புகழ்மாலைகளுக்கிடையே சமஸ்கிருத நூல்கள் பல தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வந்தன. வேறு சில அவற்றிலிருந்து சுருக்கி அமைக்கப்பெற்றன. பல புராணங்கள், பாரதம், இராமாயணம் இவற்றிலுள்ள கதைகளும் தமிழில் இயற்றப்பெற்றன. முன் கூறின வீரகவிராசர், கவிராஜ பண்டிதர் என்போரின் நூல்களைத் தவிர பாண்டிய மன்னன் அதிவீரராமரது புகழ் பெற்ற இலக்கியச் சுடர் மணிகளைக் குறிப்பிடலாம். சமஸ்கிருதத்திலும் தமிழிலும் ஒருங்கே புலமை வாய்ந்தவர் அதிவீரராம பாண்டியர். இவர் தமிழில் இயற்றிய **நைடதம்** பெருமை

பெற்றுளது. **கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, கூர்ம புராணம், காசி காண்டம்** என்ற நூல்களையும் இவ்வரசர் இயற்றியுள்ளார். இவர் காலத்தவரான பரஞ்சோதியார் அரும்பெரும் **திருவிளையாடல் புராணத்தை** இயற்றினர். சேக்கிழார் பெருமானின் **பெரியபுராணத்தைப்** போலத் திருவிளையாடல் புராணமும் தமிழ் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த களஞ்சியமெனலாம். இதே காலத்தில்தான் **அருணசல புராணம், திருவிரிஞ்சைப் புராணம், அருணையந்தாதி, திருவாரூர்க் கோவை** முதலிய சைவ மத நூல்களை எல்லப்ப நாவலர் இயற்றினர். முன் கூறிய வீரகவிராயர் 1225 எளிதான செய்யுட்களில் அமைத்த **ஹரிச்சந்திர புராணம்** பாமர மக்கள்கூட விரும்புதற்குரியது. சிவபெருமானின் அரும்பெருஞ் செயல்களை விரித்துரைக்கும் **திருவிளையாடல்** என்ற இரு நூல்கள் 17-ஆவது நூற்றாண்டில் தோன்றியவை எனலாம். இவற்றுள் சிறியது **பெரும்பற்றப்புலியூர் நம்பி**யாலும், பெரியது வேதாரண்யத்துப் பரஞ்சோதியாலும் இயற்றப்பட்டவை. கம்பனின் இணையற்ற காப்பிய முறையைத் தழுவி ஒரு **கந்தபுராணத்தைக்** கச்சியப்ப சிவாச்சாரியார் மிகச் சிறந்த முறையில் உருவாக்கினர்.

சமயச்சார்பற்ற தனி இலக்கிய நூல்களின் எண் குறைவெனவே கருத வேண்டும். **சிதம்பரப் பாட்டியல்** என்ற யாப்பிலக்கண நூல் 16-ஆவது நூற்றாண்டில் தோன்றியது. ஆனால் அது பெரும் மதிப்புக்குரியதல்லவென இலக்கிய ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இதைவிட மிகச் சிறந்த **சிதம்பரச் செய்யுட் கோவை** என்ற செய்யுள் இலக்கண நூல், பற்பல இலக்கியச்சீர்களை வரையறுத்து மேற்கோளுடன் விளக்குகின்றது. இதை இயற்றியவர் 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பெயர் பெற்ற குமரகுருபரராவர். திருக்குறளின் கருத்துக்களைச் சுருக்கி, ஒழுக்க முறையில் 102 செய்யுட்களாக அமைத்த **நீதி நெறி விளக்கத்தை** இயற்றியவரும் இவ்வரிய சிவனடியார் குருபரரே. திருமலை நாயக்கன் தனது வாழ்க்கை முறைக்குத் திருக்குறளின் கருத்துக்களைச் சுருக்கி அமைத்த சாரம் ஒன்று தேவை என்று விரும்பியதனுல்தான் இச் செய்யுட்களை இவர் இயற்றியதாகக் கூறப்படுகின்றது.

குமரகுருபரர் காலத்தைச் சார்ந்த சிவப்பிரகாசரும் ஒழுக்க நடையை விளக்கும் 40 செய்யுட்களடங்கிய **நன்னெறியை** உருவாக்கியதோடு, **தருக்க பரிபாடை** என்ற தருக்க நூலொன்றையும் சமஸ்கிருத நூல்களைத் தழுவி இயற்றினர்.

16-ஆவது நூற்ருண்டின் கடைசியில் குறுகைப் பெருமாள் கவிராயர் **மாறனலங்காரம்** என்ற சொல்லிலக்கண நூலை இயற்றியதாகக் கண்டோம். ஆனல், இலக்கிய ஆராய்ச்சியாளர் இதை நிறை தீர்வானதென்ருே ஒழுங்கான முறையில் அமைக்கப்பட்டுள்ளதென்ருே கருதவில்லை. 17-ஆவது நூற்ருண்டின் தொடக்கத்தில் வைத்தியநாத தேசிகர் இயற்றிய **இலக்கண விளக்கம்** தமிழ் இலக்கணத்தைக் குறைவற விரித்துரைக்கின்றதெனலாம். இதைக் **குட்டித் தொல்காப்பியமெனக்** கருதுவது ஒரு விந்தையல்ல. நவனீத நாதரின் **நவனீத பாட்டியலும்,** ஆக்கியோன் பெயர் அறிவதற்கில்லாத **களவியற்காரிகையும்** இக்காலத்தில் தோன்றிய இலக்கண நூல்களாகும். ஆனல், இவைகளும் கூட நன்கு ஆராய்ந்து தகுந்த முறையில் அமைக்கப்பட்டவையல்ல.

இக்காலத்தில் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் சிலவற்றின் விரிவுரைகள் தோன்றின. இவ்வுரைகள் வெளிவந்த காலத்தை வரையறுத்துத் திட்டப்படுத்த இயலாது. பழைய பகட்டணியுள்ள உரைநடையில் எழுதப்பட்டதாயினும், அடியார்க்கு நல்லாரின் **சிலப்பதிகார உரை** புலமை சான்ற விளக்கமென்பதற்குத் தடையில்லை. ஏறத்தாழ இம்முறையில் அமைந்த விரிவுரைகள் தாம் பரிமேலழகர் குறளைப்பற்றியும், சேனுவரையர் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்தைப் பற்றியும், பேராசிரியரும் நச்சினர்க்கினியரும் தொல்காப்பியத்தைப் பற்றியும் எழுதியுள்ளவை. இன்றைய ஆராய்ச்சி முறைக்குச் சற்று பொருத்தமில்லாதபோதிலும் இவை பேரறிவின் பயனைகத் தோன்றிய நூல்கள். மேலும், இவ்வுரைகள் எழுதப்பட்ட காலத்தில் வழக்கத்திலிருந்த உரைநடையையும் இவை எடுத்துக்காட்டுகின்றன. அன்றியும், வேறு எவ்வகையிலும்

கிடைக்காத சில பண்டைய நூல்களையும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் இவ்வுரைகள் மட்டிலும் குறிப்பிடுகின்றன.

**மலையாளம் :** ஏறத்தாழ 14-ஆம் நூற்றாண்டு முதல் மலையாளமானது தமிழிலிருந்து முழுவதும் மாறுபட்ட மொழியாகச் சமைந்ததெனலாம். ஆனால் மலையாளத்தில் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு மிகுதியாக ஏறியது. உண்மையில் 10-ஆவது நூற்றாண்டு முதல் சமஸ்கிருதமும் மலையாளமும் கலந்த **மணிப்பிரவாள** மொழி வழக்கத்தில் வந்தது. ஏறத்தாழ 12-ஆவது நூற்றாண்டு முதல் **மணிப் பிரவாள** இலக்கிய முறை உயர்நிலை அடைந்ததெனலாம். 14-ஆம் நூற்றாண்டில் இம்முறையில் தோன்றிய நூலாகிய **உண்ணுநீலிஸந்தேசம்** என்ற காப்பியம், காளிதாஸரின் **மேகஸந்தேச**த்தை அடிப்படையாகக் கொண்டது. தம்மைப் பிரிந்து வெகு தொலைவிலிருக்கும் தமது மனைவிக்கு ஒருவர் அனுப்பும் தூதுச் செய்திதான் இக் கவிதையின் மூலப் பொருள். சிறந்த இலக்கிய நூலாயிருப்பதோடு, இக்காப்பியம் பண்டைய வரலாற்று உண்மைகளையும் விளக்குகின்றது. ஏனெனில், தெற்கில் திருவனந்தபுரத்திலிருந்து காடாத்துறை வரையில் கிடக்கும் நாட்டின் வரலாறு பற்றி இந்நூல் முழு விவரத்தை அளிக்கின்றது. இயற்கை அமைப்பை வர்ணிப் பதில் கவிஞரின் திறமை வியக்கத்தக்கது. மேலும், அங்கு அந்நாள் திகழ்ந்த மன்னர்கள், பொதுமக்கள், கோயில்கள் இவை யாவையும் பற்றிக் கூறியிருப்பது வரலாற்றுக்கு இன்றியமையாத உதவியளிக்கின்றது.

14-ஆம் நூற்றாண்டின் கடைசியில் **உண்ணுநீலிஸந் தேச**த்தின் வழியைப் பின்பற்றி **கோகஸந்தேசம்** என்ற காப்பியம் தோன்றியது. இந்நூலின் ஒரு பகுதி அழிந்து விட்டது. எஞ்சியிருக்கும் செய்யுட்களிலிருந்து இதுவும் **உண்ணுநீலிஸந்தேச**த்தைப் போலச் சிறந்த காப்பியமெனத் தெரிகிறது.

ஸந்தேச காப்பியங்களைவிட மேலான இலக்கிய நூல்கள் **மணிப்பிரவாள சம்புக்க**ளேயாகும். சம்புவெனப்படுவது

செய்யுட்களும் உரைநடையும் இடையிடையே கலந்து உருவாக்கப்பட்ட ஒரு தனி இலக்கியப் பண்பைச் சார்ந்த தாகும். ஆனல் சம்புவில் அமைந்துள்ள உரைநடைகூடக் கவிதை முறையின் வழிப்பட்டதே என்பது கவனத்திற் குரியது. கேரளத்தில் தொன்றுதொட்டே வழக்கத்திலிருந்த **சாக்கியார் கூத்து** சம்புவின் வளர்ச்சிக்கு அடிகோலியிருந்த தெனலாம். ஏனெனில் உரைநடையும் பாடல்களும் இடை கலந்த அமைப்பு சாக்கியார் கூத்துக்கு இன்றியமையாத இலக்கியப் பண்பாகும். முதன்முதலாக மலேயாளத்தில் தோன்றிய சம்புக்கள் **உண்ணியச்சி சரிதம், உண்ணிச் சிறுதேவி சரிதம், உண்ணியாடி சரிதம்** என்பனவேயாம். இவை 13-ஆம் 14-ஆம் நூற்றுண்டுகளில் தோன்றின கேரளத்தில் பண்டைய வரலாற்றை உருவாக்க இச்சம்புக்கள் உதவியளிக்கின்றன.

15-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் திறமை சான்ற புனம் நம்பூதிரி என்பவர் சம்பு இலக்கிய முறையைக் கையாண்டு அதை வளரச் செய்தார். இவரது நூல்களில் தலே சிறந்தது இராமாயணமேயாம். இவர் காட்டிய இயலேப் பலர் பின்பற்றியதன் விளேவாகக் **கொடிய விரகம், பாரதம்** போன்ற சம்புக்கள் தோன்றின. இவற்றுள் மிகச் சிறந்தது 16-ஆவது நூற்றுண்டில் மழமங்கலம் நம்பூதிரி இயற்றிய நைஷதமாகும். 16-ஆவது நூற்றுண்டிற்குப் பின்னர் சம்புவில் மக்களுக்குப் பற்று குறைந்தது. ஆகவே உயர்தரப் புலவர்கள் சம்புக்களே இயற்றியதாகத் தெரியவில்லே.

ஏறக்குறைய 15-ஆம் நூற்றுண்டில் நிரணக் கவிஞர் என்போர் மலேயாள இலக்கிய வளர்ச்சிக்குப் பேருதவி அளித்தனர். இவர்கள் பிறப்பிடம் திருவாங்கூரின் மையத்தில் நிரணம் எனும் ஊராயிருந்தமையால் இவர்க்கு நிரணக் கவிஞர் எனப் பெயர்வரக் காரணமாயிற்று. நிரணப் பாவலர்களுள் தலேசிறந்தவர் ராமப்பணிக்கர் என்பார். இவர் **ராமாயணம், பிரஹ்மாண்ட புராணம், பாகவதம்** உள்பட பல நூல்களே இயற்றினர். இவரது நூல்கள் பெரும்பாலும் சமஸ்கிருதத்தி லிருந்து மொழி பெயர்க்கப்பட்டவையாயினும், அவை யாவும் உள்ளங் கவரும் நடையில் அமைக்கப்பட்டுள்ளன. அவர்

பின்பற்றிய மொழியின் தனிப்பெருமை யாதெனின், தமிழின் இலக்கண முறைகளினின்று விலகி தனிப்பட்ட வழியில் மலையாள மொழியைக் கையாள வழிகாட்டியதெனலாம். ஆனால், இதே வேளையில் சமஸ்கிருதத்தின் ஆதிக்கம் பெருகியது. ஆகவே நிரணப் புலவர்களின் இலக்கிய நடையை **பாஷா மிஸ்ரம்,** அதாவது கலப்பான மொழி எனக்கூடக் கூறுவதுண்டு. இவர்களது நூல்கள் **நிரணவிருத்தம்** என்ற செய்யுட்சீரை மிகுதியாக வழக்கத்தில் கொண்டுவந்தன. **நிரணவிருத்தம்** பெருங்காப்பியங்களுக்கு மிகப் பொருத்தமானவை என்பது கவனத்திற்குரியது.

அநேகமாக 15-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த செறுச்சேரி நம்பூதிரி, தற்கால மலையாள இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றினர். இவரது **கிருஷ்ண காதா**வெனும் அரிய கவிதை அதிரற்ற புகழை எய்தியுள்ளது. எளிய நடையும் மனத்தைக் கவரும் உணர்ச்சியும் ஒருங்கே இதில் அமைந்திருக்கின்றன. சம்புக்களை ஆக்கியோரைப் போல, கற்றறிந்த சிலருக்காக மட்டும் இவர் கவிதைகளை இயற்றவில்லை. கிருஷ்ணபெருமான் பேரில் பாசமும் பாடல்களில் நேசமுமுள்ள பாமர மக்களுக்கே குறிப்பாக இவர் இக்காப்பியத்தைச் சமைத்தார். கற்பனைத்திறம் வாய்ந்த செறுச்சேரி, இன்பம் ததும்பும் வேறு பல பாடல்களை இயற்றினர். அவரது உயர்ந்த கருத்துக்களும் அருமையான மொழி நடையும் புகழ் பெற்றன. உண்மையில், இற்றைய மலையாள மொழியில் மக்கள் விரும்பும் இலக்கிய முறையை உருவாக்கினேரில் செறுச்சேரிக்குச் சிறந்த இடமுண்டு. ஆகவே, இக்கால மலையாள இலக்கியத்தின் விடிவெள்ளியென்று இவர் கருதப் படுவது விந்தையல்ல.

செறுச்சேரிக்குப் பின்னர் சில காலம் மலையாள இலக்கியத் துறையில் குறிப்பிடத்தக்க நூல்கள் ஒன்றும் தோன்றவில்லை. சில சம்புக்களும் நாட்டுப் பாடல்களும் தொடர்ந்து வெளிவந்த போதிலும், இலக்கியச் சிறப்பான நூல்களொன்றும் இயற்றப்படவில்லை. ஆனல், 17-ஆம் நூற்றுண்டில் மாபெருங்கவிஞர் துஞ்சத்து எழுத்தச்சன்

தோன்றினர். கீழ் இனத்தில் பிறந்தவராயிருந்தும், இளமையிலேயே சமஸ்கிருதம், மலையாளம், தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் இவர் தேர்ச்சி பெற்றார். இவரது புலமை இடைவிடாத படிப்பாலும், வெளிநாட்டுப் பயணத்தாலும் முதிர்ச்சி அடைந்தது. இலக்கியத் துறையில் **கிளிப்பாட்டு**க்குத் தனிச்சிறப்பை அளித்தார் இக்கவிஞர் பெருமான். கிளி, தன் பாடல்கள் வாயிலாகக் கதையை உரைக்கும் பாவனைக்குக் **கிளிப்பாட்டு** எனப் பெயர். பற்பல நூல்களையும் இவர் இயற்றியதாகக் கூறுவதுண்டு. ஆனால், இதன் உண்மையைத் திட்டப்படுத்த இயலாது. இவரது **கிளிப்பாட்டுக்**களில் **அத்யாத்ம ராமாயணமும் பாரதமும்** உட்பட்டிருந்தனவென்பது திண்ணம். இக்கவிஞரின் கருத்துக்கள் சமஸ்கிருதத்திலிருந்து பெறப்பட்டவையாயிருந்த போதிலும் இவரது கற்பனைத் திறனும் இலக்கியப்பண்பும் இவரது பாடல்களில் நன்கு துலங்குகின்றன. பாடல்கள் அழகிய எளிய நடையில் அமைந்திருக்கின்றன. இற்றைய மலையாள மொழியின் தந்தையென இவரைக் கருதுவதுண்டு. துஞ்சத்து எழுத்தச்சனின் சீடர்கள் சிலர், இவரது காப்பியப் பண்பைப் பின்பற்ற முயன்றனர். ஆனால், ஆசிரியரின் இணையற்ற முறையை அடைய அவர்களால் இயலவில்லை.

மொழி இவ்விதம் வளர்ந்துவரவே பல்வேறு வகையான கருத்துக்களும் இலக்கிய நூல்களில் கையாளப்பட்டு வந்தன. **சம்புக்கள், கிளிப்பாட்டுக்கள்** முதலிய வகை இலக்கியங்களும், **புராணங்கள், ராமாயணம், பாரதம்** போன்ற மத நூல்களும் இயற்றப் பெற்றன. படிப்படியாக உலகியல் சார்ந்த பொருள்களைக் கையாளும் நூல்கள் தோன்றின. 14-ஆவது நூற்றாண்டிலேயே மணிப்பிரவாள இலக்கணத்தையும் சொற்கோப்புக் கலையையும் பற்றிய அரும்பெரும் நூலான **லீலா திலகம்** வெளிவந்தது. செய்யுள் முறையிலும் உரை நடையிலும் நூல்கள் இயற்றப் பெற்றன. மழமங்கலம், மணிப்பிரவாள உரைநடையில் பல நூல்களை எழுதினாரென நம்பப்படுகிறது. ஆதாரங்களையும் வழிபாடுகளையும் பற்றி

விவரிக்கும் **ஆசாரஸங்கிரஹம், அனுஷ்டான சமுச்சயம்** ஆகிய நூல்கள் உரைநடையில் தோன்றியவை.

சோதிடம் பற்றிக் கேரள அறிஞர்கள் பல நூல்களை இயற்றினர். நற்காலத்தைத் திட்டப்படுத்தும் முறைகளை விவரிக்கும் **முகூர்த்த பதவி** என்ற வடமொழி நூலை மணிப்பிரவாளத்தில் 15-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த பலர் மொழி பெயர்த்தனரெனத் தெரிகிறது. இதே காலத்தில் **பிரச்ன மார்க்கம்** என்ற மற்றொரு வடமொழி நூலையும் மாதவன் என்பார் மொழி பெயர்த்தார். மாதவன், கணியான் சாதியைச் சார்ந்தவரெனக் கூறுவர் பலர். **பால சங்கரம்** என்ற சோதிட நூலை மழமங்கலம் எளிய உரைநடையில் அமைத்தார். **நக்ஷத்திர மாலா** செய்யுள் நடையில் தோன்றிய சோதிட நூலாகும். **சோதிடபாஷா, லகுமானச கணிதம் பாஷா, சந்தானதீபிகா பாஷா** எல்லாம் இக்காலத்தில் தோன்றிய சோதிட நூல்களே. ஆனல் இவற்றின் ஆசிரியர்களைப் பற்றியோ இவை தோன்றிய காலத்தைப் பற்றியோ நுட்ப அறிவில்லை.

மருத்துவத் துறையைச் சார்ந்த நூல்கள் பல கேரளத்தில் தோன்றின; இக்காலத்தில் வெளிவந்த **யோகாமிருதம்** என்னும் மருத்துவ நூல் மிகச்சிறந்தது. இதில் சில செய்யுட்கள் சமஸ்கிருதத்திலும் மற்றும் சில மலையாளத்திலும் இருப்பதோடு, இடையிடையே **மணிப்பிரவாள** உரைநடையில் பல பகுதிகள் எழுதப்பட்டிருப்பதையும் காணலாம். பல்வேறு பொருள்களைப் பற்றிக் கூறுவதோடு தங்கம் முதலிய உலோகங்களைத் தூள் செய்து மருத்துவம் பண்ணுவதற்குப் பயன்படுத்தும் முறையையும் விவரிக்கின்றது ; **வைத்திய மஞ்சரி, வைத்தியாஷ்டகம் பாலசிகித்ஸா, லக்ஷணமிருதம்** என்பவையும் இக்காலத்தில் இயற்றப்பட்ட மருத்துவ நூல்களேயாம். ஆனல் இவை ஒவ்வொன்றும் எப்பொழுது வெளிவந்தனவெனத் திட்டமாகக் கூற இயலாது.

நிர்மாணச் சிற்பத்தைப்பற்றிய நூல்களும் இக்காலத்தில் தோன்றின. **தந்திரஸமுச்சயமென்ற** அரிய சமஸ்கிருத

கிரந்தத்தைக் கூவக்கரைப்போற்றி மணிப்பிரவாள நடையில் அமைத்தார். **சில்பரத்னம்** என்ற வட நூலிற்கு இரண்டு மொழி பெயர்ப்புக்கள் வெளிவந்தன. அம்பலப்புழை அரசவையைச் சார்ந்த புலவரால் எழுதப்பட்டது ஒன்று; 18-ஆவது நூற்றாண் டில் தைக்காட்டு பட்டதிரி வெளியிட்டது மற்றொன்று. மொழி பெயர்ப்பு நூல்களைத் தவிர மலையாளத்திலேயே முதல் முதலாக நிர்மாண சிற்பத்தைப்பற்றித் **தச்சுக்கோல் பொருத்தம், கடுகுசற்கரை யோகம், மானவாஸ்துலக்ஷணம்** போன்ற நூல்கள் 15-ஆம் நூற்றாண்டில் வெளி வந்தனவெனத் தெரிகின்றது. மீன் பிடிக்கும் கலையைக் குறித்து17-ஆவது நூற்றாண்டில் தோன்றிய **வலைவீசு புராணம்** என்னும் கவிதை நூல் ஒன்று அழகாய் அமைந்துள்ளது. **சங்கீத சூடாமணி** என்ற இசை நூல் 17-ஆவது நூற்றாண்டில் தோன்றியது. நடன நாடக முறையைப் பின்பற்றி **ஆட்டக்கதை** நூல்கள் எண்ணிறந்தவை இயற்றப்பட்டன. பண்டைய **கூடியாட்டமும், சாக்கியர் கூத்தும்** ஆட்டக் கதைகளைத் தோற்றுவிக்க அடிகோலியா யிருந்தன. 17-ஆவது நூற்றாண்டில், ஒரு கோட்டயத்துத் தம்புரான்தான் ஆட்டக்கதையை முதன் முதலாகச் சீரிய முறையில் உருவாக்கியவர். அவர் நான்கு அரிய **ஆட்டக் கதைகளை** இயற்றியவர் மட்டுமல்ல, ஆர்வமிக்க நடிகராயு மிருந்தார்; மேலும், அவர் கதகளி நாட்டியத்தில், மிகச் சிறந்த நடிகராயிருந்தார். வட கேரளத்தில் நடப்பிலிருந்த **கிருஷ்ண னாட்டம்** சமஸ்கிருதத்திலேயே அமைக்கப்பட்டது. கதைகளிப் பாட்டு சமஸ்கிருதமும் மலையாளமும் கலந்து உருவாக்கப் பட்டதாகும். **கிருஷ்ணனாட்டத்திலும், கதைகளியிலும்** அமைந்துள்ள நாட்டியம், பரத நாட்டியத்தைப் பின்பற்றித் தோன்றியதுதான்; பாடல்கள், ஜயதேவரது **கீத கோவிந்தத்தை** ஒட்டி இயற்றப்பட்டதாயிருந்தன.

## விஜயநகர காலத்தில் கலை வளர்ச்சி

விஜய நகரப் பேரரசில் செல்வமும் வளமும் செழித் திருந்தன. அதோடு, மன்னர்கள் அறிவும் ஆற்றலுமுடைய வராயிருந்தனர். மேலும், இந்துப் பண்பாட்டைப் பேணி

வளர்க்கும் நெறியைக் குறிக்கோளாகக் கருதியிருந்தது அவ்வரசு. ஆகவே கலையைப் போற்ற விஜயநகர மன்னர்கள் மிக்க ஆர்வம் கொண்டிருந்தனர். கோயில்கள் பல விமரிசையாகக் கட்டப்பட்டன. விஜயநகர காலத்தில் திராவிடச் சிற்பமே பல வகையிலும் உச்ச நிலையை அடைந்ததெனலாம்.

அக்காலத்தில் தலைநகரிலும் பேரரசின் மற்றப் பகுதிகளிலும் அமைத்த கோயில்களில் புதிய நிர்மாண முறைகள் கையாளப்பட்டன. முதலாவதாகக் கோயில்கள், அளவில், பெரிய மாளிகைகளையொத்துப் பணி செய்யப்பட்டன. அழகிய மண்டபங்களையும் கூடங்களையும் கோயிலுக்குள் ஆங்காங்கு அமைத்தனர். ஆண்டாண்டுதோறும் நடைபெற்ற திருக்கல்யாண விழாவில் பெருமானையும் அம்மனையும் வீற்றிருக்கச் செய்ய நடுவில் ஓர் உயர்ந்த மண்டபத்தையும் கட்டினர். இப்பணிகள் யாவற்றிலும் அரும்பெரும் சிற்ப வேலைப்பாடுகள் அமைக்கப்பட்டன. கண்ணைக் கவரும் முறையில் வரிசை வரிசையாகக் கல் தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்ட ஆயிரக்கால் மண்டபங்கள், பல கோயில்களிலும் இருந்தன.

இரண்டாவதாக, இக்காலத்தில் தூணின் அமைப்பிலும் பெரும் கவனம் செலுத்தப்பட்டது. தூணின் நடுப்பக்கம் நுட்பமான சிற்ப வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தூணின் உயர மட்டத்திலுள்ள போதிகைக் கட்டைகளையும் நேர்த்தியாக அமைத்தனர். போதிகைக் கட்டை பல்லவர் காலத்தில் வேலைப்பாடில்லாத சாதாரண முறையில் செய்யப்பட்டிருந்தது. நாள்பட அது முதிர்ச்சி பெற்று, இறுதியாக விஜய நகர காலத்தில் தொங்கும் தாமரை மொட்டுப் போல நேர்த்தியாக அமைந்தது. வாசல் முகப்புகளிலும் முக்கிய இடங்களிலும் பெரிய தூணைச் சுற்றிச் சிறு அழகிய தூண்கள் பல இணைக்கப்பட்டிருந்தன. தூண் கூட்டங்களின் முன்னணியில் முன் காலை உயர்த்திக் குதிக்கப் போகும் குதிரைகளோ, யாளிகளோ கல்லில் உருவாக்கப்பட்டிருந்தன. மூன்றாவதாக, சிங்காரஞ்செய்வதில் மிக்க கவனம் செலுத்தப்பட்டது. தூண்களின் பட்டமோனையிலும், வாசல்

களிலும் நாகபந்தம் என்ற சிங்கார மெட்டு 12-ஆவது நூற்றாண்டில் தோன்றி விஜய நகர காலத்தில் முதிர்ச்சியடைந்தது. சிறு மாடங்களின் கூரை ஓரத்திலும் மண்டபங்களின் மூலைகளிலும் கூடுகள் சிங்கார வேலைகளுடன் அழகாகத் தோன்றின. இக்காலத்தில் கோயில் சுவர்களிலமைத்த மாடங்கள் அளவில் பெரியனவாகி ஸ்தூபிகளால் அலங்கரிக்கப்பட்ட சாலைகளாயின. கடைசியாகச் சோழர்கள் காலத்தில் சிறப்புற்றிருந்த கோபுரங்கள் இன்னும் நேர்த்தியான முறையில் விஜய நகர காலத்தில் கட்டப்பட்டன.

புது முறையில் விஜய நகரப் பேரரசர்கள் கட்டுவித்த கோயில்களில் மிகச் சிறந்தவை **ஹஸாரா ராமசுவாமி கோயிலும், வித்தல சுவாமி கோயிலு**மாகும். ஹஸாராக் கோயில் கிருஷ்ண தேவர் காலத்தில் புது அமைப்புக்களுடன் நன்கு சீர்திருத்தி உருவாக்கப்பட்டது. ஆனால் இந்தச் சீர்திருத்தங்கள் நடைபெற்றமை இரண்டாம் விரூபாக்ஷர் காலத்தில்தானெனக் கருதுவாருமுண்டு. இவ்வாலயம் அளவில் சிறியதேயாயினும் (200 அடி நீளம், 110 அடி அகலம்), இதன் இறுதி வேலைக் கூறு வெகு நேர்த்தியானதென்பதற்கு ஐயமில்லை. உண்மையில் விஜய நகர காலத்தைச் சார்ந்த கோயில்கள் எல்லாவற்றையும்விட இது நிர்மாணச் சிற்பத்தில் ஒப்பற்றதாய் விளங்குகின்றது. அழகான வளைவு தாங்கிகளைக்கொண்ட அர்த்தமண்டபமும், அதன் கூரையைத் தாங்கி நிற்கும் நான்கு வளைவு தாங்கிகளும், சிறு கோயில்களின் வெளிச் சுவர்களைச் சிங்காரிக்கும் புடைப்புச் சிற்பங்களும் (bas relief), பக்கங்களில் தூண்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் நுழை மாடங்களும் கண்ணைக் கவர்கின்றன. கோயிலின் உட்சுவர்களில் இராமாயணம், கிருஷ்ண லீலை ஆகியவற்றிலுள்ள கதைகளைச் சித்திரிக்கும் சிற்பங்களைக் காணலாம். வைணவக் கோயிலாயிருந்த போதிலும் கணேசர், முருகர் போன்ற சைவ மூர்த்திகளின் உருவங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. உட்கோயிலின் வெளிச் சுவர்களில் காணப்படும் புடைப்புச்

சிற்பங்களில் புத்தர் பெருமானுடைய சித்திரமும் சேர்ந்திருப்பதாக நம்பப்படுகிறது.

வித்தலக் கோயிலேச் சிற்பக் கலேயின் ஓர் அழகிய வடிவமெனலாம். விஜய நகர நிர்மாண சிற்பத்தின் உச்ச நிலே இக் கோயிலில் காணப்படுகின்றது என்பது மிகையாகாது. இந்த ஆலயத்தை இரண்டாம் தேவராயர் கட்டத் தொடங்கினுரெனக் கூறுவர். பின் வந்த அரசர்கள் ஒவ்வொருவரும் பல பகுதிகளேச் சேர்த்து அழகுபடுத்தினர். ஆனல், இந்தக் கோயில் பூர்த்தியாகக் கட்டி முடிக்கப்படவில்லே. இக் கோயிலில் மகாராஷ்டிர வழக்கத்தைப் பின்பற்றி கிருஷ்ண பகவான், வித்தலா அல்லது வித்தோபா என்ற பாவனேயில் தோற்றமளிக்கிருர். 538 அடி நீளமும் 310 அடி அகலமுமுள்ள நீண்ட சதுரத்தினுள் அமைக்கப்பட்ட இவ்வாலயத்தின் வடக்கு, தெற்கு, கிழக்கு ஆகிய மூன்று எல்லேகளிலும் அழகிய கோபுரங்களேக் காணலாம். முக்கிய கோயிலானது ஒரு பெரிய மூலதளத்தின் மீது ஒன்றன் பின் ஒன்ருகத் தொடர்ந்த கட்டிடங்கள் போல அமைக்கப்பட்டுள்ளது. முன்னணியில் **மகா மண்டபத்தையும்** நடுவில் **அர்த்த மண்டபத்தையும்** இறுதியில் **மூலக் கோயிலேயும்** அணியாகக் காணலாம். மகா மண்டபம் மிகப் பெரியது ; ஏறத்தாழ 100 அடி நீளம், 100 அடி அகலமுள்ளது. 12 அடி உயரமும் பகட்டணியும் கொண்ட 56 தூண்கள் உள்ளே நிற்கின்றன. அர்த்த மண்டபமானது, அளவில் கல்யாண மண்டபத்தின் பாதிதான் இருக்கும். சிற்ப வேலேயில் அர்த்த மண்டபம் மிகச் சிறந்தது. ஆனல், **கல்யாண மண்டபம்** ஒன்று போதும், காண்போரின் வியப்பை உண்டாக்குவதற்கென்று சிற்பக் கலேஞர் லாங்ஹர்ஸ்ட் கூறியிருக்கிருர். முக மண்டபத்திற்கு எதிராகக் கல்லினுல் செய்த தேர் ஒன்று காணப்படுகிறது. இத்தேரின் மூலதளமும் முக்கிய தட்டும் ஒரே பெருங்கல்லில் கொத்தப்பட்டுள்ளன. இதற்குக் கல்லால் செய்யப்பட்ட சக்கரமும் அமைக்கப்பட்டுளது. முதல் தட்டுக்கு மேலிருந்த செங்கல் கட்டு இப்பொழுது அழிந்துவிட்டது.

விஜய நகரக் கட்டிடக் கலை முறையில் தோன்றியுள்ள கோயில்களைப் பேரரசின் பல பகுதிகளிலும் காணலாம். தாட்பத்திரி, வேலூர், காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம் ஆகிய இடங்களில் காணப்படுபவைதாம் மிகப் புகழ் பெற்றவை. தாட்பத்திரிக் கோயிலுக்கு இரண்டு கோபுரங்கள் கட்டக் கருதினர்; அவற்றில் ஒன்று அப்பொழுதே கட்டி முடிக்கப்பட்டுவிட்டது; மற்றொன்று கோயிலின் சுவர் வரையிலும்தான் கட்டி முடிக்கப் பட்டிருக்கிறது. இக்கோயிலிலுள்ள கோபுரங்கள் செங்குத்தாக இருக்கும். இரு பக்கங்களில்கூடச் சிற்ப வேலைகள் மிகுதி யாகக் காணப்படுகின்றன. வேலூர் சிவன் கோயிலிலுள்ள **கல்யாண மண்டபம்** மிக நேர்த்தியானது. தென்னாட்டிலுள்ள கல்யாண மண்டபங்களனைத்திலும் இது தலைசிறந்ததென்றால் அது மிகையாகாது. அங்குக் கொத்தப்பட்டிருக்கும் யாளிகள், குதிரைகள், வீரர்கள் ஆகியவர்களின் உருவங்கள் யாவும் அம்மண்டபத்தின் மற்ற அணிகலன்களோடு பொருத்த முள்ளனவாகவே காட்சி அளிக்கின்றன. கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்ட காஞ்சிபுரத்து ஏகாம்பரநாதர் கோயில் கோபுரம் மிகப் பெரியது. பத்துத் தட்டுகளடங்கிய இக்கோபுரத்தின் உயரம் 188 அடி. காஞ்சி வரதராஜ சுவாமி கோவிலின் சில பகுதிகள் விஜய நகர மன்னர்களால் கட்டப் பட்டவை. இக்கோயில் **கல்யாண மண்டபம்**, வேலூர் கோயிலிலுள்ளதை ஒத்திருக்கின்றது. ஸ்ரீரங்கம் கோயிலி லுள்ள **சேஷாத்திரி** மண்டபம் அருமையான சிற்ப வேலைப் பாடு கொண்டது. அங்கு முன்கால்களைத் தூக்கி, ஒன்பது அடி உயரத்தில் நிற்கும் குதிரை உருவங்கள் கல்லில் கொத்தப் பட்டிருப்பது அழகான காட்சியை அளிக்கின்றன.

மதுரை நாயக்கர்கள் விஜய நகர மன்னர்களின் கட்டிடக் கலையைப் பின்பற்றினர்; ஆனால் சில சிறு வேற்றுமைகளையும் கைக்கொண்டனர். உண்மையில், விஜய நகர மன்னர் களுடையவும் பாண்டியர்களுடையவும் கட்டிடக்கலை நாயக்கரது கட்டிடங்களில் இணைக்கப்பட்டிருக்கிறதெனலாம். பிற்காலப் பாண்டியர்கள், கோயிலின் சுற்றுப்பிராகார மண்டபங்களை

ஒன்றன் பின் ஒன்ருகக் கட்டினுர்கள். அந்த முறையை மதுரை நாயக்கர்கள் பின்பற்றினர்.

விஜய நகரப் பேரரசர்கள் அமைத்த அணிகலன்களைவிடச் சிறந்தவை சில, நாயக்கர்கள் காலத்தில் தோன்றின. மதுரைக் கோயிலின் பெரும்பகுதியும் திருமலை நாயக்கர் கட்டியதுதான். 17-ஆம் நூற்ருண்டையக் கட்டிடக் கலையை இக்கோயில் எடுத்துக் காட்டுகிறதெனலாம். மதுரைக் கோயிலின் வசந்த மண்டபம் மிக அழகு வாய்ந்தது. அதில், நுணுக்க வேலைப்பாடுகளடங்கிய நான்கு தூண் கூட்டங்கள் காட்சியளிக்கின்றன. ஆயிரக்கால் மண்டபத்தின் அணியாக அமைந்திருக்கும் தூண்களும், ஒவ்வொரு தூணின் வெளிப் பக்கங்களிலும் உச்சியிலும் காணும் நுணுக்க வேலைப்பாடு களும் சேர்ந்து இம்மண்டபத்தின் அழகைச் சிறப்பிக்கின்றன. கோயிலின் வெளிப்பக்கத்தில் தோன்றும் கோபுரங்களும், அம்பாள் மீனுக்ஷி அம்மன் கோயிலின் முன் காணப்படும் **பொற்ருமரைக் குளமும்** இவ்வாலயத்தின் சிறந்த உறுப்புக் களாவன. நாயக்கர் கட்டிடக்கலை, சிதம்பரம், ஸ்ரீரங்கம், திருவெவ்வுளூர், இராமேசுவரம், திருவண்ணுமலை முதலிய ஆலயங்களில் பின் பற்றப்பட்டது.

வெங்கலச் சிற்ப வடிவங்கள் அமைப்பதில் சோழர் காலம் இணையற்ற புகழ் பெற்றது. விஜய நகர காலத்தில் இந்தக் கலை தொடர்ந்து கையாளப்பட்ட போதிலும் முன் போல நேர்த்தியான உருவங்கள் தோன்றவில்லை. ஆனுல் பெரிய அளவுள்ள முழு உருவ வடிவங்கள் மிகுதியாக இக்காலத்தில் வார்க்கப்பட்டன.

கோயில்களைத் தவிர விஜய நகர காலத்திலும் நாயக்கர் காலத்திலும் அரண்மனைகள், அரசர் கொலுவிருக்கை, அரசு கட்டில், வேறு மாளிகைகள், நீர்ப்பாசன வாய்க்கால்கள் யாவும் கலைத்திறனுடன் அமைக்கப் பெற்றிருந்தன. இவ்வேலைப்பாடுகளில் சிலவே தற்போது எஞ்சியுள்ளன.

## போருக்குரிய கட்டிடக் கலை

விஜய நகரத் தலைநகர் ஏழு அரண்களால் சூழப்பட்டிருந் தது. குறிப்பாக, அப்துர் ரஸாக் இவ்வரண்களின் உறுதியைப்

பெருமையாகக் கூறுகிறார். கோட்டைச் சுவர்களில் பற்பல இடங்களில், வாயில் வழிகள் அமைக்கப்பட்டிருந்தன. பொது வாக இவை இந்துக் கட்டிடக்கலையைப் பின்பற்றி அமைக்கப் பட்ட போதிலும், முஸ்லிம் கலையின் முறைகளும் சிலவற்றில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. வாயில் வழிகளின் வளசல் கட்டும், பீப்பாய் போன்ற மாடமும், முஸ்லீம் முறையைத் தழுவினவை. கோட்டைகளையும் அவற்றின் உறுப்புக்களையும் அமைப்பதில் ஒருவாறு இந்துக்களின் கலையும் முகம்மதியர் கலையும் சேர்ந்து பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

## இயல் - பன்னிரண்டு

# ஐரோப்பியரின் வருகையும் அரசியற் போராட்டங்களும்

விஜய நகரப் பேரரசுக் காலத்தில் தென்னிந்தியாவில் நடைபெற்ற ஒரு சிறிய நிகழ்ச்சி பிற்கால வரலாற்றில் மாபெரும் மாறுதல்களை விளைவித்தது. இந்நிகழ்ச்சி போர்ச்சுக்கீசிய மாலுமி வாஸ்கோடகாமா 1498-ஆம் ஆண்டு மே மாதம் 20-ஆம் நாள் கோழிக்கோட்டில் வந்து இறங்கியது தான்.

துருக்கி ஒரு வல்லரசாகத் தோன்றிய காலம் முதல் ஐரோப்பியருக்கு மத்தியதரைக் கடலைக் கடந்து ஆசியாவுக்கு வரும் வழி தடைபட்டிருந்தது. ஆகவே, கீழ் நாடுகளுக்கு வர ஒரு கடல் வழி கண்டுபிடிப்பது ஐரோப்பியர்களுக்கு இன்றியமையாத செயல் ஆயிற்று. பல நாடோடி வீரர்களும் இம் முயற்சியில் ஈடுபட்டனர். இறுதியாக இதில் வெற்றி பெற்றவர் போர்ச்சுக்கீசிய நாட்டவரான வாஸ்கோடகாமா என்றவரே. இவர்தான் முதன் முதலாக மேல் நாட்டிலிருந்து நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியாவுக்கு வரும் கடற் பாதையைக் கண்டுபிடித்தவர்.

அக்காலத்தில் மேற்கு நாடுகளோடு தொடர்புள்ள தென்னிந்திய வாணிகத்தை அராபிய வர்த்தகர்களே நடத்தி வந்தனர். ஆனால் கோழிக்கோட்டு ஸாமூதிரிக்கு நாளடைவில் இவர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டது. ஆகவே போர்ச்சுக்கீசி

யரை இவர் மனமார வரவேற்று வாணிகம் நடத்த அனுமதியும் அளித்தார். ஆயின், அராபிய வணிகர்களின் சூழ்ச்சியால் போர்ச்சுக்கீகியருக்கு ஸாமூதிரியின் முழு ஒத்தாசையும் கிடைக்காமல் போயிற்று. ஆகையால், வாஸ்கோடகாமர விற்குப் பின் 1500-இல் வந்த போர்ச்சுக்கீசியத் தலைவர் கண்ணனூர், கொச்சி, கொல்லம் ஆகிய ஊர்களோடு வாணிகத் தொடர்பை அமைத்தார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் திரும்பித் தென்னிந்தியாவிற்கு வந்த வாஸ்கோடகாமா ஸாமூதிரியைவிடக் கண்ணனூரிலும் கொச்சியிலும் ஆட்சி புரிந்த அரசர்களே நம்பத்தக்க நேயர்களென உணர்ந்து அவ்வரசர்களோடு உறவை வலுப்படுத்திக்கொண்டார்.

1505-இல் கண்ணனூர், கொச்சி, கொல்லம் ஆகிய ஊர் களிலிருந்த போர்ச்சுக்கீசியரின் வர்த்தக நிலையங்களுக்குத் தலைவராக நியமிக்கப்பெற்ற பிரான்ஸிஸ்கோ டி அல்மெய்தா என்பவர் கோவாவிற்கு அருகில் கோட்டை ஒன்று கட்டினர். 1509-இல் டியூ எனுமிடத்தில் எகிப்தியர், அராபியர், துருக்கியர் ஆகிய மூவகை முஸ்லீம்களின் கடற்படையை இவர் போரில் முறியடித்தார். இந்த வெற்றி இந்துமாக் கடலில் போர்ச்சுக்கீசியரின் ஆதிக்கத்தை வலுப்படுத்தியது. போர்ச்சுக்கீசியரின் செல்வாக்கை இந்தியாவில் நிலைநிறுத்து வதற்குக் கடலாதிக்கமே இன்றியமையாதது என்ற கொள்கையையுடையவர் அல்மெய்தா. உள்நாட்டில் சில இடங்களைக் கைப்பற்றி அங்கு ஆட்சி புரிய வேண்டுமென்ற நோக்கமே அவருக்கு இல்லை.

1509-இல் தலைவராக வந்த ஆல்புக்கெர்க் அரசியல் வல்லுநர். போர்ச்சுக்கீசியர் இந்தியாவுக்குள் ஓர் அரசை நிறுவ வேண்டுமென்ற குறிக்கோளை இவர்தான் முதன் முதலாகப் பின்பற்றியவர். போர்ச்சுக்கீசியர் இந்தியாவில் நிலையான இடம் பெறக் கடல் ஆதிக்கம் மட்டும் போதாதென்ற கருத்தை இவர் நன்குணர்ந்திருந்தார். உள்நாட்டில் நகரங் களைப் பெற்று அங்குப் போர்ச்சுக்கீசிய ஆட்சி அமைப்பது மிகத் தேவை என்ற கருத்தைக் கைக்கொண்டார். நாட்டு

மக்கள் சிலருடைய ஆதரவைப் பெறுவதற்காகப் போர்ச்சுக்கீசியர் இந்திய மகளிரை மணஞ்செய்வதற்கு அனுமதி அளித்தார். ஆனால் இக்கலப்பு மணம் நன்மையை விடத் தீமையையே மிகுதியாக விளைவித்தது. போர் வீரர் ஆல்புக்கெர்க் பல வெற்றிகளைப் பெற்றார். கோவாவைப் பிஜப்பூரிடமிருந்து 1510-இல் கைப்பற்றினர். முகம்மதியர் களின் கீழ் நாட்டு வாணிகத்திற்கு நடுநிலைக் களன் ஆகிய மலாக்காவை 1515-இலும், பாரஸீகக் குடாக்கடல் அருகி லுள்ள ஓர்மஸை 1515 இலும் கைப்பற்றினர். கோவாவில் ஒழுங்கான அரசியல் முறையை ஆல்புக்கர்க் வகுத்தார். தொன்று தொட்டே தன்னாட்சி நடத்தி வந்த ஊராண்மைக் கழகங்கள் தொடர்ந்து பணியாற்றி வந்தன. ஆல்புக்கெர்க் விஜய நகரோடு நட்புக் கொண்டிருந்தார். எதிரிகளைக் கொடுமை செய்த போதிலும், போர்ச்சுக்கீசியர் நிலையை வலுப் படுத்துவதில் இவர் கண்ணுங் கருத்துமாயிருந்தார்.

ஆல்புக்கெர்க்கின் பின் வந்தோர் டியூ, டாமான் என்னும் துறைமுகங்களைக் கைப்பற்றிய போதிலும், இந்தியாவில் போர்ச்சுக்கீசியர் நிலை 16-ஆவது நூற்றாண்டில் சீர்குலையத் தொடங்கியது. இவர்கள் வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணங் கள் பல. அலுவலாளர்களை நியமிப்பதில் கைக்கூலி வாங்குதல், பணித்துறைத் தலைவர்களை அடிக்கடி மாற்றுதல், சிற்றின்ப வேட்கையில் ஆவல், மதவெறியால் நடத்திய கொடிய செயல்கள், இறுதியாக ஸ்பெயின் நாட்டினர் 1580-இல் போர்ச்சுக்கீசியர் தாய் நாட்டைக் கைப்பற்றியது— இவையெல்லாம் ஒன்று சேர்ந்து போர்ச்சுக்கீசியர் நிலையைக் சீர் குலைத்துவிட்டன.

ஆனால் போர்ச்சுக்கீசியருக்கு இந்தியாவில் ஒரு பேரரசு இருந்ததாகவும், அது பின்னர் அழிந்துவிட்டதாகவும் கருது வது தவறு. அவர்களது வாழ்வின் உச்சநிலையிலேதானும், கோவா, டியூ, டாமான் ஆகிய இடங்களையும் வேறு சில வாணிக நிலையங்களையும் தவிர, பெரிய அரசு எதனையும் அவர் கள் உருவாக்கவில்லை. இந்தியாவின் கீழ்கடற்கரையில்

போர்ச்சுக்கீசியர் வெறும் வணிகராகவே இருந்தனர். 1542-இல் இந்தியாவிற்கு வந்து பத்து ஆண்டுகளாகக் கிறிஸ்து சமய நெறிக்கு அரும்பெருஞ் சேவை செய்த தூயர் பிரான்ஸிஸ் சேவியர், புகழ் பெற்ற கிறிஸ்தவத் தொண்டரென்பதற்கு ஐயமில்லை. அவர் தெற்குக் கோடியில் கடலோரத்திலுள்ள பரவர்களைக் கிறிஸ்து மதத்திலே சேர்த்தார். 16-ஆவது நூற்றாண்டின் கடைசியில் ரோமன் கத்தோலிக்கரின் தலைமைக் குருவாய் விளங்கிய அலெக்ஸிஸ் டிமன்ஸிஸ் என்பார் மற்றொரு சிறந்த கிறிஸ்தவ ஊழியர். அவர் கேரளத்தில் கிறிஸ்தவர்களின் நிலையைச் சீர்படுத்தினர். 1599-இல் டியாம்பர் எனுமிடத்தில் சமயப் பேரவை கூட்டுவித்து, சமயப் பற்றிழந்திருந்த ஸிரியக் கிறிஸ்தவ வகுப்பினரைச் சீர்திருத்தினர்.

போர்ச்சுக்கீசியர் வரவு இந்தியாவிற்குப் பல நன்மைகளை அளித்ததென்பதை மறுக்க முடியாது. இந்திய வாணிகத்திற்குப் போர்ச்சுக்கீசியர் புத்துயிரளித்தனர். அவர் முயற்சியால் ஏற்றுமதி இறக்குமதி வாணிகம் மிகப் பெருகியது. விஜய நகரப் பேரரசின் வெளிநாட்டு வாணிகம் முழுவதையும் போர்ச்சுக்கீசியரே நடத்தி வந்தனர். விஜய நகரப் படைக்கு இன்றியமையாத குதிரைகளைப் போர்ச்சுக்கீசியர் பாரசீக நாட்டிலிருந்து இறக்குமதி செய்தனரென்பது குறிப்பிடத் தக்கது.

தவிரவும், அவர் தம் ஆதிக்கத்துக்குள் இருந்த இந்திய மக்களின் முன்னேற்றத்திற்குச் செய்த சேவைகள் நிலையான பயனுடையவை. கோவாவில் அவர்கள் நிறுவின மருத்துவச் சாலைகள், ஏழையர் விடுதிகள், பள்ளிக்கூடங்கள், பெற்றோரை இழந்த குழந்தைகளுக்குப் புகலிடங்கள், முதியோர்களுக்குப் பாதுகாப்பகங்கள், கத்தோலிக்கத் திருமுறைப் பயிற்சிச் சாலைகள் இவை யாவும் மக்கள் நல்வாழ்வை முன்னேறச் செய்தன. கிறிஸ்தவக் கோயில்கள் கட்டுவதில் ஆர்வம் மிகுந்த போர்ச்சுக்கீசியர் அரிய நுண்கலை வேலைப்பாடுடைய 'மானுலெஸ்கு' எனும் கட்டிடக் கலையை இந்தியாவில்

தொடங்கி வைத்தனர் இந்தியாவில் முதன் முதலாக அச்சகம் நிறுவியவரும் இவர்களே. 1563-இல் கார்கியேரு ஆர்ட்டா என்னும் போர்ச்சுக்கீசிய அறிஞர் இந்தியச் செடி கொடி வளத்தை ஆராய்ந்து நூல் வெளியிட்டார். அன்னாசிப்பழம், முந்திரிப் பருப்பு, கோசுக்கீரை, பப்பாளி, கோவா மாம்பழம், புகையிலை ஆகியவற்றை இந்தியாவிற்குள் முதலில் கொணர்ந்தவரும் போர்ச்சுக்கீசியர்களே. தமிழிலும் மலையாளத்திலும் பல போர்ச்சுக்கீசியச் சொற்கள் நுழைந்துள்ளதும் ஈண்டுக் குறிப்பிடற்பாலது.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயரும் டச்சுக்காரர்களும் இந்திய அரசாங்கத்தில் தோன்றினர். 1600-இல் ஆங்கிலேயக் கிழக்கிந்திய வாணிகக் குழுவும், 1602-இல் டச்சு வாணிகக் குழுவும் அமைக்கப்பட்டன. முதலில் இவ்விரு குழுவினரும் கீழிந்தியத் தீவுகளோடுள்ள வாணிகத்தில் முனைந்து ஈடுபட்டனர். டச்சுக்காரர் போர்ச்சுக்கீசியரிடமிருந்து மலாக்காவை 1641-இலும், இலங்கையை 1654-இலும் கைப்பற்றினர். உண்மையில் போர்ச்சுக்கீசியரின் வீழ்ச்சிக்கு மூல காரணமாயிருந்தவர்கள் டச்சுக்காரர்களே. கிழக்குத் தீவுகளில் ஆங்கிலேயருக்கும் டச்சுக்காரருக்கும் போட்டி மூண்டது. இறுதியாக அம்பாயினுவில் டச்சுக்காரர் ஆங்கிலேயரைக் கூட்டுக் கொலை செய்தனர். இதன் விளைவாக ஆங்கிலேயர் இந்திய நாட்டு வாணிகத்தில் ஒரே முகமாய் முனைந்தனர். தென்னிந்தியாவில் டச்சுக்காரர்களும் சூரத்து, மசூலிப்பட்டினம், பழவேற்காடு[1], நாகபட்டினம், கொல்லம், கொடுங்கோளூர்[2] முதலிய இடங்களில் வாணிகப் பேட்டைகள் அமைத்து வாணிகத்தைப் பெருக்கினர். தொடக்கத்தில் ஆங்கிலேயரைவிட டச்சுக்காரரின் வர்த்தகமே செழிப்புற்றிருந்தது. ஆனால் 18-ஆவது நூற்றாண்டின் முதற் பகுதியிலிருந்தே டச்சுக்காரர்களின் நிலை தளர்ந்தது. அவர் நிலையங்களை ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் கைப்பற்றினர்.

(1) Pulicat
(2) Cranganore

ஆங்கிலேயருக்குக் கீழ்க்கரையில் ஆர்மகோண், மசூலிப் பட்டினம், விசாகப்பட்டினம், கடலூர், பரங்கிப்பேட்டை, மேற்குக்கரையில் தலைச்சேரி, அஞ்சுதெங்கு[1] ஆகிய இடங்களில் வாணிகப்பேட்டைகள் தழைத்தன. சந்திரகிரி மன்னரிட மிருந்து 1639-இல் சென்னைப் பட்டினத்தைப் பெற்றனர். பம்பாயை இரண்டாம் சார்ல்ஸ் மன்னர் அவர்க்கு வாடகைக்கு விட்டார். பிரெஞ்சு மன்னர் 14-ஆவது லூயி டச்சுக் கடற் படையை அழித்ததோடு டச்சுக்காரர் நிலை அறவே கெட்டது. அத்துடன் ஆங்கிலேயருக்கும் டச்சுக்காரருக்கும் இந்தியாவி லிருந்த போட்டி முடிவடைந்ததெனலாம்.

ஐரோப்பாவிலிருந்து கடைசியாக இந்தியாவிற்கு வந்தவர் பிரெஞ்சுக்காரர். இவர்களது இந்திய வாணிகக் கழகம் 1645-இல் அமைக்கப் பெற்றது. விரைவில், தென்னிந்தி யாவில் சில வாணிகப் பேட்டைகள் உருவாயின. 1673-இல் தோன்றிய புதுச்சேரிப்[2] பேட்டை விரைவில் முன்னேறியது. 1674-இல் அதன் பாதுகாப்புக்காக ஒரு கோட்டை கட்டினர். அது விரைவில் தென்னிந்தியப் பிரெஞ்சு நிலையங்களின் தலை நகராக அமைந்தது. 1720 முதல் 1735 வரை பிரெஞ்சுத் தலைவராயிருந்த லெனோயிரும், 1735 முதல் 1742 வரை தலைவராயிருந்த டூமாவும் தம் தாய்நாட்டு அரசின் உதவி இல்லாதிருந்தும் தம் பெருமுயற்சியால் பிரெஞ்சு வாணிகத்தை வலுப்படுத்தினர். மாஹியில் 1724-இல் ஒரு கோட்டை கட்டினர். 1739-இல் காரைக்காலைக் கைக் கொண்டனர். 1742-இல் டியூப்ளேக்ஸ் புதுச்சேரித் தலைவராய் வந்தவுடனே இந்தியாவில் ஐரோப்பியர்களது நிலை மாறுதலடைந்தது; ஏனெனில் இந்திய நாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றிப் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டு மென்ற ஆசை டியூப்ளேக்ஸைத் தூண்டியது.

இதற்கிடையே, முகலாயப் பேரரசு தளர்ச்சி அடைந்தது. நாட்டில் அமைதியும் பாதுகாப்பும் குன்றின. இக்குறைகள்

(1) Anjengo
(2) Pondichery

ஐரோப்பிய வாணிக நிலையங்களுக்கு விபத்தை விளைவித்தன. சிவாஜி சூரத்தை இருமுறை கொள்ளையடித்தார்; பம்பாயை முற்றுகையிட்டார். அவர் ஆங்கிலேயருக்குப் பெருந்திகிலை உண்டு பண்ணினர். இவ்வகை அச்சத்தின் விளைவால் வாணிக நிலையங்கள் கோட்டைகளாக மாறின. அக்கோட்டைகளில் தம் பாதுகாப்புக்கு வேண்டிய படைகளைத் திரட்டி வைத்தனர். ஆகவே, 18-ஆவது நூற்றுண்டின் நடுப்பகுதி முதல் ஆங்கிலப் பிரெஞ்சு வாணிகக் குழுக்கள் போருக்கு ஆயத்தமாயின.

விரைவில் தமிழ் நாட்டில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் போர் மூண்டது. 1744 முதல் 1763 வரையில் நிகழ்ந்த இப்போர்தான் இந்திய அரசாங்கத்தில் தோன்றிய ஆங்கிலப் பிரெஞ்சுப் போட்டிக்கு முடிவு கண்டது.

இதற்குள் தென்னிந்தியாவில் முகலாயர் வலிமை முற்றிலும் குன்றிவிட்டது. நிஜாம் முகலாயருடைய பிரதிநிதி; நிஜாமின் கீழ் ஆர்க்காட்டு நவாபு ஆட்சி செய்தார். அதனால் மேல்பார்வையாளர் ஒவ்வொருவரும் தத்தம் உரிமைகளை நிறைவேற்ற இயலாதிருந்தனர்; தத்தம் நலத்தை மட்டுமே நாடி நடந்துகொண்டனர். டியூப்ளேக்ஸுக்கும் தம் உட்கருத்தை நிறைவேற்றுவதற்குத் தகுந்த வசதி வாய்த்தது. அன்றியும் ஐரோப்பிய வணிகர்களின் தாய்நாடுகளில் நடைபெற்ற போர் நிகழ்ச்சிகளின் எதிரொலி இந்தியாவில் வீசியது. 1744-இல் தொடங்கிய ஆஸ்திரிய அரசுரிமைப் போர், பிரெஞ்சுக்காரர் சென்னையைத் தாக்கிக் கைப்பற்ற வழி திறந்தது. ஐரோப்பாவில் போர் முடிந்ததும், சென்னை மீண்டும் ஆங்கிலேயர் வசமாயிற்று.

ஆர்க்காட்டு நவாப் அன்வருதீன் தம் ஆட்சிக்குள்ளிருந்த நாட்டில் நடைபெற்ற இச்சச்சரவுகளைத் தீர்த்துவைக்க முடியாத நிலைமையில் இருந்தார். மேலும், அவர் டியூப்ளேக்ஸைத் தடுப்பதற்கு முயன்றபோது, டியூப்ளேக்ஸ் ஒரு சிறு படையைக் கொண்டு ஸான்தோம் போரில் அவரது பெரிய இராணுவத்தைச் சிதறடித்தார். நவாபின் இப்படுதோல்வி நாடெங்கும் பெரும் வியப்பையும் பரபரப்பையும் உண்டு

பண்ணியது. இந்தியப் படையின் சீர்கேட்டை இந்நிகழ்ச்சி நன்கு விளக்கியது.

இவ்வேளை ஆர்க்காட்டிலும் ஹைதராபாத்திலும் நடைபெற்ற அரசுரிமை வழக்குகள் டியூப்ளேக்ஸுக்கு உள்நாட்டுச் சச்சரவில் தலையிட ஊக்கம் அளித்தன. பிரெஞ்சு உதவியால், சந்தா சாகிப்பை ஆர்க்காட்டிலும் முசபர் ஜங்கை ஹைதராபாத்திலும் தலைவராக டியூப்ளேக்ஸ் நிறுவினர். ஆங்கிலேயர் தமது நிலையைப் பாதுகாக்கும் பொருட்டு இவரது எதிரிகளை ஆதரிக்க வேண்டுவதாயிற்று. ஆகவே, ஆர்க்காட்டில் முகம்மதாலிக்கும், ஹைதராபாதில் நாசீர் ஜங்குக்கும் துணை செய்ய ஆங்கிலேயர் முன் வந்தனர். எதிரிகள் திருச்சிராப்பள்ளிக் கோட்டையில் முகம்மதாலியையும் அவரது ஆங்கிலேயத் துணைவரையும் முற்றுகையிட்டனர். இடுக்கண் மிக்க இந்நிலையில் திறமை சான்ற இராபர்ட் கிளைவ் ஆர்க்காட்டைத் தாக்கினர். அவர் எதிர்பார்த்த பயன்கள் நிகழ்ந்தன. திருச்சிராப்பள்ளி முற்றுகையைப் பிரெஞ்சுக்காரர் கைவிட்டனர். பிரெஞ்சுப் படைத்தலைவரும் சந்தா சாகிபும் அடிபணிந்தனர். ஆர்க்காட்டு முற்றுகையைக் கிளைவ் ஐம்பது நாட்கள் தொடர்ந்து நடத்தி, எதிரிகளை இறுதியில் முறியடித்தார். அன்றியும், ஆரணி, காவேரிப்பாக்கம் என்ற இரண்டு இடங்களிலும் அவர்களைப் போரில் தோற்கடித்தார். பிரெஞ்சுத் தோல்விகளின் விளைவால் தாய்நாட்டு அரசு டியூப்ளேக்ஸைப் பதவியில் நின்றும் அகற்றியது.

நான்கு ஆண்டுகள் சென்ற பின்பு ஐரோப்பாவில் ஏழு ஆண்டுப் போர் தொடங்கியது. உடனே லாலி என்ற பிரெஞ்சுப் படைத் தலைவர் ஆங்கிலேயருடைய ஸெயின்று ஜார்ஜ் கோட்டையைக் கைப்பற்றினர். தஞ்சாவூர் அரசரையும் தாக்கினர்; ஆனால் அதில் அவர் வெற்றி பெற்றிலர். பின்னர்ச் சென்னை மீது படையெடுத்தார். ஹைதராபாதிலிருந்த பிரெஞ்சு படைத்தலைவர் புஸ்ஸியைத் தம்முடன் ஒத்துழைப்பதற்காகச் சென்னைக்கு அழைத்தார். இது ஒரு பெருந்தவருக முடிந்தது. எவ்வாறெனின் புஸ்ஸியின் பேருதவி

யால் மட்டுமே ஹைதராபாதில் முஜபர் ஜங் தம் பதவியிலிருக்க முடிந்தது. இதை நன்குணர்ந்திருந்த கிளைவ், தாம் வங்காளச் சச்சரவில் ஆழ்ந்திருந்த போதிலும், ஒரு படையை நேரே ஹைதராபாதுக்கு அனுப்பினர்; இப்படை ஹைதரா பாதிலிருந்த பிரெஞ்சுப் படையைத் தோற்கடித்துப் பிரெஞ்சுச் செல்வாக்கையும் அடியோடு அழித்தது. இவற்றின் நடுவே லாலியும் புஸ்ஸியும் இணங்கிப்போக முடியாமல் அவர் ளிடையே பிணக்கம் தோன்றியது. அதன் விளைவால் சென்னை முற்றுகையைக் கைவிட்டனர்.

1760-இல் லாலியின் படையை ஸர் அயர் கூட் என்ற பிரிட்டிஷ் படைத் தலைவர் வந்தவாசியில்[1] முறியடித்தார். இறுதியில் ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகை இட்டனர். எட்டு மாதம் தடுத்து நின்ற பின் பிரெஞ்சுப் படை அடி பணிந்தது. புதுச்சேரியின் வீழ்ச்சியோடு இந்தியாவில் பிரெஞ்சுக் காரரின் நிலை தகர்ந்ததெனலாம். இந்தியாவில் பிரெஞ்சுப் படைத் தலைவர்களுக்குள் தோன்றிய சச்சரவுகள், தாய் நாட்டிலிருந்து உற்ற வேளையில் போதிய உதவி வாராமை, பிரெஞ்சு வாணிகக் குழுவின் பொருளாதாரத் தளர்ச்சி ஆகிய யாவும் பிரெஞ்சுத் தோல்விக்குக் காரணங்கள். இவற்றிற்கு நேர்மாருக ஆங்கிலேயரது வாணிகக் குழுவின் பொருள் நிலையும், ஊக்கமும் மேன்மையுற்றிருந்தன. கிளைவின் தகுவழி காணும் திறமும் இன்னல்கள் நேர்ந்தபோது பேருதவி அளித்தது.

தென் இந்தியாவில் ஆங்காங்கு அரசாண்டு வந்த மகா ராஷ்டிரர், நிஜாம், தனி முயற்சியால் மைசூரில் முன்னேறிய ஹைதர் ஆகியவர்களுக்குள் ஒருவர் மீது ஒருவருக்கு அவநம்பிக்கை குடிகொண்டிருந்தது. பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழிருந்த ஆர்க்காட்டு நவாபினிடம் ஹைதராலிக்குப் பெரும் வெறுப்புத் தோன்றியது. மேலும் ஹைதராலி முன்னே நடந்த போரில் பிரெஞ்சுக்காரர்களுக்கு உதவி புரிந்திருந்தார். மகா

(1) Wandiwash

ராஷ்டிரர்களுக்கும் நிஜாமுக்கும் ஹைதரைப் பற்றி அச்சம் இருந்ததால் அவர் இருவரும் ஹைதருக்கு எதிராக ஆங்கிலேயருடன் ஒப்பந்தம் செய்துகொண்டனர். ஆயின், சூழ்ச்சித் திறமைமிக்க ஹைதர் இவர்களைப் பிரிப்பதற்கு முயன்றார். தாம் ஒழுங்காகப் பட்டம் கட்டி வைப்பதாகக் கூறி மகாராஷ்டிரத் தலைவர் பேஷ்வாவை முதலில் அவ்வொப்பந்தத்திலிருந்து பிரித்தார். பின்னர் நிஜாமுக்குக் கைக்கூலி கொடுத்து அவரையும் தம்மோடு இணைத்துக்கொண்டார். அதன் பின் ஆங்கிலேயரைத் தாக்கும் பொருட்டு ஹைதர் சென்னைமீது பாய்ந்தார். அவரைத் தடுத்து நிறுத்த முடியாததால் ஆங்கிலேயர் ஹைதருடன் ஒப்பந்தம் செய்துகொண்டனர். இவ்வொப்பந்தத்தில், ஹைதருக்கோ, ஆங்கிலேயருக்கோ விபத்து நேர்ந்தால் ஒருவருக்கொருவர் உதவி புரிய வேண்டுமென்ற நிபந்தனையைச் சேர்த்துக்கொண்டனர். நெடுநாட் செல்லுமுன் மகாராஷ்டிரர் ஹைதரைத் தாக்கினர். ஹைதராலி ஆங்கிலேயரின் உதவியை நாடினார். ஆங்கிலேயர் உறுதி மொழியைக் காப்பாற்றிலர். மகாராஷ்டிரர் ஹைதரை முறியடித்துக் கப்பம் கட்டும்படி செய்தனர். ஆகவே ஹைதருக்குப் பிரிட்டிஷாரிடம் கடுஞ்சினம் எழுந்தது.

ஆங்கிலேயருக்கு எதிராக நிஜாம் உருவாக்கியிருந்த கூட்டுறவோடு 1779-இல் ஹைதராலியும் சேர்ந்து தமிழகத்தைத் தாக்கி, ஆங்கிலேயரைக் காஞ்சிபுரத்தில் முறியடித்தார். இந்த இடுக்கண் நேர்ந்த காலத்தில் ஆங்கிலேயரின் அரசியல் தலைவர்[1] வாரன்ஹேஸ்ற்றிங்ஸ் தலையிட்டு, ஹைதராலியின் பக்கத்திலிருந்து நிஜாமையும் மகாராஷ்டிரத்தையும் பிரித்தார். பின் அவர் ஸர் அயர்கூட் எனும் தளபதியை அனுப்பினார். அவர் 1781-இல் பறங்கிப்பேட்டையில் ஹைதரைத் தோல்வியுறச் செய்தார். எனினும், ஹைதர் சலிப்படையாது போரைத் தொடர்ந்து நடத்திக் கூடலூரைக் கைப்பற்றினார். உண்மையில் ஆங்கிலேயரின்

(1) Governor—general

கொடும் பகைவரான ஹைதர் 1782-இல் இறந்த பின்னரே அவர்களுக்கு அச்சம் தீர்ந்தது.

ஹைதரின் மகன் திப்பு ஆங்கிலேயரோடு தொடர்ந்து போரிட உறுதி செய்துகொண்டு வெளிநாட்டு அரசர் உதவியை நாடினர். இவர், ஆங்கிலேயரின் நண்பரான திருவாங்கூர் அரசரைத் தாக்கியபோது, பிரிட்டிஷ் பெருந்தலேவர்,[1] காரண் வாலிஸ், நிஜாமோடும் மகாராஷ்டிரரோடும் ஒருங்கு சேர்ந்து, திப்புவோடு போரிட்டு, அவரை முறியடித்து, அவரிடமிருந்து மலபார், குடகு, திண்டுக்கல் என்னும் இடங்களேப் பெற்றுக் கொண்டார். பின்னும் திப்பு, ஆங்கிலேயருக்கு எதிராகப் பிரெஞ்சுக்காரருள்ளிட்ட பலரோடும் கலந்து சூழ்ச்சி செய்து கொண்டிருந்ததை அறிந்து, ஆங்கிலேயத் தலேவர், வெல்லெஸ்லி என்பார் அவரைப் போரில் முறியடித்துக் கொன்ருர். திப்பு ஆண்ட மைசூர் அரசும் பல பிரிவாகப் பிரிக்கப் பெற்றது. தென் கன்னடம், வையநாடு, சேலம், கோயம் புத்தூர், ஸ்ரீரங்கப்பட்டினம் ஆகிய மாவட்டங்களே ஆங்கிலேயர் கைக்கொண்டனர். எஞ்சிய பகுதி, பழைய மைசூர் அரசர் மரபுவழி வந்த இந்து மன்னருக்கு அளிக்கப்பட்டது.

வெல்லெஸ்லி பெருந்தலேவராகப் பணியாற்றிய காலம் குறிப்பாகத் தென்னிந்திய வரலாற்றில் மிகவும் முக்கியமானது. அவர் இந்திய அரசர்களோடு போர்த்துணே உடன்படிக்கை[2] செய்துகொண்டார். இந்த ஒப்பந்தத்திற்கு உட்பட்ட நாட்டிற்கு விபத்து வந்த காலத்தில் பிரிட்டிஷ் அரசு அதற்குப் படைத்துணே அளிக்க வேண்டும். இதற்கு ஈடாக அந்த நாட்டின் அயல் நாட்டுக் கொள்கைகள் பிரிட்டிஷார் ஆணேக்குள் அமைந்திருக்கவேண்டும். அன்றியும் சில நாடுகள் பிரிட்டிஷ் படையைத் தம் தலேநகரங்களில் வைத்திருக்க விரும்பின. அப்படையின் செலவு வகைக்காக அவர்கள் ஆண்டுதோறும் ஒரு தொகை செலுத்த வேண்டும். அல்லது அத்தொகை வருமானமுள்ள சில சிற்றூர்களேப் பிரிட்டிஷார்

(1) Governor—general
(2) Subsidiary Alliance

வசம் விட்டுவிட வேண்டும். இத்தகைய அரசியல் நயத்தால் பல நாடுகளை வெல்லெஸ்லி பிரிட்டிஷார் ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்தார். நிஜாமோடு செய்த இவ்வகை ஒப்பந்தத்தால் பிரிட்டிஷாருக்குப் பெல்லாரி, கடப்பை, கர்நூல், அனந்தப்பூர் ஆகிய மாவட்டங்கள் கிடைத்தன. திப்புவோடு கூடிச் சூழ்ச்சி செய்த குற்றத்திற்காக ஆர்க்காட்டு நவாப் பதவியை விட்டுவிட நேர்ந்தது. தஞ்சாவூர் அரசரும் துணைமைத் தொடர்பில் இணைக்கப்பட்டார். ஆகவே தென்னிந்தியாவில் நிஜாம் மாநிலம் முதல் தெற்குக்கோடி வரை இருந்த நாடு முழுவதும் பிரிட்டிஷார் மேலாட்சியில் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு சென்னை மாநிலம் இவர் காலத்தில் உருவானது.

மதுரை, திருநெல்வேலி உள்ளிட்ட தெற்குக் கோடியில், நாயக்கர் காலத்தில் பல பாளையக்காரர் நியமிக்கப் பெற்றனர். நாயக்க மன்னர் ஆட்சி நீங்கிய பின்னர், அன்னூர் தன்னுரிமை பெற்று, தத்தம் பகுதிகளில் சர்வாதிகாரம் செய்து வந்தனர். ஆங்கிலேயர் அவரை அடக்கித் தம் அரசினை உறுதிப்படுத்த முயன்றனர். சிறு பாளையக்காரர்கள் பலரை எளிதில் அடக்கினர். திருநெல்வேலியில் பாஞ்சாலங்குறிச்சி ஊர்ப் பாளையக்காரர் கட்டபொம்ம நாயக்கர் பெரும் போர்வீரர். அவரை அடக்கும் பொருட்டு அவர்மீது பல முறை படையெடுத்தனர். இறுதியில் புதுக்கோட்டை மன்னர் உதவியினால் அவரைப் பிடித்துத் தூக்கிலிட்டனர். மதுரைப் பக்கம், தற்கால இராமநாதபுரம் மாவட்டத்தில், மறவர் மரபைச் சார்ந்த பாளையக்காரர் பெரிய மருது, சின்ன மருது என்னும் அண்ணன் தம்பிமார் இருவரும் ஆங்கிலேயரை ஒழிக்கக் கங்கணங் கட்டிக்கொண்டு, கட்டபொம்மன் தொடங்கிய கிளர்ச்சியை வலுப்படுத்தினர். மதுரைக் கருகிலுள்ள திருமீடூர் கோயிலைப் போரில் தமது அரணாகப் பெரிய மருது பயன்படுத்தினார். இக்கோயிலுக்கு அவர் நன்கொடை அளித்தார். அண்ணன் தம்பி இருவர் உருவச் சிலைகளையும் அக்கோயிலில் காணலாம். மருது வீரரின் தலைமையில் அவர்போலும் வீர மக்களாகிய மறவர் சிலர்

ஆங்கிலேயரை நெடுநாள் எதிர்த்துப் போரிட்டனர் ; இறுதியில் அத்தலைவர்களையும் மற்ற மறவர்களையும் அடக்கினர்.

**மகாராஷ்டிரர்கள் :**—தென்னிந்தியாவில் பிரிட்டிஷ் தொடர்பால் தோன்றிய மாறுதல்களைப் பற்றி ஆராய்வதற்கு முன் 17-ஆம் 18-ஆம் நூற்றுண்டுகளில் தக்கணத்தில் மிக்க வீரம் படைத்த மகாராஷ்டிர மக்கள் உரிமை வாழ்க்கையும் உயர்ந்த நிலைமையும் அடைய முயன்ற செய்தியை அறிவது அவசியம். 17-ஆவது நூற்றுண்டில் தென்னுட்டு அரசியல் துறையில் மகாராஷ்டிரர் போற்றுதற்குரிய நிலையை அடைந்தனர். 18-ஆவது நூற்றுண்டில் வட இந்தியாவிலும் இவர் செல்வாக்கு உயர்ந்தது. இந்தியா முழுவதிலும் ஒரு பேரரசை நாட்டும் நல்ல தருணமும் அவருக்கு வாய்த்தது. அவர் இந்த உயர்நிலை அடைவதற்கு மகாராஷ்டிர நாட்டின் இயற்கை அமைப்புப் பேருதவி அளித்தது. ஸஹ்யாத்ரி, மேற்குத் தொடர்ச்சிமலை, விந்தியத் தொடர்கள் போன்ற மலைகள் அந்நாட்டிற்கு எல்லையாக அமைந்தன. அது குன்றுகள் நிறைந்த நாடு ; உடலை வலுவூட்டுகிற தட்பவெப்ப நிலையுடையது ; எண்ணிறந்த குன்றுகளும், குன்றுகள் மீது கோட்டைகளும் கரடுமுரடான பாதைகளும் கொண்டுள்ளது. அந்நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அதனை வெல்வது எவர்க்கும் எளிதன்று. நிலம் வளமற்றது ; கடுமுயற்சியின்றி உணவுப் பொருள் எதுவும் பயிர் செய்ய இயலாது. இக்காரணத்தால் தொன்று தொட்டே அந்நாட்டு மக்கள் உயர்ந்த இயல்புகளைப் பெற்றுள்ளனர். தற்சார்பு, அஞ்சாமை, விடா முயற்சி, கபடமற்ற எளிய வாழ்க்கை, களங்கமற்ற மனப்பான்மை, சமூகத்தில் சமநிலை உணர்ச்சி முதலான நற்குணங்களைப் பெற்று விளங்கினர். அத்துடன் பக்தி இயக்கத்தைத் தொடர்ந்து தோன்றிய உருக்கமான பாடல்கள், ஏகநாதர், துக்காராம், இராமதாஸ் போன்ற சீர்திருத்தப் பெரியார்களின் அறவுரைகள் யாவும் மக்களிடையே நல்லொழுக்கத்தையும் ஒற்றுமையுணர்ச்சியையும் வளர்த்தன. மேலும், அவர் வழிவழியே வந்த மரபுப் பண்பும் பெற்றிருந்தனர். சாதவாகனர் காலம் முதல் யாதவராட்சி முடிய,




தென் இந்தியா—(1680) மகாராஷ்டிரர் ஆட்சி

மகாராஷ்டிரத்தில் இந்தப் பண்பாடு வளர்ந்து முதிர்ச்சி பெற்றது. பாமினி அரசர், தக்காணத்தில் ஆட்சி புரிந்த காலத்தில் மகாராஷ்டிரர் அரசியல் துறையிலும் பொருளாதார நிலையிலும் சோர்வடைந்தனர். பிஜப்பூர் தளர்ச்சி அடைந்த பின் மகாராஷ்டிரர் முன்னேறத் தருணம் வாய்த்தது. அத்தருணத்தைப் பயன்படுத்துவதற்குத் தகுந்த தலைவர் ஆகிய சிவாஜியும் அக்காலத்தில் தோன்றினர்.

சிவாஜி 1627-இல் பிறந்தார். அவர் தாயும் தந்தையும் பண்டைய அரசகுல மரபினர். தகப்பனர் ஷாஜி மீவார் நாட்டு சிசோதியர் மரபில் தோன்றியவரெனக் கூறப்படுகிறது. தாயாரோ, பண்பு சான்ற ஜீஜாபாய் ; தேவகிரி யாதவ மன்னர் குலத்தைச் சார்ந்தவர். ஆகவே, சிவாஜிக்கு இளம் பருவத் திலேயே தனி அரசு நிறுவ வேண்டும் என்னும் பேரவாத் தோன்றியது வியப்பன்று. பல வகையிலும் சிறந்த ஆசிரியர் காண்டதேவர்பால் போர்ப்பயிற்சி பெறும் வாய்ப்பும் கிடைத்தது. தமது 18-ஆவது வயதிலேயே போரில் ஈடுபடத் தொடங்கினர். பிஜப்பூர் ஆட்சிக்குட்பட்ட சில கோட்டைகளைக் கைப்பற்றினர். விரைவில் எண்ணற்ற மகாராஷ்டிர இளைஞர் கள் அவர்பால் வந்து சூழ்மி அவரைப் பின்பற்றலாயினர். அவரனைவரும் 'குரங்குப் போர்' முறையில் பயிற்சி பெற்றனர். சிவாஜியின் துணிவுள்ள் அரும்பெருஞ் செயல்களைக் கேட்டு முகலாயப் பேரரசரும், பிஜப்பூர் மன்னரும் அவர்மீது கடுஞ் சினம் கொண்டனர். பிஜப்பூர் தளகர்த்தரான அப்துல்கானின் சூழ்ச்சியை அவர் மேற்கொண்டு வெற்றி பெற்றதும், ஔரங்கசீபின் மாமன் ஷெயிஸ்றகானின் கூடாரத்திற்குள் நள்ளிரவிற் புகுந்து அவரைக் காயப்படுத்தியதும் சிவாஜியின் புகழை எங்கும் பரவச் செய்தன. மக்களுக்கு அவரிடம் நேசம் வளர்ந்தது. பேரரசுப் படைத்தலைவர் ஜெயசிங்கின் வேண்டு கோளுக்கிணங்க ஆக்ராவில் பேட்டி காணப் போனர். ஔரங்கசீப் அங்கு அவர்மீது ஒரு சிறு தவறு சுமத்தி அவரைச் சிறை செய்தார். எனினும் சிவாஜி மிகத் திறமையாகத் தப்பி வெளிவந்து தம் நாட்டையடைந்தார். 1674-இல் தமது முடிசூட்டு விழாவைச் சிறப்பாக நடத்தினர். மன்னர் என்ற

நிலையைப் பெற்றது அவரது மதிப்பையும் மக்கள் மனப்பற்றையும் பெருகச் செய்தது. தம் நாட்டில் உறுதியான அரசியலமைப்பை வகுத்தார்.

பிஜப்பூராட்சிக்குள்ளிருந்த கிழைக் கருநாடகப்[1] பகுதியைச் சிவாஜி தாக்கினர். மிக விரைவில் செஞ்சிமீது பாய்ந்து, அவ்வூரையும் கோட்டையையும் கைப்பற்றினர். பின்னர் வேலூர்க் கோட்டையை ஓராண்டு முழுவதும் முற்றுகையிட்டு அதைப் பிடித்தார். உடனே வலிகண்ட புரத்துத் தலைவர் ஷெர்கானைத் தாக்கி முறியடித்த பின், தமது தந்தையின் சொத்துக்களைப் பங்கிடுவது பற்றித் தமது ஒன்று விட்ட தம்பி வெங்காஜியோடு கலந்து திட்டப்படுத்தும் பொருட்டுத் தஞ்சாவூருக்கு வந்தார். ஆனால் அவரைக் கண்டு பேசியது பயனளிக்கவில்லை. பின்னர், கொள்ளிடத்திற்கு வடக்குள்ள நாட்டைக் கைப்பற்றி ஏராளமான பொருளையும் பெற்றுக்கொண்டு தம் தலைநகருக்குத் திரும்பினர்.

கௌடில்யரும் சுக்கிராசாரியாரும் உரைத்துள்ள பண்டை முறைப்படி சிவாஜியின் அரசியல் உருவாக்கப்பட்டது. எட்டு அமைச்சர்களடங்கிய குழுவையும் பதினெண் அங்கங்களை உட்கொண்ட ஆட்சித் துறையையும் சிவாஜி அமைத்தார். தொன்றுதொட்டே வளர்ந்திருந்த நாட்டாண்மைக் குழுக்களைச் சிவாஜி ஆதரித்தார். மக்களிடமிருந்து நேராக நிலவரியைப் பிரிக்கும்[2] குடிவார முறையையும் பின்பற்றினர். நிலத்தை ஒழுங்காக அளந்து வரியைத் திட்டப்படுத்தினர். நிலத்து விளைவில் நூற்றுக்கு நாற்பது பங்கு வரையில் வரியாகப் பெற்றார். நேர் முகமாகத் தமது ஆட்சியின் கீழே அமைந்த 'சுயராஜ்யம்' என்ற நாட்டை மூன்று மாநிலங்களாக வகுத்து, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு தலைவரை நிறுவினர். மாநில அரசு மத்திய அரசினைப் பின் பற்றியே உருவாக்கப் பட்டது. ஒவ்வொரு மாநிலத்தையும் பல மாவட்டங்களாக

(1) சென்னைக்குத் தெற்கிருந்த பகுதியைக் கருநாடகம் என்று அழைத்தனர்

(2) Ryotwari System

வகுத்தார். முஸ்லீம்களிடம் கைப்பற்றிய நாடுகளில், நிலத்தில் ஒரு பகுதி 'சௌத்' என்ற முறையிலும், இன்னும் பத்திலொரு பகுதி 'சர்தேசிமுகி' என்ற பேரிலும் வசூலிக்கப் பட்டது, நிலவருமானத்திற்கு ஈடாகியது.

காலட்படையிலும் குதிரைப் படையிலும் முறைப்படி நியமனம் பெற்ற வீரர்கள் இருந்தனர். படையில் கட்டுப்பாடு நிலவியது. படையில் சேர்ந்த வீரர் எவரும் தமது வாழ்க்கைத் துணைவியையேனும் காதற்கிழத்தியையேனும் தம்முடனே அழைத்துச் செல்லுதல் கூடாது. கோட்டைகளைத் தகுந்த முறையில் அமைப்பதில் பெருமுயற்சி கொண்டிருந் தனர். ஒவ்வொரு கோட்டைக்கும் வெவ்வேறு சாதியைச் சார்ந்த மூன்று அலுவலாளர்கள் பொறுப்பாளிகளாய் இருந்தனர். சமநிலை பெற்றுள்ள இம்மூன்று அலுவலாளரும் கலந்துதான் கோட்டையைப் பற்றிய எச்செயலையும் நடத்தல் வேண்டும். கடற்படை இன்றியமையாததென்று சிவாஜி உணர்ந்திருந்தார். அது அவரது அரசியல் முன்னோக்கத்தை விளக்குகின்றது. ஏறத்தாழ இருநூறு கப்பல்கள் அடங்கிய கடற்படையை உருவாக்கினர். ஆயின், அக்கப்பல்கள் மிகச் சிறியனவே. அவற்றின் பீரங்கி உறுப்புக்களும் தகுதியற்றனவே.

சிவாஜி பெரிய படைத்தலைவராகமட்டுமே அன்றிச் சிறந்த அரசியல் வல்லுநராகவும் திகழ்ந்தார். பலவாறு சிதறிக் கிடந்த மகாராஷ்டிர மக்களை ஒருங்கே இணைத்து அரசாக அமைத்ததே அவர் நிறைவேற்றிய அரும்பெரும் செயல். தீவிர எதிர்ப்புக்களை மேற்கொண்டே இந்நோக் கத்தைத் திறம்பட முடிக்க வேண்டியதாயிற்று. அவரது குற்றங்குறைகளை மிகைபடக் கூறியுள்ள பகைவர், தாமும் காபிக்கானும்கூடச் சில நற்குணங்களை ஒப்புக்கொள்ளு கின்றனர். தம் கையில் சிக்கிய முஸ்லீம் பெண்டிர் பிள்ளை களைத் தகுந்த முறையில் நடத்திப் பாதுகாத்து வந்தாரெனக் காபிக்கானே கூறியுள்ளார். கோயில்களையோ பிள்ளைகளையோ சிவாஜி ஒருபோதும் சூறையாடியதில்லை. மதவெறி மிகுந்த அந்நாளில் இது பெரிதும் போற்றுதற்குரிய அரிய செயல்

ஆகும். அவரது வாழ்க்கை முறை தூய்மையானது. வஞ்சகமும் கொள்ளையுமே அவரது அரசியலின் அடிப்படைக் கொள்கைகள் எனச் சிலர் பழித்துக் கூறுவது பொருத்தமன்று. சில வேளைகளில் இம்முறைகள் கையாளப்பட்டது உண்மை. ஆயின் அவைதாம் அவரது அடிப்படைக் கொள்கையென்பது தவறு. அன்றியும், அவரது சூழ்நிலையை ஒட்டியே அவரது செயல்களைச் சீர் தூக்கித் திட்டப்படுத்த வேண்டும்.

சிவாஜியின் தகுதியற்ற புதல்வன் சாம்பாஜி, போர் வீரராயிருந்தும், அவர் நிறுவிய பேரரசைத் தகுந்த முறையில் பாதுகாக்க வல்ல திறமை அற்றவராய் இருந்தார். அதனால் அவர்தம் பணியாளர் பலர் கிளர்ச்சி செய்தனர்; அவரைச் சதி செய்து கொன்றுவிடவும் சிலர் முயன்றனர். இவ்வேளை, ஔரங்கசீப் மகாராஷ்டிரம், பிஜப்பூர், கோல்கொண்டா என்னும் மூன்று நாடுகளையும் அழிக்கத் திட்டமிட்டுத் தெற்கில் வந்து பாளையமிறங்கியிருந்தார். அவரோடு சாம்பாஜி போர் நடத்தினர். இறுதியாக 1689-இல் ஔரங்கசீப் சாம்பாஜியைப் பிடித்துக் கொலை செய்துவிட்டார்.

அவரது ஒன்றுவிட்ட தம்பி இராஜாராம் நல்வினைப்பயனால் தப்பித்துக்கொண்டார். அவர் செஞ்சிக் கோட்டையை வலுப்படுத்தி மகாராஷ்டிரப் படைத்தலைவர்களின் உதவியால் மக்கட் போராட்டத்தைத் தொடங்கி வைத்தார். ஔரங்கசீபுக்கு இடுக்கண்கள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றின. வட இந்தியாவில் அரசியற்கிளர்ச்சிகள் தலை தூக்கின. அவரது படையினால் செஞ்சியைக் கைப்பற்ற இயலவில்லை. 1698-இல் கோட்டையைப் பிடிப்பதற்குள் இராஜாராம் தப்பி, சத்தாராவிற்குச் சென்றுவிட்டார். ஔரங்கசீப் சத்தாராவை முற்றுகையிட்டார்; எனினும், அதைக் கைப்பற்று முன் இராஜாராம் இறந்துவிட்டார். அதன் பின், ஔரங்கசீப் எதிர்பாராத முறையில் இராஜாராம் மனைவி தாராபாய், மகாராஷ்டிரப் படைக்குத் தலைமை பூண்டு போரைத் தொடர்ந்து நடத்தினர். போர் நீடித்தது. கோட்டைகளை முகலாயர் கைப்பற்றுவதும் கைவிடுவதுமாகவே நாட்கள்

கழிந்தன. 1707-இல் ஔரங்கசீப் காலஞ்சென்ற பின்னும் மகாராஷ்டிரியப் போர் முடிந்தபாடில்லை.

அதற்குப் பின் மகாராஷ்டிர மக்களுக்கு வேறு வகை இன்னல்கள் தோன்றின. சாம்பாஜி இறந்தது முதல் அவர் புதல்வர் சாகுவை முகலாயர் சிறையில் வைத்திருந்தனர். மகாராஷ்டருக்குள் பிரிவினையைத் தோற்றுவிப்பதற்காக இவ்வேளையில் அவரை விடுதலை செய்தனர். அன்னூர் எதிர் பார்த்த வண்ணமாகவே சாகுவிற்கும் தாராபாய்க்கும் சண்டை மூண்டது. இறுதியில் சாகுவின் பேஷ்வா பாலாஜி விசுவநாதராவு தாராபாயைச் சிறையில் வைத்தார். இக்கால முதல் மகாராஷ்டிரத்தில் பேஷ்வா, தலைமை அமைச்சராக மட்டு மன்றி, உண்மையில் அரசுக்கே தலைவராய்விட்டார். சாகுவும் அவர் பின்வந்தோரும் பெயரளவிலே மன்னர்களாயிருந்தனர். நாட்டில் அமைதியை நிலைநிறுத்திய பின்னர் சௌத்தும் சர்தேசிமுகியும் பிரிப்பதன் பொருட்டு விசுவநாதராவு, முகலாயப் பேரரசின் பல பகுதிகளைப் பல்வேறு மகாராஷ்டிரத் தலைவர்களுக்குப் பகிர்ந்து அளித்தார். இம்மாறுதல் பழைய முகலாய மாநிலங்களில் ஹோல்கரின் இந்தோர், சிந்தியாவின் மாளவம், பான்சிலேயின் நாகபுரி, கெயிக்வாரின் பரோடா என மகாராஷ்டிர அரசுகள் பல தோன்றுவதற்கு அடிகோலியது. இதனை அடிப்படையாகக்கொண்டு மகாராஷ்டிரக் கூட்டுக் கழகம் உருவாயிற்று.

விசுவநாதராவின் புதல்வர் முதல் பாஜிராவு (1720-40) முகலாயர் நாட்டின்மீது படையெடுக்கும் முற்போக்கான முயற்சியைக் கையாண்டார். குஜராத், மாளவம், பண்டல் கன்று என்னும் மூன்று இடங்களையும் முதலில் கைப்பற்றினர். அடுத்தபடியாக மகாராஷ்டிரப் படை தக்காணத்தைக் கைப்பற்றி ஆர்க்காட்டு நவாபையும் தாக்கித் தஞ்சாவூர் அரசுக்குத் தெற்கு வரையிலும் முன்னேறிச் சென்றது.

1740-இல் பதவிக்கு வந்த பாலாஜி பாஜி ராவு (1740-61) தம் தந்தையாரின் பெருமுயற்சியை மேலும் ஊக்கத்துடன் தொடர்ந்து நடத்தினர். மைசூர், ஹைதரபாத், தமிழ்நாடு

ஆகிய மாநிலங்களில் இவர் கப்பம் பெற்ருர். அப்கானியப் படையெடுப்பாளர் அகமதுஷா அப்தாலி என்பார் கைப்பற்றியிருந்த பஞ்சாப் நாட்டை அவருடன் போரிட்டு வென்ருர். ஆனல், கடைசியில் அப்தாலி மாபெரும் பானிப்பட்டுப் போரில் மகாராஷ்டிரரை முறியடித்து அவர்களை நிலை குலையச் செய்தார். இப்படுதோல்வியோடு மகாராஷ்டிரர் முன்னேற்றத்திற்குரிய எதிர்கால வாய்ப்பும் அடியோடு அழிந்தது.

நான்காவது பேஷ்வா மாதவராவ்(1761—72) மகாராஷ்டிர நிலையை ஒருவாறு மீட்டார். தெற்கில் ஹைதராலியைத் தாக்கி முறியடித்தார் ; வடக்கில் தில்லியைக் கைக்கொண்டார். மாதவராவு இறந்ததும், நாராயணராவ் பேஷ்வா ஆனர். உடனே மரபுரிமை வழக்குத் தலை தூக்கியது. ஒரு கட்சி பம்பாயிலிருந்த ஆங்கிலேயரின் உதவியை நாடியது. இது பின்னர், ஆங்கிலேயரோடு மகாராஷ்டிரர் நடத்திய முதற் போருக்குக் (1775—82) காரணமாயிற்று. முதற்கண் ஹோல்கரும் சிந்தியாவும் தோல்வியடைந்தனர். வாரன் ஹேஸ்ற்றிங்ஸ், மகதாஜி சிந்தியாவுக்கு அவரது நாட்டைத் திருப்பிக்கொடுத்து, பேஷ்வாவின் அந்தரங்கச் செயலாளர் நாஞபெட்ஞவிஸ்ுக்கும், மகதாஜி சிந்தியாவுக்கும் பொருமையை விளைவித்தார். சிந்தியா போரிலிருந்து பின் வாங்கினர். நாஞபெட்ஞவிஸ் மனக்கசப்புடன் சால்பே உடன்படிக்கைக்கு இசைந்தார். இந்த உடன்படிக்கையின்படி மாதவராவ் நாராயணராவ் என்றவர் பேஷ்வாவாக அங்கீகரிக்கப் பட்டார். ஸால்ஸெற்றியைத்தவிர மகாராஷ்டிரர் கைப்பற்றியிருந்த மற்றெல்லா இடங்களும் ஆங்கிலேயருக்கு மீண்டும் கிடைத்தன. ஆனல் 1764-இல் தில்லி, ஆக்ரா என்னும் இவ்விரண்டு இடங்களிலும், சிந்தியா தமது மேலாட்சியை ஏற்படுத்தியதுமல்லாமல், பேரரசரையே வென்றதனல் ஆங்கிலேயரிடமிருந்தும் கப்பம் கேட்டார். இதற்குள் நாஞபெட்நாவிஸுக்கும் மகதாசி சிந்தியாவுக்கும் இடையே பகைமை முதிர்ச்சி பெற்றது. எனினும் 1792-இல் சிந்தியா இறந்ததும், மகாராஷ்டிரர் அரசியல் நிலை மாற்றமடைந்தது.




**தென் இந்தியா —(1805) பிரிட்டிஷ் பகுதிகள்**

உள்நாட்டு நிகழ்ச்சிகளில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றிய ஸர் ஜாண் ஷோர், ஆங்கில அரசியல் பெருந் தலைவராகப் பணியாற்றிய போது மகாராஷ்டிரர் நிஜாமைத் தாக்கி **கார்தா** எனுமிடத்தில் போரிட்டு அவரை வென்றார். இத்தோல்வியின் விளைவாக நிஜாம் தம் நாட்டில் ஒரு பகுதியை இழக்க நேரிட்டது. மகாராஷ்டிரருக்கு இவ்வெற்றி பல வகை ஊதியங்களை அளித்தது. நானாபெட்நாவிஸின் புகழும் உயர்ந்தது. ஆனால், ஒரு மாதத்திற்குள் மாதவராவ் நாராயணராவ் தற்கொலை செய்துகொண்டார்; உடனே இரண்டாம் பாஜிராவ் என்னும் திறனற்ற இளைஞர் பேஷ்வா வானார்.

1800-இல் நானாபெட்நாவிஸ் இறந்தார். அவரது சாவு மகாராஷ்டிர அரசியலுக்குப் பெரும் கேடு விளைவித்தது. தௌலத்ராவ் சிந்தியாவுக்கும் ஜஸ்வந்த ராவ் ஹோல்கருக்கும் போர் தொடங்கியது. பேஷ்வா சிந்தியாவுக்கு உதவி யளித்தார்; அதனால் தௌலத்ராவ், பேஷ்வாவை முறியடித் துத் துரத்திவிட்டார். ஆகவே பேஷ்வா பேஸினுக்குச் சென்று ஆங்கிலேயரிடம் அடைக்கலம் புகுந்தார். இவ் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு வெல்லெஸ்லி, பேஷ் வாவைத் துணைத் தொடர்பு உடன்படிக்கையில் இணைத்தார். மகாராஷ்டிர நாட்டுத் தலைவர் பிரிட்டிஷாருடன் உடன்படிக்கை செய்த பின் சண்டை சச்சரவுகளனைத்தும் தீருமென எதிர் பார்த்தார். ஆனால் சிந்தியாவும் இரகோஜி பான்ஸ்லேயும் பேஷ்வாவின் துணைமைத் தொடர்பு உடன்படிக்கையை ஆதரிக்கவில்லை. அதனால் வெல்லெஸ்லி போர் தொடங்கினார். **அஸ்ஸே, அரக்காண்** என்ற இரண்டு இடத்திலும் மகாராஷ்டிரர் தோற்றோடினர். முதலில் பான்ஸ்லே **தியோகாணில்** உடன் படிக்கை செய்துகொள்ள நேர்ந்தது. இதன்படி சில நாடுகளை ஆங்கிலேயருக்கு விட்டுவிட உடன்பட்டார். அன்றி யும் பிற நாட்டுச் செயல்களை அடக்கி ஆளும் தம் உரிமையை ஆங்கிலேயருக்கு அளித்தார்; 1804-இல் சிந்தியா ஆங்கிலேயருடனே **லஸ்வாரி** என்னுமிடத்தில் நிகழ்த்திய போரில் தோல்வி அடைந்தார். அதனால் மாளவத்தைத் தவிர

மற்றெல்லா நாட்டையும் ஆங்கிலேயருக்கு ஒப்படைக்கவும், **சூர்ஜி அர்ஜங்கான்** ஒப்பந்தத்திற்கு உடன்படவும் நேரிட்டது. ஆகவே, ஹோல்கர் மட்டிலும் தனியானர். பரத்பூர், ஜெயப்பூர், ஜோத்பூர் முதலிய பல இராஜபுத்திர நாடுகள் ஆங்கிலேயரோடு துணைத் தொடர்பு ஒப்பந்தம் செய்துகொண்டன. அதன் விளைவாய் ஆங்கிலேயப் படைகள் அவ்வந்நாடுகளில் அமர்ந்தன. அதனல் அந்த இடங்களில் ஹோல்கர் வழக்கப்படி சௌத் பிரிப்பதற்குத் தடை ஏற்பட்டது. மேலும், ஹோல்கரை ஆங்கிலேயர்தாமும் தாக்கினர். ஆங்கிலப் படைத் தலைவர் லேக், ஹோல்கரைச் **சம்பல்** ஆற்றிற்குத் தெற்கே துரத்தி அடித்த போதிலும், மாண்ஸண் என்ற ஆங்கிலத் தளகர்த்தர் ஹோல்கரிடம் தோல்வியடைந்து ஆக்கிராவிற்குத் திரும்பும்படி நேரிட்டது. ஹோல்கர் தில்லியை முற்றுகையிட்டார். ஆனல் கர்ணல் முர்றே இந்தோரைத் தாக்கினர். ஹோல்கர் தில்லியிலிருந்து திரும்பிய போது முதலில் மாண்ஸணும், பின்னர் லேக்கும் **பருக்கபாத்** என்னுமிடத்தில் ஹோல்கரை முறியடித்தனர். மனமுறிவுற்ற ஹோல்கர் பஞ்சாபுக்குத் தப்பி ஓடினர். இத்தறுவாயில் வெல்லெஸ்லி தாயகத்திற்குத் திரும்ப நேர்ந்தது. ஆகவே, சில காலம் மகாராஷ்டிரப் போர் நின்று சற்று அமைதி நிலவியது.

மகாராஷ்டிரப் பூசல் ஹேஸ்ற்றிங்ஸ் பிரபு காலத்தில் இறுதியாக முடிவடைந்தது. பழைய பற்று வரவுக் கணக்குப்படி அறுபது இலக்ஷம் ரூபாய், கேக்வார் தமக்குக் கொடுக்க வேண்டுமெனக் கூறி, அத்தொகைக்காக 1814-இல் பேஷ்வா அவரை மிகவும் நெருக்கினர். கேக்குவார் அதை மறுக்கவே, இந்த வழக்கை ஆராய்ந்து தீர்க்கும் பொருட்டுப் பிரிட்டிஷ் அரசினர் கேக்வாரின் முதல் அமைச்சர் கங்காதரசாஸ்திரியைப் புனவுக்கு அனுப்பினர்கள். ஆனல், அங்குப் பேஷ்வாவின் கையாளான கெடுசோதிரி திறும்பக்ஜி என்பாரின் ஏவலினல் சாஸ்திரி கொலையுண்டார். பிரிட்டிஷார் கொலைகாரனை உடனே கைது செய்தனர். ஆனல், அவன் தப்பித்து ஓடி ஹோல்கரோடும் சிந்தியாவோடும் சூழ்ச்சி செய்ய முயன்றன்.

புனவிலுள்ள பிரிட்டிஷ் பிரதிநிதியின் மாளிகையைப் பேஷ்வா தீக்கு இரையாக்கினர். ஹோல்கரோடும், அப்பா சாகிப் பான்ஸ்லேயோடும் அவர் சதியாலோசனை செய்தார். அப்பா சாகிபும், ஹோல்கரும் தத்தம் தலைநகரிலிருந்த பிரிட்டிஷ் பிரதிநிதிகளைத் தாக்கினர். கடைசிப் போரும் மூண்டது. ஜெனரல் ஸ்மித் புனவைக் கைப்பற்றினர். தப்பியோடிய பேஷ்வாவைப் பின் தொடர்ந்தார். பிரிட்டிஷ் படை சிறிதும் சலிப்பின்றிப் பேஷ்வாவைத் தாக்கி, பல முறை அவரை முறியடித்து, இறுதியாக 1818-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அவரைத் தமக்கு அடிபணியச் செய்தது. அப்பா சாகிபையும் பிரிட்டிஷார் தோற்கடித்துத் துரத்தினர். அவர் கடைசியாக இரஞ்சித் சிங்கிடம் சென்று தஞ்சமடைந்தார். பிரிட்டிஷார் அவர் பதவியில் மூன்றும் இரகோஜி பாண்ஸ்லேயை நியமித்தார். 1811-இல் ஹோல்கர் காலஞ் சென்ற பின் மல்கர் ராவ் பட்டமெய்தினர். அப்பொழுது அவர் நான்கு வயதுச் சிறுவர். ஆகவே, நாட்டில் கலகம் மிகுந்தது. ஹோல்கரின் படை பிரிட்டிஷாரால் மகித்பூரில் முறியடிக்கப்பட்டது. அத்துடன் மகாராஷ்டிரர் போராட்டம் முடிவடைந்தது. மகாராஷ்டிர நாடு முழுவதும் பிரிட்டிஷார் தலைமையை ஒப்புக்கொண்டது. (1818)

ஆகவே, மகாராஷ்டிரர் இந்தியாவில் முதன்மையான இடம் பெற அவர்களுக்கு நல்ல வாய்ப்புக்கள் இருந்தன. அவர்களுடைய முயற்சிகள் வெற்றி பெருமைக்கு முக்கிய காரணம், அவர்களுடைய கூட்டுறவின் அங்கத்தினர்கள் தமக்குள்ளே ஒற்றுமையில்லாது நடந்துகொண்ட செயலேயாம். வலிமை பெற்ற அக்கூட்டாளிகளை அடக்கி ஆளப் பேஷ்வாவும் திறமையற்றவராய் இருந்தார். மேலும், மகாராஷ்டிரர் போர்ப்பயிற்சி ஆங்கிலப் போர் வீரர் முன்னே பலிக்கவில்லை. அவர்கள் படையின் அமைப்பு, போர்க் கருவிகள், தளவாடங்கள், கட்டுப்பாடுகள் முதலியன மிகவும் பின்னடைந்த நிலையிலிருந்தன. கொடுங்கோன்மையினல் அரசிறை வருமானம் குறைந்தது. இரு சிறு இளைஞர்களாகிய பாஜீராவும், தௌலத்ராவ் சிந்தியாவும் இறுதியில் பட்டமெய்தியது

மகாராஷ்டிரர் நிலையைத் தளரச் செய்தது. எனவே, அவர் நாட்டில் கொடுங்கோலாட்சி, கொடுமை, கொள்ளை முதலான தீச் செயல்கள் யாவும் ஒருங்கே தொடர்ந்து நடைபெற்றன. மக்களுக்கு அளவில்லாத துன்பமும் இடுக்கண்களும் நேர்ந்தன. ஊழிய மானியம் பெற்றிருந்தார் பலரும், குறிப்பாக, தென் மகாராஷ்டிர நாட்டிலுள்ளவர்கள், அரசாங்கத்தில் பற்றற்று, ஆங்கிலேயரின் பாதுகாப்பை நாடும்படி நேரிட்டது.

தென் கோடியில் தஞ்சாவூரில் மகாராஷ்டிரர் மரபு ஒன்று பதினேழாம் நூற்றாண்டின் இறுதி முதல் ஆட்சி புரிந்தது. இந்த மகாராஷ்டிர அரசு அங்குத் தோன்றிய முறை மிக்க விநோதமாகும். மதுரைச் சொக்கநாத நாயக்கர் (1659—82) தஞ்சாவூர் இரகுநாத நாயக்கரை 1673-இல் முறியடித்துக் கொன்றார். பின்பு, தமது தம்பி அழகிரியைத் தஞ்சாவூர் அரசராக முடிசூட்டினார். ஆனால், இரகுநாத நாயகரின் கீழ் அலுவலாளராயிருந்த வெங்கண்ணா என்பவர் இரகுநாத நாயக்கரின் உறவினரான செங்கமல தாஸ் சார்பாக பிஜப்பூர் சுல்தானோடு அழகிரிக்கு எதிராகச் சதி ஆலோசனை நடத்தினார். அழகிரியை நாட்டைவிட்டுத் துரத்தும் பொருட்டுச் சுல்தானின் உதவியையும் நாடினார். சுல்தான், தமது படைத்தலைவர் வெங்கோஜியை[1] அனுப்பி வைத்தார். ஷாஜியின் புதல்வரான வெங்கோஜி, சிவாஜியின் ஒன்றுவிட்ட தம்பி. வெங்கோஜி அழகிரியைத் தோற்கடித்தார்; செங்கமல தாஸைத் தஞ்சை அரியணையில் அமர்த்திவிட்டுச் சென்றார். நயவஞ்சகரான வெங்கண்ணா தாம் எதிர்பார்த்த வண்ணம் உயர் பதவி கிடைக்கப் பெறாமையால், வெங்கோஜியைக் கண்டு பேசி அரச பதவியைக் கைப்பற்றித் தஞ்சை அரசைத் தமதாக்கிக் கொள்ளத் தூண்டினார். வெங்கோஜியும் இதற்கு இணங்கி, செங்கமல தாஸரைப் போரில் முறியடித்து 1675-இல் தாமே அரசராயினார். வெங்கோஜியின் மரபைச் சேர்ந்தோர் சில காலம் ஆட்சி புரிந்தனர். அவருள் இறுதியில் ஆண்ட சரபோஜி மன்னர், ஆங்கில அரசாட்சித் தலைவர் வெல்லெஸ்லி காலத்தில் அரசினை அவர்பால் ஒப்புவித்துவிட்டு, உதவிச்

1. இவருக்கு எக்கோஜி என்றும் மற்றுமொரு பெயருண்டு.

சம்பளம் பெற்றுப் பதவியிலிருந்து நீங்கினர். இளமையில் சரபோஜி, கிறிஸ்து சமய பரமகுரவரும் பேரறிஞரும் ஆகிய சுவார்ஸ் என்பாரின் மேற்பார்வையில் வளர்ந்து பண்பும் கலைத்திறமும் வாய்க்கப் பெற்றவர். அவர் தஞ்சை நகரில் புகழ் பெற்ற நூல் நிலையம், பொருட்காட்சி சாலை, அச்சு நிலையம் முதலியவற்றை நிறுவித் தம் புகழை நிலை நாட்டினர். 1833-இல் அவர் காலஞ்சென்ற பின், அவர் புதல்வர் சிவாஜி பெயரளவில் பட்டம் பெற்றார். சிவாஜிக்கு ஆண் மகவு இல்லை. ஆகவே, அவர் இறந்த போது, 1855-இல் ஆங்கில ஆட்சித் தலைவர் டல்ஹௌஸி அவ்வரசினைத் தம் ஆட்சியில் சேர்த்துக்கொண்டார்.

**சமூக வாழ்க்கை :** 17, 18-ஆவது நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிலும் போர்கள் அடிக்கடி நிகழ்ந்தன. உள் நாட்டு அரசுகளும் ஐரோப்பிய வர்த்தகக் குழுக்களும் பற்பல போர்களில் ஈடுபட்டன. சில வேளைகளில் போருக்குப் பின் எதிரிகளின் நிலபுலங்களை அழிப்பதும் மக்களுக்குத் துயரிழைப் பதும் ஆங்காங்கே நடைபெற்றன. தெற்குக் கோடியில் அமைக்கப்பட்டிருந்த பாளையக்காரர்கள், ஒரியா, தெலுங்கு நாடுகளைச் சார்ந்த ஜமீன்தார்கள், அவர்கள் அலுவலாளர்கள் முதலியோர் மக்களைப் பல வகையாகத் தொல்லைப்படுத்தினர். நாட்டில் அமைதி குறைந்தது. களவும், கொள்ளையும், வழிப் பறியும், கொலையும் பல இடங்களிலும் நடைபெற்றன. இத்துடன் அவ்வப்போது, தொத்து நோய்கள், பஞ்சம் முதலியவை தாண்டவமாடின. அக்காலத்தில் மேல் நாட்டி லிருந்து தென்னிந்தியாவிற்கு வந்திருந்த கிறிஸ்து சமய குரவர்கள் பலர் இக்குறைகளைத் தம் எழுத்துக்களில் எடுத்துக் காண்பித்துள்ளனர்.

ஆயினும், வாழ்க்கை முறையில் பெரிய மாற்றம் யாதும் தோன்றவில்லை, பழைய பழக்க வழக்கங்களில் மக்களது விருப்பம் வேரூன்றியிருந்ததே இதற்குக் காரணம். கூட்டுக் குடும்ப வாழ்க்கை, சாதிக்கட்டுப்பாடு, கிராமக் கூட்டுறவு முதலியன நிலை பெற்றிருந்தன. கிராமப் பஞ்சாயத்துக்களும்

மற்றும் குடியாட்சிக் குழுக்களும் முன் போலவே பணியாற்றி வந்தன. இக்காலத்தில் பதினெண் சாதிகளைப் பற்றி வடக்கு இக்கேரியிலும் தெற்கே நாஞ்சில் நாட்டிலும் பொறிக்கப் பட்டுள்ள சில கல்வெட்டுக்களில் பல விவரங்களைக் காண லாம். இப்பதினெண் சாதிகளுக்குள் கிளைச் சாதிகள் பல்கின. சாதிச் சண்டைகளும் மும்முரமாயின.

பார்ப்பனர் முன் போலவே உயர்நிலையிலிருந்தனர். சமூக வாழ்க்கையிலும் அரசியல் துறையிலும் தொடர்ந்து அவர்க்குச் செல்வாக்கு இருந்தது. மகாராஷ்டிரத்தில் பேஷ்வா ஆட்சி சாதிக் கட்டுப்பாடுகளை ஊக்கப்படுத்தியது. சாதி ஆசாரங் களும் நிபந்தனைகளும் ஏற்பாடுகளும் வலுவுற்றன. கேரளத்தில் நம்பூதிரிகள் ஆதிக்கம் வளர்ந்து வந்தது. அரசர்களும் நம்பூதிரிகள் ஆணைக்குட்பட்டுச் செயலாற்றினர். அரசியல், கோயில், சமூகம் யாவற்றிலும் அன்னார் வரம்பில்லாத செல்வாக்குப் பெற்றிருந்தனர். கன்னடம், தெலுங்கு, தமிழ் மொழிகள் வழங்கிய நாடுகளிலும் பார்ப்பனரது உயர்நிலை குன்றவில்லை. கன்னட நாட்டில் வீர சைவர்கள் வீறுபெற்றுயர்ந்தனர். அதனால் அங்குச் சில இடங்களில் பார்ப்பனரது செல்வாக்குக் குறைந்தது.

கல்வித் துறையில் பார்ப்பனருக்குப் பெரும் வசதி இருந்தது. முன்னுள்ள கடிகைகள் இக்காலத்தில் இல்லை. பல காரணங்களால் அவை எடுபட்டுப் போயின. அக்கிரகாரங்களும் கல்வியில் முன் போல் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்ததாகத் தோன்றவில்லை. ஆயினும் நாட்டில் பல பார்ப்பனக் கிராமங்களில் அறிவு நிறைந்த ஆசிரியர்கள் வாழ்ந்தனர். அவரிடத்தில் பலரும் சென்று கல்வி கற்றனர். கோயில்களில் கலைப்பயிற்சிகளும் மதச்சார்பான ஆராய்ச்சி களும் விவாதங்களும் நடைபெற்றன. பதினாயிரத்துக்கு மேற்பட்ட பார்ப்பன மாணாக்கர் மதுரையில் கல்விப் பயிற்சி பெற்றனர் என்று கிறிஸ்து சமயத் தொண்டர் இராபர்ட் டி நொபிலி 17-ஆம் நூற்றாண்டில் எழுதியுள்ளார். மடங்கள் பல நிறுவப்பெற்றுத் திகழ்ந்தன. ஆயின், பொதுமக்கள் கல்வி யில் அம்மடங்கள் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. உயர் வகுப்பு

மக்களின் அறிவை வளர்ப்பதில் இவை பெருந்தொண்டாற்றின. மதச் சார்பான கருத்துக்களை ஆராய்வதிலும் விவாதிப்பதிலுமே அவர்கள் பெரும்பாலும் ஆழ்ந்திருந்தனர். நாளடைவில் சில மடங்கள் சீர்குலையத் தொடங்கின. பண ஆசை, தற்பெருமை, கூடாவொழுக்கம், உலகப் பற்று முதலியன மடாதிபதிகளையும் அவர் அலுவலாளர்களையும் கவர்ந்தன. மடத் தலைவர் சிலர் தாமும் நேர்முகமாகத் தீயவழியில் இறங்கினர். தொடக்கக் கல்வி திண்ணைப் பள்ளிக்கூடங்களில் நடைபெற்றது. ஆங்காங்குச் சிற்றூர்களிலும் பெருநகரங்களிலும் சில ஆசிரியர்கள் குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து வந்தனர். ஆனால், அவர் தம் பெண்களுக்குக் கல்வி அளிக்கவில்லை.

பெண் மக்கள் நிலை தாழ்வடைந்தது. அவர் ஒதுங்கி இருந்து தம் வாழ்க்கையை நடத்தினர். வீடும் குடியுமே அவரது முழுக் கவனத்தையும் கவர்ந்தன. விலைமகளிர் கூட்டம் நகரங்களிலும் கிராமங்களிலும் காணப்பட்டது. அவருள் தேவ தாசிகள் என்பார் ஒரு பிரிவினர். முற்காலத்தில் இறைவன் தொண்டிலேயே அவர் ஈடுபட்டிருந்தனர். அதனால் தேவரடியார் என்னும் பெயர் சிறப்பாக அவருக்கு வழங்கியது. அப்பர் தமக்கையர் திலகவதியார் முதலான கல்வியறிவொழுக்கம் சான்ற கன்னியர் திருக்கோயில் திருப்பணிகளில் ஈடுபட்டுத் தூய வாழ்க்கை நடத்திவந்த செயலைப் பெரிய புராணத்திற் காணலாம். ஏறத்தாழ 15-ஆவது நூற்றாண்டு முதல் தேவரடியார் வாழ்க்கை முறை சீர்குலைந்ததெனலாம். பின்னர்ப் பொதுவாக அவரும் விலைமகளிராகவே வாழ்க்கை நடத்தினர். திருக்கோயில் தலைவர்களாய் இருந்தவர்களின் தீச்செயல்களும் கொடுமையுமே அதற்குக் காரணம். ஆடவர் பல மகளிரை மணம் செய்தல் வழக்கத்திலிருந்தது. குறிப்பாகச் செல்வர்களிடம் இவ்வழக்கம் மிகுதியாகக் காணப்பட்டது. அது தவிர, பலர் தமக்கு வைப்பாட்டிகளும் காதற்கிழத்தியரும் வைத்திருந்தனர். மன்னர்கள், பல பெண்களை ஒருங்கு சேர்த்து அவர்களை அந்தப்புரம், உவளகம்

என்னும் மாளிகைகளில் வைத்துப் பேணுவது இக்காலத்தில் வழக்கமாயிற்று. அவரை உரிமைச் சுற்றம் எனவும் பெருமை யாக வழங்கினர். இது, முகலாய மன்னர் முதலான முஸ்லிம் மக்களைப் பின்பற்றித் தோன்றிய கொடுஞ்செயல் எனலாம்.

மன்னர் இறந்தால் அவர் மனைவியர் அனைவரும் உடன் கட்டை ஏறினர் அல்லது தீப்பாய்ந்தனர். செல்வர், உயர் குலத்தோர் ஆகியோரிடம் இவ்வழக்கம் தொடர்ந்து வழக்கத்தில் இருந்தது. 18-ஆவது நூற்றாண்டில் கன்னட நாட்டில்தான் இது மிகுதியாகக் காணப்பட்டது. பெரும்பாலும் கைம் பெண்டிர் தனியாக உடன்கட்டை ஏறினர். இலிங்காயத்தைச் சார்ந்த பெண்களும் வேறு சிலரைச் சார்ந்த பெண்களும் தம் கணவர் பிணத்துடனே தீக்கிரையாயினர். தெற்குக் கோடி நாடுகளில் உடன்கட்டை ஏறுதல் மிகக் குறைவாயிருந்தது. சிறு பருவ மணம் தென்னிந்தியாவில் பரவியிருந்தது. பார்ப்பனரும் மற்றைய உயர்ந்த வகுப்பினரும் இவ்வழக்கத்தை உறுதியாகக் கையாண்டனர். நாளடைவில் மற்ற வகுப்பின ரிடமும் அது பரவியது. திருவிதாங்கூரிலும் மலபாரிலும் குழந்தைப் பருவ கலியாணம் வழக்கத்தில் வரவில்லை. நம்பூதிரிகள், நாயர்கள், மற்ற வகுப்பினர் எவரும் இதைக் கைக்கொள்ளவில்லை. தமிழகத்திலிருந்து சென்று அங்குத் தங்கியிருந்த பார்ப்பனர் மட்டுமே அவ்வழக்கத்தைக் கையாண்டு வந்தனர். கேரளத்தில் வெளி நாட்டுப் படையெடுப்புக் குறைவாக இருந்ததே இதற்கு முக்கிய காரணம். உண்மையில், வட இந்தியாவில் குழப்பம் மிகுதிப் பட்ட காலத்தில் இப்பழக்கம் தோன்றி, பின்பு மற்றப் பகுதிகளுக்குப் பரவியதெனலாம்.

மக்கள் உணவில் பெரும் மாற்றமொன்றும் தோன்ற வில்லை. தக்காணத்தில் வாழ்ந்த முகம்மதியர் பலர் கோதுமை உணவைப் பயன்படுத்தினர். அவரைச் சுற்றியிருந்த சில இந்துக்களும் இதைப் பின்பற்றினர். பார்ப்பனர், வீரசைவர், சைவ வேளாளர், மற்றும் உயர்ந்த வகுப்பினர் அனைவரும் மரக்கறி உணவே உண்டனர். சமூக உயர்நிலைக்குப் புலால் மறுத்தல் காரணம் என்று பலர் கருதினர். குடிவெறி

முன்னுளிலிருந்து குறைந்ததெனக் கருதலாம். அதற்கும் முற்கூறிய சமயவொழுக்கமே காரணம். ஒரியர், குடியைப் புறக்கணித்தனர். கேரள மக்களும் பெரும்பாலும் இத்தீய வழக்கத்தைப் பின்பற்றிலர். ஆனல், எளிய மக்களும் தாழ்ந்த வகுப்பினரும் ஆகிய தொழிலாளிகள் கள்ளும் சாராயமும் உழைப்பிற்கு ஊக்கம் அளிப்பன என்று கருதி, அவற்றை மிகுதியாகப் பருகி வந்தனர். செல்வம் மிகுந்த உயர் குலத்தோரும் மறைமுகமாக மதுபானம் செய்தனர்.

பொது மக்கள் ஆடை அணிகலன்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் திகழவில்லே. மன்னர்களும் அவரைச் சார்ந்த அலுவலாளர்களும் தமது ஆடை அணிகலன்களுக்காக பெருந் தொகை செலவு செய்தனர். பகட்டணியில் விருப்பம் மிகுதி யாகக் காணப்பட்டது. இது முகலாயர், தக்காண சுல்தான் கள், பேஷ்வாக்கள் முதலியோரது பழக்கங்களேப் பிறகு பின் பற்றியதால் தோன்றியிருக்கலாம். அன்றியும், அரசவைகளும் அரசர் மாளிகைகளும் சிறந்த வேலேப்பாடுகள் மிகுந்த சிற்ப ஓவியங்களால் அழகுபடுத்தப் பெற்றன.

அரசவையில் ஆடம்பரங்களும் விழாக்களும் எண்ணிக்கை யிலும் சிறப்பிலும் மிகுந்தன. வாண வெடி இக்காலத்தில் பயன்படுத்தப்பட்டது. பேஷ்வாக்கள் ஊர்வலம் வந்தபோது வாணவெடி மும்முரமாக முழங்கியது. அரசவை அமைப்பிலும் பழக்க வழக்கங்களிலும் முகலாய முறைகள் தெற்கு மதுரை வரையிலும் பரவியதெனலாம்.

மக்களது திருநாள், பெருநாள் கொண்டாட்டங்களும் பெருகின. தசரா, தீபாவளி, தைப் பொங்கல், சித்திரை விழா, கார்த்திகை விளக்கு, திருவாதிரை நோன்பு முதலியன நாடெங்கும் விமரிசையாக நடைபெற்றன. தீபாவளி கேரளத்தைத் தவிர ஏனேய நாடுகளில் கொண்டாடப்பட்டது. கேரளத்தில் ஓணமும், தமிழ் நாட்டில் தைப் பொங்கலும், கன்னட தெலுங்கு நாடுகளில் சங்கராந்தியும் தனிச் சிறப்புப் பெற்றிருந்தன. மகாராஷ்டிரத்தில் கணபதி விழாக்கள்,

ஹோளி பண்டிகை என்னும் காமன் விழா, பத்து நாள் திருவிழா முதலியவை விமரிசையாக நடந்தன. இவை பற்றிய முழு விவரங்களும் நாட்டுப் பாடல்கள், கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் வெளிநாட்டு அறிஞர் வரைந்துள்ள குறிப்புக்கள் முதலியவற்றில் கிடைக்கின்றன.

முன்னிருந்தவை தவிர, புதிய வேடிக்கைகளும் விளையாட்டுகளும் தோன்றின. மற்போரும், கைச்சண்டையும் இக்கால வழக்கத்தில் வந்தன. சிறுமிகள் இசையுடன் ஆடும் கோலாட்டம் எங்கும் பரவியிருந்தது. மேலும் கழைக் கூத்தாடிகள், பாம்பாட்டிகள், மாய வித்தைக்காரர் முதலியோர் ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு மகிழ்ச்சி யளித்து ஊதியம் பெற்றனர்.

மதம் பற்றிய சச்சரவுகள் ஆங்காங்குத் தோன்றிய போதிலும் பொதுவாகத் தென்னிந்தியாவில் விரிந்த நோக்கம் நிலவியதெனலாம். ஹைதராபாத், மைசூர், கேரளம், தெற்குக் கோடியில் சில ஊர்கள் இவற்றில் பலர் இஸ்லாம் மதத்தில் சேர்ந்தனர். கடற்கரை நெய்தல் நிலமக்களில் பல்லாயிரவர் கிறிஸ்து மதத்தைத் தழுவினர். ஆயினும் சைவம், வைணவம், வீர சைவம் முதலியவை பேராதரவு பெற்று விளங்கின. இவற்றிற்கிடையே கருத்து வேறுபாடுகளும் அவை பற்றிய விவாதங்களும் தோன்றிய போதிலும் மதவெறியும் அதனுல் பிறரைத் துன்புறுத்தும் மனப்பான்மையும் எழவில்லே. வீரசைவராயிருந்த இக்கேரி நாயக்கர் வைணவக் கோயில்களுக்கு நன்கொடை அளித்துள்ளார். 1674-ஆம் ஆண்டு பஸவலிங்கத்திற்குக் கொடுத்த நன்கொடையைக் குறிப்பிடும் கல்வெட்டொன்று ஸ்ரீராம கிருஷ்ண என்ற திருப்பெயர்ச் சொல்லுடன் முடிகிறது. வீர சைவ அரசரின் 1702-ஆம் ஆண்டைச் சார்ந்த ஒரு கல்வெட்டு வராகாவதார விஷ்ணு லிங்கத்திற்கு ஏற்படுத்திய வழிபாடு பற்றிக் கூறுகிறது.

16-ஆவது நூற்றுண்டு முதல் கிறிஸ்து சமய குரவர் ஐரோப்பாவிலிருந்து வந்து தென்னிந்தியாவின் பல பகுதிகளில் தம் சமயப் பணியாற்றினர். கேரளம், கொங்கணம், மேற்குக்

கன்னட நாடு, தமிழகம் முதலான பகுதிகளில் ஆங்காங்கு இவரது முயற்சிகள் பயனளித்தன. அவருக்கு எதிர்ப்பும் இடையூறுகளும் பல இடங்களில் தலையெடுத்தன. இராமநாதபுரம் கிழவன் சேதுபதி (1674—1710) தமது நாட்டிற்குச் சென்ற கிறிஸ்தவத் தலைவர்களுக்குக் கொடும் தீங்கு விளைவித்தார். ஆயினும் மேற்குக் கரையோரத்திலும் தெற்கே தஞ்சாவூர் முதல் கன்னியாகுமரி வரையிலும் பன்னூறாயிர மக்கள் கிறிஸ்தவராயினர். பொதுவாகத் தென்னாட்டு அரசர்களும் அவர் அலுவலாளர்களும் கிறிஸ்தவர் களிடம் பொறுமையுடன் நடந்துகொண்டனர். மதுரைத் திருமலை நாயக்கர் ஆதிக்கத்தில் ஆட்சி புரிந்த வீர சைவர் இலிங்கரெட்டி, இராணி மங்கம்மாள் (1689—1707) முதலியோர் வியக்கத்தக்க விரிந்த மனப்பான்மை யுடையோராகத் திகழ்ந்தனர்.

18-ஆவது நூற்றாண்டில் கத்தோலிக்கரைத் தவிர மற்றப் பிரிவினைச்சார்ந்த கிறிஸ்தவர்களும் தம் சமயப் பணியில் பெரிதும் ஈடுபட்டுழைததனர். அதனால் மதுரை, திருநெல்வேலி, நாஞ்சில்நாடு, திருவாங்கூர் முதலிய பகுதிகளில் மிகப் பெருந் தொகையான மக்கள் கிறிஸ்து சமயத்தில் புகுந்தனர். புதிதாகக் கிறிஸ்து சமயத்தில் சேர்ந்தவர் நன்மைக்காகச் சமய குரவர்கள் பலவகை அறநிலையங்களை நிறுவினர். கல்வி, ஒழுக்கம் முதலியவற்றைச் சீர்திருத்தினர். அவர் வாயிலாகச் சில மேல்நாட்டுப் பழக்கவழக்கங்களும் நம் நாட்டில் புகுந்தன.

18-ஆவது நூற்றாண்டில் தென்னாட்டில் அலுவல் செய்த ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் முதலான ஐரோப்பியர் போர் நடைபெறாத காலத்தில் உல்லாச வாழ்க்கையில் ஆழ்ந்திருந் தனர். குடிவெறி, சூது விளையாட்டு, விலங்கு வேட்டை முதலியவற்றில் அவர் ஈடுபட்டனர். அரசியல் அலுவலாளர் தனிப்பட்ட நிலையில் வாணிகம் செய்து பொருள் ஈட்ட முயன்றனர். அவர்களுக்கு நாட்டு மக்களோடு நெருங்கிய தொடர்பும் நாட்டுப் பழக்கவழக்கங்களும் ஏற்படவில்லை.

## இலக்கியம் :

**சமஸ்கிருதம் :—** இந்தியாவில் ஐரோப்பியர்களின் அரசியல் போராட்டங்கள் நடந்த காலத்தில், அதாவது, ஏறக்குறைய 18-ஆவது நூற்றாண்டில், தென்னாட்டில் இலக்கியம், கலை முதலியவை எந்நிலையிலிருந்தன? சமஸ்கிருத இலக்கியம் தென்னிந்தியாவில் இக்காலத்தும் நன்கு போற்றப்பட்டது. அரசர்கள், குறிப்பாக, தஞ்சாவூர், திருவாங்கூர், கொச்சி முதலான நாட்டு மன்னர் இலக்கிய வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்தனர். நாட்டின் பல பகுதிகளிலும் திகழ்ந்த அக்கிரகாரங்களும், மடாலயங்களும் இலக்கிய வளர்ச்சிக்குச் சிறந்த சேவை செய்தன. ஆந்திர நாட்டிலிருந்து பல சமஸ்கிருத வித்துவான்கள் தம் குடும்பங்களுடன் தஞ்சாவூரிலும் தென் கோடி நாட்டிலும் வந்து குடியேறினர். குறிப்பாகத் தஞ்சாவூர் சமஸ்கிருத அறிவிற்கு உறையுளாகத் திகழ்ந்தது.

18-ஆம் நூற்றாண்டில் துலஜ அரசரவையைச் சார்ந்த சதாசிவ தீக்ஷிதர் மதுரை மீனாக்ஷிசுந்தரேசுவரரையும், திருக்கோயிலையும், மூர்த்திகளையும் புகழ்ந்து பாடியுள்ளார். திருவாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மரைத் தேவராஜரும், தஞ்சை சரபோஜி மன்னரை அனந்த நாராயணரும் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். அவ்வாறே மற்றைச் சமஸ்கிருத வித்துவான்கள் பல அரசர்களையும் அமைச்சர்களையும் பாடியுள்ளார்கள். இவை தவிர, அக்காலத்தில் இருவர் உரையாடுவதே போன்று கற்பனையில் பல கோட்பாடுகளையும் கருத்துக்களையும் எடுத்து விளக்கக் கவிதைகள் இயற்றியுள்ளார்கள். இவற்றுள் மிகப் பெயர் பெற்ற இராமச்சந்திர மகினின் **கேரளாபரணம்** என்ற கவிதை தென்னிந்தியாவின் பல பகுதிகளிலுள்ள மக்களது பழக்க வழக்கங்களைப் புனைந்துரைக்கின்றது.

இக்கால சமஸ்கிருத இலக்கிய அமைப்பில் புது நாடக முறை தோன்றியது. தத்துவ சாஸ்திர உண்மைகளைக் கற்பிக்கும் நோக்கத்துடன் இயற்றப்பட்ட நாடகங்களே இவை.

எடுத்துக்காட்டாக, ஊகத்தின் போக்கு என்னும் பொருளை விளக்குகின்ற ஒரு நாடகத்தைச் சென்னை நரசிங்க கவி என்பவர் இயற்றினர். வேதாந்தத்தின் பல்வேறு கருத்துக் களைக் காப்பிய வாயிலாகச் சில கவிஞர் எடுத்து விளக்கி னர். உதாரணமாக, அப்பைய தீக்ஷிதரின் அத்துவைதத்தை விவரித்துரைக்கும் **விமத பஞ்சனத்தையும்,** இராமநாதபுரம் சேதுபதியால் போற்றப் பெற்ற வெங்கடேசரின் வைணவக் கொள்கையை விளக்கும் **விஷ்ணு தத்துவ நிர்ணயத்தையும்** எடுத்துக் கூறலாம். இப்புலவர்களில் தஞ்சாவூர் சதாசிவ பிரஹ்மேந்திரர், அத்வைதத்தைப் பற்றிய பல நூல்கள் எழுதியதுமன்றி, தாமே ஒரு தலை சிறந்த சிவனடியாராகத் திகழ்ந்து மக்கள் மனத்தைக் கவர்ந்தார். அவர் நினைவுக் குறியாக இப்பொழுதும் ஆண்டுதோறும் காவிரிக்கரையில் நேரூர் என்ற இடத்தில் ஒரு விழா நடைபெறுவதுண்டு. இக்காலத்தைச் சேர்ந்த கேரளக் கவிஞர் ராமபாணிவாத பேரறிவு படைத்தவர். சமஸ்கிருதத்தில் பல பெருங் காப்பியங்களும் நாடகங்களும் பக்திநெறிப் பாடல்களும் பிறவும் இயற்றியவர். பிராகிருதத்தில் சில நூல்களையும் இயற்றினர். மலையாளக் கவிஞராய்ப் புகழ் பெற்ற குஞ்சன் நம்பியார் என்பவரும் ராமபாணிவாத என்பவரும் இருவரா ஒருவர்தாஎ என்னும் ஐயுறவு இன்னும் தீர்ந்தபாடில்லை. எண்ணிறந்த யாப்பிலக்கண நூல்கள் தோன்றின. ஓர் ஆந்திரக் குடும்பத்தைச் சேர்ந்த புலவர்கள் முப்பது நிகண்டுகள் இயற்றியுள்ளனர். புதுக்கோட்டை கோபால கிருஷ்ண சாஸ்திரி, **சாப்திக சிந்தாமணி** என்ற இலக்கணத்தை இயற்றினர். பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த அப்பைய தீக்ஷிதர் பாணினி சூத்திரத்திற்குப் புலமை சான்ற உரை எழுதினர். ஆந்திர நாட்டு ராஜசேகரர் இயற்றிய **சாஹித்ய கல்பத்ருமாவும்** மகாராஷ்டிரத்து தேவ சங்கரர் இயற்றிய **அலங்கார மஞ்சூஷாவும்,** சித்தாந்த கௌமுதியை விளக்கித் தஞ்சாவூர் வாசுதேவ தீட்சிதர் வரைந்துள்ள **பால மனோரமாவும்** இக்காலத்தில் தோன்றிய யாப்பிலக்கண நூல்களில் மிகச் சிறந்தவையெனலாம்.

அழகுக் கலை பற்றிய நூல்களும் பல தோன்றின. தஞ்சாவூரில் மகாராஷ்டிர மன்னர்களின் ஆதரவில் கன்னட நூல்களும் பாடல்களும் இயற்றப்பெற்றன. தெலுங்கு மொழியில் இசைப் பாட்டுக்கள் இயற்றியோருள் அக்காலத்தில் தியாகராஜ சுவாமிகளும், முத்துசுவாமி தீக்ஷிதரும் மிகப் புகழ் பெற்றவர். இன்றும் அவர்கள் பாடல்கள் சிறப்புற்றுத் திகழ்கின்றன. தஞ்சாவூர் மகாராஷ்டிர மன்னர் துளச ராஜா பல இசை நூல்களை இயற்றியவர். அவற்றுள் **சங்கீத சாராமிருதம்** என்ற கருநாடக இசை பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றாகும். பர்லாக்கிமிடி அரசர், நாராயணர் சங்கீதத்தைப் பற்றிச் **சங்கீத நாராயண** என்ற நூலையும், சங்கீத அலங்காரங்களைப் பற்றிய ஒரு தனி ஆராய்ச்சிக் கட்டுரையும் எழுதினர். திருவாங்கூர் அரசர் கார்த்திகைத் திருநாள் **பாலராம பரத** என்ற நடன நூலை இயற்றினர். நாட்டியத்தைப் பற்றி ஆந்திர நாட்டில் சோமநரயர் இயற்றிய **நாட்டிய சூடாமணி**யும், நரசிங்கசாரியர் செய்த **பாரதார்ணவ ஸாரஸங்கிருஹா**வும் தோன்றின. இதே காலத்தில் தமிழ் நாட்டில் அப்பளாசாரியர் நாட்டியக் கலை பற்றிய **ஸங்கீத ஸங்க்ரஹ சிந்தாமணி**யை இயற்றினர். உண்மையில் கருநாடக நாட்டியத்தின் நவீன வழக்க முறை இக்காலத்தில் வெளியாயிற்றெனலாம். தஞ்சாவூர் அரசவையைச் சேர்ந்த புலவர், வாஞ்சேசுவரர் எருமையின் இயல்புகள் பற்றி இயற்றிய **மஹிஷசதக** என்ற 100 **வசைப் பாக்கள்** நகைச்சுவை பொருந்தியவாயிருக்கின்றன. மகாராஷ்டிர நாட்டு ஜோகநாயர், **அசுவபலப் பிரகாசா**வெனும் விலங்கு மருத்துவ நூலை விஞ்ஞான முறையில் இயற்றினர்.

**தமிழ் :** பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் அரசியல் போராட்டங்கள் நடைபெற்ற போதிலும் இலக்கியவுணர்ச்சி குன்றிப்போகவில்லை. முன் போலவே பிரபந்தங்களும் புராணங்களும் தொடர்ந்து இயற்றப்பட்டு வந்தன. சமயத்தைத் தழுவிய நூல்களைத் தவிர, வரலாற்றுத் தொடர்புள்ள சில கவிதைகளும் தோன்றின. எடுத்துக் காட்டாக, தொண்டைநாட்டு வரலாறு பற்றிச் செவி வழி

அறிந்த செய்திகளைத் தொகுத்து நூறு செய்யுட்களால் படிக்காசுப் புலவர் **தொண்டை மண்டல சதகம்** இயற்றினர். அதே போலப் புலவர் ஆத்மநாத தேசிகர் சோழர் வரலாற்றைத் தழுவிச் **சோழ மண்டல சதகம்** என்ற பனுவல் செய்தார். இக் கவிதைகளிலடங்கியிருக்கும் வரலாற்று நுட்பங்கள் யாவும் முழு நம்பிக்கைக்கு உரியனவல்லவாயினும் செய்யுட்கள் மிகச் சிறந்த இலக்கியப் பண்புடன் அமைந்தவை. வரலாற்றுத் தொடர்புள்ள நூல்களில் மிகப் பயனளிப்பது புதுச்சேரியில் வாழ்ந்த ஆனந்தரங்கம்பிள்ளை தமிழில் எழுதியுள்ள நாட் குறிப்பாகும். டூப்ளேக்கு உண்மையுள்ள உதவியாளரா யிருந்த ஆனந்தரங்கம் பிள்ளைக்கு 1706 முதல் 1760 வரை நடைபெற்ற ஆங்கிலப் பிரெஞ்சுப் போர்க்காலத்தில் அரசியல் நிலைகளை ஆராய்ந்து அறியப் பெரும் வசதி கிட்டியது. இந்த நாட்குறிப்பு நூலை அவருக்குப் பின்னர் பத்து ஆண்டுகள் வரை அவர் மருகர் திருவேங்கடம் பிள்ளை தொடர்ந்து எழுதினர். வரலாற்றுக்கு இன்றியமையாத பெரும்பயன் அளிப்பதோடு இப்பேரேடுகள் புதுச்சேரியில் அக்காலத்தில் வழங்கிய நாடோடித் தமிழ் இயல்பையும் புலப்படுத்துகின்றன.

கவிதையுலகில் சீருப்புராணம் என்ற அரும்பெருங் காப்பியத்தை முஸ்லிம் கவிஞர் பெருமான் உமறுப்புலவர் என்பார், பெரிய தம்பி மரைக்காயர் ஆதரவில் அமர்ந்து, இயற்றியருளினர். அக்காப்பியம் முகம்மது நபியவர்கள் வாழ்க்கை வரலாற்றையும், அராபியாவிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் இஸ்லாம் மதத்தைப் பரப்பும் பொருட்டு அவர் செய்த அரிய செயல்களையும் விரித்துரைக்கின்றது. அதனுள் சொல்லும் பொருளும் சிறந்து, அழகு நலம் மிளிரும் ஐயாயிரம் செய்யுட்கள் அடங்கியுள்ளன. உமறுப் புலவர் எட்டைய புரத்தில் பிறந்து வளர்ந்து, அச்சமஸ்தான வித்துவான் கடிகை முத்துப்புலவர்பால் கல்வி பயின்று, பிற்காலத்தில் அச்சமஸ் தான வித்துவானய் விளங்கி, ஆங்கும், கீழக் கரை என்னும் ஊரிலும் சிறப்புற வாழ்ந்து, சீருப்புராணத்தினல் தமிழுலகில் தம் பெயரை நிலைநாட்டி, எட்டையபுரத்தில் சமாதி அடைந் தார்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் மஸ்தான் சாகிப் என்னும் முஸ்லிம் ஞானியார் சென்னை நகரில் வாழ்ந்திருந்து, தாயுமான அடிகள் போன்று சமய ஒற்றுமைபற்றி உள்ளங் கவரும் பன்னூறு செய்யுட்கள் இயற்றி, அந்நகரில் சமாதியானார். அக்காலத்தில் எச்சமயத்தாரும் அவரை உச்சிமேல் வைத்துப் போற்றினர்.

குற்றாலக் குறவஞ்சி என்னும் நாடகப் பனுவலைத் திருக் குற்றாலத்தை அடுத்த மேலகரம் என்னும் சிற்றூரில் வாழ்ந் திருந்த திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றினார். இந்த நாடகம், பொதுமக்கள் துய்த்து மகிழக்கூடிய தனிச் சிறப்பு வாய்ந்ததாயுள்ளது. குறவஞ்சி வகையில் அது ஒப்பற்ற நூல் எனக் கூறலாம்.

சமயத்துறையைச் சார்ந்த நூல்களில், மெய்கண்டதேவர் இயற்றிய சிவஞானபோதம் என்னும் மெய்நூல் பெருஞ் சிறப்புடையது. அது ஏட்டில் ஒரு பக்கத்துள் அடங்கக்கூடிய பன்னிரண்டு நூற்பாக்களையே உடையது. அதற்குத் திருவாவடுதுறைச் சிவஞானமுனிவர் என்பார் **சிவஞான பாடியம்** என்னும் பேருரை இயற்றியுள்ளார். அது அறுநூறு பக்கம் கொண்டது. பொதுவாக எல்லாச் சமயங்களின் இயல்பையும், சிறப்பாகச் சைவசமயத்தின் உயர்வையும் காரணகாரிய முறையில் எடுத்துக்காட்டுகின்றது. அது சைவசமயக் கருவூலமாகத் திகழ்வது.

பதினெட்டாம் நூற்றாண்டு முதலே மேல்நாட்டுக் கருத்துக்களும் இலக்கிய முறைமைகளும் தமிழில் வந்து புகுந்தன. தமிழ் நாட்டில் அக்காலத்தே கிறிஸ்து சமய குரவர் பலர் தொண்டாற்றி வந்தமையால், தமிழிலே விரைவாக மேல் நாட்டுக் கருத்துக்கள் நுழைந்தன. இவ்வெளிநாட்டு முறையின் ஒளி முக்கியமாகத் தமிழ்க் கவிதையில் வீசியது. பெஸ்கி (வீரமா முனிவர்) என்னும் பெருந்துறவி தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து, கிறிஸ்து சமயத் தொண்டாற்றி வருங்காலத்தில் (1680-1742) பண்டைத் தமிழ் நூல்களை ஆராய்வதிலும்,

பனுவல்கள் செய்வதிலும் செய்யுள் இயற்றுவதிலும் ஆர்வமுடையவராய்த் திகழ்ந்தார். அவரது **தேம்பாவணி,** முதன் முதல் தமிழ் மொழியில் வெளியான கிறிஸ்து சமயப் பெருங்காப்பியம். அது கிறிஸ்து சமயத் திருமறைக் கருத்துக்களையும் நிகழ்ச்சிகளையும், தமிழில் விளக்குகின்றது. வீரமாமுனிவர் **திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கலமாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரி அம்மாள் அம்மானை, திரும்பாவணி** முதலான பிரபந்தங்களையும் இயற்றியுள்ளார்.

தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு அப்பெரியார் செய்துள்ள தொண்டு சிறிதன்று. தற்காலத் தமிழ் உரைநடையை வகுத்தவருள் அவர் தலைசிறந்த புலவர் என்பது மிகையாகாது. தமிழ் உரைநடைத் தந்தை என்றே போற்றப்படுகின்றார். பதினேழாம் நூற்றாண்டில் வந்திருந்த இராபர்ட் டி நோபிலி என்னும் சமயகுரவர் எழுதிய உரைநடை, வடசொற்கள் முதலியன கலப்புடையதாயும் கரடுமுரடான தன்மை வாய்ந்ததாயுமுள்ளது. வீரமாமுனிவரோ, எளிய பண்புசான்ற உரைநடையைக் கையாள வல்லவர் ஆனார். அவர் **வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், ஞானவுணர்த்தல்** முதலான உரைநடை நூல்கள் வாயிலாகக் கிறிஸ்து சமயக் கொள்கைகளை விளக்கினார்; கதைகள் எழுதுவதிலும் வழிகாட்டியாக விளங்கினார். **பரமார்த்த குரு கதை** என்பது நகைச்சுவை மிக்கது. அக்காலத்தில் உரைநடை நூல்கள் இயற்றிய அறிஞருள், பாளையங்கோட்டையில் இருந்த ரேனியஸ் என்னும் கிறிஸ்து சமயகுரவரும் பெயர் பெற்றவர் ஆவார். அவர் **விவிலியமறை** முழுவதையும் மொழிபெயர்த்துச் சிறந்த உரைநடையில் 1844-ஆம் ஆண்டு வெளியிட்டார். அது பிற்கால வெளியீட்டிற்குப் பேருதவியாகத் திகழ்ந்தது. அவர் இயற்றிய **வேத உதாரணத் திரட்டு** மிகப் பெயர் பெற்றுள்ளது.

இலக்கண ஆராய்ச்சித்துறையில் வீரமாமுனிவர் மேல் நாட்டு முறையைப் பின்பற்றித் **தொன்னூல் விளக்கம், கொடுந் தமிழ் இலக்கணம்** என்னும் நூல்களைச் செய்தார். தமிழ் மொழியில் முதன் முதல் அகராதி இயற்றியவரும் அவரே.

பன்னிரண்டு தொகுதியாகச் செய்யுள் நடையில் வழங்கிவந்த **திவாகரம், நிகண்டு** முதலான பழைய நூல்களில் உள்ள சொற்களை எல்லாம் ஆராய்ந்து, அவற்றை அகர வரிசையாகத் தொகுத்து, முதல் அகராதியை வழங்கினர். அதற்குச் சதுர் அகராதி என்று பெயர். அது நான்கு பகுதிகள் உடையது. அதுவே தமிழ் அகராதிகள் அனைத்திற்கும் தந்தை.

**கன்னடம் :** கன்னட இலக்கியம் 18-ஆம் நூற்றாண்டில் சிறந்த அளவு முன்னேறவில்லை. நூல்கள் பல தோன்றின; ஆயின், அவை உயர்தரமானவை அல்ல. அக்காலம் நிகழ்ந்த அரசியல் குழப்பங்களினால் இலக்கிய வளர்ச்சி தடைபட்டது. ஏறக்குறைய 1680-இல் மதவெறிகொண்ட சிக்கதேவராயர் இலிங்காயத்தாரைத் துன்புறுத்தி, அவர்கள் மடங்களையும் அழித்தார்.

அக்காலத்துத் தோன்றிய நூல்களில் மிகுதியானவை மதத்தைப் பற்றியவையே. சமணர், வைணவர், அவரிலும் சற்றுக் குறைந்த தொகையினரான இலிங்காயத்தார் முதலியோர், பக்திப் பாடல்கள், கவிதைகள், நாடகங்கள் பலவற்றை இயற்றியுள்ளனர். அவை இதிகாசங்களையும், புராணங்களையும் சார்ந்து அமைக்கப்பட்டன. சமணக் கவிஞர் தீர்த்தங்கரர்களைப் பற்றிக் காப்பியங்கள் இயற்றினர். அவற்றுள் பத்மராஜரின் **பூஜ்யபாதசரிதே** மிகச் சிறந்ததெனலாம். பாயண்ணு என்பவர் எழுதிய **அஹிம்ஸாசரிதே,** சமணக் கொள்கைகளையும், அவற்றுள் குறிப்பாக, துன்பத்தினால் இறுதியில் மனிதனுக்கு வரும் நன்மைகளையும், துறவின் மாண்பையும் எடுத்து விளக்குகின்றது. முதலாம் கிருஷ்ணராஜ உடையாரின் மனைவி செலுவாம்பே சமண மதத்தைச் சார்ந்தவர். அவர் **வரனுதிகல்யாணம்** உட்படப் பல நூல்களை இயற்றினர் எனினும், அவற்றின் இலக்கியப் பண்பு மேலானதல்ல. 1750-இல் பத்மநாபன் என்றவர் சமணர் கருத்துக்களை அமைத்து இராமாயணம் இயற்றினர்.

வைணவ நூல்களில் திம்மாமாத்யாவின் **ராமாப்யுதய கதாகுஸுமமஞ்சரி** என்ற இராமாயணச் சுருக்கம், லக்ஷ்மீச கவியின் **பாரதம், ருக்மாங்கத சரிதெ** என்பன குறிப்

பிடத்தக்கவை. புராணக் கதையைத் தழுவிய **ஹாலஸ்ய மாஹாத்மயம்** என்ற சம்பு நடைக் காவியம், வெங்கடேசரால் இயற்றப்பட்டது. அக்காலத்தில் ஹொளவணகட்டே கிரிபம்மா வென்ற பெண்மணி, **சந்திரஹாசன கவிதெ** உட்பட பல கவிதைகளை இயற்றினர். வீரசைவப் புலவர்களுள் இருவர் குறிப்பிடத்தக்கவர்; ஒருவர் **சோரபஸவசரிதே** என்ற கவிதையை எழுதிய சங்கரகவி; மற்றவர் **சௌந்தரகாவியம்** இயற்றிய நூரெருந்தா என்பவர்.

தத்துவம் அல்லது மெய்விளக்கம் புறக்கணிக்கப்பட வில்லை. அந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் அத்வைதம் பற்றிய சில நூல்கள் தோன்றின. அவற்றுள் தலைசிறந்தது சித்தானந்த அவதூதர் இயற்றிய **ஞானச்சிந்து** ஆகும். அதை அத்வைதத்தின் அறிவுக் கடல் எனக் கூறினும் அது மிகையாகாது.

பொதுமக்கள் விரும்பும் நாடகங்கள் பல 18-ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்து எழுதப்பட்டு வந்தன. **யக்ஷகானங்கள்** என்று வழங்கப்படும் நாடகங்களை நாட்டுப் புறத்து மக்கள் மிகவும் விரும்பினர். ஆயின், அவற்றின் இலக்கியத்தன்மை சிறப்புடையதல்ல. உலகியல் பற்றிய இலக்கியங்களும் சில தோன்றின. விஞ்ஞானப் பொருள்களைப் பற்றி எழுதிய புலவர்களுள் குறிப்பிடத்தக்கவர் பாலவைத்தியத செலுவா என்பவர். அவர் **கன்னட லீலாவதி** என்ற கணித நூலையும், பல வகை இரத்தினங்களைப் பற்றி விவரிக்கும் **ரத்னஸாரா** என்னும் நூலையும் இயற்றினர். கன்னட நாட்டு வரலாற்றைச் சார்ந்த நூல்களும் சில தோன்றின. 1713-இல் மைசூர் வரலாற்றைப் புட்டய்யா என்பார் எழுதினர். சில ஆண்டுகளுக்குப் பின்னர், சிக்கதேவராயரின் ஆட்சியைப் பற்றி இரு விரிவுரைகளைத் திருமலை ஐயங்கார் வரைந்தார். அவற்றுள், செவிவழிச் செய்திகளும் வரலாற்றுத் துணுக்குகளுடன் கலந்து இடம் பெற்றுள்ளன ஆயினும், மொத்தத்தில் வரலாற்றுத் துறைக்கு ஆதாரமான பொருள்கள் அவற்றுள் அடங்கியுள்ளன. வில்க்ஸ் என்ற ஆங்கிலேயர் பிற்காலத்தில் இயற்றிய மைசூர் வரலாற்றுக்குப் புட்டய்யாவின் நூலே அடிப்படை என்பதற்கு ஐயமில்லை

**தெலுங்கு** :—18-ஆம் நூற்றாண்டைத் தெலுங்கு இலக்கியத்தின் இருண்ட காலம் எனக் கூறுதல் பொருந்தும். அரசியல் போராட்டம் ஒரு பக்கமும், முஸ்லீம் ஆட்சிமீதுள்ள வெறுப்பு மறு பக்கமும் இலக்கிய முயற்சியைக் குன்றச் செய்தன. பண்டைய முறையில் இயற்றிய சில காப்பியங்கள் உணர்ச்சியற்றவை. மக்கள், சுதந்தரம் இழந்து மனமுறிவுற்ற காலத்தில் நிகழ்ந்த துயர நிகழ்ச்சிகளை விரித்துரைக்கும் சில பனுவல்கள் தோன்றின. அவை நூறு செய்யுள் கொண்ட **சதகம்** என்னும் பனுவல் வகுப்பைச் சேர்ந்தவை. முஸ்லீம்கள் நாட்டை அழித்து, கோயில்களை இடித்து, ஊர்களைப் பாழாக்கிய கொடிய செயல்களைக் குறித்துக் கவலையற்றிருந்த தெய்வங்களை நொந்து பாடப்பெற்றவை அவை. அவற்றுள் இலக்கியப் பண்பு வாய்ந்தனவும் உள்ளன. **பத்ராதிராம சதகமு, ஆந்திரநாயக சதகமு, சிம்ஹாத்ரிநரசிங்க சதகமு** என்பவைகளை எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம்.

இக்காலத்தில் தெலுங்கு இலக்கியம் மைசூரிலும், தெற்கில் தஞ்சாவூர், மதுரை, புதுக்கோட்டை முதலான ஊர்களிலும் ஓங்கி வளர்ந்ததென்பது கவனத்திற்குரியது. இணையற்ற பாட்டுக்கள் இயற்றப்பெற்ற இடம் தஞ்சாவூர். இப்பாடல்களுள் பல மிக்க வனப்பு வாய்ந்தவை. 18-ஆம் நூற்றாண்டில் கற்பனைத் திறம்படைத்த சில புலவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர் மதுரை சேஷமுவேங்கடபதியென்பார். அவரது **தாராசாசங்க விஜயமு** என்னும் கவிதை காதல் நிகழ்ச்சியைப் பொருளாகக் கொண்டுள்ளது. அதில் ஒழுக்க நெறிக்குரிய நிபந்தனைகள் எப்பொழுதும் எல்லோராலும் பின்பற்றக் கூடியவையல்ல என்ற துணிவான கருத்தைக் கவிஞர் திறம்பட விளக்குகிறார்.

தெலுங்கு உரைநடை 17-ஆவது நூற்றாண்டில் சிறந்த உருவம் பெற்றிருந்தது. 18-ஆவது நூற்றாண்டில் அது பின்னும் வளர்ச்சியடைந்தது. இக்கால உரைநடை எழுத்தாளருள் தலைசிறந்த குந்துருத்தி வெங்கடாசல கவி என்பார், பாரதம், இராமாயணம், பாகவதம் என்பனவற்றைச் சீரிய முறையில் இயற்றினர். வீதி நாடகங்கள் என்னும் சில

தெருக்கூத்துகள் இக்காலம் எழுதப்பட்டன. ஆயினும், பொதுவாக, 18-ஆவது நூற்றூண்டில் இலக்கிய நூல்கள், எண்ணிக்கையிலும் தன்மையிலும் குன்றிய நிலையிலிருந்தன வென்பது உண்மை.

**மலையாளம்** :—18-ஆவது நூற்றூண்டில் கதகளி நாடகம் பொலிந்து வளர்ந்தது. மன்னர்கள், குறிப்பாக, மார்த்தாண்ட வர்மரும், கார்த்திகைத் திருநாள் மகாராஜாவும் கதகளியை ஆர்வத்துடன் போற்றினர். கதகளி ஆட்டக் கதைகள் மிகுதியாக இக்காலத்தில் இயற்றப்பட்டன. மலையாள இலக்கியத்தின் ஒரு சிறந்த பகுதி ஆட்டக் கதை ஆகும். கோட்டையத்துத் தம்பிரான் திறமைசான்ற கவிஞர்; தேர்ச்சி பெற்ற நடிகர். பல சிறந்த ஆட்டக் கதைகளை அவர் இயற்றினர். உதாரணமாக, அவரது **சிறுமீர வதமும், நிவசகவித வதமும்** ஆழ்ந்த கருத்தும் அழகிய சொற்பொழிவும் வாய்ந்தவை. கார்த்திகைத் திருநாள் மகாராஜா (1724—94) உயர்ந்த கற்பனைத் திறமை வாய்ந்த கவிஞர். அவரது **ருக்மணீ ஸ்வயம்வரமும், அம்பரீஷ சரிதமும்** அவர் இயற்றிய மிகப் பல கவிதைகளுள் சிறப்பானவை. ஆயினும், அக்காலத்துக் கதகளிக் கவிஞருள் முதலிடம் பெற்றவர் உண்ணுய்வாரியர் என்பதற்குத் தடையில்லை. கதையைக் கவர்ச்சிக்குரிய முறையில் அமைப்பதிலும், கதையுறுப்புக்களின் குண இயல்பை விளக்குவதிலும் இவர் இணையற்றவர். ஆட்டக் கதை இலக்கியத்தில் இவரது **நள சரித்திரம்** தலைசிறந்து விளங்குகின்றது.

18-ஆவது நூற்றூண்டில் கதகளிச் சார்புள்ள **ஓட்டம் துள்ளல்,** செல்வாக்குப் பெற்றது. ஓட்டம் துள்ளலில் நடிகர் தாமே பாட்டையும் பாடுவர்[12] முற்காலம் தொட்டே தோன்றியிருந்த **சாக்கையார் கூத்து, சம்பு** ஆகியவை இரண்டும் ஓட்டம் துள்ளல் பாட்டுக்கள் எழுவதற்கு அடிகோலியாயிருந்தன. **துள்ளல்** பாடல்கள் இயற்றியவருள் அரும்பெருங் கவிஞர் 18-ஆம் நூற்றூண்டில் திகழ்ந்த குஞ்சன் நம்பியாராவர். மிகப் பல கவிதைகளையும் பக்திப் பாடல்களையும் அவர் இயற்றிய

---

12 கதகளியில் நடிகர் வேறு, பாடுபவர் வேறு.

போதிலும் 'அவரது துள்ளல் பாட்டுக்களே மிக்க புகழ் பெற்றவை. அப்பாட்டுக்களே எளிய அழகிய நடையில் அமைந்துள்ளன. புலமையும் கற்பனைத் திறனும் ஒருங்கே பெற்றிருந்த இக்கவிஞர், மலையாள இலக்கிய வரலாற்றில், எழுத்தச்சன் என்பவர் ஒருவர்க்கே அன்றி மற்றெவர்க்கும் பிற்பட்டவர் அல்லர்.

மலையாள உரைநடை 14-ஆவது நூற்றாண்டு முதல் படிப்படியாக வளர்ந்து 18-ஆவது நூற்றாண்டில் முதிர்ச்சி பெற்றதெனலாம். கிருங்கனூர் கிறிஸ்து சமய குரவர் ஆகிய அறிஞர் ஜோஸப் கரியாத்தில் **சம்க்ஷேப வேதார்த்தம்** என்னும் உரைநடை நூலை எழுதினர். 1772-இல் வெளிவந்த இப் புத்தகம்தான் மலையாள மொழியில் முதன் முதலாக அச்சிடப் பெற்ற நூல். இதற்குச் சில ஆண்டுகளுக்குப்பின், பரமக்கில் கோவெரோதோரசன் என்பவர், **மார்ஜோஸப்** கடற்பயணம் செய்து ரோமாபுரி சென்றது பற்றி ஒரு விரிவுரை எழுதி யுள்ளார். ஆனல் அவரது உரைநடை பகட்டணியுடையது ; வடமொழிச் சொற்களை மிகுதியாக உடையது. ஆயினும், அந்நாள் சமூக வாழ்க்கையை அது நன்கு விளக்குகின்றது. மலையாள இலக்கிய வளர்ச்சிக்கு, அதிலும் குறிப்பாக உரை நடை வளர்ச்சிக்கு, கேரளத்திலுள்ள கிறிஸ்து சமய குரவர்கள் பெருஞ்சேவை செய்துள்ளனர். ஆஸ்திரியாவிலிருந்து வந்த பௌலினோஸ் (1748—1806) என்பார் இயற்றியுள்ள மலையாள நூல்களில், **குடசப் புத்தகம், மலையாள வியாகரணம், அக்ஷரமாக விளக்கம்** என்னும் இலக்கண நூல்கள் எல்லாம் உரைநடையில் அமைந்துள்ளவை. ஆயின், அவரது நடை கடுமையானது, பகட்டணியில் ஆழ்ந்தது. ஆலங்காட்டுக் கல்விச்சாலைத் தலைவராயிருந்த ஜோஸப் மெட்ரான் (1742—87) என்பார் பன்மொழிப் புலவராயிருந்தார். நல்ல உயர் நடையிலெழுதப்பட்டுள்ள அவருடைய **வேத தர்கம்** என்ற நூல் கிறிஸ்து சமயக் கொள்கைகளை விரித்துரைக்கின்றது. ஸ்ற்றீபன் எனும் சமய குரவர் **மலையாள நிகண்டு** இயற்றினர். இவரது சம காலத்தினராகிய கிளமென்று, பாரோஸ் என்பவர்களும் மலையாளத்தில் நிகண்டு இயற்றியுள்ளனர்.

சோதிடம், ஆயுர்வேதம் பற்றிய நூல்கள் பல தோன்றின. இக்காலத்தில் புகழ் பெற்ற சோதிடரான கொச்சு கிருஷ்ண ஆசான் மருத்துவத்திலும், கட்டிடக் கலையிலும் தேர்ச்சி பெற்றவர் ; சோதிடத்தில் **பாஷா ஜாதக பத்ததி, கணக்கு சாஸ்திரம்** எனும் சிறந்த நூல்களை இயற்றினர் ; அன்றியும், **மர்மசிகில்ஸா** என்ற அரிய நூலில் மனித எலும்பின் அமைப்பு, அது பற்றிய மருத்துவ சிகிச்சை முதலியவற்றை விளக்கியுள்ளார். இக்காலத்தைச் சார்ந்த பண்டாரத்து நாராயண பிள்ளை ஆசான் **வைத்திய சங்கிரஹம்** என்ற அரிய நூலை இயற்றினர். அது ஆயுர்வேத வைத்தியப் பொது முறைகளை ஆராய்ந்து விளக்குவதோடு மூளைக் குழப்பங்களைப் பற்றிக் கூறும் **தாரா கல்பம்** எனும் பகுதியையும் உட்கொண்டுளது. இவை தவிர மருத்துவம், சோதிடம் பற்றிய பற்பல சிறு நூல்களும் தோன்றின.

**மராத்தி :—** மராத்தி மொழி கி. பி. 12—ஆவது நூற்றுண்டிற்கு முன்னரே தோன்றியிருந்த போதிலும் மராத்தி இலக்கியம் 19-ஆவது நூற்றுண்டிலேதான் வளர்ச்சி பெற்றது. அது வரையிலும் நாட்டுப் பாடல்களே மிகுதியாகத் தோன்றின. அப்பாடல்கள் பவானி தேவியை வழிபடும் கோண்டாலிகள் என்ற அடியார்களால் இயற்றப்பட்டவை. அவற்றில் செவி வழி வந்த பழங்கதைகளும் நாட்டு வீரர்களின் அரிய செயல்களும் அமைந்துள்ளன. அப்ஸல்கான் அழிவும், கார்தா, பானிப்பத்து முதலிய இடங்களில் நடைபெற்ற போர்களும் அப்பாடல்களில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

இவை தவிரப் பற்பல காலங்களில் மகாராஷ்டிர நாட்டில் தோன்றிய ஞானிகள் பக்திப் பாடல்கள் இயற்றியுள்ளனர். தியானேசுவர் (1271—96), நாம்தேவ் (1270—1350), ஏகநாத் (1533—99), துக்காராம் (1608—49), ராம்தாஸ் (1608—81) போன்ற துறவிகள் நெஞ்சையள்ளும் துதிப் பாடல்களைப் பாடியுள்ளார்கள். அவை மொழியை வளரச் செய்தன என்பதற்கு ஐயமில்லை. மேலும், 17-ஆவது நூற்றுண்டில் வாமன், ரகுநாத் முதலான புலவர்களும்

18-ஆவது நூற்ருண்டில் ஸ்ரீதர், மொருபன்று என்னும் கவிஞர்களும் புராண இதிகாசக் கதைகளைக் காப்பியங்களாக இயற்றினர். இதற்கிடையே காதல் கதைகள் பல தோன்றின. இவை மக்கள் மனத்தைக் கவர்ந்தன. **லாவணிகள்** என்னும் காதல் பாடல்கள் 18-ஆவது நூற்ருண்டில் ஏராளமாகத் தோன்றின. லாவணிப் பாடல்களை இயற்றியவருள் சிறந்த கற்பனைத்திறம் வாய்ந்தவர் ராம் ஜோஷி (1762—1812) எனப்படுபவர்.

18-ஆவது நூற்ருண்டில் அரசியல் அறிக்கைகள், விளம்பரங்கள், கடிதங்கள் முதலியவற்றின் வாயிலாக மராத்தி உரைநடை வளர்ச்சி பெற்றது. நாரோ சங்கர், சதாசிவ திங்கர் முதலான எழுத்தாளர் அரசியல் செய்திகள் பற்றிய நீண்ட விவாதங்களைச் சுருக்கி நுட்பத்திறனுடன் அழகிய உரைநடையில் எழுதியுள்ளனர். **பக்கர்கள்** எனப்படும் அக் கால வரலாற்றுச் செய்திக் கோவைகள் நாட்டின் வரலாற்றை அறியப் பேருதவி அளிக்கின்றன. ஆனல், அவை சிறந்த உரைநடையில் எழுதப்படவில்லை. மிகுதியான பாரசீகச் சொற்களை மேற்கொண்டு, பண்படாத பழைய மொழியில் அவை அமைந்துள்ளன.

**நுண்கலை** :—ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கிச் சில காலத்திற்கெல்லாம் கலை என்பது நாட்டில் தழைக்கவில்லை. அவர் போர் நிகழ்ச்சியிலும், புதிய அரசியலமைப்பிலும் ஈடுபட்டிருந்தது இதற்கு முதற் காரணம். ஆட்சித் துறையில் அமர்ந்திருந்த அலுவலாளர்களில் ஒரு சிலர்க்கே அன்றி மற்றையோர்க்கு இந்தியக் கலைகளில் பற்று இல்லாமை இரண்டாவது காரணம். கவர்னர் ஜெனரல் பெண்டிங் என்பவர், உலகிற் சிறந்த அழகுக் கோவில் ஆகிய தாஜ்மகாலை இடித்து, அதில் அடங்கிய பொருட்களைக் கொண்டு வேறு கட்டிடங்களை கட்டலாம் என்று நினைத்தார் என்பார்கள்.

தென்னிந்தியாவில் கட்டிட அமைப்பு, சிற்பம், ஓவியம் முதலான கலைகள் பண்டைய முறையில் நடைபெற்று வந்தன. ஆயின், முன்னுளிருந்த அருளும் அழகும் இக்கால வேலைகளில் அமையவில்லை. பொதுவாக, அவை போலி வேலைப்பாடு

களாகவே இருக்கின்றன. பாமினி மன்னர் தொடங்கிய முஸ்லிம் கட்டிட அமைப்பு முறை தொடர்ந்து ஹைதராபாத்தில் பின்பற்றப்பட்டது. பல பள்ளிகள், அரண்மனைகள், சமாதிகள், கல்லறைகள் முதலியவை தோன்றின.

18-ஆம் நூற்றாண்டிலும் சற்றுப் பின்னும், தென்னிந்தியக் கட்டிடக் கலையில் முஸ்லிம்கள் பண்பும் திராவிடர்கள் பண்பும் கலந்ததெனலாம். 17-ஆவது நூற்றாண்டில் அமைக்கப் பெற்ற சந்திரகிரி அரண்மனை இப்புது முறையைத் தழுவித் தோன்றியது. வானளாவிய கூர்முனை வடிவம் பெற்ற தூபிகள் திராவிட முறையைச் சேர்ந்தவை. நடுமுனையில் கூர்மையாகச் செதுக்கப்பட்ட மேல்வளைவு முஸ்லிம் முறையைத் தழுவியது. மாளிகையின் உச்சியில் தோன்றிய சிகரங்கள் திராவிட முறையைச் சேர்ந்தவை. இவ்வகைக் கலப்பு முறை அமைந்த மாளிகைகளும், அரண்மனைகளும், ஹைதராபாத், மைசூர் முதலிய நாடுகளில் பெரும்பாலும் அமைக்கப்பட்டன. அன்றியும், இக்காலத்தில் விரைவாக வளர்ந்து வந்த சென்னை நகரிலும் இவ்வகைக் கட்டிடங்கள் தோன்றின. 1793-இல் சேப்பாக்கத்தில் எடுத்த நவாப் அரண்மனையில் இக்கலப்பு முறை அமையப் பெற்றது.

சென்னைக்குத் தெற்கில் முஸ்லிம் கட்டிடக் கலை முறை செல்வாக்குப் பெறவில்லை. பழங்கால இந்துக் கலையைத் தழுவியே புதுக்கோயில்களும் அரண்மனைகளும் அமைக்கப் பட்டு வந்தன. ஆனல் 17-ஆம் நூற்றாண்டு முதல் மேல் நாட்டுக் கட்டிடக் கலைக் கருத்துக்கள் தென்னிந்தியாவிற்குள் நுழையத் தொடங்கின. பிறநாட்டுச் சமயகுரவர், மேல் நாட்டு முறையைத் தழுவி கிறிஸ்தவக் கோயில்களையும் பள்ளிக்கூடங்களையும் அமைத்தனர். தொழிற்சாலைகள், வாணிக நிலையங்கள், அரசியல் அலுவலகங்கள், கல்லறைகள், கோட்டைகள் முதலியவை ஐரோப்பியக் கட்டிட முறையைத் தழுவி அமைக்கப்பட்டன. செல்வர் பலர், அதே முறையில் சில மாளிகைகளைக் கட்டினர். இத்தகைய கட்டிடக் கலை

கி. பி. 1645-இல் கட்டி முடிக்கப்பட்ட மதுரைத் திருமலை நாயக்கர் அரண்மனையில் அழகாக அமைந்துள்ளது. இப் பெரும் மாளிகையில் அகன்ற கூடங்களும் உள் முற்றங்களும் திகழ்கின்றன. ஐரோப்பிய கட்டிடக் கலையின் செல்வாக்கை இம்மாளிகையின் பல நுட்ப வேலைப்பாடுகளில் காணலாம். அங்குக் காணப்படும் 40 அடி உயரமுள்ள கல் தூண்கள் கிரேக்கர் கோவில் தூண்களை ஒத்திருக்கின்றனவென்று பேரறிஞர் பெர்ஸி பிரௌன் கருதுகிறார். மேலும், செங்கல்லால் கட்டப்பட்ட, இலை போன்ற மேல் வளைவுகள் ஸ்பெயின் நாட்டு அல்ஹம்பிரா நகர அரசவை மாளிகையிலுள்ள மேல் வளைவுகளை ஒத்திருக்கலாமென்றும் அவர் கருதுகின்றார். திருமலை நாயக்கர் மாளிகையின் குவிமாடமும், வில் போல் வளைந்த மேற்கூரையும், காதிக் கட்டிட உறுப்புக் களைப் போல அமைந்துள்ளனவெனப் பெர்க்கியுஸன் நவிலுகின்றார். திராவிட முறையையும் மேல்நாட்டு முறையையும் கொண்டு இக்கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. இக்காலத்தில் மதுரை நகரத்தில் தோன்றிய தமுக்கமும், மங்கம்மாள் அரண்மனையும், சற்றுச் சிறு அளவில் கட்டப்பட்ட போதிலும், திருமலை நாயக்கர் மாளிகை இயல்பைப் பின் பற்றித் தோன்றியவையே ஆகும். இவை போன்று ஐரோப்பிய முறையும் தென்னிந்திய முறையும் கலந்து உருப்பெற்ற பல பெருமாளிகைகள், மைசூர், தஞ்சாவூர், திருவனந்தபுரம் முதலிய நகரங்களில் உள்ளன. ஏறத்தாழ 1700-இல் தோன்றிய தஞ்சாவூர் அரண்மனையின் பல்வேறு பகுதிகள் இணை சேர்ந்து துலங்கவில்லை. மேலும், அளவிற்கு மிஞ்சிய பகட்டணியும் அதன் அழகைக் கெடுக்கிறது. உண்மையில் தஞ்சாவூர் அரண்மனை, கட்டிடக் கலையின் சீர்குலையத் தொடங்கிய நிலையைக் காண்பிக்கின்றதெனலாம். அதில் செயற்கை நுட்ப வேலைப்பாடு மிகுதி. இயற்கை அழகு மிகக் குறைவு.

நகரங்களிலும் கிராமங்களிலும் வீடுகள் ஒன்றோடொன்று இணைத்துக் கட்டப்பட்டன. திருடர்களுக்கும் கொள்ளைக்

காரர்களுக்கும் பயந்து இம்முறையைக் கையாண்டிருக்கலாம். செல்வர்களின் வீடுகள் செங்கல்லால் கட்டப்பட்டு ஓடு வேயப்பட்டவையாகத் திகழ்ந்தன. ஆங்காங்கு வசதியாகக் கிடைக்குமிடங்களில் கருங்கல்லைப் பயன்படுத்தினர். இவை கடப்பை, அனந்தப்பூர் போன்ற மாவட்டங்களில் மிகுதியாகக் காணலாம். கேரளத்தில் பல பகுதிகளில் இயற்கை மண்ணே உறுதியாக இருந்ததால், வீடு கட்டுவதற்கு அதைப் பயன் படுத்தினர். வீடுகளின் உறுப்புக்களில் பொருத்தமற்ற சாயங்களைப் பூசினர். தூண்கள், கதவுகள், வாயிற்படி, உத்திரம் முதலியவைகளில் மட்டுக்கு மிஞ்சின வேலைப்பாடுகளை அமைத்து வைத்தனர். போதிய வெளிச்சமும் காற்றும் உள்ளே செல்லக்கூடிய வண்ணம் வீடுகள் கட்டப்படவில்லை. வீட்டைச் சார்ந்து குளிக்கும் அறையோ, கக்கூசு இடமோ அமைக்கவில்லை. பொதுவாக, வீட்டின் நடுவில் உள் முற்றமும், அதன் பக்கங்களில் அறைகளும் இருந்தன. அவை அக்கால வாழ்க்கைக்குத் தகுந்த வசதியுடையனவே. வீட்டின் பின் புறத்தில் கன்றுகாலிகள் கட்டிவைக்கும் தொழுவமும், நாற்புறமும் திறந்த கூடமும் இருந்தன. எளிய மக்கள் மண் சுவர் வைத்து; ஓலைக்கூரை வேய்ந்த சிறு வீடுகளிலும், குடிசைகளிலும் தம் வாழ்நாளைக் கழித்தனர்.

அக்காலத்தில் நகர அமைப்பு, கிராம அமைப்பு, கட்டிட அமைப்பு முதலியன பற்றிய நிபந்தனைகள் இல்லை. ஆயினும் மனை நூல், சோதிட நூல் முறைப்படியே கட்டிட அமைப்பும், அறைகளின் அளவும் வரையறுக்கப் பெற்று, தொன்று தொட்டு வழிவழியே வந்த வழக்கத்தின்படியே யாவும் நிறுவப் பெற்றன. அவை புது வாழ்க்கை முறைகளுக்குச் சற்று முரண்பட்டனவாகவும், வசதிக் குறை உடையனவாகவும் தோன்றிய போதிலும், வீடு, தெரு, கோயில், குளம் முதலியன கலையழகையும், வாழ்க்கை வசதியையும் கருதியே அமைக்கப் பெற்றன. அக்காலக் கல்தச்சர், சரத்தச்சர், கொல்லர் முதலான கட்டிடத் தொழிலாளிகள் அனைவரும் தத்தம் கலை முறைகளைத் திட்ப நுட்பமாய் அறிந்திருந்தனர்.

கிராமத்திலும், நகரத்திலும் தெருக்களின் இருபுறத்திலும் வீடுகள் இருந்தன. எனினும், அவை பல வகைப்பட்ட கட்டிடங்கள், அளவிலும் தோற்றத்திலும் வேறுபட்டவை. தெருக்கள் கூடும் இடங்களில் முச்சந்திகளும் நாற்சந்திகளும் விளங்கின. சிற்றூர்த் தெருக்கள் போதிய அகலம் உடையன வல்ல. கேரள நாட்டில் வீடுகள் தெருப்பத்தியாக அமைய வில்லை; சிறு வீடும், பெரிய மாளிகையும், தனித்தனித் தோட்டத்தில் இருந்தன. தொன்றுதொட்டு நிலைபெற்ற வழக்கத்தின்படியே, ஒவ்வொரு சாதியாரும் ஒவ்வொரு தெருவில் அல்லது தனித் தனிப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு வகுப்பினர் சேர்ந்து வாழும், அல்லது குடியிருக்கும் இடத்திற்குச், சேரி அல்லது குடி என்று பெயர் வழங்கப் பெற்றது. உயர்ந்த வகுப்பினர் வாழும் தெருவழியே தாழ்ந்த வகுப்பினர் செல்லக் கூடாதென்ற கட்டுப்பாடு உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டது. தாழ்ந்த வகுப்பினர் தம் வீடுகளில் மேல்மாடி எடுக்கக்கூடாது என்ற நிபந்தனையும் உண்டு. திருக்கோயிற் கட்டிடத்திற்கு உயர்வாகத் தம் மாளிகைகளைக் கட்டக்கூடாது என்ற வழக்கமும் இருந்தது.

திருக்கோயில் ஊரின் நடு அச்சு. ஒரே ஊரின்கண பல கோயில்கள் இருப்பினும், அவற்றுள் சிறப்புற்ற கோயில் ஊரில் நடுநாயகமாகத் திகழ்ந்தது. நகரங்களிலும் பற்பல கோயில்கள் இருந்தன. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது உலகநீதி. ஆறுகளின் அண்மையில் ஊர்களை அமைக்க முயன்றனர். "ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்" என ஔவையாரும் கூறினர். ஆறுகள் இல்லாத ஊர்களின் அருகே மக்கள் நீராடுவதற்குக் குளங்கள் எடுத்துப் படித்துறைகள் கட்டினர். ஆற்று நீர் கிணற்று நீர் முதலான நல்ல நீர் கிடையாத ஊர்களில் குளத்தில் மழை நீரைத் தேக்கி, அதனைத் தூய்மையாகக் காப்பாற்றி வந்தனர். அத்தன்மையான குளத்திற்கு ஊருணி என்று பெயர். ஆற்று நீரை வாய்க்கால் வழியே கொண்டுவந்து பெருக்கிக்கொள்ளும் ஊருணிகளும் உள்ளன. குளத்தில் மேல் வகுப்பினரும் கீழ்

வகுப்பினரும் குளிக்கும் துறைகள் தனித்தனியே அமைந்திருந்தன. தீண்டத்தகா வகுப்பினர்க்கு அக்குளங்களில் எவ்வகை உரிமையும் இல்லை. பெரும்பாலும் குளம், கோயிலுக்கு அருகில் இருந்தது. ஆகையால், சாதி பற்றிய கட்டுப்பாடு குளத்தையும் உட்படுத்தியது. திருவிழாக் காலங்களில் தெப்பம் என்னும் மிதப்புக் கட்டையை நீரில் இட்டு, அதன்மீது ஏறிச் செலுத்தியும், அதனைப் பற்றுக் கோடாகக்கொண்டு நீந்தியும் விளையாடுதற்கு வசதியான குளம் தெப்பக்குளம். சில ஊர்களில் திருவிழாக் காலங்களில் தெப்ப விழா என்று ஒரு நாளைத் தனியே கொண்டாடுதலும் உண்டு.

# இயல் பதின்மூன்று

## நவீன காலம்

1802-ஆம் ஆண்டுக்குள் பிரிட்டிஷார் அதிகாரத்தின் கீழ் சென்னை மாநிலம் உருவாகியதைக் கண்டோம். பிரிட்டிஷாரை எதிர்த்து மகாராஷ்டிரர் நடத்திய போரும், 1818-க்குள் முடிவடைந்தது. விரைவில் பம்பாய், மத்திய மாகாணம் என்னும் இரண்டு மாநிலங்களையும், பிரிட்டிஷ் துரைத்தனத்தார் உருவாக்கினர். இம்மாநிலங்களின் அண்மையிலிருந்த தனியரசுகள் பல பிரிட்டிஷ் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டு அரசாட்சி புரிந்தன. தாம் கைப்பற்றிய நாடுகளைப் பிரிட்டிஷார் மாநிலங்களாக வகுத்து, ஒவ்வொரு மாநிலத்திலும் ஆட்சித்துறையை அமைத்தனர். நாட்டில் அமைதி நிலைபெறச் செய்தனர். நீதி மன்றங்களையும் பாதுகாப்பு நிலையங்களையும் தோற்றுவித்தனர். இவற்றைப் படிப்படியாகத் தேவைக்குத் தகுந்தவாறு சீர்திருத்தியும் அமைத்தனர். நிலவரி பற்றிய பல முறைகளையும் பரிசோதனை செய்தபின், அந்தந்தச் சூழ்நிலைக்குத் தகுந்த நிலவரி முறைமையும் ஏற்படுத்தினர். தென்னிந்தியாவில் பெரும்பாலும் நேர் குடிவார உறவுடைய முறைமை[1] தான் பின்பற்றப்பட்டது. வடநாட்டில் பல பகுதிகளில் ஜமீன்தார் முறைமையும், தெற்குக் கோடியில் சில இடங்களில் பாளையக்காரர் ஏற்பாடும் அமைக்கப்பெற்றன. 1794-இலேயே மாவட்டத் தலைவர்[2] ஆட்சிமுறை தொடங்கியது. மாநில ஆட்சியை மாநிலத் தலைவரும்,[3]

---

1. Ryotwari System. 2. Collector 3. Governor

குறிப்பிட்ட உறுப்பினரடங்கிய செயற்குழுவினரும்[1] சேர்ந்து நடத்தினர். ஆனால், இவர் யாவரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆணைக்குப் பணிந்துதான் பணியாற்றி வந்தனர்.

ஒரு வர்த்தகக் குழு அரசியல் பொறுப்பைக் கையாளுவது பொருத்தமற்றதாகக் காணப்பட்ட போதிலும், 1858-ஆம் ஆண்டு வரையில் அதுவே தொடர்ந்து நடைபெற்றது. ஆனால் 1784-முதல், அடக்கியாளும் ஒரு குழுவின் வாயிலாக[2] பிரிட்டிஷ் சட்ட மன்றம், இந்திய அரசாங்கத்தின் நிகழ்ச்சிகளை மேற்பார்வை செய்தது. 1773-முதல் பிரிட்டிஷ் சட்ட மன்றம் இந்திய அரசியல் அமைப்பையும், வாணிகக் குழு[3] பின்பற்ற வேண்டிய முறையையும் அவ்வப்போது வரையறுத்து வந்தது 1773-ஆம் ஆண்டுக்குப் பின் இருபது ஆண்டுகளுக்கொரு முறை இவர்களது வாணிக உரிமைப் பத்திரம் புதுப்பிக்கப்படும் போதெல்லாம், பிரிட்டிஷ் சட்டமன்றம் சட்டங்களில் தேவையான சீர்திருத்தங்களையும் நுழைத்தது.

பொதுவாக மாநில ஆட்சித்துறை, நிறைவும் நேர்மையும் பொருந்தித் திகழ்ந்தது. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி செய்த பணியாளர்கள் முன்னேற்றக்காளர்களின்[4] கொள்கைகளில் மிகப்பற்றுடையவராயிருந்தனர். மக்கள் நலத்தைப் பேணுவதே அவர்களது முதன்மையான நோக்கமாயிருந்தது. சென்னையில் தாமஸ் மன்றோவைப் போலவும் பம்பாயில் எல்பின்ஸ்டன், மால்காம், மெட்காஃப் போலவும் ஆட்சி செய்த மாநிலத் தலைவர்கள், விரிந்த மனப்பான்மையும், மக்கள்பால் அன்பும் உடையவர்கள். ஆகவே, அவர்கள் நல்லறிவுடைய ஓர் அரசியல் முறையை உருவாக்கியது வியப்பு அன்று. ஆனால், நாள் செல்லச் செல்ல 19-ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே சில குறைபாடுகள் தலைதூக்கின. பல்லாண்டு தொடர்ந்து அதிகாரத்தைக் கையாண்டு வந்த செயலின் பயன்களே அவை. ஆட்சியாளருக்கும் பொது மக்களுக்கும் இடையிலுள்ள வேற்றுமைக்

1. The Executive Council
2. Board of Control
3. (The East India) Company
4. Liberals.

கருத்து, படிப்படியாக உயர்ந்து வந்தது. அரசியல் பணியாளர்கள் சட்டத்தையே வழிபடும் ஈவு இரக்கமற்ற மக்களாயினர். அவரிலும் வெளிநாட்டு ஆட்சியாளர் அளவு கடந்த தற்பெருமை, இறுமாப்பு, வேற்றுமை உணர்ச்சி, அதிகாரவெறி, கட்டுப்பாட்டுப் பசப்பு[1] முதலான தீய குணங்கள் உடையவராயினர். அதனால் விளைந்த பெருங்கேடு யாதெனில், இந்திய அரசியல் கீழ்ப்பணித்துறையாட்கள் தம் தலைவர்களின் குறைபாடுகளை மிகுதியாகப் பின்பற்றினர்; அன்றியும், மேலலுவலாளர்களைவிட இவர்கள் தம் கீழ்ப் பணியாளர்களிடமும் பொது மக்களிடமும் தீவிரக் கொடுமை காட்டினர். இது அரசாங்கக் கீழ்அலுவலாளர்களிடையிலும் பொதுமக்களிடையிலும் அடிமை மனப்பான்மையைத் தோற்று வித்ததெனலாம். இந்திய ஒத்துழையாமை இயக்கம் தோன்றும் வரை சிறிய அலுவலாளர்களின் கொடுமை வரவர முதிர்ச்சிபெற்று வந்தது. பணித்துறைச் சார்பான அதிகாரத் திற்கு அளவற்ற செல்வாக்கு இருந்ததோடு தலைமை அலுவலாளர்களுக்கு மன நிறைவு உண்டாக்க வேண்டு மென்னும் பேராவல் எல்லோரிடமும் இருந்தது. ஆகவே, இவை தன்மானத்தையும் நல் நடத்தையையும் மிகவும் கெடுத்தன.

அலுவலாளர்க்குப் பொதுமக்களுடன் நேராக ஒரு தொடர்பும் இல்லாதிருந்தது. 1833-வரை மாநில அரசுக்குச் சட்டமியற்றும் பொறுப்பு அளிக்கப்பட்டிருந்தது உண்மை. ஆயின், அது மக்களுக்குக் குறிப்பிடத்தக்க பயன் அளிக்க வில்லை. பொதுமக்களுக்கு அக்குழுவுடன் யாதொரு தொடர்பும் இல்லாதிருந்தது. 1833-முதல் 1861-வரை இந்தச் சட்ட மியற்றும் பொறுப்பையும் மத்திய அரசாங்கமே நேர்முகமாகக் கைப்பற்றி நடத்தி வந்தது.

1861-இல் சட்டங்களமைக்கிற பொறுப்பு மறுபடியும் சென்னைக்கும் பம்பாய்க்கும் அளிக்கப்பட்டது. 1892-ஆம் ஆண்டைய இந்திய அரசியல் சட்டப்படி அங்கத்தினர்களின்

1. Red Tapism

எண்ணிக்கையும் உரிமைகளும் பெருக்கப்பட்டன. ஆனால், இச்சட்ட மன்றங்களில் அரசாங்க அலுவலாளர்களும் அரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட அங்கத்தினர்களும் மிகுதியாக இருந்தமையால், உண்மையில், அரசாங்கத்தின் கீழ்ப்பட்ட ஸ்தாபனங்களாகவே இவை விளங்கின. அடுத்தபடியாக, 1909-இல் தோன்றிய மிண்டோ மார்லிச் சீர்திருத்தம் சில அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை மக்களுக்கு அளித்ததோடு அங்கத்தினர்களின் எண்ணிக்கையையும் அதிகாரங்களையும் பெருக்கியது.

1919-ஆம் ஆண்டு இந்தியச் சட்டம், அரசியல் துறையில் பெரியதோர் சீர்திருத்தம் செய்தது. அச்சட்டம் மாகாணங்களில் இரட்டையாட்சியை[1] அமைத்தது. அரசியல்இலாகாக்கள் மாற்றப்பட்ட பகுதி[2] என்றும், ஒதுக்கப்பட்ட பகுதி[3] என்றும் இரண்டாக பிரிக்கப்பட்டன. மாற்றப்பட்ட பகுதியைச் சார்ந்த இலாகாக்கள், சட்டமன்றத்தில் பெரும்பான்மையாக இருக்கும் கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களால் நடத்தப்பெற்றன. மற்றப் பகுதி இலாகாக்கள், முதிர்வுடைய பணியாளர் ஆட்சியின் கீழ் தொடர்ந்து இயங்கி வந்தன. இவ்விரட்டையாட்சி தற்காலிகமான ஓர் ஏற்பாடாயிருந்தது. இயல்பாகவே இவ்விரட்டையாட்சி அமைப்பில் சில குறைபாடுகள் இருந்தன. ஆயினும், மற்ற மாகாணங்களை விடச் சென்னைதான் இவ்வாட்சியைத் திறம்பட நடத்தியதெனக் கருதப்படுகிறது.

1885-ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் ஆதரவில் அமைக்கப்பட்ட இந்திய தேசியக் காங்கிரஸ் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வலிமை சான்ற குழுவாக முதிர்ச்சி பெற்றது. பால கங்காதர திலகரைப்போத்த தீவிரத் தலைவர்களின் ஆர்வத்தினால், நாட்டின் விடுதலை இயக்கத்தில்,

---

1. Dyarchy
2. Transferred half
3. Reserved half

காங்கிரஸ் ஈடுபட்டது. 1914-முதல் காந்திஜி காங்கிரஸின் முடிசூடா மன்னரானர். ரௌலத்துச் சட்டத்தை[1] அவர் எதிர்த்தார். உடனே அரசாங்கம் அடக்குமுறையைக் கைக்கொண்டது. அதன் விளைவாக 1920-இல் ஒத்துழையாமை இயக்கத்தைக் காந்தியடிகள் தொடங்கினர். ஏறக்குறைய இருபத்தைந்தாண்டுகள் அவர் விடுதலைப் போரை நடத்தினர்; காங்கிரஸின் செல்வாக்கை நாடெங்கும் பெருக்கினர். அப் பெருந்தகையார் தொடங்கிய சுதேசி இயக்கத்திலும் ஒத்துழையாமைப் போராட்டத்தின்போதும் (1922), சட்ட மறுப்புக் கிளர்ச்சியின்போதும் (1930, 1942) நாட்டின் பெரும் பகுதி அவரைப் பின்பற்றியது. இந்த இயக்கங்களில் தென்னிந்தியப் பெருமக்கள் பலர் ஈடுபட்டனர். சொற் பொழிவுகள், வேலை நிறுத்தங்கள், சட்ட மறுப்புக்கள் யாவும் விமரிசையாக நடைபெற்றன. சிற்றூர் மக்கள்தாமும் தேசியக் கிளர்ச்சியில் பங்கு கொண்டனர். பாமர மக்களின் அரசிய லுணர்ச்சியைத் தட்டி எழுப்பியதே காந்தியடிகளின் மாபெரும் சேவை எனலாம். கிராமங்களில் வாழ்ந்த மக்கள் தமது ஊர்களுக்கப்பால் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி அப்பொழுது தான் அறியத் தொடங்கினர். தேசிய உணர்ச்சி தூண்டப் பட்டதன் விளைவாகத் தமிழர், தெலுங்கர், வங்காளத்தார், குஜராத்தியர் முதலான பல்வேறு வகுப்பினருக்கும் பொதுக் குறிக்கோளை அடையவேண்டும் என்னும் ஆர்வம் தலைதூக்கியது.

நாடு முழுவதிலும் காந்திஜியின் செல்வாக்கு எல்லையற்ற அளவை அடைந்தது. பிறநாட்டுப் பண்ட விலக்கு, மெய்ம்மை, அஹிம்சை, தீண்டாமையொழித்தல், கதராடையணிதல், மரபுப் பண்பான கள்ளங் கபடில்லாத எளிய வாழ்க்கை முதலான காந்தியடிகளின் இலக்கியங்கள் பொதுமக்கள் மனத்தைக் கவர்ந்தன. ஆயின், அரசாங்க அதிகாரத்தை மறுப்பதிலிருந்து

**1. 1918-ஆம் ஆண்டு நிறுவிய இச்சட்டம் அரசியல் குற்றவாளி களைத் தகுந்த விசாரணையின்றியே தண்டிப்பதற்கு நீதிபதிகளுக்கு அதிகாரமளித்தது.**



இந்தியா
1947
காஷ்மீர்
ஜம்மு
பிலாஸ்பூர்
பஞ்சாப்
ஹிமாசலப் பிரதேசம்
பெப்ஸு
பாகிஸ்தான்
டில்லி
நேபாளம்
சிக்கிம்
பூட்டான்
ராஜஸ்தான்
அஜ்மீர்
உத்தரப் பிரதேசம்
அஸ்ஸாம்
பாரதம்
கட்ச்
விந்திய பிரதேசம்
பீஹார்
பாகிஸ்தான்
மணிபுரி
மத்திய
சௌராஷ்டிரம்
மே. வங்காளம்
திரிபுரா
மத்தியப் பிரதேசம்
ஒரிஸா
பம்பாய்
பம்பாய்
ஹைதராபாத்
அரபிக் கடல்
கோவா
மைசூர்
மதராஸ்
சென்னை
மாஹி
புதுச்சேரி
காரைக்கால்
புதுக்கோட்டை
திருவாங்கூர்
வங்காள விரிகுடா
இலங்கை
கோவா
பாகிஸ்தான்

சில கெடுதிகள் விளைந்தன. பாமர மக்களிடையிலும் மாணவர்களிடையிலும் ஒழுங்கின்மை பிறந்தது. இக்குறைகளைக் காந்தியடிகளே நன்குணர்ந்தார்; தீவிரமாக அவற்றைக் கண்டித்தார்.

அரசாங்கமும் அவ்வப்போது அடக்குமுறையைக் கையாள நேரிட்டது. எண்ணற்ற மக்கள் சிறையிலிடப்பட்டனர். பலர் தண்டம் கட்ட வேண்டி வந்தது. வெள்ளையர்கள் நிறைந்த சைமன் கமிஷனென்ற சிறப்புக் குழுவை ஒப்புக்கொள்ளாது மக்கள் விலக்கினர். கிளர்ச்சி தொடர்ந்து நடைபெற்றதால் இறுதியாக வட்டமேசை மாநாடுகள் கூட்ட நேரிட்டது. அவற்றின் பயனாக 1935-ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டமும் வெளிவந்தது. இந்தச் சட்டம் உடனடியாக மாநிலங்களுக்குத் தன் ஆட்சி உரிமையை அளித்தது. இதுகாறும் அரசாங்கத்தை எதிர்த்து நின்றிருந்த காங்கிரஸ் கட்சியும் பதவி ஏற்றது. மத்திய மாகாணம், பம்பாய், சென்னை முதலிய ஆறு மாகாணங்கள் அமைச்சர் குழுக்களை அமைத்தன.[1] 1939-ஆம் ஆண்டு தொடங்கிய இரண்டாம் உலகப் போரில் இந்திய அரசியல்களின் ஒத்துழைப்பைப் பெறுமையால், அமைச்சர் தம் பதவியை விட்டு அகன்றனர். தற்காலிகமாக அமைக்கப்பட்ட அலுவலாளர் ஆட்சி முறை 1946 வரையிலும் நடைபெற்றது. போர் முடிந்தவுடன் மறுபடியும் காங்கிரஸ் பதவியேற்றது. விடுதலை அடைந்த பின், இந்தியா ஒரு கூட்டுறவு அரசியலை உருவாக்கிற்று. அவ்வரசியல் அமைப்பில் மாநிலங்கள் (A) ஏ வகுப்பு நாடுகளாகவும், பெரிய உள்ளநாட்டு அரசுகள் (B) வகுப்பு நாடுகளாகவும் அமைக்கப்பட்டன. ஹைதராபாத் நிஜாம் புது இந்திய அரசாங்கத்தைப் புறக்கணித்தார். ஆனால், உற்ற தறுவாயில் படைகளை அனுப்பி இந்திய அரசாங்கம் தனது அதிகாரத்தை ஆங்கு நிறுவச் செய்தது. திருவாங்கூர் நாட்டை அதன் திவான் தனி அரசாக அமைக்கக் கருதினார். ஆனால், அவர் நாட்டிலேயே அதற்கு எதிர்ப்பு இருந்ததால், அவர்

1. அன்று இந்தியா 13 மாகாணங்களாக வகுக்கப்பட்டிருந்தது.

திவான் பதவியை விட்டு விலகினர். திருவாங்கூரும் இந்தியக் குடியரசுடன் சேர்ந்தது. 1951-இல் திருவாங்கூரும் கொச்சியும் ஒன்ருக இணைக்கப்பட்டன ; புதுக்கோட்டை அரசு சென்னை அரசோடு சேர்க்கப்பட்டது.

மக்கள் பண்பும் கலையும் ஓங்கி வளருவதற்கு, இந்தியாவை மொழிவழி மாநிலங்களாகச் சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்ற நோக்கத்தைக் காங்கிரஸ் நெடுநாளாக கைக்கொண்டிருந்தது. 1920-இல் நாகபுரியில் கூடிய காங்கிரஸ் இதை வலியுறுத்தி ஒரு சட்டத்தையும் நிறைவேற்றியது. முதலில் வகுக்கப்பட்டிருந்த மாநிலங்கள், மக்களின் பண்பு, மொழி, பழக்க வழக்கங்கள் முதலிய தொடர்புகளைப் புறக்கணித்து அரசியல் வழி உருவாக்கப்பட்டவை. இதை உணர்ந்த பிரிட்டிஷ் அரசாங்கமும், 1911-இல் ஒரியர்களின் விருப்பத்திற்கு இணங்கி ஒரிஸா என்னும் தனி மாகாணத்தை அமைத்தது. ஆந்திர நாட்டில் தனி மாகாணம் அமைய வேண்டுமென்ற கிளர்ச்சி மிகத் தீவிரமாக வளர்ந்தது. ஆகையால் 1953-இல் ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டது. ஆனால், இது மற்ற இடங்களில் கிளர்ச்சியைத் தூண்டியது. இந்திய அரசாங்கம் இந்தப் பிரச்னையைத் திட்டப்படுத்திக் கருத்தை வெளியிட, மூவரடங்கிய குழுவொன்றை ஏற்படுத்தியது. இக்குழுவின் கருத்துக்களைப் பின்பற்றி 1956-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதலாம் நாள், மொழிவழி நிலங்கள் அமைக்கப்பெற்றன. தென்னிந்தியாவில், கேரளம், சென்னை, மைசூர், ஆந்திரப் பிரதேசம், ஒரிஸா, பம்பாய் ஆகிய புது நாடுகள் உருவாயின. இம்மாற்றங்களால், முன்னே ஹைதராபாத் அரசியலில் அடங்கியிருந்த தெலிங்கானா, ஆந்திர அரசுடன் இணைந்தது. ஹைதராபாத்தைச் சார்ந்த மகாராஷ்டிரப் பகுதிகள், இராஜஸ்தானில் ஒரு பகுதி, பழைய மத்திய பாரதத்திலடங்கிய விதர்ப்ப நாடு ஆகியவற்றைச் சேர்த்து பம்பாய் மாநிலமாக அமைத்தனர். பழைய பம்பாய் மாநிலத்தையும், ஹைதராபாதையும் சார்ந்திருந்த கன்னட நாடுகளும், குடகும், மைசூரும், சென்னையோடிருந்த தென்



இந்தியா
1956
மேற்கு பாகிஸ்தான்
டில்லி
நேபாளம்
கி பாகிஸ்தான்
போப்பால்
மத்தியப் பிரதேசம்
ஒரிஸா
நாகபுரி
கட்டாக்
பம்பாய்
பம்பாய்
ஹைதராபாத்
ஆந்திரப் பிரதேசம்
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
கோவா
மைசூர்
பங்களூர்
மைசூர்
மதராஸ்
மதராஸ்
அந்தமான் தீவுகள்
கேரளம்
திருவனந்தபுரம்
இலங்கை
நிகோபார்
கோவா
பாகிஸ்தான்

கன்னட மாவட்டமும், கொள்ளேகால் தாலுக்காவும் சேர்க்கப்பட்டு மைசூர் நாடாக அமைக்கப்பட்டது. திருவாங்கூர், கொச்சி பண்டைய மலபார் மாவட்டம் ஆகியவற்றை இணைத்துக் கேரள மாநிலம் தோற்றுவிக்கப்பட்டது. திருவிதாங்கூரின் தெற்கிலிருந்த ஐந்து தமிழ் தாலூக்காக்களும் மற்றத் தமிழ்ப் பகுதிகளும் சேர்க்கப்பட்டு சென்னை அரசாக உருவாக்கப்பட்டது. பண்டைய மத்திய பாரதம், போப்பால், விந்தியப் பிரதேசம், இராஜஸ்தானில் சில இடங்கள், ஆகியவைகளைச் சேர்த்து மத்தியப் பிரதேசத்தை அமைத்தனர். இதற்கிடையே, பிரெஞ்சுக்காரர் கையிலிருந்த இந்தியப் பகுதிகளைப் பற்றிச் சிலகாலம் உடன்படிக்கைப் பேச்சுகள் நடந்த பின், இவ்விடங்களை இந்தியாவிற்கு அளித்துவிட 1954-இல் ஒப்பந்தம் ஏற்பட்டது. கேரளத்தைச் சார்ந்த மாஹி, தமிழ் நாட்டைச் சார்ந்த புதுச்சேரி, காரைக்கால், ஆந்திர நாட்டைச் சார்ந்த ஏனம் (Yanam) ஊர்களே பிரெஞ்சுக்காரர் கைவசம் இருந்தவை ; இவற்றை இந்திய அரசுகளோடு இணைக்க ஏற்பாடாகியிருக்கிறது.

## சமூக வாழ்க்கை

மேல் நாட்டுக் கருத்துக்களோடு இந்தியர்களுக்கு நெருங்கிய தொடர்பு குறிப்பாக 19-ஆம் 20-ஆம் நூற்றாண்டு களில் ஏற்பட்டது. இது இந்திய மக்களின் கருத்துக்களிலும் வாழ்க்கை நோக்கத்திலும் மாறுதல் உண்டாக்கியது. அரசாங்க அலுவலாளர்களும் வணிகர்களும் தொழிற்சாலை முதலாளிகளும், அயல்நாட்டுச் சமய குரவர்களும், பிறரும் முன்னமே பல புதுக்கருத்துக்களை நாட்டில் நுழைத்தனர். 16-ஆம் நூற்றாண்டு முதல் தொடங்கிய ஐரோப்பிய கிறிஸ்து சமய குரவர்களின் செல்வாக்கு வடஇந்தியாவைவிடத் தென்னிந்தியாவில் மிகுதியாக ஏற்பட்டது. கிறிஸ்து மதத்தைத் தழுவியவர் சில இடங்களில்தாம் பெருவாரியாகக் காணப்படுகின்றனர் ; அவருள் ஏறக்குறைய பாதிப்பேர் ஆந்திர நாட்டிலும் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத் திலும் இருக்கின்றனர். கிறிஸ்தவக் கோயில்களைத் தவிர பல

பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், நூல் நிலையங்கள், மருத்துவச் சாலைகள் முதலான யாவும் அச்சமய குரவர்களாலேயே உண்டாக்கப்பட்டன. மேலும், அவர்கள் தங்கள் கருத்துக்களை யும் கொள்கைகளையும் நாட்டிற் புகுத்தினர். எல்லாவற்றிற்கும் மேலாக, ஆங்கிலக் கல்வி பரவியது. அதன் பயனாய் மேல் நாட்டுக் கருத்துக்கள் மிக விரைவாக மக்கள் மனத்தைக் கவரலாயின.

முதலில் வட இந்தியாவிற் போலவே தென்னிந்தியாவிலும் மேல் நாட்டுப் பழக்க வழக்கங்களைப் பின்பற்ற மக்கள் ஆர்வம் கொண்டனர். ஆங்கிலம் படித்தவர் பலரிடையே ஊண், உடை, நடை யாவும் மாற்றமடைந்தன. இந்திய மக்களில் பலருக்குத் தாம் கீழ்த்தரமானவர் என்ற ஒருவகை அச்சம் தோன்றியது. பழங்காலக் கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் குறை கூறும் மனப்பான்மை தலையெடுத்தது. இருப்புப் பாதை, அஞ்சல், தந்தி முறை, படக்காட்சி, முதலிய புது வாழ்வு நலங்கள் நாட்டில் அமைந்தன. கிராமங்களிலிருந்து நகரங் களுக்கு மக்கள் தொடர்ச்சியாய் வந்துகொண்டிருந்தனர். இவை எல்லாம் சமூகப் புரட்சிக்கு அடிகோலின.

பெருமக்கள் பலரும் கிராமங்களிலிருந்து பட்டணங் களுக்குக் கல்வி, அலுவல் முதலான வசதிகளைக் கருதி வந்து குடியேறியமையால், கிராமங்களின் நெடுங்காலக் கூட்டு வாழ்க்கையின் திட்பம் குலைந்து போயிற்று. இத்துடன், நில வரி பெறுவதற்கு அமைக்கப்பட்ட நேர் குடிவார முறை, நீதி மன்றங்கள், மாநில ஆட்சி உறுப்புக்கள் யாவும் தொன்று தொட்டே நிலவிய கிராமக் கூட்டுறவு வாழ்வைத் தகர்த்தன வெனலாம். கிராம வாழ்வில் ஊக்கம் குறைந்தது. தொன்று தொட்டு நடைபெற்று வந்த கூட்டுக் குடும்ப வாழ்க்கை தளர்ச்சியடைய அடிகோலியது. கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையில் பல குறைபாடுகள் இருந்த போதிலும், அது பன்னெடு நாளாக சமூக அடிப்படை உறுப்பாக அமைந் துள்ளது. பொருளாதார முன்னேற்றத்திலும், ஒழுக்க முறையை வளர்ப்பதிலும், சமூக வாழ்க்கைக்கு அது

பேருதவியை அளித்து வந்தது. ஆனால், தற்கால மாற்றங்களின் நெருக்கடியில் கூட்டுக் குடும்ப வாழ்வு சீர் குலைய நேரிட்டது. புதுக் கல்வி கற்கவும், உயர்ந்த அலுவல் பெறவும், அவற்றிற்காக நகரங்களில் சென்று குடியிருக்கவும் மக்களுக்கிருந்த ஆவல், அவர்களுக்குள்ளே ஒரு வகைத் தனிப் பண்பு மனப்பான்மையை வளர்த்தது.

இந்து மதத்தின் அடிப்படைக்கு ஆதாரமாயிருக்கும் சாதி முறைமையும் புதுக்கால மாற்றங்களால் தாக்குண்டது. பொதுக் கல்விச்சாலைகள், புகை வண்டிப் பிரயாணம் முதலியன வைதிக மக்களின் வேற்றுமை உணர்ச்சியை மாற்றத் தொடங்கின. புதுக் கல்வி கற்றோர் பலர் சாதிக் கட்டுப்பாடுகளின் மூல காரணங்களையும் நேர்மையையும் பற்றி ஆராயலாயினர்; பல நிபந்தனைகளைக் கண்டிக்கவும் முன் வந்தனர். அரசாங்கம் அமைத்த சில சட்டதிட்டங்களும், பழங்கால வழக்கங்கள் பலவற்றை அகற்ற வழி காட்டின. மகளிர் உடன்கட்டையேறுதற்குத் தடையாக 1829-ஆம் ஆண்டிலும், சிறுவர்க்கு மணஞ் செய்து வைக்கும் வழக்கத்திற்குத் தடையாக 1929-ஆம் ஆண்டிலும் பிறப்பித்த சட்டங்கள் இவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

ஆனால், நெடுங்காலமாக வழக்கத்திலிருந்த சாதிக் கட்டுப்பாடு எளிதில் அகன்றுவிடவில்லை. நகரங்களிலும் பட்டணங்களிலும் பழக்க வழக்கங்களில் சில மாற்றங்கள் தோன்றிய போதிலும், கிராமங்களில் பழைய முறை உறுதியாயிருந்தது. பார்ப்பனர் மட்டுமல்ல, மற்ற உயர் வகுப்பினரும் மற்றுள்ளோரை இழிவாகவே நடத்தி வந்தனர். சாதிச் செருக்கும் குறுகிய மனப்பான்மையும் குடி கொண்டிருந்தன.

சாதி வேறுபாட்டிற்கு எதிர்ப்பு உணர்ச்சியும் புரட்சி முறையில் ஆங்காங்குத் தோன்றியுளது. பொது இடங்களை யாவரும் தடையின்றிப் பயன்படுத்தவும், கோயில்களுக்குள் அனைவரும் சென்று வழிபடவும், பொதுக் கல்விச்சாலைகளில் எல்லாச் சிறுவரும் ஒருங்கே அமர்ந்து கற்கவும் வசதிகள் படிப்படியாக அளிக்கப்பட்டுள்ளன. ஆயினும், தீவிரவாதிகள்

பலர் சாதி வேறுபாட்டை அறவே ஒழிக்கக் கூச்சலிடுவாராயினர். தென்னாட்டில் ஜஸ்டிஸ் கட்சியும், 'சுயமரியாதை' இயக்கமும், அவற்றை அடுத்துத் தோன்றியிருக்கும் 'திராவிடக் கழகம்', 'திராவிட முன்னேற்றக் கழகம்' யாவும் சாதியை மறுத்தும், பார்ப்பனரின் ஆதிக்கத்தைக் கண்டித்தும் வற்புறுத்தி வந்துள்ளன. நெடுநாளாக நடப்பிலிருந்த சாதி நிபந்தனைகளால் அவர்களனைவரும் தாழ்த்தப்பட்டுள்ளனர் என்பதே அவர் கூற்று. சில வேளை, அரசியல்வாதிகள், இவர்களது மன வெறுப்பைச் சட்ட சபைகளுக்கும் ஸ்தல சபைகளுக்கும் நடைபெறுகின்ற தேர்தல்களில் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். அரசாங்க அலுவல்கள் பற்றிய போராட்டங்களிலும் இவ்வுணர்ச்சி கையாளப்பட்டு வந்துளது. ஆகவே, இக்கால மாற்றங்களால் ஒரு பக்கம் சாதி நிபந்தனைகளின் ஊக்கம் குறைந்துளது.; மற்றொரு பக்கம் சாதி வேற்றுமை உணர்ச்சி பெருகியுளது.

தற்காலத்தில் தோன்றியுள்ள மாறுதல்கள் யாவும் மக்கள் பெரும்பாலோருக்கும் நன்மை பயக்கக்கூடியனவோவெனத் திட்டப்படுத்த இப்பொழுது இயலாது. ஆனால், சில சமூகச் சீர்திருத்தங்கள் மக்களுக்கு மிக்க பயனை அளித்துள்ளன என்பதற்கு ஐயமில்லை. உடன்கட்டையேறுதல், சிறுவர் மணம், குழந்தைக் கொலை, நர பலி, குடி வெறி, தீண்டாமை முதலிய பல தீமைகளை அகற்ற அரசாங்கம் முயன்று வந்துளது போற்றுதற்குரியது. பெண்களுக்குச் சொத்துரிமை, எல்லோருக்கும், குறிப்பாகப் பெண்களுக்கும், கல்வி பயில வசதி முதலிய பல நன்மைகளை அரசாங்கம் நல்கியுள்ளது.

அன்றியும் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை வழக்கத்திலிருந்த அடிமைத்தனம் அகற்றப்பட்டது. தென்னாட்டில் மிராசுதார்களுக்குத் தொண்டு செய்த ஊழியர்கள் தவிர முழு அடிமைகளும் பலர் இருந்தனர். அடிமைச் சந்தைகளும் ஆங்காங்கு இருந்தன. எடுத்துக்காட்டாக 1819-இல் கன்னட மாவட்டத்தில் ஏறக்குறைய 82,000 பெயரும்

மலபாரில் 100,000 பெயரும் அடிமைகளாக இருந்தனரெனக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. அக்காலத்தில் ஒரு மனிதனுடைய செல்வத்தில் அடிமைச் செல்வமும் ஒன்று எனக் கருதினர். பிரிட்டிஷ் இந்தியாவில். அரசாங்கத்தார் அடிமைத் தனத்தை 1829-இல் அறவே அகற்றினர். அது அவர் நேரடியாக ஆட்சி புரிந்த மாநிலங்களில் வழக்கத்திற்கு வந்தது. ஆனால், சில உள் நாட்டு அரசுகளில் அது நிலைபெற்று வந்தது. போர்ப்ஸ் என்பவர் 1834-இல் திருவாங்கூரைச் சார்ந்த அஞ்சுதெங்கில் ஓர் அடிமைச் சந்தை இருந்ததாகக் கூறியுள்ளார். 19-ஆம் நூற்றாண்டின் இறுதியோடு அடிமைத் தனம் இந்திய நாடு முழுவதிலிருந்தும் அகற்றப்பெற்றது.

இந்த நூற்றாண்டில், முக்கியமாக காந்திஜியின் இணையற்ற ஆற்றலினால் சமூகச் சீர்திருத்த இயக்கம் வலிமை பெற்றது. இந்தியா விடுதலை பெற்ற பின்னும், தீண்டாமை, குடி, ஜெமீன்தாரி ஸ்தாபனங்கள், குழந்தை மணங்கள் முதலியவற்றை அகற்றுவதற்குப் பெரும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இக்குறைகளனைத்தையும் ஒழிக்க பிரிட்டிஷ் அரசாங்கத்தார் முயலாததற்குக் காரணம், பிற நாட்டு அரசியல் இச்சீர்திருத்தங்களில் மிகவும் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும் என்னும் உணர்ச்சிதான். இந்தியாவில் பலர், அரசியல் போராட்டக் காலத்தில், பிரிட்டிஷாரது ஆட்சியில் நடைபெற்ற குற்றங்களையும், அவர் செய்யத் தவறிய குறைகளையும் மிகுதிப்படுத்திக் கூறியதுண்டு. ஆனால் அதைப் போலவே, மறு பக்கத்தில் சில எழுத்தாளர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் கிடைத்த பயன்களை மிகைபடக் கூறினர். நிலையான சில நன்மைகள் பிரிட்டிஷ் தொடர்பினால் இந்தியர்களுக்கு வந்தன என்பதற்குத் தடையில்லை. ஆட்சித் துறையில் நாடு முழுவதையும் ஒற்றுமைப்படுத்தியது பிரிட்டிஷார் அளித்த இணையற்ற நலனாகும். ஆங்கிலக் கல்வியைப் பரவச் செய்து, அதன் வாயிலாக மக்களுக்குப் பரந்த நோக்கத்தை அளித்ததும்,

அவர் நல் வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளை அமைத்ததும் பிரிட்டிஷ் அரசே ஆகும். ஆயினும், எழுதப் படிக்கத் தெரியாமலிருக்கும் குறையை அறவே அகற்றவும், பஞ்சத்திற்குப் பாதுகாப்பளிக்கவும், விவசாயம், கைத்தொழில் இவற்றைச் சீர்திருத்தவும் போதிய முயற்சிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இக்குற்றத்தைப் பலரும் வற்புறுத்துவதுண்டு. ஆனால், குறைகள் ஒரு பக்கமிருக்க, நமக்குக் கிடைத்துள்ள நன்மைகளை நாம் மறுப்பது முறையன்று.

உயர்நிலைக் கல்வி ஓங்கி வளர்ந்திருக்கின்றது. பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் யாவும் மிகுதியாகத் தோன்றியுள்ளன. இந்தியாவைப் போல அகன்ற பெரிய நாட்டிற்கு இவை போதாவெனலாம். ஆனால், அக் குறையை இப்பொழுது அகற்ற வேண்டிய கடமை நம்மைச் சார்ந்தது. விடுதலை பெற்ற பின் இந்திய நாட்டு அரசாங்கங்கள் இத்துறையில் ஈடுபட்டுள்ளது போற்றுதற்குரியதே. ஆங்கிலக் கல்வி கற்றோரிடையே குறிப்பாக, கேரளம், சென்னை, மைசூர் நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் அளவற்ற திகிலைக் கொடுத்து வருகிறது. கற்றோர் அரசாங்க அலுவலை மட்டும் எதிர்பார்த்திருப்பது ஒரு குறைதான். ஆனால், வேறு வழிகள் மிகுதியாயில்லை என்பதை மறுக்க முடியாது. உயர் நிலைக் கல்வியை மிகத் தகுதியுடையவர்களுக்கே அளிக்க வேண்டுமென்ற கொள்கையைச் சிலர் வற்புறுத்துகின்றனர். ஆனால், அலுவல் துறைகளைப் பெருக்குவதுதான் சிறந்த வழியெனப்படுகிறது. நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதும், அதே வேளையில் வேலையில்லாக் குறையைப் போக்குவதும், பெருங்கடமையாகும்.

கிறிஸ்து சமய குரவர்கள், அரசாங்கத்தார், சில தலைவர்கள் முதலியோரது முயற்சிகளால் பெண் கல்வி இக்காலத்தில் ஓங்கி வளர்ந்துள்ளது. பெண் கல்வியைப் பரப்பச் செய்து வரும் தொண்டு மிகவும் போற்றுதற்குரியது. ஏனெனில், முன்னரே பெண் கல்விக்கு இடையூருகப் பல

தவறான எண்ணங்கள் நாட்டில் குடிகொண்டிருந்தன. வேத காலத்திலும் பழந்திராவிடர் காலத்திலும் பெண்கள் நிலை எவ்விதமாயிருந்த போதிலும், பிற்காலங்களில் அது மிகக் கேவலமாகவே இருந்தது. ஆங்காங்குக் கற்றறிந்த சில அரசியரும், செல்வர்களுக்கிடையே சில பெண் கவிஞர்களும் தோன்றியிருந்த போதிலும், எளியோர் நிலையும், இடைநிலை மக்கள் நிலையும் இழிவாகவே இருந்தன. பெண்டிர்க்கு வாய்த்த இடம் வீடுதான் என்ற எண்ணம் குடிகொண்டிருந்தது. பெண்களுக்குத் தனி உரிமைகள் மிகக் குறைவு; அடிமைகள் போலவே பெண்களும் கணவரின் செல்வப்பொருள் என்று கருதப்பட்டு வந்தனர். கைம்பெண் நிலைமை துயர் நிறைந்ததாயிருந்தது. வழக்கமாகத் தன் அண்ணன், தம்பி, மகன் அல்லது மற்ற உறவினர் ஆதரவு பெற்று வாழும் அக்கைம்பெண் பிறருக்குப் பெருஞ்சுமையாகவும் தனக்கே ஒரு தொல்லையாகவும் தன் வாழ்நாளை நடத்த வேண்டியிருந்தது. இக்காலத்தில் பெண் கல்வி வளர்ச்சி பெற்றதால் பெண்கள் தம் நிலைமையைச் சீர்திருத்தும் இயக்கத்தில் ஈடுபட்டனர். இச்சிறந்த தொண்டிற்கு அடிகோலியவர் மேல் நாட்டாரே. அவரே இந்தியப் பெண் கல்வியில் ஆர்வம் தோற்றுவித்தவர். அத்துடன் இந்திய ஸ்தாபனங்களும் தலைவர்களும் ஆற்றிய தொண்டும் அதற்கு உதவியளித்தது. பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ண மடாதீனங்கள் என்பவை இத்துறையில் இந்தியாவின் பல பகுதிகளிலும் திறம்பட ஈடுபட்டன. 1860-முதல் பார்ஸிகள் பெண் கல்விக்காகப் பெரிதும் உழைத்தனர். பண்டித இராமாபாய் (1858-1922) கைம்பெண் கழகம் ஒன்றைப் புனாவில் அமைத்தார். அது நாளடைவில் சமஸ்கிருத அறிவின் உறைவிடமாகவும் திகழ்ந்தது. புனாப் பேராசிரியர் காற்வே என்பார் 1889-இல் இந்துக் கைம்பெண்டிர் கல்விக்காக ஒரு பள்ளிக்கூடம் தொடங்கினார். அது இந்திய மகளிரது பல்கலைக் கழகமாக வளர்ந்து வந்துள்ளது. இதில் பெண்களுக்கு உகந்த பொருள்களைத் தாய்மொழியில் கற்பிப்பதற்கு வசதியளிக்கப்

பட்டது. சென்னைச் செல்வி டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி அம்மையார் பெண் கல்விக்கும் பெண்கள் முன்னேற்றத் திற்கும் அரும்பெரும் உதவியளித்துள்ளார்கள். தென்னாட்டில் கிறிஸ்தவ சமய குரவரும், வள்ளன்மை மிக்க பெருந்தகை யாளரும், மாநில அரசாங்கங்களும், மற்றப் பொது நிலையங்களும் பெண் கல்விச்சாலைகள் பலவற்றை நிறுவிய பெருமையைப் பெற்றுள்ளனர். தவிர, எண்ணற்ற மகளிர், ஆடவர் கற்கும் கல்லூரிகளில் அவருடன் சேர்ந்து பயின்று வருகின்றனர். தெற்குக் கோடியிலும் கேரளத்திலும் பெண் கல்வி மிகச் சிறப்பான நிலையை எய்தியுள்ளது.

அத்துடன், பெண்களின் முன்னேற்றத்தைக் கருதித் தொடங்கியுள்ள இயக்கமும் ஓங்கி வளர்ந்திருக்கிறது. 1919-முதல் பெண்கள் தேர்தல் வாக்குரிமையைப் பெற்றுள்ளனர். மாநில அரசியல் துறையிலும் பல பெண்மணிகள் பங்கெடுத்து வருகின்றனர். மிகப் பலர் அரசியல் அலுவலிலும் ஈடுபட்டுள்ளனர். தற்போதைய இந்திய அரசியல் திட்டமும் பெண்களுக்கு ஆண்களுடன் சம உரிமை நிலை அளித்துள்ளது. பெண்களுக்கு மருத்துவ சாலைகளும் மகப்பேறு மனைகளும் பல இடங்களில் நிறுவப் பெற்றுள்ளன. பெண்கள் நலத்திற்காகப் பாடுபடும் பல நிலையங்களும் மகளிர் இல்லம் நிறுவுதற்கு அரசாங்கத்துடன் ஒத்துழைத்து வருகின்றன. அது போலவே, கோயில்களைச் சார்ந்த தேவதாசி முறையை அகற்றுவதற்கு எடுத்த முயற்சியும் அதன் வெற்றியும் போற்றுதற்குரியன. வேசித் தொழிலை ஒழிப்பதில் பல குழுக்களும் ஈடுபட்டு வருகின்றன. ஆனால், இவ்வரிய தொண்டில் முழு வெற்றி கிடைத்திருப்ப தாகக் கூற முடியாது.

**பொருளாதார நிலைமை** :—பிரிட்டிஷாரின் ஆட்சி தென்னிந்திய மக்களின் பொருளாதார நிலையை எவ்வாறு பாதித்தது ? இந்தப் பிரச்னை பற்றி ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் தோன்றியுள்ளன. ஒரு பக்கம் பிரிட்டிஷ் எழுத்தாளர்கள், நாட்டில் புதிதாக அமைக்கப்பட்ட கைத்

தொழில்களேயும், உழவுத்தொழில் முன்னேற்றத்தையும், மக்களின் வாழ்க்கை வசதிப் பெருக்கத்தையும் எடுத்துரைத் தனர். இவற்றிற்கு எதிரிடையாக இந்திய அரசியல் வாதிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சுரண்டலேயும், பொது மக்களின் கொடிய வறுமையையும் இடைவிடாது வற்புறுத்தினர். இவ்விரு கொள்கைகளும் ஒரு சார்பான மிகையுணர்ச்சி யெனவே கருதவேண்டும். பிரிட்டிஷ் அரசாட்சி அமைப்பதற்கு முன்னர் இந்தியர்களின் பொருளாதார நிலே மிகவும் மேன்மை யாயிருந்ததெனக் கருதுவது வெறும் கற்பனே. பயிர்த் தொழில், கைத்தொழில் இவற்றின் முறைகள்யாவும் பண்டைக் கால வழக்கத்தைச் சார்ந்தவையாகவே இருந்தன. உள் நாட்டுத் தீர்வைகள் எண்ணற்றன. பிணி, பஞ்சம் முதலியவை துயரிழைத்தன.

அதே வேளேயில், பிரிட்டிஷ் ஆட்சியால் நிகழ்ந்த சில தீமைகளேயும் மறுக்க முடியாது. ஆட்சித் துறையில் மேல் அலுவலாளர் எண்ணிக்கையும் செல்வாக்கும் மிகுதியாயின. இராணுவச் செலவு நாளுக்கு நாள் ஏறியவண்ணமாகவே இருந்தது. இவை தவிர, அரசாங்கம் பருத்தி மீது உள்நாட்டு வரியைச் சுமத்தி பிரிட்டிஷ் துணிக்கு ஆதரவு அளித்தது இந்திய மக்களுக்குத் துயரை விளேவித்தது. அயல் நாட்டுத் துணிமணிகளுக்கு வரி வகுக்காதது இந்திய நெசவாளரின் அழிவுக்கு அடிகோலியது.

பிரிட்டிஷாரின் இந்தத் தன்னலத்தினுல் நாட்டில் பஞ்சங் கள் தோன்றினவென்று சிலர் கருதுகின்றனர். 1770-இலும் 1784-இலும் தென்னிந்தியா முழுவதிலும் தோன்றிய பஞ்சங் களேத் தவிர சென்னே மாநிலத்தில் 1807-இலும் மிகக் கொடிய பஞ்சம் ஒன்று தலேவிரித்தாடியது. ஒரிஸாவை 1865-இல் ஒரு பஞ்சம் தொல்லேப்படுத்தியது. சென்னே, பம்பாய் ஆகிய மாநிலங்கள் 1876-இல் கொடும் பஞ்சத்தில் அழுந்தின. 1896-இலும் 1900-இலும் இந்திய நாட்டில் பல இடங்களிலும், குறிப்பாக, பம்பாய், சென்னே, மத்திய மாகாணம் ஆகிய மாநிலங்களிலும் பஞ்சம் பரவியது. கோடிக்

கணக்கான மக்கள் ஆருத் துயரத்துக்குள்ளாயினர். இவை கொடிய பஞ்சங்கள் என்பதற்கு ஐயமில்லை. ஆனால், இவை போன்ற பஞ்சங்கள் முற்காலங்களில் அடிக்கடி தோன்றிய துண்டு. முற்காலப் பஞ்சங்களைப்பற்றி விரிவான செய்திகள் இல்லை. அண்மையில் தோன்றியுள்ள பஞ்சங்களைப் பற்றிய முழு விவரமும் நமக்கு எளிதாகக் கிடைத்திருக்கின்றது. ஆதலால் பழங்காலப் பஞ்சங்கள் இவற்றைப் போலவே கொடுமையாயிருந்திருக்க வேண்டுமென்பதற்கு ஐயமில்லை. ஆயின், அளவற்ற அதிகாரமும், மிகப் பெரிய வருமானமும், வசதிகளும் பெற்றிருந்த பிரிட்டிஷாரின் இந்திய அரசாங்கம் பஞ்ச்ங்களுக்குத் தடுப்பு முறைகளையும், பாதுகாப்பு நடவடிக்கைகளையும் திறம்படக் கைக்கொண்டிருக்கலாம். மிகத் தேவையான இம்முறைகளை அரசாங்கம் போதிய அளவு விரைவாகவோ ஆற்றலுடனே கையாளவில்லை. உண்மையில், 1880-ஆம் ஆண்டு வரையில் பஞ்சத்தால் வரும் துயரங்களை ஒழிக்க, நிலையான முறையை அரசாங்கம் பின்பற்றவில்லை. அக்கால முதல், போக்குவரத்து வசதிகள், நீர்ப்பாசனக் கால்கள், புதுக் கைத்தொழில்கள் அமைத்தல் ஆகிய இவை யாவும் மக்கள் துயரங்களை ஒருவாறு அகற்றின. பஞ்சத்தால் துன்பப்பட்ட மக்களுக்கு ஆங்காங்குச் சில உதவிகள் அளிக்கப் பட்டன. பஞ்ச நிவாரண நிபந்தனைகள் அமைக்கப்பெற்றன. இவற்றைப் பின்பற்றும்படி மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் திட்டமிட்டன.

நீர்ப்பாசன வசதி பெருகியது. இது பிரிட்டிஷார் செய்த பெருஞ்சேவையெனலாம். சென்னை மாநிலத்தில் அமைத்த நீர்ப்பாசனத் திட்டங்கள் பல. அவை 1857-ஆம் ஆண்டுப் புரட்சிக்கு முன்னமே நடந்தேறின. காவிரி கொள்ளிடம் அணைக்கட்டு வேலைகள் 1836-இல் தொடங்கின. கோதாவரி அணை 1846-இலும், கிருஷ்ணா நீர்ப்பாசன வசதிகள் 1850-இலும் ஆரம்பிக்கப்பட்டன. பெரியாற்று அணை பற்றி முன்னரே திட்டமிட்டிருந்த போதிலும் 1895-இல்தான் அது நடைபெற்றது. மேட்டூர் அணை 1925-இல் தொடங்கி

1934-இல் நிறைவேறியது. பைக்காரா நீர் மின்சாரத் திட்டத்தை 1933-இல் தொடங்கி ஒவ்வொரு பகுதியாக முடித்தனர். தவிரவும் பயிர்த்தொழிலின் முறையையும் விளைவையும் சீர்திருத்தப் பிரிட்டிஷ் அரசாங்கம் சில முயற்சிகளில் முனைந்தது. தென்னிந்தியா எக்காலத்திலும், பெரும்பாலும் பயிர்த்தொழிலையே கையாண்டு வந்துளது. கைத்தொழிற்சாலைகள் மிகுந்திருந்த பம்பாய் நகரத்தைத் தவிர தென்னிந்தியாவில் மற்றைய இடங்களிலெல்லாம் பயிர்த்தொழிலில்தான் மக்கள் ஈடுபட்டிருந்தனர். 19-ஆம் நூற்றாண்டின் கடைசியில் ஆங்கில நாட்டு முறையைப் பின்பற்றிச் சென்னை மாநிலத்தில் பயிர் செய்யத் தொடங்கினர். ஆனால், அது இவ்விடத்திற்குத் தகுந்ததன்று என அறிந்த பின் அதைக் கைவிட்டனர். சென்னை நகரில் ஒரு பயிர்த் தொழில் கல்லூரி அமைக்கப்பட்டது. 1898-இல் செடி கொடிகளை அழிக்கும் நோய்களை ஆராயும் பொருட்டு ஒரு தாவர நூல் அறிஞரை அமர்த்தினர். அன்றியும், காடுகள் பலவற்றை வெட்டி அவ்விடங்களைப் பயிரிட வசதியளித்தனர்.

கைத்தொழில் துறையில் முதலில் மாஞ்சஸ்ற்றரிலிருந்து இறக்குமதியான துணிகள், நம் நாட்டில் வளர்ந்து வந்த நூல் நூற்புத் தொழிலையும் நெசவுத் தொழிலையும் நசுக்கக் காரணமாயின. உண்மையில் மாஞ்செஸ்ற்றர் ஆலை முதலாளிகள் சார்பாக இந்தியர்களது நலத்தை அரசாங்கம் புறக்கணித்த செயல் பிரிட்டிஷாரின் ஒரு பெருங்குறை என்பதற்குத் தடையில்லை. ஆனால், வேறு பல கைத்தொழில்கள் வளர்ச்சி அடைந்தன. அவற்றில் ஈடுபடுவதற்காகத் தொழிலாளிகள் பட்டணங்களை நாடிச் சென்றனர்.

19-ஆம் நூற்றாண்டில் பல நெசவுச்சாலைகள் தொடங்கப் பட்டன. முதலில் பம்பாய்ப் பார்ஸிகளின் முயற்சியால் பல தோன்றின. அவை விரைவில் முன்னேறவே, தென் இந்தியாவிலும் வட இந்தியாவிலும் பல பட்டணங்களில் வேறு ஆலைகள் தோன்றலாயின. அஹம்மதபாத், சென்னை, கோயம் புத்தூர், மதுரை முதலிய இடங்களில் பெரிய ஆலைகள்

தழைத்து வந்தன. சென்னை நகரத்தில் அலுமினியம் முதலிய உலோகக் கைத்தொழிலும், மைசூரில் இரும்பு, நிலக்கரித் தொழில்களும், ஆந்திராவில் அபிரேகத்தொழிலும் [1] கேரளத்தில் மண்பாண்டத் தொழிலும் புதுமுறையில் நடைபெற்றன.

ஆங்கிலக் கல்வி கற்று அலுவல்களில் அமர்ந்தவர்களுக்கும், பெருந்தொழில்களில் ஈடுபட்டவர்களுக்கும் வருமானம் பெருகி வந்தது. அவர் வாழ்க்கை முறைமையும் சீர்திருந்தியது. ஆனால், இவை சிலருக்கே நன்மை அளித்தன. நிற்க, மேல் நாட்டாருடன் ஏற்பட்ட தொடர்பு மக்களின் நடை உடை பாவனைகளில் பல நாகரிக முறைகளைப் புகுத்தின. வானொலி, விசை வண்டி, மிதி வண்டி முதலான புதிய வசதிகளைப் பயன்படுத்த மக்களுக்கு அவா ஏற்பட்டது. பொது மக்களின் உடல் நலமும், நாளடைவில் பெருகி வந்தது.

இவ்வகைச் சீர்திருத்தங்களும் கல்வி முன்னேற்றமும் மற்றைய நாடுகளில், மக்கள் பிறப்புத் தொகையைக் குறைக்கும்படி தூண்டியிருக்கலாம். ஆனால், இந்தியாவிலோ அந்த மாறுதல் தோன்றவில்லை. இந்தியாவில் நாளுக்கு நாள் பிறப்புத் தொகை உயர்ந்து வந்துளது. இப்பொழுது மருத்துவச் செயல் முறை வலுப்பட்டு வரவே, இறக்கும் தொகையைவிடப் பிறக்கும் தொகையே ஆண்டாண்டுதோறும் ஏற்றமடைந்து வருகின்றது. ஆகவே, மக்களின் மொத்த எண்ணிக்கை மிகமிக உயர்ந்துவிட்டது. கருக்கொள்வதைத் தடுக்கும் முறைகளைப் பரப்புவதற்காக அரசாங்கம் சில வேளைகளில் முயற்சி செய்வதுண்டு. ஆனால் அவற்றையெல்லாம், மக்களின் அறிவின்மை ஒரு பக்கமும், ஊழ்வினையில் நம்பிக்கை மற்றொரு பக்கமும் சேர்ந்து பயனற்றதாக்கி விடுகின்றன. உண்மையில் வடஇந்தியாவைப் போலவே தென் இந்தியாவிலும் மக்கள் தொகை மிக உயர்ந்து வருவது ஒரு பெரிய பிரச்னையென்றே கூற வேண்டும்.

1. மைக்கா (Mica)

## இலக்கியம் :

**சமஸ்கிருதம் :** இக்காலத்தில் சமஸ்கிருத இலக்கியம் மிக்க வளர்ச்சியடைந்தது. மேல் நாட்டுத் தொடர்பின் பயனுல் இக்காலத்தில் ஓர் ஆராய்ச்சி மனப்பான்மை தோன்றியது. குறிப்பாக, இலக்கிய அமைப்பின் தகுந்த முறைகளை மேற்கொண்டு, ஆராய்ச்சிக் கட்டுரை, சிறுகதை, புனை கதை, சிறு நாடகம், வசையுரை முதலிய இலக்கியங்கள் கையாளப்பட்டன. ஆங்கில நூல்கள் பல சமஸ்கிருதத்தில் தொகுத்து அமைக்கப்பட்டன ; சில மொழி பெயர்க்கப்பட்டன. இதே வேளையில் சமஸ்கிருத எழுத்தாளர்கள் விஞ்ஞானத் துறையிலும் சில நூல்களை இயற்றத் தொடங்கினர். மேல் நாட்டுத் தொடர்பு சமஸ்கிருத மொழியின் இலக்கிய வளர்ச்சிக்குப் பேருதவியளித்ததென்பதை மறுக்க முடியாது.

முன் போலவே, நாடகங்கள், பக்திப் பாடல்கள், மறை நூல்கள், தத்துவ ஆராய்ச்சி (மெய் விளக்கத்துறை) நூல்கள் இயற்றப்பட்டு வந்தன. 93 நாடகங்களை இயற்றிய பட்ட ஸ்ரீ நாராயண சாஸ்திரி போன்ற கவிஞர்களும், 108 நூல்களை எழுதிய இராதாமங்கலம் நாராயண சாஸ்திரியை ஒத்த புலவர்களும் திகழ்ந்தனர். இலத்தூர் இராமசாமி சாஸ்திரியும் பெரும்புகழ் பெற்ற எழுத்தாளர். அவர் இயற்றிய பல நூல்களுள், ஆயில்யம் திருநாள் மகாராஜாவைப் புகழ்ந்து இயற்றியுள்ள **கீர்த்தி விலாஸசம்பு** என்பது ஒன்ருகும். இலத்தூர் இராமசுவாமி சாஸ்திரியின் மாணவர் ஒருவர் **சுனுஷாவிஜயம்** என்ற ஓருறுப்பு நாடகத்தை இயற்றினர். நகைச்சுவை பொருந்திய இந்நாடகம், வீண் சண்டை தொடுக்கிற மாமியாரை மருமகள் வென்றதைக் கதையாக விரித்துரைக்கிறது. திருவாங்கூர் அரச குலத்தைச் சேர்ந்த கேரளவர்ம வலிய கோயில் தம்பிரான் (1845-1915) பல காப்பியங்களையும் பக்தி சிறந்த பாடல்களையும் இயற்றினர். ஆழ்ந்த அறிவு சான்ற புலவரும், கற்பனைத் திறம் வாய்ந்த கவிஞருமாகிய இவர் கேரளக் காளிதாஸர் என்றழைக்கப்பட்டு வந்தார். கொச்சியில், ஆரூர் பட்டதிரி 1830-இல் **உத்தர நைஷதத்தைச்**

செய்தருளினர். கோதை வர்மா என்பவர், ஒருவர் தனிமையில் தனக்குள்ளே உரையாடும் வகையான **ரஸஸதன பாணத்தையும், ராம சரிதத்தின்** ஒரு பகுதியையும் மிகத் திறம்பட இயற்றினர். அதைத் தொடர்ந்து ராம சரிதத்தின் மற்றப் பகுதியைக் கொச்சுண்ணித் தம்பிரான் எழுதி முடித்தார். கொடுங்கல்லூரைச் சார்ந்த குஞ்சிக் குட்டன் தம்பிரான் சிறு நாடகங்கள் பலவற்றை இயற்றினர். அவற்றில் சில, மேல் நாட்டுக் கொள்கைகள் இந்திய சமூகத்தில் புகுந்துள்ளவற்றை அழகாகப் புனைந்துரைக்கின்றன. ஆகவே, இக்காலத்திலே கேரள நாடு சமஸ்கிருத இலக்கியத்தில் பண்பு சிறந்த பற்பல நூல்களைத் தந்துளது. ஆயின், பொதுக் கல்வியிலும், ஆட்சித் துறையிலும், ஆங்கிலத்திற்கு உயர்ந்த நிலை அளிக்கப்பட்டிருந்ததால் சமஸ்கிருதத்தின் செல்வாக்குக் குறைந்தது.

இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்தில் (1800-32), அறிவை வளர்க்கும் பண்பாட்டில் தஞ்சாவூர் சிறப்பாக ஈடுபட்டது. வேதச் சடங்குகள், தர்ம சாஸ்திரங்கள், இலக்கணம், சோதிடம் முதலியவை பற்றிய அரிய நூல்கள் அங்குத் தோன்றின. ஆனல், ஏறத்தாழ 19-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி முதல் சமஸ்கிருதத்தைப் போற்றும் ஆர்வம் தஞ்சாவூரிலிருந்து புதுக்கோட்டைக்கு மாறியதெனலாம். புதுக்கோட்டை நகரில் ஆண்டாண்டுதோறும் புலவர் மாநாடுகள் நடைபெற்றன. அவற்றில் பற்பல புலவர்கள் இலக்கியம் பற்றிய அரிய பொருள்களை ஆராய்ந்து கூறிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தனர்.

காஞ்சியில் 19-ஆம் நூற்றுண்டில் உபநிஷத் பிரம்மயோகி என்ற ஞானியார் 108 உபநிஷத்துக்களை விரித்துரைத்து அத்துவைதக் கொள்கைகளுக்குரிய அவற்றின் பொருத்தங்களையும் எடுத்துக் காட்டியுள்ளார். சமஸ்கிருதத்திலும் தமிழிலும் ஆழ்ந்த அறிவு பெற்றிருந்த அப்பையாசாரியர் தம் நூல்களில், சாங்கியம், யோகம், வேதாந்தம் முதலியவற்றின் உட்கருத்துக்களை இணைத்துப் பொதுவான தத்துவம் ஒன்றை

நிறுவுதலில் ஈடுபட்டார். இதே காலத்தில் ஸ்ரீரங்கம், கும்பகோணம், திருப்பதி முதலான திவ்விய ஸ்தலங்களில் வாழ்ந்திருந்த பல பண்டித சிகாமணிகள் சமஸ்கிருத நூல்கள் பலவற்றை எழுதியுள்ளனர். ஒவ்வோர் ஆசிரியரும் தமது மெய்ப்பொருட் கொள்கைகளையும் தம் நூலில் விளக்கி யுள்ளார்

விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் தெலுங்குப் புலவர்கள் சிலர் ஆந்திர நாட்டை விட்டுப் பெரியோர்களின் ஆதரவை எதிர்பார்த்துத் தெற்கில் பல இடங்களுக்கு வந்த போதிலும், வேறு பலர் தம் தாயகத்தில் உள்ள அக்கிரஹாரம், மடம், பெருநிலக்கிழார்தம் பண்ணைகள் முதலான இடங்களில் தங்கி, சமஸ்கிருத காப்பியங்கள், நாடகங்கள் முதலியவற்றை இயற்றிய வண்ணமாகவே இருந்தனர். கன்னட நாட்டில் மதத்தைப் பற்றியும், அகப்பொருள் பற்றியும் பற்பல நூல்கள் வெளி வந்தன. 19-ஆவது நூற்றாண்டில் ஸ்ரீரங்க மடத்தைச் சார்ந்த இராம சாஸ்திரியார் அத்துவைத நூலாசிரியர்களில் தலைசிறந்து விளங்கினர். அது போலவே, வைணவக் கொள்கைகளை விளக்கியவர் மேல்கோட்டு அனந்தாழ்வார் (1822-62) என்பவர். அவரது நூல்களில் தோன்றிய எதிரிடையான கருத்துக்களைப் பிற்கால ஆசிரியர்கள் சிலர் பின்பற்றினர். எடுத்துக்காட்டாக **நியாயேந்து சேகரம்** என்னும் நூலில் அத்துவைதத்தை இராஜு சாஸ்திரிகள் ஆதரித்து எழுதினர்; அது போலவே விசிஷ்டாத்துவைதக் கொள்கையைத் **தசகோடி** என்ற நூலில் அண்ணங்கராசாரியார் விரித்துரைத்தார்.

மகாராஷ்டிர நாட்டில் முன் போலவே கடவுள் மீது தோத்திரப் பாடல்களும், மெய்ப்பொருளாராய்ச்சி நூல்களும் தொடர்ந்து எழுதப்பட்டுவந்தன. 19-ஆவது நூற்றாண்டில் அச்சியுதராய மோதக் அத்துவைதத்தைப் பற்றியும், வாஞ்சேசுவரர் மீமாம்ஸத்தைப் பற்றியும் எழுதினர். இக்காலத்தில் தோன்றிய மற்ற நூல்களில் இரகுநாத சாஸ்திரி பாற்வடே இயற்றிய கீதையின் பேருரையையும், **சங்கரபாத**

**பூஷணம்** என்ற அத்துவைத விரிவுரையையும் சிறந்த நூல்களெனக் கருதலாம்.

ஆங்கில இலக்கியத் தொடர்பின் விளைவாக ஆங்கில நூல்களைச் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்க்க விருப்பம், மிகுதியாகத் தோன்றியது. திருவாங்கூர் இராசராசவர்மா **'ஒதெல்லோ'** நாடகத்தை சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்தார். ஷேக்ஸ்பியரின் வேறு சில நாடகங்களை ஆர். கிருஷ்ண மாச்சாரியார் மொழி பெயர்த்தார். ஸ்ரீசைல தீக்ஷதர் **காமடி ஆப் எறேர்ஸ்**[1] என்ற இன்பியல் நாடகத்தை மொழி பெயர்த்தார். புதுவைச் சார்ந்த தாட்பத்ரிகர் கெடேயின் புகழ் பெற்ற **பாஸ்ற்று**[2] எனும் நூலை சமஸ்கிருதத்தில் தொகுத்துரைத்தார்.

இதே காலத்தில் தென்னிந்திய மொழிகளில் தோன்றி யிருந்த அரிய நூல்கள் சிலவற்றையும் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்தனர். திருக்குறள், நாலடியார், சிலப்பதிகாரம், ஆழ்வார்களின் பிரபந்தம் முதலிய தமிழ் நூல்கள் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்க்கப் பெற்றன. வள்ளத் தோள், குமாரன் ஆசான், உள்ளூர்ப் பரமேசுவர ஐயர் போன்ற மலையாளக் கவிஞர்களின் கவிதைகளையும், மகாராஷ்டிர மொழியிலுள்ள **ஞானேசுவரி**யையும், **கீர்வாணகேகாவலி**யையும், தெலுங்கில் காணப்படும் சில சதகப் பனுவல்களையும் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்க்கலாயினர். அன்றியும், முற்காலத்தைவிடத் தென் இந்திய மொழிகளில் தோன்றி யுள்ள கதைகள், கட்டுரைகள் இவற்றின் ஒளி சமஸ்கிருத இலக்கிய நூல்களில் வீசியது.

ஆங்கில இலக்கியத்தின் செல்வாக்கு கட்டுரை, சிறுகதை, புனை கதை (நாவல்) இவைகளில் மிகுதியாகக் காணப்பட்டது. சமஸ்கிருத உரைநடை இக்காலத்திலே உயர்நிலையை எய்திய தெனலாம். 19-ஆவது நூற்றாண்டின் இறுதிக் காலம் முதல், சிறுகதைகள் வழங்கப்படலாயின. புகழ் பெற்ற புலவர்களின் காப்பியங்களும், உரைநடை நூல்களும் எளிய சிறு கதைகளாக

1. Comedy of Errors
2. Faust

அமைக்கப்பட்டன. அத்துடன் தற்கால வாழ்க்கையை ஒட்டிய புதுக்கதைகளும் தோன்றின.

புனை கதை இக்காலத்தில்தான் தோன்றியது. முதலில் பல வங்காள நாவல்கள் மொழி பெயர்க்கப்பட்டன. விரைவில், பிறிதின் சார்பற்ற நாவல்கள் சமஸ்கிருதத்தில் வெளிவந்தன. எடுத்துக்காட்டாக, கோபால சாஸ்திரியின் **அதிருபா**வையும், நாராயண சாஸ்திரியாரின் **சீமந்தினி**யையும், ஆர். கிருஷ்ணமாச்சாரியாரின் **சுசீலா**வையும் குறிப்பிடலாம். இவை யாவும் தோன்றுவதற்கு ஊக்கமளித்தவை ஆங்கில நாவல்கள்தாமென்பதற்கு ஐயமில்லை.

இது போலவே கட்டுரையும் ஆங்கில முறையைப் பின் பற்றி எழுந்தது. தற்காலப் பொருள்களைப் பற்றிய பற்பல கட்டுரைகள் தோன்றி வருகின்றன. ஆயினும், மேல்நாட்டு மொழிகளில் அவை ஓங்கி வளர்ந்திருப்பது போல சமஸ்கிருதத்தில் வளர்ச்சிபெற இன்னும் நாளாகும்.

மதம், சமுதாய வாழ்க்கை முதலியவற்றின் தொடர்புள்ள நாடகங்கள் சமஸ்கிருதத்தில் நீடித்த காலமாக வழக்கத்திலிருந்துள்ளன. ஆனால், இரண்டு அல்லது மூன்று உறுப்புக்கள் அடங்கிய சிறு நாடகங்கள் இக்காலத்தில்தான் தோன்றின.

அண்மையில் சமூக வாழ்க்கையைப் பற்றிய இன்பியல் நாடகங்கள் மிகுதியாக இயற்றப்பட்டுள்ளன. ஆங்கில முறையை ஒட்டி ஓர் உறுப்பு மட்டுமே அமைந்த[1] சிறு நாடகங்கள் பல தோன்றின. இராமநாத சாஸ்திரி, வி. கெ. தம்பி, வரதராஜ சர்மா, ஹெபாரெ, திருவேங்கடாசாரி முதலிய தென்னாட்டு அறிஞர்கள் பண்பு வாய்ந்த பல சிறு நாடகங்களை உருவாக்கியுள்ளனர். வசை நூல்களும், எளிய செய்யுட்களும் தோன்றியுள்ளன. தற்கால நாகரிகப் பழக்கங்கள், அரசியல் சச்சரவுகள், சமூக வாழ்க்கையில் தோன்றியுள்ள மாற்றங்கள் முதலியவை யாவும் முன் குறிப்பிட்ட இலக்கிய

1. One Act Plays

அமைப்புகளுக்குத் தகுந்த வசதியையும் ஊக்கத்தையும் அளித்துள்ளன.

ஆங்கில இலக்கியத்தின் செல்வாக்கு சமஸ்கிருத இலக்கிய ஆராய்ச்சியில் மிகுதியாகக் காணப்பட்டுள்ளது. இலக்கிய அமைப்பு, அதிலும் குறிப்பாக, கதையுறுப்புக்களின் குணவியல்பும் உரைநடைப் போக்கும், மேல் நாட்டு இலக்கிய வழக்கங்களை ஒட்டியே ஆராயப்பட்டு வந்தன. தென்னாட்டு ஆர். கிருஷ்ணமாச்சாரியாரும், எ. வி. கோபாலாச்சாரியாரும், சமஸ்கிருத காவியங்களையும், நாடகங்களையும், இலக்கிய முறையில் ஆராய்ச்சி செய்வதில் பெரும் சேவை செய்துள்ளனர். அது போலவே தத்துவ சாஸ்திரத்தை ஒப்பிட்டுணர்வதிலும், ஆராய்ச்சி செய்வதிலும், இராஜராஜ வர்மா, ஆர். சாமா சாஸ்திரி, ஆர். எஸ். வேங்கடராம சாஸ்திரி, எஸ். டி. ஜி. வரதாச்சாரியார் போன்ற அறிஞர்களின் ஆற்றலும் முயற்சியும் பெரிதும் போற்றத் தக்கவை.

மொழியின் பொது இலக்கணம், யாப்பிலக்கணம், சொற்கோப்புக்கலை என்னும் துறைகளில் நூல்கள் தொடர்ந்து வெளி வந்துகொண்டிருந்தன. 19-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாசுதேவ தீட்சிதர், பால மனோரமா என்ற இலக்கண உரை நூலை இயற்றினர். இது **சித்தாந்தகௌமுதி** யென்ற புகழ் பெற்ற நூலுக்கு உரையாகும். இராஜராஜ வர்மா இலக்கணத்தைச் சுருக்கி **லகுபாணினீயம்** என்ற நூலை அமைத்தார். அதே காலத்தில் ஸ்ரீகிருஷ்ண பாகால சுவாமிகள் (1839-1916) **அலங்காரமணிஹாரம்** என்ற அணி இலக்கண விரிவுரையை எழுதினர். ஆந்திர நாட்டு பரவஸ்து வேங்கட ரங்காசாரியார் **சப்தார்த்த ஸர்வஸ்வ** என்ற பல பொருள் தொகுதியொன்றை இயற்றினர். மகாராஷ்டிர நாட்டில் ரா. ஆ. காண்டேக்கர் என்ற சிறந்த நூலாசிரியர் **கோசவ்தம்சம்** என்னும் நிகண்டு நூலைச் செய்தார்.

இசை, நாட்டியம் போன்ற கவின் கலைகளைப்பற்றிய நூல்களையும் தகுந்த ஆசிரியர்கள் இயற்றினர். ஆயுர்வேதம்,

சோதிடம், நிலக்கணக்கியல்,[1] பருப்பொருள் இயல்[2] என்னும் விஞ்ஞான வகைகள் பற்றியும் பற்பல நூல்கள் தோன்றின. ஆனால், அவை மிகச் சுருக்கமாகவும், ஆழமில்லாது மேலோட்ட மாகவும் அமைந்துள்ளன. விஞ்ஞான சாஸ்திரங்களின் உட்கருத்துக்களை நுணுக்கமாக விளக்கும் நூல்களென இவற்றைக் கருத முடியாது. ஆனால், இந்த முதல் முயற்சி, ஆங்கிலத் தொடர்பின் பயனாகவே வந்துள்ளது என்பதை மறுக்கமுடியாது.

## தமிழ்

கிறிஸ்து சமய குரவரின் செல்வாக்கு தமிழ் நாட்டில் இருந்தது போல் அவ்வளவு தீவிரமாக இந்தியாவில் வேறெங்கு மிருந்ததில்லை. ஏறத்தாழ 17-ஆவது நூற்றாண்டு முதல் ஐரோப்பிய சமயகுரவர் பலர் தமிழ்மொழி கற்பதில் ஈடுபட்டிருந்தனர். அன்னார் நாளடைவில் பல நூல்களையும் இயற்றினர். டிநொபிலி, பெஸ்கி (வீரமாமுனி) என்னும் சமய குரவர் இருவர் எழுதிய நூல்கள் மற்றோர்க்கு வழிகாட்டி ஆயின.

அச்சுப் பொறிகளைப் புதிதாகத் தென்னாட்டில் கொண்டு வந்தவரும் கிறிஸ்துவ சமய குரவரே ஆவர். நூல்கள் மிகுதியாக வெளிவருவதற்கு அது பெரும் துணை ஆயிற்று. அன்றியும், அவர் வாயிலாகவே மேல்நாட்டுக் கருத்துக்களும், இலக்கிய நடைகளும் விரைவாகத் தமிழில் வந்து நுழைந்தன.

ஆனால், பழைய இலக்கிய முறைகள் சென்ற நூற்றாண்டின் இறுதிப் பகுதிவரை நடப்பில் இருந்தன. ஸ்தல புராணங்கள், மெய்விளக்க நூல்கள், தோத்திரப் பாடல்கள் யாவும் தொடர்ந்து இயற்றப்பட்டு வந்தன. ஸ்தல புராணங்கள் அமைப்பதில் அக்கால அறிஞர் நிகரற்றவர். அவருள் தலை சிறந்தவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை. அவரைப் பின்பற்றி மிகப் பலர் ஸ்தல புராணங்கள் இயற்றலாயினர். உள்ளங்கனிந்து உருகச் செய்யும் ஆர்வம் மிகுந்த பாடல்கள்

---

1 Geometry
2 Physics

பலவற்றை இராமலிங்க அடிகள் இயற்றியருளினர். இக்காலத்தில் தோன்றிய மகாமகோபாத்யாய தாட்சிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் தமிழ் மொழிக்குச் செய்துள்ள அரும்பெரும் சேவை நிகரற்றது. பழந்தமிழ் இலக்கியங்கள் அவர் வாயிலாகப் புத்துயிர் பெற்றுள்ளன. ஓலைச் சுவடிகளிலிருந்த அவை அனைத்தையும் அச்சிட்டு, அவர் உலகிற்கு ஈந்துள்ளார்.

இதற்கிடையே முற்கூறிய சமய குரவர்கள் ஆங்கில நூல்கள் பலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்தனர்; வேறு சிலவற்றைத் தமிழில் சுருக்கி எழுதி வெளியிட்டனர். ஆங்கிலத்தில் புகழ்பெற்ற **பில்கிரிம்ஸ் பிரோக்ரஸ்** என்னும் நூலை **இரக்ஷணிய யாத்திரிகம்** என்ற பெயரால் கிருஷ்ணபிள்ளை எனும் புலவர் ஒரு பெருங்காப்பியமாக இயற்றினர். 1876-இல் தோன்றிய பஞ்சத்தின் கொடுமையையும், மக்கள் பட்ட துயரையும், வில்லியப்பபிள்ளை என்பார் **பஞ்சலக்ஷணம்** என்ற நகைச்சுவை பொருந்திய கவிதையில் விரித்துரைத்தார். பரிதிமால் கலைஞன் என்று வழங்கப்பட்ட வி. கோ. சூரிய நாராயணசாஸ்திரியார் இயற்றிய **தனிப்பாசுரத் தொகை,** ஷேக்ஸ்பியரின் 14 அடிச் செய்யுள்களைப் பின்பற்றி அமைக்கப் பெற்ற நூல். இதே காலத்தில் மாயவரம் மாவட்ட நீதிபதி வேதநாயகம்பிள்ளை வழக்கத்திலிருந்த நாடோடிக் கருத்துக்களை அமைத்து இயற்றிய **பெண்மதி மாலையும், சர்வ சமய கீர்த்தனை களும்** உணர்ச்சி மிக்க சிறந்த பாடல்களாக விளங்கின.

இந்நூற்றாண்டின் தொடக்கம் முதல் நாட்டுப் பற்று தமிழ்க் கவிதையில் புகுந்தது. எட்டயபுரம் சுப்பிரமணிய பாரதியார் அளவு கடந்த நாட்டுப்பற்றும் தமிழ் மொழிப் பற்றும் ஒருங்கே உடையவர். தேசிய கீதங்கள் பாடித் தமக்கு நிலையான புகழைத் தேடிக்கொண்டவர். நாட்டுப் பற்றிலும், எளிய நடையிலும், நகைச்சுவையிலும் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை நன்மதிப்புப் பெற்றுத் திகழ்ந்தார். நம் நாடு குடியரசு ஆகிய காலத்து முதன் முதல் தமிழ் அரசவைப் புலவராய்த் தேர்ந்தெடுக்கப்பெற்ற நாமக்கல் இராமலிங்கம்

பிள்ளை இயற்றிய பல பாடல்களும் நாட்டுப்பற்றும் உரிமை உணர்ச்சியும் ததும்பி நிற்பன. அவர் நாவல் ஆசிரியரும் ஓவியப் புலவரும் ஆவர். வர்ணனையிலும் நிகழ்ச்சியுரையிலும் எஸ். டி. சுப்பிரமணியயோகி பெயர் பெற்றவர். சமூகப் புரட்சிக் கொள்கைகளைக் கைக்கொண்ட பாரதிதாஸன் புலமை சான்ற கவிஞர் ; இவரது கவிதைகள் உணர்ச்சி நிறைந்தவை.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் முன்போலவே நாடகங்கள் எழுதப்பட்டன. ஆனால் அவற்றின் முறையில் சில மாற்றங்கள் தோன்றின. இராமச்சந்திர கவிராயரின் **சகுந்தலை** நாடகமும், **பாரத விலாஸமும்** விசுவநாத முதலியாரின் **டம்பாச்சாரி விலாஸம்** போன்ற நாடகங்களும் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியவை. நாடகங்கள், முற்காலத்தில் திகழ்ந்த கருத்துக்களை ஒட்டியிருந்தபோதிலும், அவற்றின் அமைப்பும் முறையும் மாறுதலடைந்தன. இலட்சுமணபிள்ளை இயற்றியுள்ள **சத்தியவதி**யின் அமைப்பு ஷேக்ஸ்பியரின் **சிம்பலீனை** ஒத்திருக்கின்றது. சலசலோசன செட்டியாரின் **சரசாங்கி** மிகத் திறம்பட அமைக்கப்பெற்ற நாடகம். அது ஆங்கில நாடக முறையைப் பின்பற்றி இயற்றப்பட்டதென்பது கவனத்துக்குரியது. ஷேக்ஸ்பியரின் முறையைக் கடைப் பிடித்து பேராசிரியர் சுந்தரம்பிள்ளை புகழ் பெற்ற **மனோன்மணீ**யத்தை இயற்றினர். இது போலவேதான் சூரியநாராயண சாஸ்திரியின் **ரூபாவதியும், கலாவதியும்** மேல்நாட்டு இலக்கிய முறையைத் தழுவி இயற்றப்பட்டவை. நீதிபதி பம்மல் சம்பந்த முதலியார் இயற்றியுள்ள ஐம்பதுக்கு மேற்பட்ட நாடகங்கள் பெரும்பாலும் தற்கால சமூக வாழ்க்கையை ஒட்டி எழுதப்பட்டவை. அவரது நாடகங்களின் இலக்கியப் பண்பு, சிறந்ததெனக் கருதுவதற்கில்லை. ஆனால் அவற்றின் கதைகள் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டவை ; மக்கள் விரும்பக்கூடியவை. அவர் தமிழ் நாடகத் தந்தை எனப் புகழ் பெற்றுள்ளார். அண்மையில் அவர் இந்திய அரசினர் நன்மதிப்பும் சிறப்புப் பட்டமும் பெற்றார்.

தற்போது, பேசும்படங்களுக்கு நாடகக்கலையில் அளவற்ற செல்வாக்கு வாய்ந்துள்ளது. எண்ணற்ற பேசும் படங்கள் திரையில் உருவாக்கப்படுகின்றன. ஆனால், பெரும்பாலும் அவற்றின் பண்பும் சுவையும் உயர்வுடையன அல்ல; கூறுபாடு இல்லாத நளினம், சிற்றின்ப உணர்ச்சிக்குரிய இழிவான நடிப்புக்கள், தனிக் கொள்கைகளை விளம்பரப் படுத்தும் கட்டங்கள் முதலியன சேர்ந்து இந்தப் படங்களின் பண்பைச் சீர்கேடாக்கிவிட்டன. இசையும் நடனமும் இப்படங்களில் பெரிய இடம் பெற்றுள்ளன. ஆனால், அவைகளும் பல கட்டங்களில் பண்டைய உயர் முறைக்கு முரண்பட்டுக் காணப்படுகின்றன. அவை சிறிது காலம் ஒருவாறு செல்வாக்குப் பெற்றிருப்பினும் உண்மைக் கலை வளர்ச்சிக்குக் கேடு விளைவிப்பன என்றே கருதல் வேண்டும். நம் நாட்டுப் பழம் பண்பாட்டைப் போற்றவேண்டுமென்ற ஆர்வத்தினால், தற்காலத்தில் **பரதநாட்டிய**த்தையும், **தமிழிசை**யையும் பரிந்து பேணுகின்றனர். பழங்கால கதா காலட்சேப வாயிலாக வழக்கத்திற்கு வந்த உரைநடைச் செய்யுளை இதுகாறும் மக்கள் விரும்பி வந்தனர். தற்போது பேசும் படம் அதையும் அணுகியுள்ளது. கோபாலகிருஷ்ண பாரதி இயற்றிய **நந்தன் சரிதம்** இக்காலத்தில் தோன்றிய கதாகாலட்சேபங்களில் மிகப் பெயர் பெற்றுள்ளது.

மற்றை மொழிகளில் போல் தமிழிலும் மேல்நாட்டுச் செல்வாக்கினால் உரைநடை வளர்ச்சி பெற்றது. வால்மீகி, வியாசர், கம்பர் என்பார் இயற்றிய காப்பிய நூல்களை மொழி பெயர்ப்பதிலும் தொகுத்துரைப்பதிலும் உரைநடையைப் பயன்படுத்தினர். ஆனால், மிகுதியாக மேல் நாட்டு முறையைப் பின்பற்றி வரைந்துள்ள கட்டுரைகளிலேதான் உரைநடை சிறப்புற்று வளர்ந்தது. டிநோபிலியும் பெஸ்கியும் காட்டிய வழியைத் தமிழ் நாட்டு அறிஞர் பலர் பின்பற்றினர். தாண்டவராய முதலியார் **பஞ்ச தந்திரக் கதைகள்** முதலான சில நூல்களை இயற்றினர். ஆறுமுக நாவலரும், சரவணப் பெருமாள் ஐயரும் இளைஞருக்குத் தகுந்த புத்தகங்களை எளிய

நடையில் எழுதினர். ஆறுமுக நாவலர் கிறிஸ்து சமய குரவர்களுடனே நெருங்கிப் பழகி அவரைப் பின்பற்றிப் பலவகையில் தமிழ் மொழிக்கும் சைவ சமயத்திற்கும் ஆக்கம் தேடி வைத்தார்.

கட்டுக் கதைகள் மிகுதியாகத் தோன்றின. சில கதைகள் வேறு மொழியிலிருந்து பெயர்த்து அமைக்கப்பெற்றவை ; வேறு சில கதைகள் புதிதாக உருவாக்கப்பட்டவை. சென்ற நூற்றாண்டின் இறுதியில் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி சில புதுக் கதைகளை இயற்றினர். ஆனல் அவற்றைத் தம் புலமைத் திறத்தைக் காண்பிக்கும் கடுமையான செயற்கை நடையில் அமைத்தார். இந் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்க்கை நிலையைச் சார்ந்தனவும் தெளிவான நடையில் எழுதப்பெற்றனவுமான பல கதைகள் தோன்றின. இராஜம் ஐயரின் **கமலாம்பாளும்,** மாதவையாவின் **பத்மாவதி**யும், சரவணப் பிள்ளையின் **மோகனங்கி**யும்[1] வாய்ப்புள்ள கதைகளில் சிறந்தவை. வேதநாயகம் பிள்ளையின் **பிரதாப முதலியார் சரித்திரம்** மிகப் புகழ்பெற்றது ; தெளிவான நடையும் நகைச் சுவையும் ஒருங்கே பொருந்தியது. தமிழ் மொழியில் முதன் முதல் தோன்றிய நாவல் அதுவே. சீனிவாச ஐயங்காரின் **பிரிதுலே** அல்லது **'உழவன் மகள்'**, இராஜவேலுச் செட்டியாரின் **அன்பானந்தம்** என்பவை சமூகக் கதைகளில் முதன் முதலாகத் தோன்றியவை. எண்ணற்ற துப்பறியும் கட்டுக் கதைகள் எழுதப்பட்டன. ஆனல் நடையிலும், கதை அமைப்பிலும், அவை பெரும்பாலும் கீழ்த்தரமானவைகளே. வரலாற்றுச் சார்புள்ள கதைகள் மிகவும் குறைவு. அவற்றுள் 'கல்கி', எழுதிய கதைகள் சிறந்தவை.

சிறுகதைக்குத் தற்காலத்தில் அளவு கடந்த செல்வாக்கு வந்துள்ளது. முதலில் இரவீந்திரநாத தாகூர் என்னும் இணையற்ற புகழ் சான்ற பேரறிஞரும், மேல்நாட்டு எழுத்தாளர்கள் சிலரும், இயற்றியிருந்த கதைகளைத் தமிழில் மொழி பெயர்த்தனர். புதுக்கால முறையில், பிறர் சார்பின்றிக்

---

1 இது கிங்ஸிலியின் "ஹைபேஷியா"வைப் பின்பற்றி இயற்றியது.

கதை அமைக்க முதலில் வழிகாட்டியவர் வி. வி. எஸ். ஐயர் ஆவர். 'புதுமைப்பித்தன்' என்பார் அவரைப் பின்பற்றிக் கதைகள் எழுதலானுர். சிறுகதை ஆசிரியர்கள் இன்று பலருளர். டாக்டர் மு. வரதராசனும், கி. வா. ஜகந்நாதனும் இவருள் மிகப் பெயர் பெற்றவரெனலாம். இவர்கள் மொழி நடையையும் கதையின் போக்கையும் திறம்பட அமைப்பவர் ஆவர். ஆனுல், நாடகம், கற்பனைக் கதை இவைகளுக்கு நேர்ந்திருக்கும் சில குறைபாடுகள் சிறுகதைகளிலும் காணக்கிடக்கின்றன.

தற்கால இலக்கிய முறையில் பெருவழக்காக வந்துள்ளனவற்றில் கட்டுரை என்பது ஒன்று. அது இந் நூற்றுண்டில்தான் உயர்ந்த நிலையை அடைந்துள்ளது. அதை முதன் முதலாக வழக்கத்தில் கொண்டுவந்தவருள் பேராசிரியர் செல்வக்கேசவராய முதலியார் ஒருவர். அவரைத் தொடர்ந்து, மாதவையா, மறைமலை அடிகள், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் என்பார் சிறந்த கட்டுரைகள் எழுதியுள்ளனர். தற்போது இத்துறையில் எழுத்தாளர் பலர் ஈடுபட்டிருப்பினும், அவருள் எடுத்துக்காட்டாக இங்குக் குறிப்பிடத்தக்கார், டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, ரா. சி. தேசிகன், கி. வா. ஜகந்நாதன், மயிலை சீனி வேங்கடசாமி என்பார் ஆவார். அன்னுர் உயர்ந்த பண்பைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

செய்தித்தாள்கள், திங்கள் இதழ்கள், கட்டுரை மலர்கள், பத்திரிகைகள் யாவும் கிறிஸ்து சமய குரவர்களின் முயற்சியினுல் சென்ற நூற்றுண்டில் தோன்றின. அறிவையும் இலக்கியத்தையும் வளர்ப்பதில் அவை அரிய சேவை செய்துள்ளன. **'தமிழ்ப் பத்திரிகை'** என்று முதன் முதல் தோன்றிய திங்கள் வெளியீடு 1831-இல் அன்னுர் முயற்சியால் தோன்றிற்று. அதைத் தொடர்ந்து **சுவிசேஷ பிரபல விளக்கமும்**, ஏறக்குறைய அதே காலத்தில் பாளையங்கோட்டையில் **நற்போதகமும்**, வேறு சில திங்கள் இதழ்களும் வெளிவந்தன. கிறிஸ்தவரல்லாத தமிழ் அறிஞர்கள் சிலர் 1865-இல் **'விவேக விளக்கம்'** என்ற வெளியீட்டைத் தோற்றுவித்தனர். அதன்

நோக்கம் பழைய குருட்டு நம்பிக்கைகளை ஒழிப்பதும், இந்து மதத்திற்கு மறுமலர்ச்சி அளிப்பதுமேயாம். ஜி. சுப்பிரமணிய ஐயர் என்னும் அரசியல் அறிஞர் தோற்றுவித்த சுதேசமித்திரன், அறிவைப் பரப்புவதிலும் மக்கள் கருத்துக்களைத் தூண்டுவதிலும் அரிய சேவை செய்து வந்துளது. இவை தவிர தத்துவ ஞானத்தைப் பேணும் நோக்கத்துடன் நாகபட்டினத்தில் தோன்றிய **நீல லோசனியும்**, சென்னையில் நடைபெற்ற **சித்தாந்த தீபிகையும்**, இலக்கியத் துறையில் மதுரைச் **செந்தமிழும்** பெரும் புகழ் பெற்றவை. இலக்கிய வளர்ச்சிக்குப் பத்திரிகைத் தொழில் இணையற்ற சேவை செய்துள்ளது. அண்மையில் பத்திரிகைகளின் தன்மை சற்றுக் கீழ் நிலையை அடைந்துவிட்டது. பேசும் படத்தைப் போலவே பத்திரிகைகளும் இலக்கிய முறையைத் திட்டப் படுத்துகின்றனவாதலால், பத்திரிகை நடையையும் ஒழுக்கத்தையும் சீர்திருத்துவது இன்றியமையாத செயல் ஆகும்.

வீரமாமுனிவர் மேல்நாட்டு முறையில் தமிழ்மொழிக்கு இலக்கணமும், அகராதியும் (சதுரகராதி) இயற்றினர். அவர் காட்டிய வழியைத் தொடர்ந்து பல ஆசிரியர்கள் சொற்களையும், அவற்றின் தோற்றங்களையும், பொருள்களையும் பற்றி ஆராய்ச்சி நூல்களை இயற்றினர். இத்துறையில் சென்ற நூற்றாண்டு தோன்றிய நூல்களும் மிகப் பெயர் பெற்றவை. இராட்லர் 1834-இலும், வின்ஸ்லோ 1865-இலும் சதுரகராதியைப் பின்பற்றிப் பெரிய அளவில் வேறு அகராதிகளை வெளியிட்டனர். 1936-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகம் '**தமிழ் லெக்ஸிகன்**' என்ற பேரகராதியை இயற்றியுள்ளது. ஆங்காங்குச் சில குறைகள் காணப்படினும், இது ஆராய்ச்சிக்கு ஓர் அடிப்படை நூலாகும். இந் நூற்றாண்டில் இலக்கிய ஆராய்ச்சி ஓரளவிற்கு நடந்து வந்துள்ளது. இதில் ஈடுபட்டுள்ளோர்களுள் கா. சுப்பிரமணிய பிள்ளை, திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், மறைமலை அடிகள், ரா. பி. சேதுப்பிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை,

மு. ராகவஐயங்கார், டி. பி. மீனுட்சிசுந்தரனர், சுவாமி விபுலானந்தர் முதலியோரைக் குறிப்பிடலாம்.

சென்ற நூற்ருண்டின் நடுப் பகுதியிலிருந்து மேல் நாட்டு விஞ்ஞான நூல்கள் பல தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. வேறு சில நூல்கள் தமிழில் சுருக்கி எழுதப் பெற்றன. கரோள் என்பவர் 1855-இல் இயற்றிய **பீஜ கணிதம்** தமிழில் முதன் முதலாகத் தோன்றிய ஆல்ஜிப்ரா (குறுக் கணக்கியல்) நூலாகும்; அதே போலத் தமிழில் முதலில் தோன்றிய ஜியாமெட்றி (நிலக் கணக்கியல்) நூல் 1859-இல் டேவிட் சாளோமென் இயற்றிய **க்ஷேத்திர கணிதம்** என்ற நூலாகும். எஸ். எப். கிரீன் (S. F. Green) என்பவர் இயற்றிய **அங்காதிப் பாதம்,** உடல் அமைப்பு (Physiology) பற்றிய விஞ்ஞானம் முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. கிறிஸ்து சமய குரவர் ரேனியஸ் என்பவர் இயற்கைப் பொருள்களைப் பற்றி ஒரு நூலையும், பூகோள சாஸ்திரத்தைப் பற்றி வேருெரு நூலையும் 1830-இல் இயற்றினர். 1857-இல் சாரல்ஸ் ஸேவியர் மக்கள் இன வேறுபாடுகளைப் பற்றி **'ஜாதி விளக்கம்'** என்ற சிறந்த நூலை வெளியிட்டார். தற்போது பள்ளிக் கூடங்களில் தமிழிலேயே மற்றப் பாடங்களைக் கற்பிக்கும் முறையைப் பின்பற்றி வருவதால், பற்பல பொருள்கள் பற்றிய புத்தகங்கள் தமிழில் தோன்றியுள்ளன. அண்மையில் விஞ்ஞானப் பொருள்களை எளிய நடையிலமைத்துள்ள புத்தகங்களுள் அணுவின் இயலையும், வரலாற்றையும் விரித்துரைக்கும் இராஜேஸ்வரி அம்மையாரின் **பரமாணு புராணமும்** ராஜாஜி இயற்றியுள்ள **'செடியுலகத்தின் அன்பு,' 'திண்ணை இயைபியல்''** முதலிய புத்தகங்களும் சீரிய முறையிலுள்ளவை. தற்போது வெளி வந்துகொண்டிருக்கும் கலைக்களஞ்சிய நூல்கள் அறிவைத் தமிழில் சுருக்கி அமைப்பதில் பெருஞ் சேவை செய்து வருகின்றன.

இந் நூற்ருண்டில், அதிலும் குறிப்பாக 1947-க்குப் பின், இலக்கியத்தை வளர்ப்பதில் தோன்றியிருக்கும் ஆர்வம் தமிழின் முன்னேற்றத்திற்குப் பேருதவி அளித்து வருகின்றது.

நடைமுறை சில வேளைகளில் நெறி பிறழ்ந்து காணப்படுவது வருந்துதற்குரியது. ஆயினும், பொது மக்கள் விருப்பம்தான் இலக்கியத் துறையில் தூண்டுகோலாகவும், வழி காட்டியாகவும் காணப்படுகின்றது. இது தற்காலக் குடியரசுக் கொள்கைக்குப் பொருத்தமேயாயினும் இலக்கியத் துறையில் மக்களாட்சிக் கொள்கை ஒரு போதும் இலக்கியப் பண்பைக் கெடுத்துவிடாமலிருக்க முனைய வேண்டும்.

**கன்னடம்** :—*19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அதற்கு முற்பட்ட காலத்தில் நடைபெற்ற முறையிலேயே இலக்கிய நூல்கள் தோன்றி வந்தன. 18-ஆம் நூற்றாண்டில் இயட்சகான நாடகங்கள் உருவானதாகக் கண்டோம். இக் காலத்திலும் தொடர்ந்து அவை இயற்றப்பட்டு வந்தன. மக்கள் அவற்றை மிகுதியாக விரும்பினர்கள். மைசூர் நாட்டின் தெற்குப் பகுதியில் எல்லாப் பெரிய கிராமங்களிலும் இயட்சகான நாடகங்களைக் குறிப்பிட்ட காலங்களில் நடத்தும் வழக்கம் இருந்தது. ஒவ்வொரு கிராமத்திலும் வாழ்ந்த மக்கள் சிலரே அவரது ஊர் இயட்சகான நாடகங்களில் நடித்தவர்கள். மைசூரில் வேறு சில பகுதிகளில் நடனக் கூட்டத்தார் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று அங்கு நாடகம் நடத்தி வந்தனர்.*

*மன்னர் கிருஷ்ண ராஜ உடையார் (1799-1868) தாமே சிறந்த நூல்களை இயற்றியதோடு இயட்சகானத்தில் மிக்க ஆர்வமுடையவராகவும் இருந்தார். இப்பெருந்தகையாருக்குப் பண்பு வாய்ந்த நாடகங்களை உருவாக்குவதிலும் மிக்க விருப்பமிருந்தது. இவருடைய ஆதரவும் ஆற்றலும் இக்கலைக்குப் பெரும் பயனை விளைவித்தது. பலர் புது நாடகங்கள் அமைத்தனர். அவை நல்ல முறையிலே நடிக்கப்பட்டும் வந்தன.*

*19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேல் நாட்டுக் கொள்கைகளும் இலக்கிய முறைகளும் பரவின. ஆங்கில நாடகங்கள் மொழி பெயர்க்கப்பட்டன. சில நாடகங்கள் நாட்டுப் பண்புக்கு உகந்தவாறு மாற்றியும் அமைக்கப் பட்டன. சாம ராஜேந்திர உடையார் (1868-98) மன்னரின்*

அரசவைக் கவிஞர். பஸவப்ப சாஸ்திரியார் வட மொழியிலுள்ள **சாகுந்தல**த்தையும் வேறு சில நாடகங்களையும் சீரிய முறையில் கன்னட மொழியில் பெயர்த்தார். இவை தவிர, இவர் ஷேக்ஸ்பியரின் **ஒதெல்லோ** என்னும் நாடகத்தைக் கன்னடத்தில் மொழி பெயர்த்தார். வேறு சில ஆசிரியர் இத் துறையில் முனைந்து வந்தனர். ஷேக்ஸ்பியரின் பல நாடகங்கள் கன்னட மொழியில் தோன்றின ; அவற்றில் நாடக உறுப்பினர்களுக்கு இந்துப் பெயர்கள் அளிக்கப்பட்டு வந்தன. நாளடைவில் மேல் நாட்டு நாடகங்களைப் பின்பற்றிப் புது நாடகங்களும் கன்னட மொழியில் இயற்றப் பெற்றன. இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் வரலாற்றைத் தழுவிய நாடகங்களும் சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும் பல நாடகங்களும் வெளியாயின. எடுத்துக்காட்டாக மாஸ்தியின் **தாளிக் கோட்டே** என்ற வரலாற்றுத் தொடர்புள்ள நாடகமும், கைலாஸம் இயற்றிய **'ஹோம் ரூள்'**, ஆத்யா எழுதிய **ஹரிஜன் வாரா** என்ற சமூக நாடகங்களும், முகளியின் **நாமதாரி** போன்ற வசை நாடகங்களும், கருடா இயற்றிய **பாதுகா பட்டாபிஷேகம்** போன்ற புராணக் கதை நாடகங்களும் இயற்றப்பட்டு வந்தன. ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் புட்டப்பா போன்ற கவிஞர், எதுகையில்லாத செய்யுட்களடங்கிய கன்னட நாடகங்களாக அமைத்தனர். பி. டி. என். என்பார், **அஹலியா** போன்ற பாடல் நாடகங்களை இயற்றினர். அண்மையில் பல்வேறு புது இலக்கிய முறைகளில் ஓர் அங்க நாடகங்களும், இசை நாடகங்களும் இயற்றியுள்ளார். மாஸ்தியின் **உஷா** என்ற ஓர் அங்க நாடகமும், காரந்தின் **முத்தத்வாரா** என்ற இசை நாடகமும் இவற்றுள் சிறந்தவையெனலாம்.

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பல்வேறு இனத்தைச் சார்ந்த கவிதைகள் இயற்றப்பட்டு வந்திருக்கின்றன. பேன்ட்ரேயும், மதுர்சென்னவும் பொது மக்கள் பாடல்களை மீட்டும் உயிர்ப்பித்தனர். இவை நாளடைவில் சீரிய நாட்டுப் பாடல்களும் உணர்ச்சிப் பாடல்களும் தோன்றுவதற்கு வழிகாட்டிகளாய் விளங்கின. இந் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே எண்ணற்ற கவிதைகள் தோன்றின. அவற்றின்

பண்பும் உயர்ந்து வந்தன. கட்டி, சாந்த கவி என்ற இருவரும் பெயர் பெற்ற கவிஞர்கள். நாள் செல்லச் செல்லப் பலர் இத்துறையில் அரிய கவிதைகளை இயற்றினர். பி.எம். ஸ்ரீ கண்டய்யா, மாஸ்தி, டி.வி. குண்டப்பா ஆகியோர் வனப்பு வாய்ந்த செய்யுட்கள் பலவற்றை இயற்றினர். சிறப்பாக இயற்கைத் திறம் வாய்ந்த புட்டப்பா, சீதாராமய்யா, முகளி போன்ற கவிஞர்களும் கவிதைகள் பலவற்றை அமைத்துள்ளனர். புது வகைக் கவிதைகள் எண்ணிறந்தவை தோன்றின. எடுத்துக்காட்டாக, ஆடல் சார்ந்த பாடல்வகை, உணர்ச்சிப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், மருட்கதைப் பாடல்கள், தன்னுரைப் பாடல்கள், இரங்கற் பாக்கள் முதலியவை திறமை சான்ற கவிஞர்களால் இயற்றப்பெற்றன.

பெருங்காப்பியம் இக்காலத்தில் மிகச் சிறப்புற்று வழக்கத்தில் வந்தது. புட்டப்பா செந்தொடைப்பாவில் இராமாயணத்தை அமைத்தார். **நவராத்திரி** என்ற காப்பியத்தை மாஸ்தி இயற்றினர். கோவிந்தப்பாய் என்ற கவிஞர், ஏசு கிறிஸ்து, புத்தர் பெருமான் இவ்விருவர் பேரிலும் அரிய பாடல்கள் பாடினர். இவை போன்ற பண்புடைய கவிதைகளைத் தவிர, சற்றுக் கீழ்த்தரமான கவிதைகளும் தோன்றலாயின.

நல்லொழுக்க நெறியை விளக்கும் கவிதைகள் பல இக்காலத்தில் இயற்றப் பெற்றன. இவற்றுள் ஆர். நரசிம்ஹாச்சாரியாரின் **நீதிமஞ்சரி** மிகச் சிறந்ததெனலாம். இது, பண்டைத் தமிழ் நூல்களாகிய திருக்குறள், நாலடியார் முதலியவற்றிலடங்கியுள்ள ஒழுக்க நெறிகளைக் கன்னடக் கவிதை முறையில் அமைக்கப்பட்டுள்ள நூலாகும். தாராநாத், திவாகர் போன்ற பல கவிஞர்கள் சமூகத்தை நன்னெறியிற் செலுத்துவது பற்றிய கருத்துக்களைக் கவிதைகள் வாயிலாக விளக்கியுள்ளனர்.

உரைநடையில், மேல் நாட்டுத் தொடர்பின் பயன் மிகுதியாகக் காணப்பட்டது. மும்மடி கிருஷ்ணராயர் (1794-1868) முதன் முதலாகக் கன்னட உரைநடையில் எழுத முன் வந்தவர். கெம்பு நாராயணரின் **முத்ராமஞ்சுஷா**

என்பது உரைநடையிலமைந்த மருள் கதையாகும். இது **முத்ரா ராக்ஷஸா** என்ற வட மொழி நாடகத்தைப் பின்பற்றி இயற்றப்பட்டது. கெம்பு நாராயணரைப் பின்பற்றிப் பலரும் அவர் போல் நூல்கள் இயற்றினர். 19-ஆம் நூற்றாண்டில் நாளடைவில் மேல் நாட்டுச் செல்வாக்குக் கன்னட இலக்கியத்தில் அதிகரித்து வந்தது. புனை கதைகள், சிறுகதை, கட்டுரை, நாட்குறிப்பேடு முதலியவை வாயிலாக உரைநடை வளர்ந்து வந்தது. ஆங்கில முறையைப் பின்பற்றிய எழுத்தாளரும், வங்காள மொழி பெயர்ப்பாளரும், கன்னட உரைநடையில் நூல்கள் இயற்ற வழிகாட்டிகளாயிருந்தனர். படிப்படியாகப் பல்வேறு புனை கதைகள் தோன்றின. இவற்றுள் கஸ்தூரியின் வசைக் கதைகளும் தேவடுவின் உளப்பாங்கறிந்த புனை கதைகளும், பெட்டகேரி, மாஸ்தி, கோரூர் முதலியோரின் வரலாற்று நூற்கதைகளும் குறிப்பிடத் தக்கவை. கவிதைகளிற் போலவே, அக்காலப் புனை கதைகளிலும் நாட்டுப் பற்று செல்வாக்குப் பெற்றது; நாட்டுப் பற்று ததும்பும் பல புனை கதைகள் இந் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றின. இக்காலப் புனை கதைகள் பெரும் பாலும் சமூக வாழ்க்கையில் காணப்படும் பொருத்தமற்ற வழக்கங்களையும் பிரச்னைகளையும் கையாளுகின்றன. குடும்ப வாழ்க்கை மாறியுள்ள இக்காலத்தில் மாமியார், கைம்பெண், கல்வி கற்ற பெண் போன்றவர்களுடைய நிலைமை பல புனை கதைகளின் உறுப்புக்களாயமைந்துள்ளன. இவற்றுள் சில கதைகள் உயர்ந்த பண்பாடற்றவையாயினும், அவற்றுள்ளும் சிறந்த முறைகள் பல அமைந்துள்ளதைக் காணலாம்.

சிறுகதையை இக்காலத்தின் மக்கள் மிகுதியாக விரும்பினர். கன்னடச் சிறுகதையின் தந்தை மாஸ்தி எனலாம். நாட்டுப் பற்றுத் ததும்பும் **வசுமதி** போன்ற கதைகளையும், **நிடுகல்லின ராணி** போன்ற வரலாற்றுக் கதைகளையும், அவர் எழுதியுள்ளார். திறமை சான்ற எழுத்தாளர்கள் இப்பொழுதும் அம்மொழியில் பல்வேறு கதைகளை எழுதி வருகின்றனர்.

செய்தி இதழ்கள், திங்கள் வெளியீடுகள் முதலியவை வாயிலாகக் கட்டுரைகள் வளர்ந்து வந்துள்ளன. புட்டப்பாவின் விவரணக் கட்டுரைகளும், பி. டி. என். என்பவரின் நிகழ்ச்சிக் கட்டுரைகளும், டி. என். எஸ். என்பவரின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், கிருஷ்ண சர்மா, பேந்திரே என்பார் இயற்றிய குணப்பண்புக் கட்டுரைகளும், கன்னடக் கட்டுரைகளின் பல்வேறு வகைகளை எடுத்துக் காட்டுவன ஆகும்.

சிறந்த வாழ்க்கை வரலாறுகளும், நாட்குறிப்புகளும். பிரயாண விவரங்களும் நூல் வடிவில் தோன்றின. மேல் நாட்டு முறைகளைப் பின்பற்றி ஆர். நரசிம்ஹாசார், கிருஷ்ண மூர்த்தி, கோவிந்தப்பை முதலிய அறிஞர்கள் சிறந்த முறையான இலக்கிய ஆராய்ச்சிகள் நிகழ்த்தியுள்ளனர். இவர்களது நூல்கள் பல துறைகளைக் கையாண்டிருந்த போதிலும் இலக்கியப் பண்பு முறை ஆராய்ச்சி இன்னும் முன்னேற்றம் அடைதல் வேண்டும்.

கிறிஸ்து சமய குரவர் கன்னட மொழிக்கும் இலக்கியத் திற்கும் செய்துள்ள அரிய சேவை பெரிதும் போற்றத்தக்கது. பல்லாரியிலிருந்த றீவ் என்னும் குரவர் அமைத்துள்ள கன்னட அகராதிகளும், கிற்றெல் என்னும் பெரியார் இயற்றியுள்ள கன்னட ஆங்கில அகராதியும், கன்னட இலக்கணமும், சமய குரவர் தொகுத்துள்ள தொகைப் பாடல்களும் இலக்கண நூல்களும் கன்னட இலக்கியப்பயிற்சிக்குப் பேருதவி அளிக்கின்றன.

வரலாற்றுத் துறையில் மைசூர் அரசி தேவீரம்மணியாரின் விருப்பத்திற்கு இணங்கி சமணப் புலவர் தேவச்சந்திரர் என்பார் 1838-இல் **ராஜாவலிகதே** என்ற நூலை இயற்றினர். இது சமணர்களின் பழங்காலச் செவிவழிச் செய்திகளையும் காலவரையறைகளையும் ஆராய்ந்து வரலாற்றை விரித்துரைக்கும் ஒரு களஞ்சியமெனக் கூறலாம். அண்மையில் ஆங்கில நூல்களிலிருந்தும், குறிப்பாகக் கல்வெட்டுகளைப் பதிப்பித்திருக்கும் அறிக்கை வெளியீடுகளிலிருந்தும் கிடைத்

துள்ள பொருள்களைப் பயன்படுத்தி, கன்னட மொழியில் பல வரலாறுகள் இயற்றப்பட்டுள்ளன. விஞ்ஞானம், பயிர்த் தொழில், உடல்நலவியல் பற்றிய நூல்களும் தோன்றி யுள்ளன. ஆனால் இத்துறைகளில் மிக விரைவாக வளர்ந்து வரும் அறிவுக்குத் தகுந்தவாறு கன்னடத்தில் அவற்றைப் பற்றி நூல்கள் வெளிவந்திருப்பதாகக் கூற முடியாது.

கன்னட எழுத்தாளர்கள், சமூகத்தில் பல இனங்களையும் சார்ந்தவர்களென்பது குறிப்பிடுதற்குரியது. வி. கே. இலக்ஷ்மேசுவரர் போன்ற எளிய ஆசிரியர்களும், தேசாய் தத்தமூர்த்தி போன்ற குமாஸ்தாக்களும், மத்தனு போன்ற உடற்பயிற்சி ஆசிரியர்களும், வெங்கட செட்டி, வாலி முதலிய கடை முதலாளிகளும், அவர்களை விட உயர்தரத்தில், வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள், அரசியல் அலுவலாளர்கள் மருத்துவர்கள் முதலான பேரறிஞர்களும் உளர். கே. வி. புட்டப்பா போன்ற பல்கலைக் கழகத் துணைவேந்தரும், சமஸ்தானத்தலைவராகிய ஆர். ஆர். திவாகர் போன்ற எழுத்தாளர்களும் இலக்கியத் தொண்டு ஆற்றி வருகின்றனரென்பது குறிப்பிடத் தக்கதே. மேலும், எழுத்தாளர்கள் ஒரே மதத்தையோ, இனத்தையோ சார்ந்தோர் அல்லர்; இந்துக்கள், கிறிஸ்தவர், முஸ்லீம்கள், சமணர், இலிங்காயத்தார், அந்தணர், ஒக்கலிகர், ரெட்டிகள் முதலானோர் பலரும் கன்னட இலக்கியப் புலவர்களாகவும் ஆசிரியர்களாகவும் புகழ் பெற்றுள்ளனர். கன்னட இலக்கிய உலகம் உண்மையில் ஒரு குடியரசாக அமைந்திருப்பது இதிலிருந்து நன்று துலங்குகின்றது.

**தெலுங்கு :**—19-ஆம் நூற்றாண்டின் கடைசிக் காலத்தில் தெலுங்கு இலக்கியத் துறையில் ஒரு புது மலர்ச்சி தோன்றியது. இதன் பயனாகப் பல்வேறு புதுவகை இலக்கிய முறைகளில் அமைந்த நூல்கள் மிகப்பல தோன்றின. இம் மறுமலர்ச்சிக்கு அடிப்படையாயிருந்தவர் பேரறிஞர் வீரேசலிங்கம் பந்தலு என்பவர். அவர் கலைவாணர்; எண்ணிறந்த நூல்களை இயற்றியவர். தெலுங்கு இலக்கியத்தின் நவீன காலத்தை வீரேசலிங்கர் காலம் என அழைத்து வருவது மிகப் பொருத்தமானது. இவர் ஆழ்ந்த அறிவும், ஆராய்ச்சி

மனப்பான்மையும் படைத்தவர்; பல்வேறு வகை இலக்கிய அமைப்பிற்கு இவர் புத்துயிரளித்தார். தெலுங்கில் முதன் முதலாகப் புனைகதை இயற்றியவர் இவரே. இவரது **இராஜ சேகரசரிதம்** என்ற புனைகதை ஆங்கிலத்தில் கோல்ட்சிமித் புலவர் இயற்றிய புகழ் பெற்ற 'விக்கார் ஆப் வேக்பீல்ட்'[1] என்னும் நூலைப் பின்பற்றி எழுதப்பட்டது. அது போலவே நகைச்சுவைக் கூத்து, வசை நூல், இலக்கிய வரலாறு, பருப்பொருள் நூல் என்பனவற்றை இவரே முதன் முதலாக இயற்றியுள்ளார். உண்மையில் ஆங்கில இலக்கியத்தில் தோன்றியிருந்த எல்லா இலக்கிய முறைகளையும் தெலுங்கு இலக்கியத்தில் புகுத்தினர். அன்றியும் இலக்கிய ஈடுபாட்டுக்கு வீரேசலிங்கம் அளித்த புத்துயிரானது பண்புசான்ற நடையில் எண்ணிறந்த நூல்கள் தோன்றுவதற்கு அடிகோலியது. புத்தகங்கள் வெளியிடும் நிலையங்களும் தோன்றின. அன்றியும், நாட்டுப்பற்று ஒரு பக்கமும், நன்கொடைகள் மறுபக்கமும், இலக்கிய ஈடுபாட்டுக்குப் பேருதவி அளித்தன. பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் நாளுக்கு நாள் பெருகி வந்தன. ஆகையால், ஆங்கிலக் கல்வி வளர்ந்து வரவே மேல் நாட்டுக் கருத்துகளும், இலக்கிய முறைகளும் மிகுதியாகத் தெலுங்கு இலக்கியத்தில் கலந்துள்ளன.

திருப்பதி சாஸ்திரி, வேங்கட சாஸ்திரி முதலிய அறிஞர்கள் பண்டை முறையில் பல நூல்கள் புதியனவாய் இயற்றினர். அதே வேளையில் ஆங்கில நூல்களின் மொழிபெயர்ப்புக்களும், தொகுத்துரை நூல்களும் வெளிவந்துகொண்டிருந்தன. தவிர, இக்காலத்தில் 'பாலகவிகள்' என்றழைக்கப்படும் இளைஞரான ஆசிரியர்கள் பலர் பழங்காலக் கவிதை முறையில் வேறுபட்டனவும் தற்கால சமூக வாழ்விற்குத் தகுந்தனவும் ஆகிய பொருள்பற்றிய பாடல்கள் அமைப்பதில் முனைந்தனர். உண்மையில் இக்காலத்தில் உணர்ச்சிப் பாடல்கள் ஓங்கி வளர்ந்தன. தடையீட்டிடையே வளர்ந்த காதல் பற்றிச் சித்திரிக்கும் கிருஷ்ண சாஸ்திரிகள் இயற்றியுள்ள ஊர்வசி,

1 Vicar of Wakefield

**ஹிருதயேசுவரி** என்ற கவிதைகளும் இராயப்ரோலு சுப்புராவுவின் **திறுண கங்கணம்** என்ற காப்பியமும் இப்புது வகையைச் சார்ந்தவையே. பாடல்கள், செய்யுட்கள் வாயிலாகக் கதைகளும் இயற்றப்பட்டன. இவ்வகைக் கதைகளில் பஸவராஜ அப்பா ராவு இயற்றிய **சலயேடி கான** முவும், நண்டூறி சுப்பாராவு இயற்றியுள்ள **ஏங்கிப்** பாடலுவும், பொதுமக்கள் விருப்பத்தைக் கவர்வன ஆகும்.

தெலுங்கு நாடகமானது மேல்நாட்டு இலக்கியத்தால் பெரிய மாற்றம் அடைந்தது. கதையின் போக்கிலும், உறுப்புக்கள் அமைத்து நாடகத்தை உருவாக்குவதிலும், இம் மாற்றங்கள் தெளிவாகத் தோன்றின. சமஸ்கிருதத்திலிருந்து **சாகுந்தலத்**தையும், ஆங்கிலத்திலிருந்து ஷெரிடனின் **றைவல்ஸை**யும் வீரேசலிங்கம் மொழிபெயர்த்தார். இவை நாடக இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கமளித்தன. இக்காலத்தில் சமூக வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலவற்றை நாடகங்களில் அமைத்தனர். ஆகவே, மக்களுக்கு நல்லறிவு வளர்க்கும் கருவிகளாக நாடகங்கள் தொண்டாற்றுகின்றன என்பது மிகையாகாது. இப்ஸென், பெர்னர்டு ஷா போன்ற ஐரோப்பியக் கலைவாணர்களின் நாடகங்களைப் பலர் மொழிபெயர்த்தும், சிலர் தொகுத் துரைத்தும் வந்தனர். பழங்காலத்தில் நாட்டிய நாடகங்கள் திறந்த வெளியில் நடைபெற்றன. தற்காலத்தில் மேடை மீது நடிக்கும் வழக்கம் வந்தது. பல நகரங்களில் முதன் முதலாக இவ்வித நாடகத்தைக் கற்றறிந்த கலைவாணர்கள் நடித்தனர். த. கிருஷ்ணமாசார்லு, வேதம் வேங்கடராய சாஸ்திரி போன்ற நாடக நூலாசிரியர்கள் அரிய கலையுணர்ச்சி பெற்றவரா யிருந்தனர்.

இக்காலத்தே பெரிய நாடகத்திற்குப் பதிலாக ஓர் உறுப்புக்கொண்ட சிறு நாடகங்கள் செல்வாக்குப் பெற்றன. அவற்றைவிட அண்மையில், பேசும் படங்கள் தீவிரமாகப் பரவி வந்துள்ளன. ஓர் அங்க நாடகங்கள் சில, உயர் நீதி மன்றத் தலைவர் இராஜமன்னர், ஆசாரிய ஆத்ரேயா, முதுகிருஷ்ண, நார்ள முதலியோர் பலர் சிறப்பாக இயற்றி

யுள்ளனர். எம். நரசிம்ஹ சாஸ்திரியின் **அனஸ்வரம்** என்ற நாடகம் தொன்று தொட்டு வந்துள்ள இந்து சமூகத்தின் இயல்பைச் சித்திரிக்கின்றது. பி. ராதாஸின் **அதிதி** என்ற நாடகம் மிகச் சிறந்தது. அதில், உயர்ந்த கொள்கைகளும் ஆற்றலுமுடைய கதைத் தலைவர் ஒருவர், எந்த மக்களுக்காகத் தொண்டாற்றி வந்தாரோ அம்மக்களாலேயே கொல்லப்படும் வியப்புக்குரிய செய்தி அமைந்துள்ளது. தற்காலத்தில் குரஸாட அப்பா ராவு இயற்றிய **கன்னியா சுல்கம்** என்ற நாடகம் மக்கள் விரும்பும் முறையில் அமைந்துள்ளது. இது போன்ற நாடகங்கள் இயற்றுவதில் வேறு பலரும் ஈடுபட்டுள்ளனர். இவை யாவும் கிடுகு வெங்கடராம மூர்த்தி துவக்கியுள்ள நவீன இலக்கிய இயக்கத்தின் பயனாகத் தோன்றியவை எனக் கருதலாம்.

தெலுங்கு உரைநடை தற்காலத்தில் ஓங்கி வளர்ந்துளது. வீரேசலிங்கம்தான் உரைநடைக்குப் பண்பும் பெருமையும் நல்கியுள்ளாரெனக் கூறலாம், சிலகமர்த்தி லக்ஷ்மி நரசிங்கம் புனித கதைகள் பலவற்றை இயற்றினர். பின்னர், சிறு கதையும் கட்டுரையும் சிறப்புற்று விளங்கின. இவை வாயிலாகத் தெலுங்கு உரைநடை முதிர்ந்து வந்தது. ஆங்கிலத்திலிருந்தும், வங்காளியிலிருந்தும் பல சிறந்த கதைகள் மொழி பெயர்க்கப்பட்டன. வரலாற்றுத் தொடர்புள்ள கதைகளும் தோன்றின. அவற்றுள் வீரபத்ரராவுவின் **நாயகுருளி தர்பமும்** போகராய நாராயண மூர்த்தியின் **அஸ்த மயமும்** குறிப்பிடத் தக்கன. சமூகச் சார்புடைய கதைகள் மக்கள் மிகவும் விரும்பக்கூடியவை. வீரேசலிங்கம், இலக்ஷமி நரசிங்கம் என்பவரைத் தவிர கேதவரபு வேங்கடசாஸ்திரி, விசுவநாத சத்திய நாராயணர், பாபி ராஜு முதலியோர் தெலுங்குப் புனை கதை ஆசிரியர்களில் பெயர்பெற்றவர்கள். புச்சி பாபு என்பவரும் திறமை வாய்ந்த புனைகதை எழுத்தாளர். அவரது **சிவரகுமிகிளேதி** என்னும் நூல் தற்கால நாகரிகத்தால் விளைந்துள்ள பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது.

சிறுகதைகள் பல தோன்றின. அவை, பெரும்பாலும் காதல், துப்பறிதல் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. முதன் முதலாகத் தெலுங்கில் சிறுகதையைக் கையாண்டவர், இந்நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்திருந்த ஆசிரியர் குருஸாத அப்பராவு என்பவரே. ஆனால், அதற்குப் பின் பல அறிஞர்களும் சிறுகதை எழுதத் தொடங்கினர். அவருள் குடிபாடி வேங்கடாசலம், சிந்தா தீக்ஷிதலு, எஸ். சுப்பிரமணியம், எம். நரசிங்கராவு ஆகியோர் மிகப் பெயர் பெற்றவர். குடிபாடி வேங்கடாசலம் பெண்களின் கதியற்ற நிலையை நன்கு சித்திரிக்கிறார். ஆனால், ஆங்காங்கு இவர் நன்மதிப்பு முறையை விட்டு அகன்று செல்லுகின்றார். தீக்ஷிதலு, பெரும்பாலும் குழந்தைகளைப் பற்றிக் கதைகளை அமைத்தவர். சுப்பிரமணியத்தின் கதைப் பொருள்கள் கூட்டுறவுக் குடும்பங்களில் தோன்றும் சச்சரவுகளை சார்ந்திருந்தன. நரசிங்கம் பற்றுறுதியுள்ள மனைவியைப் பற்றிய கதைகளையே எழுதியுள்ளார்.

கட்டுரை எழுத்தாளர்களில் வீரேசலிங்கமும் இலக்ஷ்மி நரசிங்கமும் தவிர, ஜொண்ணலகெட்ட சத்ய நாராயணர் என்பவரும் பெயர் பெற்றிருக்கின்றார். வேறு பலரும் இத் துறையில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். மேல் நாட்டு அடிஸன், ஸ்ற்றீல், ஸ்விப்ற்று முதலிய பல சிறந்த ஆசிரியர்களைப் பின்பற்றி வரைந்துள்ள கட்டுரைகள் தோன்றின. நகைச்சுவை பொருந்திய கட்டுரைகளைப் பலர் எழுதியுள்ளனர். செய்தித்தாள்கள், பத்திரிகைகள், திங்கள் வெளியீடுகள் வாயிலாகக் கட்டுரைகள் மிகுதியாக வெளிப் பட்டன. ஆந்திர நாட்டில் பத்திரிகை வளர்ச்சி மிகச் சிறந்ததாகக் காணப்பட்டுள்ளது. ஆகவே, சொற்களும், மொழி நடையும் வளர்வதற்கு மிக்க வசதி ஏற்பட்டுள்ளது. ஆனால், பல செய்தித்தாள்கள் இலக்கியப் பண்பைப் புறக்கணித்து, நாடோடிப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகின்றன.

சில நிகண்டுகளும் அறிவுப் பொருள் தொகுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. தமது அரசியல் அலுவல்களுக்

கிடையே சி. பி. பிரௌண் (1817-55) பழைய ஏட்டுச் சுவடிகள் பலவற்றை ஆராய்ந்தார். சில தெலுங்கு உயர்தர இலக்கியங்களை அவர் வெளியிட்டார். தெலுங்கு இலக்கிய வரலாற்றைப் பற்றி ஒரு கட்டுரை எழுதினர் ; இவை தவிர தெலுங்கு அகராதியும் அவர் செய்தார். கியாலற்றி என்ற அரசியல் அலுவலாளரும் ஓர் அகராதியைத் தொகுத்தார். பி. சீதாராம சார்யலு **சபத்ரத்ருகரம்** என்ற அகராதி ஒன்றை இயற்றினர். கெ. நாகேசுவரராவ் இதுகாறும் வெளிவந்துள்ள தெலுங்கு இலக்கியங்களின் விவரம் ஒன்றை **ஆந்திர வங்மயஸூசகமு** என்ற பெயரால் தொகுத்திருக்கிறர். தற்போது **கலைக்களஞ்சியம்** தெலுங்கில் தொகுக்கப்பட்டு வருகிறது. மொழி பற்றிய ஆராய்ச்சியில் கெ. ராம கிருஷ்ணய்யா பெரும் சேவை செய்துள்ளார்.

தகுந்த முறையில் நடைபெறும் இலக்கிய ஆராய்ச்சி இக்காலத்தில் மேல் நாட்டுத் தொடர்பினல் வந்ததுதான். இத்துறையில் முதன் முதல் வழிகாட்டிய பேரறிஞர் டாக்டர் ஸி.ஆர். ரெட்டி என்பதற்கு ஐயமில்லை. அவரது **கவித்வ தத்துவ விசாரமு** என்னும் அரிய நூல் மேல் நாட்டு இலக்கிய கலை ஆராய்ச்சி முறையைப் புகுத்தியது. அனந்த கிருஷ்ண சர்மாவும் பிரபாகர சாஸ்திரியும் லக்ஷ்மிகாந்தமும் அதற்கு முன் தோன்றிய ஆராய்ச்சியாளர்கள். அண்மையில் என். வெங்கடராவும், பொதின் குறிச்சி சுப்பிரமணிய சாஸ்திரியும், இலக்கிய ஆராய்ச்சியின் வளர்ச்சிக்கு உதவியளித்துள்ளனர். சிற்பத்திலும், ஓவியத்திலும் சி. சத்ய நாராயண இயற்றிய **பாரதீய கலையும்,** ஜி. வெங்கடேசுவர ராவுவின் **கிருஹாலங்காரமுவும்** கலை ஆராய்ச்சி நூல்களாகத் திகழ்கின்றன.

வரலாறு, பொருளாதாரம், அரசியல், சமூகம், கணிதம், விஞ்ஞானம் முதலியவை பற்றிய நூல்களும் பல தோன்றியுள்ளன. இந்தியா விடுதலை பெற்ற பின் மக்களிடையே இவ்வகை இலக்கியத் தொண்டில் சிறந்த ஊக்கம் காணப்படுகின்றது.

**மலையாளம் :**—மற்ற இந்திய மொழிகளில் போலவே, மலையாளத்திலும், ஆங்கில இலக்கியமும் மேல் நாட்டுக் கொள்கைகளும் செல்வாக்குப் பெற்றன. நவீன கருத்துக் களைக் கையாண்டு இலக்கியத் துறையில் உயர்நிலை எய்திய பற்பல அறிஞர்களுள் உள்ளூர் பரமேசுவர ஐயர், குமாரன் ஆசான், வள்ளத்தோள் நாராயண மேனோன் என்பார் தலைசிறந்த பெரியோர். உள்ளூர், சமஸ்கிருத மொழி, தமிழ் மொழி வரலாற்று நூல், மெய்ப்பொருள் நூல், சட்டப்பனுவல் போன்ற பல்வேறு அறிவுத் துறைகளில் புலமை பெற்றவர். இப்பேரறிவின் ஒளி அவரது மலையாளக் கவிதைகளில் மிளிர்கின்றது. ஆனால், இவரது காப்பிய நடை பல இடங் களில் செயற்கைத் தன்மை உடையது. **உமாகேரளம், தாராஹாராம் பிங்கள** என்பவை இவர் இயற்றியுள்ள பெயர் பெற்ற காப்பியங்கள்.

குமாரன் ஆசான் (1871-1924) ஈழவர் இனத்தைச் சேர்ந்தவர். இவர் மேன்மை மிக்க கவிஞர். இவருக்கு முதன் முதல் புகழ் ஈட்டித் தந்த நூல் **வீணபூ** என்ற உணர்ச்சிக் கவிதை. அது மக்கள் அவாவின் நிலையாமையை விளக்கு கின்றது. இவர் இளமைப் பருவத்தில் இயற்றியவை **நளினி, லீலா** என்னும் இரு காப்பியங்கள். அவை இடையீடுபட்ட காதல் அடியில் தோன்றியவை. **கருணா, சண்டாளபிக்ஷுகி, ஸ்ரீபுத்த சரிதம்** என்னும் பிற்காலக் கவிதைகள் பெரும் புகழ் பெற்றுள்ளன. இன வேற்றுமையைக் கடிந்துரைத்தலும், மக்கள் ஒற்றுமையை வற்புறுத்துதலுமே இவரது கவிதை களின் தனிப் பண்பு.

வள்ளத்தோள் ஒப்புயர்வற்ற கவிஞர் ; பிறர் சார்பற்ற தனி இயல்பும், புதுக் கருத்துக்களைப் பகுத்துணரும் தன்மையும், ஒருங்கே பெற்ற பேரறிஞர். அவர் தம் உணர்ச்சிப் பாடல்களில் நாட்டுப் பற்றும், தூய இன்பமும் ததும்பு கின்றன. அவர் இயற்றியுள்ள பெருங்கவிதைகளில் **அனிருத்தன் ஒரு சித்திரம், சிஷ்யனும் மகனும், சாகித்திய மஞ்ஞரி** என்பன பெரும் புகழ் பெற்றுள்ளன. **வள்ளத்தோள்** மலையாள

யாப்பு முறையில் சிறு கவிதைகள் பல இயற்றினர். அவை பெருஞ் செல்வாக்குப் பெற்றன. சங்ஙம்புழக் கிருஷ்ண பிள்ளை, ஜி. சங்கரக் குறுப்பு முதலான மற்றைக் கவிஞர்களின் கவிதைகள் எண்ணிறந்தன. இவையன்றியும், பற்பல புது இலக்கிய முறைகள், குறிப்பாக அவலச் சுவைக் காப்பியங்கள், கண்ட காவியங்கள் முதலியவை இக்காலத்தில் பெருவழக்காகி யுள்ளன. தலைவன் துஞ்சியமை கண்டு வருந்திப் புலம்பும் கையறு நிலைச் செய்யுட்கள் ஆங்கில இலக்கிய முறையைத் தழுவி எழுந்தவை. ஆசானும் வள்ளத்தோளும் இயற்றியுள்ள கையறு நிலைக் கவிதைகள் தவிர, நாலப்பாட்டு நாராயண மேனோன் தம் மனைவியின் மறைவுபற்றி இயற்றியுள்ள **கண்ணு நீர் துள்ளி** என்னும் இரங்கற்பாக்கள் முதலியவையும் உயர்நிலை யுடையன என்பதற்கு ஐயம் இல்லை. சங்ஙம்புழக் கிருஷ்ண பிள்ளை தமது நண்பர் இராகவன் பிள்ளையின் எதிர்பாராத மறைவு நோக்கி, **ரமணன்** என்னும் பெயரால் கல் நெஞ்சையும் கரையப் பண்ணும் கையறு நிலை இயற்றி யுள்ளார்.

சமஸ்கிருதத்தில் தோன்றியவை போன்று மலையாளத்தில் முதல் முதலாகத் தோன்றிய மகாகாவியம் பத்மநாபக்குறுப்பு என்பவர் இயற்றிய **இராம சந்திர விலாசம்** ஆகும். பின்னர்க் கொச்சுண்ணித் தம்புரான், உள்ளூர், கே. சி. கேசவ பிள்ளை, வள்ளத்தோள், செரியான் மாப்பிள்ளை, வடக்குங்கூர் இராஜ ராஜவர்மா என்போர் பெருங்காப்பியங்கள் இயற்றினர். சமஸ்கிருத மகா காவியங்கள் போல் இவை மிகப் பெரும் மாண்பு பெறவில்லையாயினும், மலையாள மொழியில் சிறந்த இலக்கியத் திறம் அமைந்தவைதாம். நாளடைவில் மகா காவியங்களின் நிலையில் கண்ட காவியங்கள் (சிறு காவியங்கள்) எழுந்தன. தற்காலத்தில் சிறந்த கவிஞர் யாவரும் கண்ட காவியங்களே இயற்றியுள்ளனர். உயரிய பண்புடன் எளிய நடையில் உருவாகியிருக்கும் கண்ட காவியம், கவிதை என்பதைப் பொது மக்கள் உணரும் முறையில் கொண்டு வந்து சேர்த்தது எனக் கூறலாம்.

இராமாயணம், மகாபாரதம் என்னும் இதிகாச காவியங்களையும், வேறு புதிய பொருட்களையும் அடிப்படையாகக் கொண்ட புதுவகை நாடக நூல்கள் தோன்றியுள்ளன. சமஸ்கிருத நாடகங்களைச் சுருக்கி இயற்றிய புதுவகை நாடகங்களையே மக்கள் மிகுதியாக விரும்பினர். கைனிக்கரப் பத்மநாப பிள்ளை, **வேலுத்தம்பி தளவா** என்ற நாடகத்தை இயற்றினர். அது சிறிது காலத்திற்கு முன் திருவாங்கூரில் நடைபெற்ற சில வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத்துரைக்கின்றது. ஸர்தார் கெ. எம். பணிக்கரது **பீஷ்மா, மண்டோதரி** என்பன போன்ற நாடகங்கள் புதுமுறையைச் சார்ந்தவை ; உயர்ந்த தன்மை வாய்ந்தவை. பாடல்களும் உரைநடையும் விரவிய கிருஷ்ணன் நம்பியின் ஹரி கதைகளை மக்கள் பெரும்பாலோர் விரும்புகின்றனர். ஸர்தார் கெ. எம். பணிக்கர் **சம்பு** என்னும் காப்பியத்தில் உரைநடையை மிகுதியாகக் கையாண்டு, அதைச் சீர்படுத்தியுள்ளார். அது அவரது **ஹைதர் நாயக்கன்** என்ற நூலை உற்று நோக்குவார்க்கு நன்கு புலப்படும். அவர் இயற்றிய **பங்கி பரிணயம்** அளவற்ற செல்வாக்குப் பெற்றுள்ளது. வெளிப்படையாக அது ஒரு சுயம்வரத்தைப் பற்றி விரித்துரைப்பதாக இருப்பினும், உண்மையில் கேரளத்தில் வாழ்கின்ற இக்காலப் பெரியோர்களைப் பற்றிய நகைச்சுவை நடிப்பே ஆகும்.

மற்றை மொழிகளின் இலக்கியங்களைக் காட்டிலும் ஆங்கில இலக்கியங்களே மலையாளத்தில் மிகுதியாக மொழி பெயர்க்கப் பெற்றன. உதயவர்ம ராஜா டென்னிசனின் **லாக்ஸ்லேஹாள்**[1] என்னும் கதையை மொழி பெயர்த்தார். எ. கோவிந்தப் பிள்ளை **கிங் லீயர்**[2], **ஒதெல்லோ**[3], **மர்ச்செண்ட் ஆப் வெனிஸ்**[4] என்னும் ஷேக்ஸ்பியர் நாடகங்களை மொழி பெயர்த்தார். இராஜராஜ வர்ம கோல்ட்ஸ்மித்தின் **ஹொர்மிட்**[5], டென்னிசனின் **இன்மெமோரியம்**[6] என்னும் நூல்களைத்

1. Locksley Hall
2. King Lear
3. Othello
4. Merchant of Venice
5. Hermit
6. In Memorium

தொகுத்துரைத்தார். இப்பேரறிஞர்கள் காட்டிய வழியைத் தற்போது முன்னேறி வருகின்ற இளங்கவிஞர்கள் பின்பற்றுகின்றனர்.

உரைநடையிலேதான் ஆங்கிலத் தொடர்பு மிகுதி. மலையாள உரைநடையின் வளர்ச்சி தொடக்கத்தில் சற்று மந்தகதியாகவே இருந்தது. சமஸ்கிருதச் சொற்களைப் பெருவாரியாகக் கையாண்டு வந்தனர். 18-ஆம் நூற்றாண்டு முதல் ஆற்றொழுக்குப் போன்று இடைவிடாது தொடர்புடைய எளிய நடை வளர்ந்தது. திருவாங்கூர், கொச்சி மன்னர்கள் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளியிட்ட விளம்பரங்கள் செம்மை சான்ற உரைநடையில் அமைந்துள்ளன. ஆயில்யம் திருநாள் அரசர் காலம் முதல் (1861-1880) புதிய உரைநடை தோன்றியது. அவர் இயற்றியுள்ள **மீன சேர்ந்தன சரிதம், சாகுந்தலம்** என்னும் நூல்களே அதற்குச் சான்றாகும். இத்துறையில் கேரள வர்ம வலிய கோயில் தம்புரான் அரும் பெருஞ் சேவை செய்துள்ளார். அவர் இயற்றிய **மகா சரிதம், அக்பர்** என்னும் நூல்களே உயர்ந்த நடையில் அமைந்தவை. இவற்றையன்றிப் பள்ளி மாணவர்க்கும் பாமர மக்களுக்கும் பயன்படக்கூடிய உரைநடையில் அவர் சில புத்தகங்கள் வரைந்துள்ளார்.

புதுக் கருத்துக்கள் தோன்றிய காலத்தில் நாடகங்களும், கதைகளும், வாழ்க்கை வரலாறுகளும், கட்டுரைகளும் சிறப்புற்று வளர்ந்தன. செய்தித்தாள்களிலும், வாரப் பத்திரிகைகளிலும், திங்கள் வெளியீடுகளிலும் ஆண்டு மலர்களிலும், ஆங்கிலக் கலைவாணர் மலையாளத்தில் வரைந்த கட்டுரைகள் மிகுதியாக வெளிப்பட்டன. அவை புது இலக்கிய முறைகளுக்கு ஆதரவும், செல்வாக்கும் நல்கின. தனித் தாய்மொழிக் கோட்பாட்டிற்குச் செய்தித்தாள்கள் கையாண்ட சில சொற்கள் முரண்பட்டனவேனும், பொதுவாக மொழி வளர்ச்சிக்குப் பத்திரிகைகள் அனைத்தும் பேருதவி பயந்தன. புதுக் கருத்துக்களைக் கையாளும் முறையில் மலையாள உரைநடை வியக்கத்தக்க மேம்பாடு பெற்றது. இம்முறையில்

எதிர்கால முற்போக்கும் மிகுதியாக இருக்கும் என்பது உறுதி. இ. வி. கிருஷ்ணபிள்ளை போன்ற பெருந்திறல் மிக்க அறிஞர்கள் காட்டிய வழியைப் பின்பற்றி, அண்மையில் பலர் நாடகங்களும், நகைச்சுவைக் கூத்துக்களும் சமைத்துள்ளனர். மாலியேர், இப்சென், ஆஸ்கார் வைல்டு, பெர்னுர்டு ஷா முதலியோரைப் பின்பற்றிய கலைவாணர்கள் பலர் அந்நெறியிலேயே இலக்கிய நூல்கள் இயற்றியுள்ளனர். குஞ்ஞராமன் நாயர், அப்பன் தம்புரான் ஆகியோர் இருவரும் புகழ்பெற்ற கட்டுரை எழுத்தாளர். இ. வி. கிருஷ்ண பிள்ளை, சஞ்சயன், சுகுமாரன் முதலியோர் சிறந்த சிறுகதை எழுத்தாளர் ; அருந்திறல் நகைச்சுவை மன்னர்.

புனைகதைகள் பெருஞ் செல்வாக்குப் பெற்றுள்ளன. சி. வி. இராமன் பிள்ளை இத்துறையில் ஈடுபட்டுத் தக்க வழிகாட்டி ஆயினர். அவர் இயற்றிய **மார்த்தாண்ட வர்மா, தர்ம ராஜா** போன்ற வரலாற்றுப் புனைகதைகள் இன்றும் பெரும் செல்வாக்குடையன. சமூகப் புனைகதைகளில் **பிரேமாமிருதம்** என்னும் அவரது கதையே அத்துறையில் முதன் முதல் தோன்றிய பெருமை உடையது. சந்துமேனேன் என்பவரின் **இந்துலேகாவும், சாந்தாவும்** எளிய நடைக்கும், தனிப்பண்புக்கும் நகைச்சுவைக்கும் பெயர் போனவை. அண்மையில் மலையாளப் புனைகதைகளின் தொகை பெருகியுள்ளது. சில கதைகள் பிற மொழிகளில் தோன்றிய புனைகதைகளின் மொழி பெயர்ப்புக்கள். வேறு சில கதைகள் புதியனவாகப் படைக்கப் பெற்றவை. சர்தார் கெ. எம். பணிக்கர் இயற்றிய வரலாற்றுத் தொடர்புடைய **கேரள சிங்கம்** என்னும் புனைகதையை சி. வி. இராமன் பிள்ளை புனைந்த **இராம ராஜபகதூர்** என்னும் கதைக்கு ஒப்பிடலாம். படிப்பதற்கு எளிதும் வாங்குவதற்கு மலிவும் அமைந்த புனைகதைகள் மீது மக்களுக்கு ஆர்வம் பெருகி வருகின்றது ; ஆயினும், அண்மையில் தோன்றிய சில கதைகள் பண்பும் பயனும் அற்றவை.

வரலாறு, அரசியல், பொருளாதாரம் முதலியன பற்றிப் பல நூல்கள் தோன்றியிருப்பினும், இத்துறையில் இடை

விடாது தொடர்ந்து வளர்ந்து வருகின்ற மக்கள் அறிவு வேட்கையைத் தீர்ப்பதற்குப் போதிய நூல்கள் இல்லை. பழங்கால முறைமையை ஒட்டி ஆயுர்வேதம், சோதிடம் என்பன பற்றிச் சில நூல்கள் இயற்றப் பெற்றுள்ளன. மொழி வரலாறு, நிகண்டு, சொல்லிலக்கணம், யாப்பிலக்கணம் பற்றிய நூல்கள் ஒரு சிலவே உள்ளன. குண்டெர்டு, காலின்ஸ், பெயிலி முதலியோர் ஆக்கியுள்ள அகராதிகள் பெரும் பயன் அளிப்பவை. எனினும், அண்மையில் வெளியான நுண் பொருள்கள் அவற்றில் இடம் பெறவில்லை. மலையாளிகளில் இலக்கண ஆசிரியர் ஏ. ஆர். இராஜராஜ வர்மா ஒருவரே; அவரைக் கேரள பாணினி என அழைப்பர். பத்மநாபப் பிள்ளையின் **சப்த தராவலி** இலக்கணத் துறையைச் சார்ந்ததாயினும், அது அத்துறைக்கண் முதற்படியாக எழுந்த நூலேயாம். அதனைத் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்த வேண்டும். நற்காலமாக இப்பொழுது மலையாள மொழியில் கலைக்களஞ்சியம் தொகுக்க முயற்சி செய்கின்றனர். மேல் நாட்டிலிருந்து வந்த கிறிஸ்து சமயகுரவர், ஆங்கிலம் கற்ற மலையாள எழுத்தாளர் முதலியோர் ஆர்வத்தின் பயனாய், இலக்கிய ஆராய்ச்சியும் தகுந்த முறையில் முன்னேற்றம் பெறுகின்றது. உள்ளூர், ஏ. ஆர். இராஜராஜ வர்மா, கே. ஆர். கிருஷ்ணபிள்ளை முதலானோர் இத்துறையில் காட்டிய வழியைப் பின்பற்றி அண்மையில் பலர் பல நூல்கள் இயற்றியுள்ளனர்.

சிறிது காலத்திற்கு முன்னர், பண்டையாசிரியர் பலர் கையாண்டுள்ள வழக்காறுகளிலும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறிய தன்மையிலும், மக்கட்கு வெறுப்புத் தோன்றியது. ஆதலின் ஆராய்ச்சியாளர் சிலர் அவற்றைக் கடிந்துரைத்து, எதுவும் வெளிப்படையாகச் சொல்லும் முறைமையைப் பின்பற்ற வேண்டுமென வற்புறுத்தலாயினர். இக்கருத்துக்களை வெளியிட்ட அறிஞர்களில் சிறந்தோர் ஜோசப் முண்டசேரியும், எம். பி. பாலும் ஆவார். இக்கோட்பாட்டினை விளக்கிச் சில அரிய சிறுகதைகளும், புனைகதைகளும் உருவாயின. வள்ளத்தோள், சங்கரக் குறுப்பு உள்ளிட்ட

கவிஞர் பலரும் இக்கோட்பாட்டைப் பின்பற்றிக் கதைகள் இயற்றி யுதவினர்.

**மராத்தி** :—பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் தற்கால மராத்தி இலக்கியம் வளரத் தொடங்கியது. மேல்நாட்டுக் கருத்துக்களையும், தம் பண்டைப் பெருமைகளையும் எடுத்துரைப்பதற்கு மக்கள் கொண்டுள்ள பெருவிருப்பமே மராத்தி இலக்கிய வளர்ச்சிக்கு அடிகோலியது. கிறிஸ்து சமயகுரவர் தம் திருவறை நூல் ஆகிய **பைபிள், ஞானோபதேசம்** முதலான பற்பல சமய நூல்களையும், **இதோபதேசம் பஞ்ச தந்திரம்** முதலான அறிவுரை நூல்களையும் மராத்தியில் மொழி பெயர்ப்பதிலும், பள்ளி மாணவர்களுக்குப் பாட புத்தகங்கள் வகுத்து எழுதுவதிலும் பேருதவி அளித்தனர். ஆங்கில நூல்கள் பலவற்றைத் தெரிந்தெடுத்து மொழி பெயர்த்தனர். ஜான் பனியனின் **பில்கிரிம்ஸ் பிரோக்கிரஸ்,**[1] சாமுவேல் ஜான்சனின் **ரஸ்ஸிலாஸ்**[2] என்னும் இரு நூல்களையும் கெ. சிப்லுங்கர் மொழி பெயர்த்தார். **இராபின்சன் குரூசோ,**[3] **அரேபியன் நைட்ஸ்**[4] இரண்டையும் சதாசிங் காசிநாத் சாத்ரே மொழி பெயர்த்தார்.

1875-இல் விஷ்ணு சாஸ்திரி சிப்லுங்கர் வரைந்துள்ள பல கட்டுரைகள் வெளி வந்த பின்பு, மேல்நாட்டு தொடர்புக்கு எதிர்ப்புத் தோன்றியது. பிறர் நூலிற் காணும் குற்றங் குறைகளைத் தகுந்த ஏதுக்கள் வாயிலாய் எடுத்துக் காட்டி மறுத்துரைக்கும் **எதிர் நூல்** இயற்றுதலில் திறமை வாய்ந்த இவ்வாசிரியர், மேல்நாட்டு ஆசிரியர்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் செயலில் உள்ள குறைபாடுகளைத் தீவிரமாக எடுத்துக் கூறி, நாட்டுப் பற்றையும் மொழிப்பற்றையும் தூண்டி, மராத்தியருக்கு உவந்த தனிப்பட்ட முறையில் இலக்கியத்தைக் கையாளவேண்டுமென்று வற்புறுத்தினர். அவரது ஊக்கத்தின் பயனாக, சிறந்த கட்டுரை எழுத்தாளர் பலரும், பாலகங்காதர திலகர், ஜி. ஸி. ஆகர்கார், என். சி. கெல்கர், எஸ். எம். பரான்ஜ்பாய் முதலான பத்திரிகை

1. The Pilgrim's Progress
2. Rasselas
3. Robinson Crusoe
4. Arabian Knights

ஆசிரியர்களும், சிரிய முறையில் பணியாறறி வந்தனர். ஆகர்காரும் திலகரும் சமூக சீர்திருத்தம் பற்றிக் கட்டுரைகள் வரைந்தனர். அதற்கு ஏற்ற வண்ணம், அவர் தம் ஆர்வம் ததும்பும் கட்டுரைகள் வாயிலாக, மராத்திய உரைநடை உயர் வெய்தியது. அண்மையில் பட்கே, கண்டேகர், ஆனந்த கானேகர் முதலான பெருமக்கள் கட்டுரைக்கு மேன்மேலும் மிக்க செல்வாக்கைத் தேடிக் கொடுத்துள்ளனர். ஆனந்த கானேகரின் ஆராய்ச்சிக் கட்டுரைகளில் சீர்கெட்ட சமுதாய வழக்காறுகள் பல கண்டனம் செய்யப்பெற்றுள்ளன. எழுத்தாளர் பலர் சின்னஞ்சிறு பொருள்களைக் கையாண்ட போதிலும், டாக்டர் கேட்கர், வி. எம். ஜோஷி, விநாயக தாமோதர சாவர்க்கர் என்னும் பேரறிஞர்கள், மாண்பு மிக்க பற்பல பொருள் பற்றி வரைவாராயினர். நாட்டுப் பற்று, பொது உடைமை போன்ற குறிக்கோள்களையும், சிலர் தத்தம் கட்டுரை வாயிலாய் வெளிப்படுத்தினர்.

சிறுகதைகள் அண்மையில் மிகுதியாகப் பரவியுள்ளன. முன்னர் எச். என். ஆப்தே, கெல்கர் முதலியோர் வரைந்த கதைகள் உயிரற்ற மொட்டைக் கதைகள். திவாகர் கிருஷ்ணு தான் தகுந்த முறையில் கதைகள் எழுதியவர். அவர் தம் கதைகளை உறுப்புக்களின் குணநலன்களைத் திறம்பட ஆராய்ந்து அமைத்துள்ளார். கண்டேகர், பட்கே, கானேகர் என்பாரும் சிறுகதைகள் மிகுதியாக எழுதி, அக்கலைப் பண்பை வளர்த்தனர். அவர் கதைகளை மக்கள் விரும்பிய போதிலும், அவை உயிரற்றவை போல் இயற்கைக்கு முரண் பட்டிருந்தன. அவற்றிற்கு நேர்மாறாக ஜி. ஜோஷியும், வி. வி. போக்கிலும், மக்கள் குடும்ப வாழ்க்கை நிகழ்ச்சிகளை அமைத்துக் கதைகள் இயற்றினர். ஆயின், ஆங்காங்குச் சில இடங்களில் சில நிலைமைகளை மிகைபடக் கூறுதல் போல் தோன்றுகின்றது. இயற்கைக்கும் வாழ்க்கைக்கும் பொருத்தமான சில கதைகளை எஸ். எம். மேதே அமைத்துள்ளார். மராத்திக் கதைகளை விரும்புவார்க்கும் பாமர மக்கள் பற்றிய கதைகளின் மனம் பற்றுதல் கூடும். திறமை வாய்ந்த பி. கெ. ஆத்ரே, சி. வி. ஜோஷி முதலான சில எழுத்தாளர் தம்

உயர் தரக் கதைகள் வாயிலாக அக்கால இலக்கிய வழுக்களைச் சுட்டிக் காட்டி, சீர்திருத்தப் பயன் விளைத்துள்ளனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சிறுகதைகளுடனே புனை கதைகளும் செல்வாக்குப் பெற்றன. முதற்கண் ஆங்கிலப் புனைகதைகளை மொழி பெயர்த்தனர்; அல்லது அவற்றைத் தொகுத்துச் சுருக்கிக் கூறினர். எனினும், பொதுவாக, புனை கதைகள் மந்தகதியாகவே வளர்ச்சியுற்றன. கொங்கண நாட்டுப் பொதுமக்கள் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு, பென்ட்ஸே என்பார் சில கதைகள் புனைந்தார். அவற்றைத் தவிர நெடுங்காலமாகக் குறிப்பிடத் தக்க புனை கதைகள் தோன்றவில்லை. புது முறையில் புனைகதைகள் எழுதத் தொடங்கி மராத்தியர் பண்பாட்டை வளம்படுத்திய வர் ஹரிநாராயண ஆப்தே என்பவர். அவர் அருந்திறலும் கலைப் பண்பும் உடையார். பிறர் கருத்துக்களைப் பின்பற்றும் இயல்புடையார் அல்லர். வரலாற்றுப் புனைகதைகளினால் அவர் மராத்தி ஸ்காட் என்றும், சமூகப் புனைகதைகளினால் மராத்திய டிக்கன்ஸ் என்றும் பெரும் பெயர் பெற்றார்; சமூகப் புனைகதைகளுக்கு, நடுவகுப்பு மக்கள் வாழ்க்கையிலிருந்தே அடிப்படைக் கருத்துகள் வகுத்தார் இவரது **பான லக்ஷயது கோன் கெட்டோ** என்னும் கதை, இளம்பருவத்தில் கைம்மை நிலை அடைந்த ஒரு பெண்ணின் துயர வாழ்க்கையை அடிப் படையாகக் கொண்டது. அவர் இயற்றிய வரலாற்றுப் புனை கதைகள் தேர்ச்சி பெற்ற இலக்கிய நடை உடையன. எனினும் கதைப் போக்கு அத்துணைத் திறம்பட அமைந்தது அன்று. சில கதைகளை நோக்கின், அவை ஏறக்குறைய ஒரு முறையில் அமைந்தன போல் தோன்றுகின்றன; அது ஒரு பெருங்குறை பாடு. டி. எம். பிடேல் என்பவர் (1882-1928) எழுதிய வரலாற்றுப் புனைகதைகள் மிகுந்த செல்வாக்குப் பெற்றன. சி. வி. வைத்தியா, பரான்ஜ்பாய்—இவ்விருவரும் இயற்றிய புனைகதைகள் அறிவுசான்ற நூல்கள் எனினும், பொது மக்கள் உள்ளத்தைக் கொள்ளும் ஆற்றல் படைத்தில. பெருந் திறமைசான்ற வி. எம். ஜோஷி நற்குணங்களின் மாண்புகளை விளக்கி அறிவுறுத்தும் கதைகள் இயற்றினர். இராகினி

என்னும் கதையும், அது போன்ற மற்றை ஐந்து கதைகளும் அவர் புனைந்தவை. அவற்றுள் மிகப் புகழ் பெற்ற **அதீ சிலேச்ச தேவ்** என்னும் கதை, கல்வி கற்ற பெண்மணியையும், அவள் தன் சமூகத்தினரால் அடைந்த எல்லையற்ற தொல்லைகளை யும் அடிப்படையாக வைத்து எழுதப் பெற்றது. இவரிடம் பிறர் நூற்குற்றங் காட்டும் மனப்பான்மை இருந்த போதிலும் இவர், தம் கதையைப் படிப்பவர் மனத்தைக் கவரும் வண்ணம் சுவைபடச் சொல்லும் வல்லமை மிகுதி உடையவர். அன்றியும், உள நூல் ஆராய்ச்சி வன்மையின் பயனாக, உறுப்பினர் குண நலன்களைத் தம் கதையில் திறம்பட அமைத்துள்ளார். டாக்டர் கெட்கர் என்பவர் மனவூக்கமும் கற்பனைத் திறமும் பெற்ற அறிஞர். அவர் கதை அமைப்பிலும், மொழி நடை யிலும், புதிய வழியில் புகுந்தார். அதனால், புனைகதைகளின் செல்வாக்கை உயர்த்தினார். பட்கே, கண்டேகர் என்பார் இருவரும் கைதேர்ந்த எழுத்தாளர்கள். அவர்கள் சிறுகதை களும் கட்டுரைகளும் வரைதலில் முனைந்து நின்றார்கள்; அரும்பெரும் நூல்களும் இயற்றினார்கள். பட்கே, கதையின் ஒவ்வொரு பகுதியையும் அழகுற விரித்துரைக்கும் செயலில் இணையற்றவர். கண்டேகர், அவரினும் கற்பனைத் திறத்தில் மிகுதியாக ஈடுபட்டவர்; மெய்விளக்க நெறியுடையார். இக்காலத்தில் மிகுதியான புனைகதைகள் இயற்றியவர் மாமா வாரேக்கர் என்னும் பெரியார். இவர் இதுகாறும் 115 நாவல் கள் புனைந்துள்ளார். அவற்றுள் பெரும்பான்மை மொழி பெயர்ப்புக்களே. அவர் புதியனவாகப் புனைந்துள்ள நாவல் கள் பெரும்பாலும் சமூகக் கொடுமைகளினால் துன்புறும் மக்களைப் பற்றியனவே; அவரது உரைநடை மிக எளிமை யானது. எனினும், வழக்காற்றிற்கு முரண்பட்டது. இன்று வழங்கும் மராத்திய மொழி நடையையே மாமா கையாண் டுள்ளார். இக்காலத்தைச் சார்ந்த பி. ஒய். தேச் பாண்டே மாதோல்கர் என்னும் வேறு எழுத்தாளர்கள், அரசியல் கொள்கைகளைத தம் கதைகளுக்கு அடிப்படை ஆக்கினர். மாலதி பெடைக்கரின் புனைகதைகள் இக்காலப் பெண்களின்

வாழக்கையையும், அதில் விளையும் பற்பல தொல்லைகளையும் விரிவாக எடுத்துரைக்கின்றன. நடுத்தர நிலையில் இருக்கும் குடும்ப வாழ்க்கையைக் கையாண்டு சிறப்பாகப் புனைகதைகள் இயற்றும் எழுத்தாளர் மிகப்பலர் உளர்.

புதிய கால மனப்போக்கு, புதிய கவிதைகளிலும் சில மாற்றங்களை விளைவித்தது. பண்டைக் கவிதைகள் சமயப் பற்றை அல்லது நல்லொழுக்கத்தை அறிவுறுத்தின. இப்பொழுது உலகப் பொருள்களின் மாண்பு பற்றியே கவிதைகள் மிகுதியாகத் தோன்றின. ஆங்கிலத் தொடர்பினால், இயற்கை பற்றியும், நாட்பட்ட வாழ்க்கை நிகழ்ச்சிகள் பற்றியும், கவிதைகள் புனையப் பலர் முன்வருகின்றனர். தற்காலத்தில் கவிதைகளில் கருத்துக்களைக் கையாளும் முறையையும், சொற்களை அமைக்கும் திறத்தையும் தொடங்கி வைத்தவர் கேசவசூத் என்பவர். அவர் தம் கவிதைகள் வாயிலாக நாட்டில் பரவி வருகின்ற சீர்கேடுகளை நன்கு விளக்கி, அவற்றை ஒழிக்க முயன்றார். நாராயண வாமன் திலகர் என்னும் கவிஞர், குடும்ப வாழ்க்கையின் அருமை பெருமைகளை விளக்கிக் கூறுகின்றார். இந் நூற்றாண்டின் முதற் பகுதியில் தோன்றிய கவிஞர்களில் கட்கரியைப் போல் செல்வாக்கை அடைந்தவர் எவரும் இல்லை. சமுதாய வழக்கத்திலும் சமய நெறியிலும் புகுந்த குறைபாடுகளைத் தம் செய்யுட்களில் எடுத்துரைத்து ஏளனம் செய்கின்றார். இவர் முறையைப் பல கவிஞர் பின்பற்றினர். அவருள் இராமச்சந்திர தம்பே மிகப் புகழ் பெற்றவர். இவர்கள் யாவரும் பழங்காலக் கவிதைகளை அறவே மறந்தார் அல்லர். சந்திரசேகரர் என்பார் பண்டை மரபினைப் பின்பற்றிக் கவிதை செய்துள்ளார்.

1920 முதல் 1930 வரை நல்ல கவிதைகள் தோன்றவில்லை. 1930-ஆம் ஆண்டில் அரசியல் போராட்டம் தலையெடுத்தது. அது கவியுலகிற்குப் புத்துயிர் அளித்தது. ஆனந்த காணேகர் என்பார் ஆலைப்புகைக் கூண்டு, வெண்ணிலா என்னும் எளிய பொருள்கள் பற்றி, அரிய கவிதைகள்

புனைந்தார். ஏ. ஆர். தேச் பாண்டே உணர்ச்சி ததும்பும் கவிதைகளையும், என். ஜி. தேச் பாண்டே தனியுணர்ச்சிப் பாடல்களையும், ஜி. எச். தேச் பாண்டே அகப்பொருட் புதிர்களையும் அமைத்து, மராத்திக் கவிதைப் பண்பினைப் புதிய முறையில் வளம்படுத்தினர். 1942-ஆம் ஆண்டு தொடங்கிய இயக்கம் இளங்கவிஞர் பலர்க்குப் புத்துணர்ச்சி வேகத்தை வளர்த்தது. அதன் விளைவாக உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டும் எண்ணிறந்த கவிதைகள் எழுந்தன. அவை அனைத்தும் பிறிதின் சார்பற்ற தனிநிலையுடையன என்று இயம்புதல் பொருந்தாது. நல்வினைப் பயனாக இக்காலத்தில் திறமை வாய்ந்த இளங்கவிஞர் பலர் தலையெடுத்து வருகின்றனர்.

புதுமுறை நாடகங்கள் 19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் தோன்றின. பழங்கதைகளைத் துணைக்கொண்ட நாடகங்கள் சில பின்னரும் இயற்றப் பெற்றன. வரலாற்றுத் தொடர்புடைய நாடகங்களை முதன் முதல் வகுத்தவர் சீர்த்தனே என்பவர்; ஆனால், அவர் நாடகங்கள் அத்துணைக் கவர்ச்சியுடையன அல்ல. நாடக அரங்கத்தில் புரட்சியைத் தோற்றுவித்தவர் கிர்லோஸ்கர். சிறந்த இன்னிசை பயிலும் நாடகங்களை அவர் இயற்றத் தொடங்கினர். அவற்றுள் **சௌபத்திரா** என்னும் நாடகம் தலைசிறந்தது. ஷேக்ஸ்பியர் நாடகங்களை மராத்தி மொழியில் பெயர்க்கும் முயற்சியும் வழக்கத்திற்கு வந்தது. தேவால் என்பவர் இயற்றிய ஏழு நாடகங்களில் ஆறு இவ்வழியில் வந்தனவேயாம். ஏழாவது நாடகம் **சாரதா.** அது வயது முதிர்ந்த கிழவன் ஒருவன் இளம் பெண் ஒருத்தியை மணக்கும் செயல் பற்றியது. அரசியல் நிகழ்ச்சிகளையும், அரசியல் நிபுணர்கள் அரும்பெருந்திறன்களை யும் சிறப்புக் கூறுகளாக அமைத்துச் செய்த நாடக நூல்கள் சில உள்ளன. இவற்றை அன்றி வரலாற்றுக் கதைகள், பழங்கதைகள் முதலியவற்றைச் சார்ந்து இயற்றப்பெற்ற என். சி. கெல்கரின் நாடகங்களும், வியப்புக் கதைகளின் அடியில் எழுந்த காட்கரின் நாடகங்களும் நலம் சிறந்துள்ளன. அவை பெரும் செல்வாக்கும் பெற்றன. ஆயின், நாடக

மேடையில் இன்னிசைக் கலைக்கு அளவிறந்த செல்வாக்கு ஏற்பட்டது. எனவே, நாடகத்தின் இலக்கியத் தன்மையையும், கதையை நயம்பட விரித்துரைக்கும் அழகையும் கதைக் கலன்களின் பண்பு நலன்களையும், மற்றும் ஆங்காங்குத் திறம்பட நடித்தற்குரிய திறன்களையும் மறந்தனர். இது பெரிய தவறு என்பது எளிதில் விளங்கும். படக்காட்சியின் செல்வாக்குப் பெருகியதாலும், மராத்திய நாடக அமைப்பில் பெரிய மாறுதல் தோன்றியது. மக்களுக்குச் சமூக நாடகங்கள் மீதுள்ள வேட்கை கரை புரண்டது. ஆகவே, மாமா வரேக்கர் அத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். அண்மையில் மராத்திய நாட்டில் தோன்றியுள்ள அரசியல் புதிர்களையும், சமூக வாழ்க்கை இன்னல்களையும் அடிப்படையாக வைத்து, சில நாடக நூல்கள் செய்தார். அவர் இயற்றிய **அபூர்வ பன்நல், பூமி கன்ய சீதா** என்னும் நாடகங்கள் இரண்டும், பழங்கதைகளைப் பின்பற்றாமலே கால இயல்புக்கு ஏற்றவாறு நாடகங்கள் அமைக்க முடியுமென்பதைத் தெளிவுபடுத்தின. பி. கே. ஆத்ரே இயற்றிய துன்பியல் நாடகங்களும், நகைச் சுவைக் கூத்துக்களும் தலைசிறந்த பண்புடையன. எம். ஜி. ரங்னேகார் எழுதியுள்ள எளிய இன்பியல் நாடகங்களை மக்கள் மிகுதியாக விரும்புகின்றனர். ஆயின், அவை உயர்ந்த இலக்கியப் பண்பு செறிந்தவை அல்ல. சென்ற சில ஆண்டுகளாக, இளங்கவிஞரும், எழுத்தாளரும், இலக்கியத்துறையில் ஈடுபட்டு உழைக்கின்றனர். என்றாலும், அவருள் சிலரே அன்றிப் பிறர் அனைவரும் பொது மக்கள் உணர்ந்து நுகரும் தன்மையுள்ள இலக்கிய நடை கையாண்டார் அல்லர். வேண்டுமென்று முயன்று முயன்று, ஆழ்ந்த கருத்து அமையாத மேலோட்டமான மினுக்கு நடையை மேற்கொள்ளுதலால், அவர்தம் நூல்கள் இயற்கை அழகினை இழந்துள்ளன.

இலக்கிய ஆராய்ச்சி எதிர்பார்க்கக்கூடிய அளவில் வளரவில்லை. மேல்நாட்டுத் தொடர்பின் விளைவு இத்துறையில் தெளிவாகப் புலப்படுகின்றது. ஆனால், மராத்திய இலக்கிய முறை பற்றிய பலவகை விவாதங்கள், மேல் நாட்டிலும் இவை போன்ற பொருள் பற்றி நடைபெற்றிருக்கும் விவாதக்

கோட்பாடுகளின் எதிரொலியெனவே கருதுதல் வேண்டும். இலக்கிய ஆராய்ச்சி இயற்கையான முறையில் வளர்தல் மிகத் தேவை. அது விரைவில் நிகழுமென நம்ப இடம் உளது.

ஒரியா :—பண்டைக் காலத்தில் பெரிய போர்களில் வெற்றிகளேயும், கடல் கடந்து சென்று அளவிறந்த பெருமைகளேயும் பெற்ற கலிங்கர்கள், உட்கல்கள், ஒட்டிரர்கள் ஆகிய கிழைத் தக்காண மக்களின் மொழியே ஒரியா என்பது. ஒரியா மொழி எட்டாம் நூற்ருண்டு முதலே வழக்கத்தில் இருந்து வருகிறது என்று கருதப்படினும், இன்று பேச்சிலும், எழுத்திலும் பயன்படுத்தப்படும் ஒரியா மொழி 14-ஆம் நூற்ருண்டிலேதான் உருவாயிற்று என்று கூற வேண்டும். 14-ஆம் நூற்ருண்டு முதல் 19-ஆம் நூற்ருண்டு வரை ஒரியா இலக்கியம் சமய நெறியையும், அந்நெறி பற்றிய பழங்கதைகளேயுமே விரித்துரைத்தலில் ஈடுபட்டிருந்தது. அக்காலத்தில் தோன்றிய கவிதைகள், இசைப்பாடல்கள், கதைகள் அனைத்தும், இதிகாச காவியங்கள் ஆகிய இராமாயணம், மகா பாரதம் என்பவற்றையும், பாகவத புராணம் முதலியவற்றையும் அடிப்படையாகக் கொண்டு வெளிப்பட்டனவே. ஒரியா மொழியில் பன்னிரண்டு வகைக்கு மேற்பட்ட இராமாயணமும், மூன்று வகைப்பட்ட பாரதமும் தோன்றியுள்ளன.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் கடைப்பகுதியிலேதான் புது இலக்கியப் பண்பு ஒரியா மொழியில் அமைந்தது. ஒரியா இலக்கியத்தில் மேல் நாட்டு இலக்கியச் செல்வாக்கு மற்றும் பல இந்திய மொழிகளேவிடப் பிற்காலத்தில் தோன்றியுள்ளது. ஒரியா மொழியின் வளர்ச்சி பொதுவாக மந்தகதியாகவே நிகழ்ந்துள்ளது. இவற்றிற்குக் காரணம், ஒரியா மக்கள், ஒதுக்கப்பட்ட சிறுபான்மையோராக நான்கு மாநிலங்களிலும் சிதறுண்டு கிடந்தமையேயாம். வங்க மொழியும் ஒரிசா நாட்டில் அண்மையில் வழங்கிய மற்றைய மொழிகளும் விரைவாக வளர்ந்து வந்த காலத்தில், ஒரியா மொழி மட்டும் மிகவும் மந்தகதியாகவே சென்றுகொண்டிருந்தது. ஆனல், ஒரியர் தம் மொழி மீது பிற மொழிகளின் ஆதிக்கம் ஏற்படாதபடி, அதைப் பாதுகாத்து வந்தனர்.

ஒரிய இலக்கியத்தில் மறுமலர்ச்சி தோற்றுவித்து அதற்கு நல்ல முறையில் வழிகாட்டியவர் பக்கிர்மோகன் சேனபதி. அவர் வாழ்ந்த காலம் 1843-1918. தெலுங்கு இலக்கியத்தில் வீரேசலிங்கம் ஈடுபட்டிருந்தது போல், இவர் ஒரிய இலக்கியத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஈடுபட்டு, அதில் சிறந்த புகழ் பெற்றார்; பற்பல நூல்கள் எழுதினர்; ஒரிய மொழியில் முதன்முதலாகச் சிறுகதைகளும் புனைகதைகளும் இயற்றினர்; பற்பல கவிதைகள், இசைப் பாடல்கள், **புத்த பகவான் பெருங்காப்பியம்** ஆகியவற்றைச் செய்தார்; இராமாயணம், மகாபாரதம் இரண்டையும் மொழி பெயர்த்தார். தற்கால ஒரிய மொழியின் உரைநடை அமைப்பும் அழகும் அவரது இலக்கியச் சேவையின் விளைவுகளே. அவரது புனை கதைகளில் இயற்கை அழகும் சிறந்த நடையும் அமைந் துள்ளன. அவர் வகுத்த கதைத் தலைவர் தாழ்ந்த வகுப் பினரும் எளியோருமே ஆவார்; அம்பட்டன், நெசவாளி, பேராசை கொண்ட குமாஸ்தா, பணவெறி பிடித்த வணிகன் இத்தகையோரே. அவரது புகழ் பெற்ற **சர்மன் அதகுண்டா** என்னும் கதை, ஆதரவற்ற நெசவாளனும், அவன் மனைவியும், பேராசைகொண்ட முதலாளியிடம் பட்ட துன்பங்களை அடிப் படையாகக்கொண்டது. கதை அழகாக அமைந்துள்ளது; புனைந்துரைகளும் சிறப்பாக அமைந்துள்ளன. கலைவளர் கழகம் இக்கதையைப் பிற மொழிகளில் பெயர்க்கத் தெரிந் தெடுத்துள்ளது. அவர் வரைந்த சமூகப் புனைகதைகளான **மாமு** (தாய் மாமன்), **பிராயச்சித்த** (கழுவாய்) என்பன, மேல் நாட்டுத் தொடர்பினல் பழைய சமூகக் கட்டுப்பாடு தகர்ந்து வந்திருப்பதை நன்கு விளக்கிக் கூறுகின்றன.

பக்கீர்மோகனுக்குப் பின்னர் நெடுங்காலமாகக் குறிப்பிடத் தக்க புனைகதைகள் தோன்றவில்லை. அப்பால் தோன்றியவை எளிய தன்மையுடையன. கதையின் போக்கும் நடையின் அமைப்பும் தகுதியற்றன. வங்காளப் புனைகதை எழுத் தாளரைப் பின்பற்றி, சாபியர் அல்லது கிரீன்கள் என்ற கூட்டத்தார், **பசந்தி** என்னும் சுவையுள்ள கதையை இயற்றினர். அது இளம் பருவ எழுத்தாளர் மனத்தைக்

கவர்ந்தது. கலிந்திசரன் பாணி இராகி என்பவர் இயற்றிய **மதிரி மானிஷா** என்னும் கதை, வாழ்க்கை இயல்பை அழகு பெற எடுத்துக் காட்டுகின்றது. மொழி நடையும் சிறப்புடையது.

இந்தியா விடுதலை பெற்ற பின்னர் புனைகதைத் துறையில் மக்கள் மிக்க ஈடுபாடு கொண்டுள்ளனர். சூன்னுச் சரன், அவர் தம்பி கேசிநாதர்—இருவரும் பல கதைகள் வரைந்துள்ளனர். கோபிநாதர் என்பார் மலைவாழ்க்கையை அடிப்படையாக வைத்து அமிருதர் சாந்தன் என்னும் கதைகள் எழுதினர். மக்களது அன்றாட வாழ்க்கையை அமைத்து கன்னுசாரன் பலவகையான சமூகப் புனைகதைகள் வகுத்தார். மஹதாப்பின் கதைகளில் நாட்டுப்பற்று மிக்குள்ளன. நித்தியானந்த மகா பத்ரு, சந்திர மோனி தாஸ், டாக்டர் குந்தள குமகிஸபத் போன்ற எழுத்தாளர் சிலர், பற்பல முக்கிய கருத்துக்களை அமைத்துக் கதை புனைந்தனர். விலை மலிவும் மதிப்புக் குறைவுமுள்ள புனைகதைகள் வெளியிடுவோரும் பலர் உளர். பக்கிர்மோகன் சிறப்பாகத் தொடங்கிய சிறுகதை அமைப்பு முறையை இராம சங்கர், ஸ்ரீசசி பூஷன்ராய், சசி ரௌட்ராய் முதலான அறிஞர்கள் பின்பற்றி, அதன் வளர்ச்சிக்காக உழைத்து வந்தனர்; ஆயினும், ஒரியாக் கதைகள் எண்ணிக்கையிலும் தன்மையிலும் மற்றை மொழிகளில் உள்ளனவற்றிலும் குறைந்தவை. பிபின் பிஹாரி ராய், பண்டித நீலகண்ட தாஸ் போன்ற எழுத்தாளர் பல கட்டுரைகள் இயற்றியுள்ளனர். ஆனால், அவற்றின் உரைநடை எளிமை வாய்ந்ததும் அன்று; தெளிவுடையதும் அன்று. பண்டித நீலகண்ட தாஸ் ஒரிய மக்களின் சமூகத்தையும் இலக்கியத்தையும் பற்றி வரலாற்று நூல் இயற்றியுள்ளார். இதைத் தவிர ஒரிஸாவின் வரலாற்றை அழகிய உரைநடையில் கிறிப சிந்துமிஸ்ரா என்பவர் **கோனரக்கா, பாராபதி** என்னும் தம் இரு நூல்களிலும் எழுதியுள்ளார். வசை நூல்கள், இலக்கணங்கள், அறிவுக் களஞ்சியங்கள், இலக்கிய ஆராய்ச்சிகள் ஆகியவை வெளிவந்துள்ளன. ஆனால் அவையாவும் தொடக்க நிலைத்

தன்மையில்தான் அமைந்துள்ளன. வருங்காலத்தில் முதிர்ச்சி பெறுமென நம்பலாம்.

இக்கால ஒரியக் கவிதை, பக்கீர் மோகன் அவர் கூட்டத்தைச் சார்ந்த இராதானுத் ராய் மதுசூதனராவ் ஆகியோரால் தொடக்கி வைக்கப்பட்டது. இராதானுத் ராய் அரும்பெரும் திறம் பெற்றவர். பொருள் அற்ற மோனையையும், சொற்பெருக்கத்தையும் அகற்றி, கவிதை எளிதாக விளங்கும் முறையில் அமைத்ததே அவர் ஒரிய இலக்கியத்திற்குச் செய்த தனிச்சேவை யெனலாம். இதற்கு நேர்மாருக, இராதானுத் சொற்களின் நுட்பப் பொருளை ஒட்டியே அவற்றைக் கையாண்டு வந்தார். அவர் இயற்றிய பெருங்காப்பியங்களின் பொருள்கள் முன்னர் வாழ்ந்த கவிஞர்கள் கையாண்டுள்ள முறையினும் மிக்க வேற்றுமை யுடையன. இராதானுத் வரலாற்றுத் தொடர்புள்ளனவாய்த் தொன்று தொட்டு வந்துள்ள செவிவழிச் செய்திகளை ஒரிஸா நாட்டுக்குரிய தனிமுறையிலமைத்து,கவிதைகளை இயற்றினர். ஒரிஸாவின் அழகான நிலப்பரப்பு, அதின் ஏரிகள், ஆறுகள், குன்றுகள், பள்ளத்தாக்குகள் முதலியவை பற்றி விரித்துரைக்கும் நேர்த்தியான கவிதைகளை அவர்தாம் முதன் முதலாக அமைத்தார். இயற்கை அழகைப் புனைந்துரைத்தலில் காளிதாஸரும், கம்பரும் எவ்வாறு சிறந்த கவிஞரோ அவ்வாறே இராதானுத் ஒரிஸாவின் தனிப் பெருங் கவிஞராகத் துலங்குகின்ருர். அன்றியும், அவர் கவிதைகளனைத்திலும் நாட்டுப் பற்றுத் திகழ்ந்தொளிர்கின்றது. குறிப்பாக அவரது **மஹாயாத்யாத்ரா** என்ற பெருங்காப்பியத்தில் அதை நன்கு காணலாம். இக்காப்பியத்தை அவர் முடிக்கவில்லையெனினும், அவர் எழுதி வைத்துள்ள பகுதியிலிருந்து, இந்துக்களிடையே அக்காலம் தோன்றிய பிளவுகளைக் குறித்து அவர் மிகவும் மனம் வருந்திஞர் என்பது நன்கு வெளியாகின்றது.

பெரும் கவிஞர்கள் மூவரில் மற்ருெருவராகிய மதுசூதன ராவு புதுப்பொருள்களைக் கையாளவில்லை. பண்டைக் காலத்தைப் போல் மதம், இயற்கை வளம் முதலியவற்றைப் பற்றிய கவிதைகளை இயற்றி வந்தார். இவரது செய்யுட்

களும், பாடல்களும் இனிய நடையில் அமைக்கப்பட்டுள்ளன. மக்கள் அவற்றை அருமை பெருமையாய்ப் போற்றி வருகின்றனர்.

இம்மூன்று கவிஞர்களை அடுத்து வந்தவர்களுள் கங்காதர மேஹரைப் போல் அரிய கலைஞர்கள் சிலர் இருந்தனர். கங்காதர் மேஹர், சம்பல்பூரைச் சார்ந்த ஏழை நெசவாளி. அவர் எளிய நடையில் நெஞ்சை அள்ளும் கவிதைகளை இயற்றினர். ஆனல், குறிப்பிட்ட ஒரு சில பொருள்களைப் பற்றியே பாடியுள்ளார். அவரது சிறந்த காப்பியமான **தபஸ்வினியில்,** சீதாப் பிராட்டியாரிடம் பெண் மக்களுக்குரிய அரிய குணங்கள் யாவும் ஒருங்கே நிரம்பியிருந்தன என்று விளக்கியுள்ளார்.

நந்த கிஷோர்பால், ஒரிஸா கிராமங்களின் வனப்புப்பற்றி நேர்த்தியான கவிதைகள் அமைத்துள்ளார். குழந்தைகளுக்குத் தகுந்த அரிய செய்யுட்களை அவர் எழுதினர். **நாளுபாய கீதா** என்ற பலவகைப் பாடல்கள் அடங்கிய அவரது பாமாலையில் சிறுவருக்குத் தகுந்த அரிய கவிதைகளைக் காணலாம். ஆனல், பொதுவாக இக்காலக் கவிதைகள் எண்ணிக்கையிலோ தன்மையிலோ சிறப்பானவையென்று கூற இயலாது. கவிதை இயற்றுவதில் நாட்டுப்பற்று சிலருக்கு ஆர்வம் அளித்தது. கோப பந்து தாஸ் (1877-1928) என்பவர் நாட்டுப்பற்று மிக்கவர். அவர் தம் கவிதைகளாலும் உரை நூல்களாலும் நாட்டுப்பற்றுக்குப் பெரும் ஊக்கம் அளித்தார்.

மார்க்ஸின் கொள்கை, உணர்ச்சி பெற்ற பல கவிஞர்களைத் தூண்டியது. இவருள், ஆனந்த பட்னுயக்கும் சசிரெளட்ரேயும் மிகப் புகழ் பெற்றவர். ஆனந்த பட்நாயக்குக்கு எளியோர் நிலையை மிகைபடப் புனைந்துரைக்கும் தன்மை வாய்ந்துளது. சசியின் **பள்ளிஸ்ரீ** என்ற கவிதை உயர்தரமானது. அக்காவியம் தற்கால நகர வாழ்க்கையின் கொடுமைகளையும் இன்னல்களையும் திறம்பட விளக்குகின்றது.

**ஆங்கிலம் :—** இந்தியர் சிலர் ஆங்கிலத்தில் நூல்கள் இயற்ற முன் வந்திருப்பது குறிப்பிடத் தக்கதே. 19-ஆவது

நூற்றுண்டின் இறுதிக் காலம் முதல் இந்திய நிபுணர்கள் சிலர் தம் கருத்துக்களை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டனர். தொடக்கத்தில் அவர் கவிதைகள் இயற்றவில்லை. ஆனல், கடிதங்கள், ஒவ்வொரு பொருள் பற்றிய தனிக் கட்டுரை நூல்கள் முதலியவை தோன்றின. வேற்று மொழி நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் முயன்றனர். மேல் நாட்டுக் கல்வி ஓங்கி வளரவே பத்திரிகைத் தொழிலும் தழைத்து வந்தது. இந்தியர்கள் ஆங்கிலத்தில் கட்டுரை எழுதிப் பழகு வதற்கும் பத்திரிகைகள் வாய்ப்பு அளித்தன.

ஆங்கிலத்தில் முதன் முதலாக இலக்கிய நூல்கள் இயற்ற முனைந்தவர் வங்காளிகளே. திறமை வாய்ந்த தோரு டட்டு, இணையற்ற கவிஞர் பெருமான் இரவீந்திரநாததாகூர் ஆகிய இருவரும் ஆங்கிலக் கவிதைகள் இயற்றிப் பெரும் புகழ் பெற்றனர். தென்னிந்தியாவும் காலந் தாழ்த்தாது அவர்கள் வழியைப் பின்பற்றியது. கவியரசி சரோஜினி நாயுடு அரிய கவிதைகளை இயற்றினர். அவரது பாடல்கள் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தவை. தக்காணத்தின் அழகிய குன்றுகளையும் பள்ளத்தாக்குகளையும் பற்றி நேர்த்தியாகப் பாடினர். மீன் பிடிப்பவர், தானியம் அரைப்பவர், நெசவாளி கள், பாடகர் முதலானேர் வாழ்க்கைத் திறன் அனைத்தையும் வாய்மை கெடாது இயல்பு நவிற்சியாகவே அவரது கவிதைகள் விளக்கி உரைத்தன. அவரது பிற்காலக் கவிதைகளில் **'ஸாலிற்றியூட்'** [1], **'தி இல்யூஷன் ஆப் லவ்'** [2], **'லவ் ஆம்னி பொட்டன்று** [3] போன்ற சிறப்பான செய்யுட்கள் இயற்கையின் உள் ஒலியை வெளிப்படுத்துகின்றன. சில காலம் அவர் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். கற்பனை குடிகொண்ட அரிய கவிதையுலகை விட்டு, சுவைத்திறமற்ற அரசியல் துறையில் அவர் இறங்கிய செயல் வருந்தத்தக்கதே. ஆயினும், அதுகாறும் இயற்றிய பாசுரங்கள் அடங்கிய மூன்று தொகுதிகள் என்றும் அழியாச் செல்வங்களாகவே திகழ் கின்றன. இயற்கையின் அழகைப் புனைந்துரைத்திருப்பதும்,

1. Solitude 2. The Illusion of Love 3. Love Omnipotent

**'வாண்டரிங் ஸிங்கேர்ஸ்**[1]**,' 'தி பலாங்குவின் பேரேர்ஸ்**[2]**,' பாங்கிள் ஸெல்லேர்ஸ்'** [3] என்ற கவிதைகளில் கல்வியறிவற்ற எளிய மக்கள் வாழ்க்கையை உள்ளது உள்ளவாறே உயிரோவியம் போல் உவகை சிறக்க எடுத்துரைத்திருப்பதும் அவரது கவித்திறன் மாண்பை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

சரோஜினி நாயுடுவோடு பல்வகையிலும் ஒப்புமையுள்ள அவரது உடன் பிறந்தார் ஹரேந்திரநாத் சடோபத்தியாயர் சில பாமாலைகளையும் செய்யுள் நாடகங்களையும் இயற்றியுள்ளார். **'பீஸ்ற்று ஆப் யூத்'**[4], **'தி பெர்பியும் ஆப் தி எர்த்'**[5], **'ஒயிற்று ஷவர்ஸ்'** [6] போன்ற அவரது காவியங்கள் பற்பல இனங்களைச் சார்ந்தவை. அழகும் உணர்ச்சியும் அக்கவிதைகளுள் செறிந்து கிடக்கின்றன. அவற்றின் கருத்துக்களும் கற்பனைகளும் சிறந்தவையென்பதற்கு ஐயமில்லை. ஜி. கெ. செற்றூர், சேஷாத்திரி, சாரனுதன், டி. பி. கிருஷ்ணசுவாமி முதலியார், உமா மகேசுவரர் போன்ற சில ஆங்கில ஆசிரியர்கள் ஆங்கிலக் கவிதை இயற்றுவதில் முயன்றனர். இருபத்து மூன்று பாடல்கள் சேர்ந்த **'டிறயம்ப் ஆப் லவ்'** [7] என்ற பாமாலையில், ஜி. கே. செற்றூரின் கவி உணர்ச்சித் துடிப்பும் பண்பாடும் துலங்குகின்றன. **'தி ஷாடோ ஆப் காட்'** [8] என்ற பிற்காலக் கவிதையில் அவரது அமைதி பெற்ற தன்மையையும் சொற்களைக் கோத்து அமைப்பதில் அவரது அரிய திறத்தையும் நன்கு காணலாம். அன்பானது நிலையான தன்மையுடையது; சிற்றின்பம் விருப்பத்திற்குரியது அன்று என்னும் கோட்பாட்டை ஜி. கெ. செற்றூர் அருமையாக விளக்கினர். **'சம்பக் லீவ்ஸ்,'** [9] **'வானிஷிங் ஹௌவர்ஸ்**[10] **'** என சேஷாத்திரி இயற்றிய பரிபாடல் வகைகள் உள்ளத்தை அள்ளும் பண்பு வாய்ந்தவை. ஆசிரியரல்லாதவர்களில் எம். கிருஷ்ணமூர்த்தியும், மஞ்சேரி எஸ். ஈசுவரனும் எதிர்கால

1. Wandering Singers
2. The Palanquin Bearers
3. Bangle Sellers
4. Feast of Youth
5. The Perfume of the Earth
6. White Showers
7. Triumph of Love
8. The Shadow of God
9. Champak Leaves
10. Vanishing Hours

முன்னேற்றத்திற்குரிய இளங் கவிஞராவர். மற்றும் பலர் பலவகைக் கவிதைகளில் முனேகின்றனர். ஆனல், பெரும் பாலோர் ஆங்கிலச் செய்யுள் முறையை மரபு வழுவாது பின் பற்றுவதாகத் தெரியவில்லே.

சிறப்பிற்குரிய ஆங்கில நாடகங்கள் இந்தியர் இயற்றி யுள்ளரெனக் கூறுவதற்கில்லே. ஆனல், சிறு சிறு நாடகங் களேயும் நகைச்சுவைக் கூத்துக்களேயும் வி. வி. சீனிவாச ஐயங்கார், ஏ. எஸ். பி. ஐயர் என்பார் இயற்றியுள்ளனர். கோவாவைச் சார்ந்த ஆசிரியர் ஆர்மான்ரூே மென்ஸீஸின் **'காஸ்ற்று எ சோஷியல் காமடி'** [1] என்ற நாடகமும், நிக்கொலோ ஜெ. டி. மென்ஸீஸ் என்னும் கோவாவைச் சார்ந்த மற்ருெருவர் கிறிஸ்து பகவான் வாழ்க்கை பற்றிய இயற்றிய **'தி ஸன் ஆப் மான்'** [2] என்ற நாடகமும் திறம்பட அமைந்துள்ளன. ஆனல், இந்தியர்கள் ஆங்கில நாடகம் வகுக்கும் துறையில் தொடக்க நிலேயிலிருப்பதாகவே கருதுதல் வேண்டும்.

புனேகதைத் துறையில்தான் முன்னேற்றம் மிகுதியாகக் காணப்படுகிறது. அ. மாதவையா எழுதிய பல புனே கதை களில் **'தில்லே கோவிந்தன்'** [3] மிகச் சிறந்தது. அது தென்னிந் திய வாழ்க்கையின் தனிப் பண்பை அடிப்படையாகக் கொண்டது. இவ்வகைக் கதை இயற்றுவதில் வேங்கடரமணி மிக்க ஆர்வத்துடன் முனேந்து வந்தார். இவரது **'பேப்பர் போட்ஸ்'** [4], **'முருகன் தி டில்லர்'** [5], **'கந்தன் தி பேட்ரியற்று'** [6] முதலியன வனப்பு வாய்ந்த நடையுடையன. இவர் தொன்று தொட்டே வழக்கிலிருக்கும் கிராம வாழ்க்கையை வியந்து பாராட்டியவர். ஆகவே, அவரது பல கதைகளிலும் தற்கால நகர வாழ்க்கையையும் பண்பற்ற நாகரிகத்தையும் இகழ்ந்தே புனேந்துள்ளார். சங்கர் ராம் என்பவர் இந்திய உழவனே அடிப்படையாக வைத்துப் பல கதைகளே எளிய நடையில் திறம்பட எழுதி வருகின்ருர். ஆர். கெ. நாராயணன் என்பார் **'தி பாச்சிலர் ஆப் ஆர்ட்ஸ்'** [7], **'தி டார்க் ரூம்'** [8] என்னும் புனே

1. Caste A Social Comedy
2. The Son of Man
3. Tillai Govindan
4. Paper Boats
5. Murugan the Tiller
6. Kandan the Patriot
7. The Bachelor of Arts
8. The Dark Room

கதைகளை இயற்றியுள்ளார். இவ்விருவரும் இக்காலத்திற்கேற்ப புனைகதை எழுத்தாளராகத் திகழ்வரெனத் திண்ணமாக எதிர் பார்க்கலாம். புனைகதை எழுதிவரும் மற்றவருள் ஏ. எஸ். பி. ஐயர் குறிப்பிடுதற்குரியவர். வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு **'பாலாதித்யா'** [1], **'த்றீ மென் ஆப் டெஸ்றினி'** [2] என்னும் இரு புனைகதைகளையும், பற்பல சிறு கதைகளையும் இயற்றியுள்ளார். நாகராஜன் என்பவர் அமைத்துள்ள **'ஆதாவர் ஹௌஸ்'** [3] தென்னிந்திய சமூக வாழ்க்கையைத் தெளிவாகச் சித்திரிக்கின்றது. மிகப் பலர் சிறுகதை எழுதுவதில் ஈடுபட்டிருக்கின்றனர். ஜி. கெ. செற்றூர், அவர் தம்பி எஸ். கெ. செற்றூர் இருவரும் இதில் புகழ் பெற்றுள்ளனர். காலஞ்சென்ற ஜி. கெ. எழுதிய பத்துக் கதைகளடங்கிய **'தி கோஸ்ற்று சிற்றி'** [4] சுவை நிரம்பியது. கதை அமைப்பதில் எஸ். கெ. தமது அண்ணாவைப் போலவே திறம் படைத்தவர். அவரது **'கோப்ராஸ் ஆப் சேர்மாதேவி'** [5], **'பம்பாய் மர்டர்'** [6] ஆகியவை மிகப் புகழ் பெற்றுள்ளவை. இவர்களைத் தவிர பல இளைஞர்களும் தேர்ச்சி பெற்ற எழுத்தாளர்களாகத் திகழ்கின்றனர்.

வாழ்க்கை வரலாறு எழுதுவதில் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியாரின் சொற்பொழிவுகளும், ஸர்தார் கெ. எம். பணிக்கர் இயற்றியுள்ள **குலாப்சிங்'** [7] **'பிக்கானியர் மஹாராஜாவின் வாழ்க்கை வரலாறு** [8] என்ற நூல்கள் பெயர் பெற்றவை. எனினும், சில இடங்களில் பழுதுகள் பலவும் தோன்றியுள்ளன. தன் வரலாற்றைத் தானே இயற்றுவதில் தென் இந்தியா வட இந்தியாவைவிடப் பிற்போக்குடையதெனலாம்.

---

1. Baladitya
2. Three Men of Destiny
3. Athawar House
4. The Ghost City
5. Cobras of Shermadevi
6. Bombay Murder
7. Ghulap Singh
8. Biography of the Maharaja of Bikanir

ஜி. கெ. செற்றூரின் **'தி லாஸ்ற்று எஞ்சான்று மென்று'** [1] ஏ. எஸ். பி. ஐயரின் **'இன் வெஸ்டேர்ண் யூரோப்'** [2] எ. எஸ். நடராஜனின் **'வெஸ்ற்று ஆப் ஸூவெஸ்** [3] என்பவை சிரிய முறையில் அமையப்பெற்றவை.

அண்மையில்தான் கட்டுரைகள் எழுதுவதற்குத் தொடங்கியிருக்கின்றனர். இத்துறையில் பெயர் பெற்றவருள் முதன்மை இடம் எஸ். வி. வி. என்பவருக்கே அளிக்க வேண்டும். அவர் நூல்களில் **'ஸோப் பப்ள்ஸ்'**[4], **'மோற் ஸோப் பப்ள்ஸ்''**[5], **'தி ஹாளிடே டிறிப்'**[6], **சாப் அன்று கிரெயின்'**[7] என்பன சிறப்புடையவை. இத்துண்டுத் துணுக்குகளும் நகைச் சுவையுடைய கட்டுரைகளும் கவர்ச்சியாற்றலுள்ளவைகளாயிருக்கின்றன. நகைச்சுவையான அவரது கட்டுரைகள் ஆங்காங்கு ஏளனம் செய்யும் தன்மையுடையனவாகவும் காணப்படுகின்றன. பங்காரு ஸ்வாமி என்பவர், கதைகளும் சிறு கட்டுரைகளும் எழுதும் திறமை வாய்ந்த கலைஞர். அவரது களிப்பான **'மிஸ்லீடிங் கேஸஸ்'**[8], **'பாலு ஆன்று ஹிஸ்பிரண்ட்ஸ்'**,[9] **'லா ஆப் த ஜங்கிள்'**[10] என்னும் நூல்கள் மிக்க செல்வாக்கைப் பெற்றுள்ளன. மதம், மெய்ப்பொருள் வரலாறு, பொருளாதாரம், அரசியல் என்னும் பற்பல துறைகளிலும் சிறந்த எழுத்தாளர்கள் தோன்றியுள்ளனர். அவர்கள் யாவரையும் இங்கு குறிப்பிடுவது இயலாததாயினும், அவருள் மிகச் சிறந்தவர்கள் ஹரியண்ணு, டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், டாக்டர் சி. ஆர். ரெட்டி, டாக்டர் ஜான் மத்தாய், ஸர்தார் கெ. எம். பணிக்கர் என்போர். தென் இந்தியர்களிடம் பிறமொழியைக் கற்றுத் தேர்ச்சி அடைவதில் ஒரு தனிப்பட்ட திறமை அமைந்துள்ளது பலரும் அறிந்த உண்மை. வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார், டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், எஸ். சத்தியமூர்த்தி, டாக்டர் ஆர். கெ.

---

1. The Last Enchantment
2. An Indian in Western Europe
3. West of Suez
4. Soap Bubbles
5. More Soap Subbles
6. The Holiday Trip
7. Chaff and Grain
8. Misleading Cases
9. Balu and his Friends
10. Law of the Jungle

ஷண்முகம் செட்டியார், இரட்டைப் பிள்ளைகளாகிய டாக்டர் எ. ஆர். முதலியார், டாக்டர் எ. எல். முதலியார், டாக்டர் சி. பி. ராமசுவாமி ஐயர், கே. பி. எஸ். மேனேன் என்போர் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற சொற்பொழிவாளர்கள். அவர்களின் வாக்கு வன்மையும், சொல் ஒழுக்கும் ஆங்கிலேயர் பலருக்கு பெருவியப்பை அளித்திருக்கின்றன. ஆனல், மிகத் திறமை வாய்ந்த சொற்பொழிவாளர்கள்கூட, எப்பொழுதும் வழுவற்ற மொழி மரபைப் பின்பற்றுகின்றனர் எனக் கூறுதற் கில்லே. மேலும், கற்றறிந்த தென் இந்தியர்கூட பொதுவாகவே ஆங்கில மொழியைச் செயற்கை முறையில் கையாளுகின்றன ரெனவே கூறவேண்டும்.

ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர்கள் தோன்றியுள்ளனர். தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே **அமிர்தபஸார் பத்திரிகா** வும், **ஹிந்து**வும் தோன்றின. அதற்குச் சற்றுப் பின், **லீடர், பம்பாய் கிராணிக்கிள்** என்பனவும், அப்பால், **ஜஸ்ற்றறீஸ், சுவராஜ்ய** பத்திரிகைகளும் வெளிப்பட்டன. இவைகளைத் திறமைசான்ற பத்திரிகை ஆசிரியர்கள் நடத்தி வந்தனர். **இந்தியன் ரெவியூ**விலும், சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி வெளியீட்டிலும் உயர்தரக் கட்டுரைகள் எழுதப்பட்டிருந்தன. தென் இந்தியப் பத்திரிகை ஆசிரியர்களில் ஜி. சுப்பிரமணிய ஐயர், கஸ்தூரிரங்க ஐயங்கார், சி. வி. சிந்தாமணி, என். ஸி. கெல்கர், ஜி. வி. கிருபாநிதி, காஸா சுப்பராவு, போத்தன் ஜோஸப் என்பவர் புகழ் பெற்றுள்ளனர். தென் இந்தியாவில் நோபள் பரிசு பெற்ற விஞ்ஞானி பேரறிஞர் டாக்டர் ஸி. வி. இராமன் என்பாரும், கணித நூல் வல்லுநர் இராமானுஜம் என்பாரும், எஸ். சீனிவாச ஐயங்கார், அல்லாடி கிருஷ்ணசுவாமி ஐயர், வி. எல். எதிராஜ் போன்ற மிகப் பல வழக்கறிஞர்களும் தோன்றியுள்ளனர்.

**கலே :—**பிரித்தானியர் உறுதியாக இந்தியாவில் நிலேபெற்ற 19-ஆவது நூற்ருண்டிற்குள் மேல் நாட்டுக் கட்டிடக்கலே இங்குச் செல்வாக்குப் பெற்று வந்தது. இதன் பயனுக, வானளாவிய பள்ளிகளும், அரண்மனேகளும்,

மாடமாளிகைகளும், அலுவலகங்களும் அமைக்கப்பட்டன. மக்கள் வாழ்க்கைக்குப் பல நிலை மாளிகைகள் நிறுவப்பட்டு வந்தன. இம்மாளிகைகள் அழகு வாய்ந்த மாடி முகப்புக்கள், வாயில் முகப்புக்கள், கிராதி வேலைப்பாடுள்ள அகன்ற சாளரங்கள் முதலியவற்றால் புகழ் பெற்றுத் திகழ்ந்தன. இவை எல்லாம் ஐரோப்பாவின் தென் திசை நாடுகளில் வழங்கிய கட்டிடக் கலையை ஒத்திருக்கக் காணலாம்.

19-ஆவது நூற்றாண்டிற்குள் ஐரோப்பிய முறையைப் பின்பற்றிப் பல கட்டிடங்கள் தோன்றின. பட்டினங்களிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் பிரித்தானியப் பொறியியல் வல்லார், அந்நாள் தம் நாட்டில் வழக்கிலிருந்த கலையைத் தழுவித் திட்டமிட்டு மாளிகைகள் எடுப்பித்து வந்தனர். 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை அரசாங்க மாளிகையில் விருந்து மண்டபம் அமைக்கப்பட்டது. 120 அடி நீளமும் 60 அடி அகலமும் 40 அடி உயரமும் உள்ள இப்பெரிய மண்டபம் கிரேக்கத் திருக்கோயில் வடிவத்தில் உருவாக்கப் பட்டுளது. அரசாங்க அலுவலகங்கள் யாவும், ஆங்கிலஅரசியல் பொறி நூல் வல்லார் மேல்பார்வையில் மராமத்து இலாகா வினால் திட்டமிட்டுக் கட்டப்பட்டன. பெரிய நகரங்களில் தோன்றிய பல மாளிகைகள் லண்டன் போன்ற ஐரோப்பிய நகரங்களில் உள்ளவற்றைப் பின்பற்றி அமைக்கப்பட்டன. பெரும்பாலும் இக்கட்டிடங்கள் செங்கல் அல்லது கருங்கல் கொண்டு கட்டப்பட்டுக் காரையால் மேல் பூச்சுப் பெற்றன. இப்பணி முறையில் பிரித்தானிய பொறிநூல் வல்லார் மேற் பார்வையில் வேலை செய்த இந்தியக் கொத்தர்கள் மிகத் தேர்ச்சி பெற்றனர்.

இந்திய நாட்டுக் கட்டிடக்கலையை மிகுதியாகப் பின்பற்ற வேண்டுமென்ற கருத்து 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வலுவடைந்தது. சென்னையில் இந்த இயக்கத்திற்கு சிஷோல்ம் என்ற பொறிவல்லார் ஆதரவளித்தார். அவர் ‘இந்தோ-ஸாராஸனிக்’, அல்லது, நுட்பமாகக் கூறின், ‘திராவிட ஸாராஸனிக்’ முறையில் பல நேர்த்தியான

மாளிகைகளை எடுப்பித்தார். கட்டிட அமைப்பில் சீமைக் காரைக் கட்டு மிகுதியாகப் பயன்படுத்தப்பெற்றது. தற்கால இந்தியத் தொழிலாளிகள் புதுக் கட்டிடக்கலை முறையைக் கையாளுவதில் மிகத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

இக்காலத்தில் சிற்பத் துறையில் போதிய முன்னேற்றம் காணப்படவில்லை. பண்டைச் சிற்ப வேலைகளைப் பின்பற்றிக் கட்டிடம் அமைக்க முயலுகின்றனர். ஆனால், அவை யாவும் நேர்த்தியாக அமையவில்லை. செயற்கை முறையில் தோன்றியுள்ள இக்காலச் சிற்பங்களில் அழகும் அமைப்பும் பொருந்தவில்லை. அவை போலவே உலோகப் பொருள்களால் இக்காலத்தில் செய்த சிற்ப வேலைப்பாடுகளும் சீர்கெட்ட நிலையில் உள்ளன. நாகப்பா என்ற சிற்பி, ஒருவாறு சில அழகிய உருவங்கள் அமைத்தாராயினும் பொதுவாக இக்கலை பண்டைய நிலையை எய்தியுள்ளதெனக் கருத முடியாது. மைசூர், திருவாங்கூர்—இவ்விரண்டு நாடுகளில், மரத்திலும், தந்தத்திலும் சிற்ப வேலைகள் இக்காலத்தில் முன்னேற்றமடைந்துள்ளன. உள் நாட்டு வேந்தரும் சிற்றரசரும் அழகுக் கலைகளை ஆர்வத்துடன் பேணிவந்தனர். அதுவும் தற்போது பழங்கதையாகிவிட்டது.

ஓவியர் பண்டை முறைகளைப் பின்பற்றி ஹைதராபாத், ஔரங்காபாத், தௌலத்தாபாத், மைசூர், தஞ்சாவூர், முதலான இடங்களில் தம் கலையைக் கையாண்டு வந்தனர். மைசூர் ஓவியக் கோட்பாட்டு மரபு கிருஷ்ணராஜ உடையாரின் ஆட்சியில் மிக்க உயர்ந்த நிலையை அடைந்தது. அவர் 1868-இல் காலஞ்சென்றதும் இக்கலைஞர்கள் அங்கிருந்து பிரிந்து போயினர். தஞ்சாவூரில் ஆண்டு வந்த கடைசி மகாராஷ்டிர மன்னர்களின் ஆதரவு நின்றுவிட்டது. ஆகவே, அங்கிருந்த ஓவியர்களும் இடம் பெயர்ந்து அகன்று சென்றனர். அவருள் சிலர் வேறு தொழில்களில் ஈடுபடலாயினர். சிலர் பொற்கொல்லர் வேலையையும் மற்றவர் வேறு தொழில்களையும் பின்பற்றினர். அண்மைக் காலம் வரையில் திருவனந்தபுரம், மைசூர் அரசவைகள் ஓவியர்களை ஆதரித்து வந்தன. திருவாங்கூர் அரச குடும்பத்தைச் சேர்ந்த

இரவிவர்மா ஒப்புயர்வற்ற ஓவிய நிபுணர் ; நீர்வண்ணத்திலும், எண்ணெய்ப் பூச்சிலும், அவர் அமைத்த ஓவியங்கள் தென்னிந்தியாவில் பெருஞ்செல்வாக்கைப் பெற்றுள்ளன. அவர் மேல் நாட்டுக் கலைமுறையைக் கையாண்டார். கலை ஆராய்ச்சியாளர்கள் அவரது ஓவிய முறைபற்றிச் சில குறைபாடு கூறியபோதிலும், அவருக்கு இயற்கைத் திறமும் தொழில் நுணுக்கமும் சிறப்பாக வாய்த்திருந்தன. நீர்வண்ண ஓவியங்கள் தென் இந்தியாவில் பல இடங்களிலும் தீட்டப் பட்டன. புராணக் கதைகளைச் சார்ந்த வடிவங்களை வட ஆர்க்காட்டு மாவட்டத்தில் கண்ணுடி மீது உருவாக்கியிருப் பதைக் காணலாம். கடப்பை மாவட்டத்தில் நொஸ்ஸாம் என்ற ஊரில், மேஜை மீது விரிப்பதற்குப் பயன்படுமாறு தயாரிக்கப்பட்ட வட்டத்தோல் துண்டுகள் மீது ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

சோழப் பேரரசு உயர்நிலை எய்தியுள்ள காலத்தில் திகழ்ந்த கட்டிடக் கலையும் சிற்பக் கலையும் மறைந்து போயின வேனும், பிற்காலத்தில் தோன்றியுள்ள எல்லாக் கலையும் குறைவுடையதெனக் கூறுவது பொருத்தமன்று. உண்மையில் பண்டைக்காலக் கலை அளவு மீறி மதிப்பிடப்பட்டுள்ளது. அதே வேளையில் புதிய காலத்தில் வளர்ந்துள்ள கலைக்குப் போதிய மதிப்பும் அளிக்கப்படவில்லை. சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளாகப் பற்பல கைத்தொழில்களும் அழகுக் கலைகளும் தென்னிந்தியாவில் வளர்ச்சி பெற்றுள்ளன. அவற்றுள் சில உயர்ந்த முறையான கலைத்திறம் பொருந்தி யவை என்பதற்கு ஐயமில்லை.

மரச் சிற்பம் தென் இந்தியாவில் நெடுங்காலமாக வழக் கத்திலிருந்து வந்துளது. கோயில்களிலும் அரண்மனைகளிலும் சிறந்த மரச் சிற்பங்களைக் காணலாம். தமிழகத்திலும் ஆந்திர நாட்டிலும் திகழ்கின்ற தேர்கள் நுணுக்கச் சிற்பங்கள் அடங்கியவை. மரச் சிற்பம் இக்காலத்தில், குறிப்பாகக் கேரள நாட்டில் பேணப்பட்டு உயர்நிலையை அடைந்துளது. சந்தனக் கட்டையில் இழைக்கும் சிற்ப வேலை மைசூர் நாட்டில்

தனிக் கலையாக வளர்க்கப்பட்டுளது. தேங்காய்ச் சிரட்டை மீது, குறிப்பாகப் பொன், வெள்ளி முதலியவற்றை இடை கலந்து அமைக்கும் சிற்ப வேலை கொச்சி, திருவனந்தபுரம் போன்ற கேரளத்தின் சில பகுதிகளில் நன்கு வளர்ந்தது.

பிரம்பு, கரும்பனை ஓலை, ஈத்தம்பனை ஓலை, மூங்கில் கோரைப் புல் ஆகியவற்றால் பாய்கள் செய்வது இந்தியாவில் பன்னெடுங்காலமாகப் பழக்கத்தில் இருந்து வருகின்றது. குறிப்பாகப் பாலக்காடு, திருநெல்வேலி, தஞ்சாவூர், சேலம், நெல்லூர் முதலிய இடங்களில் நேர்த்தியான பாய்கள் பின்னப்பட்டன. சில பாய்கள் அளவுக்கு மிஞ்சிய வண்ணம் பெற்றிருந்த போதிலும், பொதுவாக அவை அரிய வேலைப் பாடுள்ளவையே.

மிக மெல்லிய துணி தென் இந்தியாவில் நெடுங்காலமாக நெய்யப்பட்டுளது. அந்தத் தொழிலைத் தற்கால ஆலைகள் கெடுத்த போதிலும், அது இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இப்பொழுது மிக நேர்த்தியாக நெசவு நடத்தி வரும் வெண்துகில் ஆரணியில் திகழ்ந்து வருகின்றது. தக்காணத்தில் இராயச்சூரில் தவிட்டுநிறத் துகில் நெய்யப்படு கின்றது.

தென் இந்தியாவில் பல இடங்களில் வேட்டிகளும் சேலைகளும் நெய்யப்பட்டு வருவதன்றி பட்டாடைகளும் சேலம், பெரியகுளம், கூடூர், கடப்பை, விசாகபட்டினம் முதலிய இடங்களில் நெய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக, பித்தா புரம், பெல்லாரி முதலான இடங்களில் மிக நேர்த்தியான பட்டாடைகள் நெய்கின்றனர். பவுன் நிறமுள்ள கரைகளும் முன்றானைகளும் பட்டாடைகளை அணி செய்கின்றன. கரைகளை நேர்த்தியாக அமைப்பதில் மதுரை, காஞ்சிபுரம், தஞ்சாவூர் என்னும் இடங்கள் பெயர் பெற்றுள்ளன. பட்டுத்துணி மிகுதியாக மைசூரில் நெய்து வந்தனர். மைசூர்ப் பட்டு நேரியதாயிருந்ததோடு உறுதி பெற்றதாயும் காணப் பட்டுள்ளது. மைசூரில் பட்டுப் புழுக்களை ஒரு வகை நோய் தாக்கியதால் பட்டு நூல் நெசவுத் தொழில் தளர்ச்சியுற்றது.

பட்டாடைகள் தனிப்பட்ட முறையிலும் பொன்நூல் இடை கலந்த முறையிலும் புஞ, அகம்மதாபாத், சூரத் முதலிய இடங்களில் நெய்யப்பட்டு வருகின்றன. பொன் நூல் கலவாத எளிய பட்டாடைகள் பெல்காமில் மிகுதியாக நெய்யப்பட்டு வருகின்றன.

பொன், சரிகை, முத்து ஆகியவைகளால் துன்னல் வேலை மிகத் திறத்துடன் வட ஆர்க்காடு, பாளையங்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோதாவரி மாவட்டம் முதலான இடங்களில் முன்னேறி வந்துளது. துன்னல் வேலைக்கு ஔரங்கபாத் நெடுநாளாகப் பெயர் பெற்றுளது. பம்பாய் மாநிலத்தில், குறிப்பாக, சூரத், பம்பாய், கச் முதலிய இடங்களில் பட்டுத்துணியில் பொன், வெள்ளி ஆகிய நூல்களைக் கலந்து துன்னல் வேலை செய்கின்றனர். ஆடைகள், மேசை விரிப்புக்காகப் பயன்படும் துணிகள், தலையணைகள், மெத்தைகள், உறைகள் ஆகியவற்றிலும் துன்னல் வேலையைச் சிறப்புறக் கையாளுகின்றனர்.

சமுக்காளங்களும், கம்பளங்களும் முற்காலத்தில் மசூலிப்பட்டினம், காக்கிநாடா, மலபார் முதலிய இடங்களில் நெய்யப்பட்டு வந்தன. தற்போது இத்தொழில் சோர்வடைந்துவிட்டது. ஆயினும், கம்பளி, பட்டு, பஞ்சுத்துணி முதலியவற்ருல் சமுக்காளங்கள், எல்லூர், ராஜமந்திரி முதலிய ஆந்திர நாட்டு ஊர்களிலும், தமிழ் நாட்டில் பவானியிலும், அய்யம்பேட்டையிலும் நெய்து வருகின்றனர். கம்பளி, சமுக்காளங்கள் அண்மைக் காலம் வரை பங்களூர், வாரங்கல் என்னும் ஊர்களிலிருந்து ஏற்றுமதி செய்தனர்.

உலோகங்களால் செய்யப்படும் பொருள்களும், சிற்ப வேலைகளும் பண்டை முறையில் மாறுபட்டவை. ஆனல், காலத்திற்கு ஒத்தவாறு மாறுதலடைந்து வந்துள்ளன. வீட்டிற்கு வேண்டிய கலங்கள், வெண்கலம், பித்தளை, செம்பு முதலியவற்ருல் தென் இந்தியாவில் பல ஊர்களில் செய்யப்பட்டு வருகின்றன. வெண்கலப் பாத்திரங்கள், பெல்லாரி, அனந்தபுரம், விசாகப்பட்டினம், சேலம், மதுரை, கொச்சி, எரணுகுளம், ஆழப்புழை முதலான இடங்களில் செய்யப்

படுகின்றன. பலவகைக் கலங்கள் அழகான வடிவில் அமைக்கப்படுகின்றன. தாலங்கள், கிண்ணங்கள், விளக்குகள் முதலியவைகளே பெரும்பாலும் வெண்கலத்தால் செய்யப்படும் பொருட்கள். கலைத்திறமை அமைந்த பித்தளை விளக்குகளைக் கேரளத்தில் மிகுதியாகச் செய்கின்றனர். திருப்பத்தூரிலும் மதுரையிலும் உலோகங்களில் சிற்ப வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. கிருஷ்ணா மாவட்டம் உலோகச் சிற்பங்களுக்குப் பெயர் பெற்றது. சேலத்திலும் தஞ்சாவூரிலும் ஈயப் பாத்திரங்கள் செய்யும் தொழில் நடைபெறுகிறது.

பம்பாய் நாட்டில், பித்தளை, செம்பு முதலிய உலோகங்களினும் அருமையான பொருள்கள் செய்து வருகின்றனர். பித்தளையாலும், செம்பாலும் செய்யப்பட்ட பானைகள், சட்டிகள், குடங்கள், சங்கிலிகள், விளக்குகள் முதலியவை பம்பாய் நாட்டிலுள்ள பெரிய நகரங்களிலெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

அவற்றுள் நாஸிக்கில் செய்யப்படும் கலங்கள், புனாவில் செய்யப்படுவனவற்றிலும் சிறந்திருப்பதால் மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. அண்மையில் புனாவிலும் தொழிலாளிகள் இத்தொழிலை அழகாகச் செய்து முடிக்கப் பழகிக்கொண்டனர்.

மைசூரில் வீட்டுக்குரிய கலங்கள், விளக்குகள், பூஜைக்கு வேண்டிய உருவச் சிலைகள், விலங்குகள், பறவைகள் முதலியவற்றின் உருவங்கள் எல்லாம் பித்தளை, செம்பு முதலிய உலோகங்களில் திறம்படச் செய்யப்பட்டு வருகின்றன. இத்தொழிலில் சிறந்து விளங்கும் தொழிலாளிகள் சமணர்கள் ஆவார். சிரவண பெல்கோளா, நாகமாங்கலி, மகதி என்னுமிடங்களில்தான் பெரும்பாலும் இத்தொழில் சிறப்புற்று நடந்து வருகின்றது. பித்தளை நகைகள் மைசூரில் மிகுதியாகச் செய்யப்படுகின்றன.

பலவகை இசைக் கருவிகள் தென் இந்தியாவின் பல பகுதிகளில் உருவாக்கப்படுகின்றன. குறிப்பாக, மரம்,

தங்கம், வெள்ளி ஆகியவற்ருல் செய்யப்பட்ட புல்லாங்குழல் முதலான தொளைக் கருவிகளும், மிருதங்கம் முதலான தோற் கருவிகளும், வீணை, தம்பூர் முதலான நரம்புக் கருவிகளும் அவற்றுள் சிறப்புடையன. பாடகர்களும் இசைவாணர்களும் தொன்றுதொட்டே தென் நாட்டில் திகழ்ந்துள்ளனர்; இக் காலத்திலும் புகழ் பெற்றவர் இருந்து வருகின்றனர். ஆகையால், இசைக்கருவிகள் இன்றியமையாத பொருள்கள். அதற்கு இசைந்தவாறு தகுந்த முறையில் அவை ஆங்காங்குச் செய்யப்பட்டு வருகின்றன.